NOT FOR COMMERCIAL PURPOSE
படிப்பதற்கு மட்டும். அச்சடித்து விற்பதற்கு அல்ல.

بِسْمِ اللَّهِ الرَّحْمَٰنِ الرَّحِيمِ

# نهاية العالم

# உலக முடிவு

## இறுதி நாளின் சிறிய, பெரிய அடையாளங்கள்

அரபியில் :
ஷைக் முஹம்மது அல் அரீஃபி

தமிழில் :
ஷைக் ஆர். நுவீஸ் மக்கி

மேலாய்வு :
அ. உமர் ஷரீஃப்

DARUL HUDA

# உள்ளே...


1. மறுமை நாளின் அடையாளங்களைப் பற்றிப் பேசத்தான் வேண்டுமா? ........ 12
2. மறுமை நாளின் அடையாளங்கள் பற்றிப் பேசுகின்றபோது கவனிக்க வேண்டிய சில விதிமுறைகள் ........ 17
3. அன்றாட நிகழ்வுகளும் மறுமைநாளின் அடையாளங்கள் பற்றிய வசனங்களும் ........ 22
4. மறுமை நாளின் அடையாளங்கள் என்றால் என்ன? ...30
5. மறுமை நாளின் சிறிய அடையாளங்கள் ........34
6. மறுமை நாளின் பெரிய அடையாளங்கள் ........ 190
   1. தஜ்ஜால் ........ 191
   2. ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்களின் வருகை!. 233
   3. யஃஜூஜ், மஃஜூஜ் ........ 262
   4, 5, 6. மூன்று பெரும் பூகம்பங்கள் ........ 284
   7. புகை மூட்டம் ........ 289
   8. பேசும் இராட்சத பிராணி ........ 295
   9. சூரியன் மேற்கில் உதித்தல் ........ 300
   10. மஹ்ஷரின் பக்கம் மக்களை ஒன்று திரட்டுகின்ற நெருப்பு 306

# பதிப்புரை

எல்லாப் புகழும் அல்லாஹ்விற்கே! ஸலவாத்தும் ஸலாமும் தூதர் மீதும், தூதரின் குடும்பத்தார் மற்றும் தோழர்கள் மீதும் நிலவுக!

உலக முடிவு நாளின் அடையாளங்களைப் பற்றி ஷைக் முஹம்மது அல் அரீஃபி அவர்கள் எழுதிய **نهاية العالم** – நிஹாயதுல் ஆலம் (உலக முடிவு) என்ற நூலின் தமிழாக்கத்தை வெளியிடுவதற்கு அல்லாஹ் அருள் புரிந்தான்.

இந்நூலின் மூல ஆசிரியர் அல் அரீஃபி அவர்கள் அரபுலகில் பிரபலமான ஒரு பேச்சாளரும் எழுத்தாளரும் ஆவார். 'ஸலஃப் மன்ஹஜ்' ஐ பின்பற்றக்கூடிய நம்போன்றவர்களுக்கு அவருடன் பல விசயங்களில் கருத்து வேற்றுமைகள் இருந்தாலும் இந்த நூலும் அதில் கூறப்பட்டுள்ள விஷயங்களும் குர்ஆன், ஹதீஸ் மற்றும் 'ஸலஃப் மன்ஹஜ்'க்கு உட்பட்டவையாக இருக்கின்ற காரணத்தினால் இந்நூலின் தமிழாக்கத்தை வெளியிடுவதில் இன் ஷா அல்லாஹ் குற்றம் ஏதும் இருக்காது என்று கருதுகிறோம்.

**அஷ்ஷைக் ஆர். நுவைஸ் மக்கீ** அவர்களை சில மாதங்களுக்கு முன்பு இலங்கையில் சந்தித்தபோது தாருல் ஹுதா மூலமாக இந்நூலை வெளியிடுவதில் தமக்குள்ள விருப்பத்தை வெளிப்படுத்தினார்கள்.

இத்தகைய ஒரு பொக்கிஷத்தை தமிழ் மக்களுக்கு கொடுப்பதில், அதுவும் தரமான ஓர் அறிஞரால் சிறப்பாக மொழிபெயர்க்கப்பட்டதை வெளியிடுவதில் எங்களுக்கும் மிக்க மகிழ்ச்சி.

ஷைக் அவர்களின் தமிழாக்கத்தை இந்தியா மற்றும் இலங்கை தமிழ் வாசகர்கள் எளிதாக படிப்பதற்கு ஏற்ப, எங்களால் முடிந்த அளவு சீரமைத்து, சில குறிப்பிட்ட இடங்களில் அரபி மூலத்தோடு மீளாய்வு செய்து இந்நூலை வெளியிடுகிறோம். அல்ஹம்து லில்லாஹ்!

இந்நூலின் மூல ஆசிரியருக்கும் மொழிபெயர்ப்பாளருக்கும் அல்லாஹ் பேரருள் புரிவானாக! இம்மை மறுமையின் வளங்களை வாரி வழங்குவானாக! ஆமீன்.

உலக முடிவைப் பற்றி குர்ஆனும் நபிமொழியும் கூறியிருக்கின்ற உண்மையான செய்திகளை படித்தறிந்து, மறுமை உணர்வோடு வாழ்ந்து, நல்லமல்களை அதிகப்படுத்துவதற்கும் பாவங்களை விட்டு விலகுவதற்கும் அல்லாஹ் எனக்கும் இந்நூலை வாசிக்கின்ற அனைவருக்கும் அருள் புரிவானாக! ஆமீன்.

இம்மொழிபெயர்ப்பை சரிபார்ப்பதிலும் சீரமைப்பதிலும் வடிவமைப்பதிலும் துணையாக இருந்த தாருல் ஹுதாவின் பணியாளர்களுக்கு அல்லாஹ் சிறந்த வாழ்க்கையை இம்மையிலும் மறுமையிலும் வழங்குவானாக! ஆமீன்.

அல்லாஹ்வே! எங்களை மன்னிப்பாயாக! எங்கள் பணிகளை ஏற்பாயாக! நிச்சயமாக நீதான் நன்கறிந்தவன், நன்கு செவியேற்பவன்.

உமர் ஷரீஃப் இப்னு அப்துஸ் ஸலாம்

14-8-2018 குர்ஆன், சுன்னா பணியாளர், சென்னை.

DARUL HUDA , CHENNAI - 1 | muftiomar@gmail.com

# மொழிபெயர்ப்பாளரின் முன்னுரை

بِسْمِ اللَّهِ الرَّحْمَٰنِ الرَّحِيمِ

அளவிலாப் புகழனைத்தும் வணங்கி வழிபடத் தகுதியான அல்லாஹ்விற்கே உரியது. அவனது ஸலவாத்தும், ஸலாமும் இந்த உலக வாழ்வின் யதார்த்தத்தையும், அழியப்போகும் இவ்வுலகின் அடையாளங்களையும் காட்டித்தந்த நபி முஹம்மது அவர்கள் மீதும், அவர்களது தோழர்கள், குடும்பத்தார்கள் மீதும் உண்டாகட்டும்.

ஒரு நூல் எழுதவேண்டும் எனும் அவா ஆரம்பம் தொட்டு இருந்தது. இருந்தாலும் பல நொண்டிச் சாக்குகளும் கூடவே இருந்ததால் அந்த அவாவை அச்சுக்குக் கொண்டுவர முடியாமலே போய்விட்டது.

ஒருமுறை ஏறாவூர் அல்மர்கஸுல் இஸ்லாமிக்குச் சென்றிருந்த வேளை அதன் நூலகத்திற்குச் செல்லும் வாய்ப்புக் கிடைத்தது. அங்கே அடுக்கி வைக்கப்பட்டிருந்த புத்தகங்களை ஒருமுறை புரட்டிப் பார்க்கலாம் என எண்ணியபோது கையில் அகப்பட்டதுதான் **نهاية العالم** – நிஹாயதுல் ஆலம் (உலக முடிவு) எனும் இந்த நூல்.

வேகமாகப் புரட்டிப்படித்த போது தொடர்ந்து வாசிக்க வேண்டும் போலிருந்தது, தொடர்ந்து வாசித்தேன். இந்நூலை வாசித்து முடிக்கும் முன் உலகம் அழிந்து விடுமோ என்றிருந்தது. உலகம் அழியப் போவதற்கான பல அடையாளங்கள் நமது கண்முன்னேயே காணக் கிடைத்தும் நமது வாழ்வில் மாற்றங்களைக் காண முடியவில்லையே என்ற கவலையும் ஒரு பக்கம் இருக்கிறது. இறுதியில் இந்நூலை தமிழ் வடிவில் கொடுத்தால் நாம் பெற்ற நன்மை இவ்வையகமும் பெறுமே என்ற எண்ணத்துடன் அதை மொழிபெயர்க்க ஆரம்பித்து இன்று நூல்வடிவில் அது உங்கள் கைகளில் தவழ்கின்றது.

அல்ஹம்துலில்லாஹ்.

இவ்வுலக அழிவின் அடையாளங்களாக அல்குர்ஆனிலும் ஹதீஸ்களிலும் குறிப்பிடப்பட்டுள்ள சிறிய மற்றும் பெரிய அடையாளங்கள் இந்நூலில் தொகுக்கப்பட்டிருக்கின்றன.

புத்தகத்தின் நீளத்தையும், வாசகர்களின் ரசனையையும் கருத்தில் கொண்டு மூல நூலாசிரியரின் கருத்துச் சிதையாமல் ஆங்காங்கே, மிக அரிதாக சில நீக்கங்களையும் செய்திருக்கின்றேன்.

அவ்வாறே சில இடங்களில் பலவீனமான செய்தியாக இருந்தும் அது அகீதாவோடு சம்பந்தப்படாத காரணத்தினாலும், மூல நூலாசிரியரே அதனைக் குறிப்பிட்டு அதன் தரத்தையும் குறிப்பிட்டிருப்பதனாலும் மொழிபெயர்ப்பிலும் அந்த வழிமுறையைக் கையாண்டுள்ளேன்.

இதுவே எனது முதல் முயற்சி என்பதால் தவறுகளும், தப்புகளும் அதிகமாகவே இருக்கும் என்பதில் எந்த ஐயமும் எனக்கில்லை. எனினும் தவறுகளை அன்போடு சுட்டிக்காட்டி ஆக்கமும், ஊக்கமும் கொடுப்பீர்களென எதிர்பார்க்கின்றேன்.

இந்நூலின் மூலம் அல்லாஹ் எனக்கும் வாசகர்களுக்கும் முழுமையான நன்மையைத் தருவானாக!

அத்தோடு இந்நூலை மொழிபெயர்க்க ஆரம்பித்தபோது எனக்கு ஆர்வம் கொடுத்து “மொழிபெயர்த்து முடிந்தால் அதனைப் புத்தகமாக்கும் பொறுப்பு என்னுடையது என என்னை உற்சாகப்படுத்தி ஊக்கம் கொடுத்தது மட்டுமன்றி நூலை முழுமையாக வாசித்து பிழை திருத்தி மதிப்புரையும் கொடுத்த எனது அன்புக்குரிய ஆசிரியர். அஷ்ஷைக். கலாநிதி எம்.எல் முபாரக் ஸலஃபி, மதனி (பணிப்பாளர்: தாருல் ஹுதா அரபு இஸ்லாமிய கற்கைகள் மகளிர் கல்லூரி) அவர்களையும், பல வேலைப் பளுக்களுக்கு இடையில் இம்மொழி பெயர்ப்பை மூல நூலோடு ஒப்பிட்டு, வாசித்து, சரிசெய்து தந்த எனது அன்புக்குரிய நண்பர்கள் அஷ்ஷைக் ஏ.எல் பைஸல் ஸஹ்வி, மதனி (உளவளத்துணையாளர்) மற்றும் அஷ்ஷைக் எம்.எச்.எம் அஸ்பர் ஹஸன் பலாஹி (B.A.) அவர்களையும், இந்நூலை முழுமையாக வாசித்து தமிழ் பிழைகளைத் திருத்தித் தந்த தாருல் ஹுதா அரபு இஸ்லாமிய

கற்கைகள் மகளிர் கல்லூரியின் செயலாளர் எம். பஹ்ருத்தீன் B.A., (Diploma in Education) ஆசிரியர் அவர்களையும். இந்த நூலை கணினி தட்டச்சு செய்வதில் உதவிய சகோதரி எம்.எப்.றிப்னா ஹுதாயிய்யா, மற்றும் கணினி தட்டச்சு, அட்டை வடிவமைப்பு செய்து தந்த எனது அன்புக்குரிய நண்பன் ஐ.எல்.எம் பாருக் (தலைவர்: அல்மஸ்ஜிதுல் அக்பர் ஜும்மா மஸ்ஜித்) அவர்களையும், இந்நூலை வெளியிடுவதற்கு உதவிய தாருல் ஹுதா பப்ளிகேஷன் உரிமையாளரையும், இம்மொழி பெயர்ப்பிற்கு பல வழிகளிலும் உதவி செய்த எனது மனைவி மற்றும் பெயர் குறிப்பிடப்படாத அனைத்து உள்ளங்களையும் இவ்விடத்தில் பெருமனதுடன் நினைவு கூர்வதோடு எனது மனமார்ந்த நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்புடன்

**ஆர். நுவீஸ் ஸலஃபி, மக்கி**

B.A (SEUSL), B.A (Hons) UQU Makkah Al Mukarramah, KSA
M.A. UQU, Makkah Al Mukarramah, KSA
Email : nuvees.r@gmail.com

# மூல நூலாசிரியரின் முன்னுரை

بِسۡمِ ٱللَّهِ ٱلرَّحۡمَٰنِ ٱلرَّحِيمِ

எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே! ஸலவாத்தும் ஸலாமும் இறுதித்தூதர் முஹம்மத் அவர்களின் மீதும், அவர்களது தோழர்கள் மீதும் உண்டாவதாக.

மறுமைநாளின் அடையாளங்கள் என முன்னறிவிப்புச் செய்யப்பட்ட விஷயங்களோடு சமகால நிகழ்வுகளைத் தொடர்புபடுத்திப் பேசப்படுவதை இன்று இணையத்தளங்களிலும் பல நூல்களிலும் காண்கின்றோம்.

இஸ்லாமிற்கும் முஸ்லிம்களுக்கும் எதிரான பல சதிகளும், குழப்பங்களும் அதிகரிக்கின்றபோது மக்கள் அதனை மறுமையின் அடையாளமாகவே பார்ப்பதை கவனிக்கின்றோம். சிலர் மஹ்தி வந்துவிட்டார் என்றும், யூதர், கிறிஸ்தவர்களுடனான “பெரும் போர்” நெருங்கிவிட்டது என்றும், கிழக்கிலும் மேற்கிலும் இடம் பெறும் என கூறப்படுகின்ற நிலநடுக்கம் இதுதான் என்றும் கூறிக் கொண்டிருக்கின்றனர்.

நான் ஓர் ஆப்பிரிக்க நாட்டுக்குச் சென்றிருந்தபோது அங்கே ஒருவர் தன்னை ஈஸா அலைஹிஸ் ஸலாம் என்றும், தான் வானிலிருந்து இறங்கியதாகவும் கூறிக்கொண்டிருந்தார். எனவேதான் மறுமைநாள் பற்றியும் அதன் அடையாளங்களைப் பற்றியும் தெளிவுபடுத்துவது அவசியமாகும் எனக் கருதினேன். அதன் வெளிப்பாடே இந்நூலாகும்.

இந்நூல் அச்சிடப்படுமுன் இதனை வாசித்து பல கருத்துக்களையும் தந்துதவிய அனைவருக்கும் குறிப்பாக அஷ்ஷெய்க் கலாநிதி ஸல்மான் இப்னு ஃபஹ்த் அல் அவ்தா, அஷ்ஷெய்க் கலாநிதி அப்துல் அஸீஸ் அல் அப்துல் லத்தீஃப், அஷ்ஷெய்க் அல் முஹத்திஸ்

அப்துல் அஸீஸ் அத்துரைபி போன்றோருக்கும் மற்றும் யாரெல்லாம் நன்றிக்குரியவர்களோ அவர்களுக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எல்லாம் வல்ல அல்லாஹ் இம்முயற்சியை அவனது திருமுகத்திற்காக மட்டும் செய்யப்பட்டதாகவும் நாளை மறுமையில் நமக்கு சாட்சி சொல்லக்கூடிய பலன்தரும் கல்வியாகவும் ஆக்கியருள்வானாக! ஆமீன்!

**முஹம்மது இப்னு அப்தூர் ரஹ்மான் அல் அரீஃபி**

*பேராசிரியர், மன்னர் ஸவூது பல்கலைக் கழகம், ரியாத்.*

இலங்கை, தாருல் ஹுதா
அரபு இஸ்லாமிய கற்கைகள் மகளிர் கல்லூரியின் பணிப்பாளர்

**அஷ்ஷைக் கலாநிதி எம்.எல்.முபாரக் ஸலஃபி, மதனி Ph.D.**
**அவர்கள் வழங்கிய மதிப்புரை**

எல்லாப் புகழும் அல்லாஹ் ஒருவனுக்கே சொந்தம்! ஸலவாத்தும் ஸலாமும் நபி முஹம்மத் அவர்கள் மீது உண்டாவதாக!

சஊதி அரேபியாவைச் சேர்ந்த பிரபல எழுத்தாளரும் பேச்சாளருமாகிய அஷ்ஷெய்க் முனைவர் முஹம்மத் அல் அரீஃபி அவர்கள் எழுதிய 'நிஹாயதுல் ஆலம்' என்ற நூலை மருதமுனை தாருல் ஹுதா அரபு இஸ்லாமிய கற்கைகள் மகளிர் கல்லூரியின் விரிவுரையாளர் அஷ்ஷெய்க் ஆர்.நுவீஸ் மக்கி அவர்கள் தமிழ்படுத்தியுள்ளார்கள்.

புத்தகத்தை ஆரம்பம் முதல் இறுதிவரை வாசித்தேன். அஷ்ஷெய்க் அரீஃபி அவர்கள் மறுமை நாளின் அடையாளங்களை ஆதாரங்களுடன் தொகுத்து வழங்கியுள்ளார்கள். சிறிய அடையாளங்களாக சுமார் 131 அடையாளங்களையும் பெரிய அடையாளங்களாக 10 அடையாளங்களையும் குறிப்பிட்டு, இவை நிகழ்ந்து முடியும்போது உலகமும் அழிந்துவிடும் என்பதை தெளிவுபடுத்தியுள்ளார்கள்.

அழகிய தமிழில் எல்லோரும் எளிதில் புரிந்து கொள்ளும் விதமாக அஷ்ஷெய்க் ஆர்.நுவீஸ் அவர்கள் மொழிபெயர்ப்புச் செய்துள்ளார்கள்.

இது எல்லோரும் வாசிக்க வேண்டிய ஒரு சிறந்த நூலாகும். குறிப்பாக உலக ஆசையின் சிந்தனை மேலோங்கி ஆன்மீக வறுமை அதிகரித்திருக்கும் இக்காலத்தில் நமது ஈமானைப் புதுப்பிப்பதற்கு இவ்வாறான நூல்களை நாம் அதிகம் வாசிக்க வேண்டும்.

மொழிபெயர்ப்பாளரின் முதல் முயற்சி இது. எல்லாம் வல்ல அல்லாஹ் அவரது இம்முயற்சியை ஏற்கவேண்டும் என்று பிரார்த்திக்கின்றேன்.

மேலும் இவ்வாறான பணிகளை நண்பர் அஷ்ஷெய்க் ஆர். நுவீஸ் அவர்கள் தொடர்ந்து மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றேன். அதற்கு அல்லாஹ் தவ்ஃஃபீக் -அருள் செய்வானாக!

31.03.2018

மருதமுனை.

# மறுமை நாளின் அடையாளங்களைப் பற்றிப் பேசத்தான் வேண்டுமா?



ஒரு மனிதன் ஒன்றைப் பற்றிப் பேசினால் அல்லது ஆய்வு செய்தால் அதன் மூலம் ஏதாவது ஒன்றை அடைந்துகொள்ள வேண்டும். மறுமை நாளின் அடையாளங்கள் பற்றி இங்கு ஆய்வு செய்வதன் மூலம் நமது வாழ்வில் ஏதாவது பலன்கள் இருக்கின்றனவா? அல்லது அறிவுக்கு விருந்தூட்டும் வெறும் தகவல்கள் மாத்திரம்தானா? இவை.

இந்தக் கேள்விக்கு சுருக்கமாகப் பதில் சொல்வதானால், மறுமை நாளின் அடையாளங்கள் பற்றி அல்குர்ஆனிலும் சுன்னாவிலும் பல இடங்களில் கூறப்பட்டிருக்கின்ற விஷயங்களை நாம் கண்டிப்பாக படித்தே ஆகவேண்டும். அவ்வாறு படிப்பதால் நிச்சயமாக பல்வேறுபட்ட பயன்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

1. மறுமை நாளின் அடையாளங்கள் பற்றி அறிந்து கொள்வதால், ஈமானின் தூண்களில் ஒன்றான மறைவானவற்றைப் பற்றிய நம்பிக்கை உறுதியாகிறது.

الَّذِينَ يُؤْمِنُونَ بِالْغَيْبِ وَيُقِيمُونَ الصَّلَاةَ

**“அவர்கள் மறைவானவற்றை ஈமான்கொண்டு தொழுகையையும் நிலை நாட்டுவார்கள்.” (அல்குர்ஆன் 2 : 3)**

“அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் இல்லை (லா இலாஹ இல்லல்லாஹ்) என்று (இந்த) மக்கள் கூறும்வரை அவர்களுடன் போரிடுமாறு நான் கட்டளையிடப்பட்டுள்ளேன். லா இலாஹ இல்லல்லாஹ் என்று கூறியவர் தமது செல்வத்தையும் உயிரையும் என்னிடமிருந்து பாதுகாத்துக் கொள்வார். அவரது (அந்தரங்கம் பற்றிய) விசாரணை அல்லாஹ்விடமே உள்ளது.”[1]

மறைவான விஷயங்களை நம்புவது என்பது அல்லாஹ்வும் அவனது தூதரும் அறிவித்த அனைத்தையும் அவற்றை நமது கண்களால் காணா விட்டாலும் உண்மை என்று நம்புவதாகும்.

---

1. அறிவிப்பாளர் : அபூஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு, நூல் : ஸஹீஹுல் புகாரி 6924.

குர்ஆனிலும் ஹதீஸ்களிலும் சொல்லப்பட்டிருக்கின்ற தஜ்ஜாலின் வருகை, ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்கள் பூமிக்கு இறங்குதல், யஃஜூஜ், மஃஜூஜ் கூட்டத்தின் வருகை, இராட்சத பிராணி, சூரியன் மேற்கில் உதித்தல் போன்ற மறுமை நாளின் அடையாளங்கள் அனைத்தும் மறைவான விஷயங்களை நம்பிக்கை கொள்வதோடு சம்பந்தப்பட்ட அம்சங்களாகும்.

2. மறுமை நாளின் அடையாளங்கள் பற்றிய அறிவு நம்மிடம் இருக்கும்போது அது நாம், நன்மை செய்யவும் இபாதத்களில் ஈடுபடவும், மறுமைக்கு தயாராகவும், அதிகமதிகம் தவ்பா செய்யவும், மேலும் அல்லாஹ்வை மறந்து உலகமே இலக்கென்று வாழுகின்ற நிலையிலிருந்து விடுபடவும் நம்மைத் தூண்டுகிறது.

மறுமை நாளின் அடையாளங்கள் நெருங்கி வருவதை அறிந்த நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அதை மக்களுக்கு எடுத்துக்கூறி அவர்களை மறுமைக்கு தயாரான மக்களாக மாற்றினார்கள். இதனடிப்படையில்தான் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஒரு முறை இரவில் கண் விழித்து “நெருங்கிவிட்ட ஓர் ஆபத்தின் மூலம் அரபுகளுக்கு கேடு உண்டாகப் போகிறது. இன்று யஃஜூஜ், மஃஜூஜ் கூட்டத்தாருடைய தடைச்சுவரின் (ஒரு) பகுதி திறக்கப்பட்டு விட்டது....” எனக்கூறி (மக்களுக்கு எச்சரிக்கை விடுத்துவிட்டு) “உங்களது மனைவிமார்களை எழுப்பித் தொழச் சொல்லுங்கள், இப்போது ஆடையோடு இருப்பவர்கள், நாளை மறுமையில் ஆடையற்று இருக்க வேண்டிவரும்” என்றார்கள்.

3. மறுமை நாளின் அடையாளங்கள் பற்றி அறிவதால் பல மார்க்க சட்டங்களையும் தெரிந்து கொள்ளலாம்.

உதாரணமாக தஜ்ஜால் இவ்வுலகில் வெளியாகும்போது ஒரு நாள் ஒரு வருடம் போலவும் மறுநாள் ஒரு மாதம் போலவும் இருக்கும் எனக் கூறப்பட்டபோது ஸஹாபாக்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் “அந்நாளில் ஒரு நாளைக்குரிய தொழுகையை தொழுதுகொண்டால் போதுமா எனக் கேட்டார்கள். அதற்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இல்லை, நேரத்தைக் கணித்துத் தொழுது கொள்ளுங்கள் என பதிலளித்தார்கள்.

இந்த ஹதீஸை வைத்து, மாதக்கணக்கில் இரவு பகல் நீளமாக இருக்கின்ற பகுதிகளில் தொழுகை போன்ற இபாதத்களை அவற்றின் நேரத்தைக் கணித்து நிறைவேற்ற வேண்டும் எனும் மார்க்கச் சட்டம் பெறப்படுகிறது.

4. மறுமையின் அடையாளங்கள் அல்லாஹ் மாத்திரமே அறிந்த, மறைவான விஷயங்களில் உள்ளவையாகும். அவற்றை யூகங்களின் மூலமோ, அனுபவத்தின் மூலமோ அறியமுடியாது. இப்படி மறைவான விஷயங்களை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள் என்றால் நிச்சயமாக அவை அல்லாஹ்வினால் சொல்லிக் கொடுக்கப் பட்டவையாகவே இருக்கும்.

**“அவன்தான் மறைவான இவ்விஷயங்களையெல்லாம் நன்கறிந்தவன் ஆவான். மறைவாக உள்ள இவ்விஷயங்களை அவன் ஒருவருக்கும் வெளிப்படுத்துவது இல்லை. ஆயினும், தன் தூதர்களில் எவர்களைத் தேர்ந்தெடுத்தானோ அவர்களுக்கு அதை அவன் அறிவிக்கக்கூடும். (அதை அவன் அவர்களுக்கு அறிவித்த சமயத்தில்) நிச்சயமாக அவன் அவர்களுக்கு முன்னும் பின்னும் (ஒரு மலக்கைப்) பாதுகாப்பவராக அனுப்பி வைக்கின்றான்.” (அல்குர்ஆன் 72 : 26, 27)**

5. மறுமையின் அடையாளங்களை நாம் அறிந்து கொள்வதால் மறுமை நாளின் அடையாளங்கள் விஷயத்தில் மார்க்கம் கூறிய வரையறைக்குள் நின்று கொள்ள முடியும். கேள்விப்படுகின்ற அனைத்துச் செய்திகளையும் வைத்துக் குழம்பிக்கொள்ள வேண்டிய அவசியமில்லை.

உதாரணமாக, தஜ்ஜால் பற்றிய விஷயத்தில் அவனது கண், நெற்றி, அவனது செயல்பாடுகள் என்பவற்றை தெளிவாக அறிந்துகொள்வதின் மூலமாக தஜ்ஜால் வருகின்றபோது, அவனது அடையாளங்களை வைத்து அவனை இனங்கண்டு அவனது குழப்பங்களில் விழக்கூடிய நிலையிலிருந்து தவிர்ந்து கொள்ளலாம்.

6. ஒரு விஷயத்தை திடீரென எதிர்கொள்வதைவிட, முன்கூட்டியே அது பற்றி அறிந்து வைத்திருக்கும்போது அவற்றை எதிர்கொள்ள உள்ளங்களைத் தயார்படுத்திக் கொள்ளலாம்.

7. காஃபிர்கள் -இறைமறுப்பாளர்கள் வெறுத்தாலும் இஸ்லாமே மேலோங்கும் என்ற நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் முன்னறிவிப்புக்கு ஏற்ப இஸ்லாம் வெற்றிபெற்று உலகெங்கும் பரவும். யூத கிறிஸ்துவ மதங்கள் மறைந்தோடிவிடும் என்பது மறுமை நாளின் அடையாளமாகும். எனவே, இதனை அறிவது, நிச்சயம் அத்தகைய நேரம் வருவதின் மீது நமக்கு ஆவலை ஏற்படுத்துவதுடன் அதற்கான முயற்சிகளையும் ஏற்பாடுகளையும் செய்ய நம்மைத் தூண்டும்.

8. அல்குர்ஆன், அல்ஹதீஸ் மூலமாக, எதிர் காலங்களில் நடைபெற இருக்கும் நிகழ்வுகளை அறிந்து, அவை அப்படியே நடந்து விடுகின்ற போது உள்ளங்கள் பூரிப்படைகின்றன.

தமக்கும் மறைவான ஞானம் இருப்பதாக வாதிடுகின்ற ஜோதிடர்கள், சூனியக்காரர்களின் பொய்யான கணிப்புகளை ஏற்றுக்கொள்ளாத இஸ்லாம், வஹியின் மூலம் எதிர்காலத்தில் நடக்கவிருக்கும் மறுமை நாளின் அடையாளங்களைத் தெளிவாக அறிவித்துத் தந்திருக்கிறது.

9. மறுமையின் அடையாளங்களை ஈமான் கொள்வது நமது ஈமானை அதிகப்படுத்தி வலுப்படுத்துகின்றது. முன்னறிவிப்புச் செய்யப்பட்ட மறுமை நாளின் அடையாளங்கள் நடக்கின்றபோது இஸ்லாமின் உண்மைத் தன்மையும் வலுப்பெறுகின்றது.

இவ்வாறே, மறுமை நாளின் அடையாளங்களை அறிந்து கொள்வதால், இங்கு குறிப்பிடப்படாத இன்னும் ஏராளமான நன்மைகள் உள்ளன.

....................................

# மறுமை நாளின் அடையாளங்கள் பற்றிப் பேசுகின்றபோது கவனிக்க வேண்டிய சில விதிமுறைகள்



உலமாக்கள் அன்றும் இன்றும் மறுமை நாளின் அடையாளங்கள் பற்றி எழுதியுள்ளார்கள். இன்றும் தொலைக்காட்சி மற்றும் வானொலி நிகழ்ச்சிகள் மூலமாகவும் வலைத் தளங்கள் மூலமாகவும் பலரும் அவ்வப்போது மறுமைநாளின் அடையாளங்கள் பற்றிப் பேசிக் கொண்டுதான் இருக்கின்றார்கள். எனினும் மறுமைநாள் பற்றிப் பேசுகின்ற பலர், அது பற்றிய அல்குர்ஆன், ஹதீஸ்களுக்கு விளக்கம் கூறும்போது தடுமாறுவதையும் தவறிழைப்பதையும் காணமுடிகின்றது.

எனவே, மறுமை நாளின் அடையாளங்கள் பற்றிப் பேசுகின்றபோது கவனத்தில் கொள்ளவேண்டிய சில அம்சங்களை இங்கே தொகுத்துத் தருவது சிறந்ததெனக் கருதுகின்றேன்.

## ⊙ ஆதாரங்களை முன்வைக்கின்றபோது அல்குர்ஆன் ஹதீஸோடு மட்டும் நின்றுகொள்ள வேண்டும்.

மறைவான விஷயங்களைப் பற்றி அல்குர்ஆன், ஹதீஸ் மாத்திரமே பேசமுடியும்.

**“(இன்னும்) நீர் கூறுவீராக அல்லாஹ்வைத் தவிர்த்து வானங்களிலும் பூமியிலும் இருப்பவர் எங்கும் மறைவாய் இருப்பதை அறியமாட்டார். இன்னும் (மரணித்தோர் இறுதியில்) எப்போது எழுப்பப்படுவார்கள் என்பதையும் அவர்கள் அறிய மாட்டார்கள்.” (அல்குர்ஆன் 27 : 65)**

**“அவன்தான் மறைவானவற்றை அறிந்தவன். எனவேதான் மறைத்திருப்பவற்றை அவன் எவருக்கும் வெளியாக்க மாட்டான். தான் பொருந்திக்கொண்ட தூதருக்கே தவிர.” (அல்ஜின் 72 : 26, 27)**

மேலுள்ள வசனத்திற்கேற்ப சில ஆன்மீக ரீதியான நலவுகளைக் கருத்தில் கொண்டு அல்லாஹுதஆலா நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு எதிர்காலத்தில் நடக்க இருக்கின்ற சில மறைவான அடையாளங்களை அறிவித்தும் கொடுத்திருக்கின்றான்.

இதை தவிர்த்து கட்டுக் கதைகளையும், கனவுகளையும், அரசியல் ரீதியான சில நிகழ்வுகளையும் சுட்டிக்காட்டி இதுதான்

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் குறிப்பிட்ட மறுமை நாளின் அடையாளம் என விளக்கம் கொடுப்பது தவறாகும்.

அவ்வாறே, நபியவர்கள் கூறியதாகவோ அல்லது நபித் தோழர்கள் கூறியதாகவோ ஒரு செய்தி கிடைத்தால் அது ஸஹீஹான -சரியான செய்திதானா என்பதையும் நன்கு கவனித்துக் கொள்ளவேண்டும்.

இன்று பலர் மறுமை நாளின் அடையாளங்கள் பற்றிப் பேசுகின்றபோது அபூர்வமான பல கட்டுக்கதைகளையும், பொய்களையும் கூறி, மக்களைக் கவர்ந்து, வாசகர்களை அதிகரித்து, தங்களது நூல்களை விற்று அதன் மூலம் இலாபம் பெற்றுக் கொண்டிருப்பதையும் பார்க்கலாம்.

அந்த வகையில் ஒரு எழுத்தாளர் தனது நூலில் குறிப்பிட்டிருந்த பொய்யான செய்தியின் ஒரு பகுதியை உங்களோடு பகிர்ந்து கொள்ளலாம் என எண்ணுகின்றேன்.

"... ஹிஜ்ரி 1402 அல்லது 1403ன் பின்னர் "மஹ்தி அவர்கள் வெளிப்பட்டு முழு உலகுக்கும் எதிராகப் போராடுவர்கள். எனினும் யூதர்களும், கிறிஸ்தவர்களும், முனாஃபிக்குகளும் அவருக்கெதிராகப் பலஸ்தீனின் மஜ்துன் எனும் மலையடிவாரத்தில் ஒன்று சேருவார்கள். அவ்வேளை உலக சண்டியன், குள்ளன், விபச்சாரி எனும் பண்புகளோடு அமெரிக்கா எனப் பெயர்கொண்ட ஒருவன் தோன்றி உலகையே அழிவின் பக்கமும், அனாச்சாரத்தின் பக்கமும் இட்டுச்செல்வான். அவ்வேளை யூதர்களே அதிகாரத்தில் அமர்ந்துகொண்டு முஸ்லிம்களின் புனிதப் பிரதேசங்களையெல்லாம் ஆக்கிரமிப்பார்கள்.

அப்போது மஹ்தி அவர்கள், உலகம் முழுவதுமே அல்லாஹ்வின் சட்டங்களுக்கு கட்டுப்படவேண்டும் என்பதற்கான முயற்சியில் இறங்குவார்கள். (அதற்குத் துணையாக) அல்லாஹ் காஃபிர்களைக் கடுமையாகத் தண்டித்து வானத்திலிருந்து வேதனையை இறக்குவான், பூமியில் உள்ள அனைவருமே காஃபிர்களை லஃனத் -சபிப்பார்கள். அதன் பின்னர் இப்பூமியில் எந்தக் காஃபிரும் இல்லாமல் அல்லாஹ் அழித்து விடுவான்" என தனது நூலில் குறிப்பிட்டுள்ளார். இது எந்தவித ஆதாரமுமற்ற கட்டுக்கதையாகும்.

## ⊙ மறுமை நாளின் அடையாளங்கள் பற்றிப் பேசும்போது நம்பத் தகுந்த மார்க்க அறிஞர்களின் கருத்துகளை கவனத்தில் கொள்ளவேண்டும்

“உங்களுக்குத் தெரியாதிருந்தால் ஞானமுடையவர்களிடம் கேட்டு தெரிந்து கொள்ளுங்கள்.” (அல்குர்ஆன் 21 : 7)

“...அதை (அல்லாஹ்வுடைய) தூதரிடமும், தங்கள் அதிகாரி களிடமும் (மட்டும்) தெரிவித்தால் அவர்களில் ஊகிக்கக்கூடிய (ஆராயக்கூடிய அ)வர்கள் உண்மையை நன்கறிந்து கொள்வார்கள்.” (அல்குர்ஆன் 4 : 83)

எனவே எந்தவொரு விஷயமாக இருந்தாலும் அவ்விஷயம் பற்றி அறிஞர்களின் நிலைப்பாடுகளை அறிவதற்கு முன்னர் அவசரப்பட்டு நாம் எதனையும் கூறிவிடக்கூடாது என்பதை மேற்படி வசனங்கள் அறிவுறுத்துவதைக் காணலாம்.

இதுவே ஸலஃபுஸ் ஸாலிஹீன்கள் -சிறப்பிற்குரிய முன்னோர்களின் வழிமுறை என்பதற்குப் பின்வரும் அபூ துஃபைல் ரழியல்லாஹு அன்ஹு அவர்களது சம்பவத்தை முன்மாதிரியாகக் கொள்ளலாம்.

“நான் கூஃபாவில் இருக்கும்போது தஜ்ஜால் வெளிப்பட்டு விட்டதாக ஒரு செய்தி பரவியது. அப்போது நாங்கள் ஹுதைஃபா இப்னு அஸீத் ரழியல்லாஹு அன்ஹு அவர்களிடம் வந்தோம். அவர் (மக்களுக்கு மார்க்கம்) சொல்லிக் கொண்டிருந்தார். அப்போது நான் அவரிடம் தஜ்ஜால் வெளியாகி விட்டதாகக் கூறினேன். அதற்கவர் என்னை அமரக் கூறினார். நான் அமர்ந்து கொண்டேன். அவ்வேளை அங்கே வேறொரு முக்கியஸ்தரும் வந்திருந்தார். அவரும் தஜ்ஜால் வெளியாகிவிட்டதாகவும் அச்செய்தியைக் கூஃபாவாசிகளிடம் கூறியபோது, கூஃபாவாசிகள் அவரைக் கடிந்து கொண்டதாகவும் கூறினார். அவரையும் அஸீத் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் அமருமாறு கூற, அவரும் அமர்ந்து கொண்டார்.

அப்போது நாங்கள் “அபூசுரைஹா அவர்களே! எங்களை அமரக் கூறிய விஷயத்தைக் கூறுங்கள்” என்றோம். அதற்கவர் ”நீங்கள் வாழும்

இக்காலத்தில் தஜ்ஜால் வெளியானால் சிறுவர்கள் அவனை வில்லால் அடித்திருப்பார்கள், மனிதர்கள் மார்க்கத்தை விட்டுத் தூரமாகி, ஒருவருக்கொருவர் பொறாமைப்பட்டு, உறவுகள் பிரிந்து கிடக்கின்ற ஒரு கால கட்டத்திலேதான் தஜ்ஜால் வருவான். (பூமியின்) அனைத்துப் பிரதேசங்களுக்கும் செல்வான், தோல்கள் சுருங்குவதுபோன்று உலகம் அவனுக்கு சுருக்கிக் கொடுக்கப்படும்" என்றார்.[1]

## ⊙ மக்கள் புரிய முடிகின்றவற்றையே பேசவேண்டும்

சிலர் பொது மக்களோடும், புதிதாக இஸ்லாத்தைத் தழுவிய மக்களோடும் மறுமை நாளின் அடையாளங்கள் பற்றிப் பேசும்போது அவர்கள் சரியான முறையில் விளங்கிக்கொள்ள முடியாதவாறு பல விஷயங்களையும் பேசி வருகின்றனர். சில விஷயங்களை மக்கள் தவறாகப் புரிந்து கொள்வதற்கு வாய்ப்பிருக்கிறது, அல்லது நாம் சொல்வதை உள்வாங்கக்கூடிய அளவிற்குக் கேட்பவர்கள் தகுதியற்றவர்களாக இருக்கக்கூடும் என்பதால் நமக்குத் தெரிந்தவற்றை எல்லாம் கட்டாயம் பேசித்தான் ஆகவேண்டும் என்பதோ, உண்மைகள் அனைத்தும் பகிரங்கப்படுத்தப்பட்டே ஆகவேண்டும் என்பதோ சட்டமல்ல.

இதனால்தான் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பின்வருமாறு கூறியுள்ளார்கள். "மக்கள் விளங்கிக் கொள்வதையே பேசுங்கள், (மக்கள் விளங்காதவற்றை எல்லாம் பேசுவதன் மூலம்) அல்லாஹ்வும் அவனது தூதரும் பொய்ப்பிக்கப்படுவதை நீங்கள் விரும்புகின்றீர்களா?"[2]

"நீங்கள் ஒரு சமூகத்தாரிடம் அவர்களின் அறிவுக்கு எட்டாத ஒரு விஷயத்தை அறிவிப்பது, அவர்களில் சிலரையேனும் குழப்பத்தில் ஆழ்த்தாமல் விடுவதில்லை."[3]

........................................

1. இந்த ஹதீஸின் அறிவிப்பாளர் பற்றி சில கருத்து வேறுபாடுகள் காணப்படுகின்றன.
2. அறிவிப்பாளர்: இப்னு மஸ்ஊத் ரழியல்லாஹு அன்ஹு, நூல் : ஸஹீஹுல் ஸஹீஹுல் புகாரி.
3. அறிவிப்பாளர் : இப்னு மஸ்ஊத் ரழியல்லாஹு அன்ஹு, நூல் : ஸஹீஹ் முஸ்லிம்

# அன்றாட நிகழ்வுகளும்
# மறுமை நாளின் அடையாளங்கள்
# பற்றிய வசனங்களும்

முன்பு நாம் குறிப்பிட்டதைப்போன்று அன்றாட நிகழ்வுகளை எல்லாம் மறுமை நாளின் அடையாளங்கள் என எண்ணி, அது குறித்து வந்துள்ள வசனங்களோடும் ஹதீஸ்களோடும் இணைத்துப் பேசுவது இன்று சாதாரணமாகி விட்டது.

எனவே, மறுமை நாள் பற்றி வந்துள்ள ஆதாரப்பூர்வமான வசனங்களை சமகால நிகழ்வுகளோடு ஒப்பிட்டு அல்லது இணைத்துப் பேசுவதற்கான சில வழிகாட்டல்களை இனங்காட்டுவது அவசியம் எனக் கருதி அதற்கான சில விதிமுறைகளை குறிப்பிடலாம் என எண்ணுகின்றேன்.

## விதி 1

மறுமை நாளின் அடையாளங்கள் பற்றி வந்துள்ள அல்குர்ஆன் வசனங்களையும், ஹதீஸ்களையும் சமகால நிகழ்வுகளோடு இணைத்துப் பேசவேண்டும் என்பது மார்க்கத்தில் வலியுறுத்திக் கூறப்பட்டுள்ள ஒரு விஷயமல்ல.

சமகாலத்தில் வாழ்கின்ற மனிதர்கள், முன்சென்ற மனிதர்கள் கண்டிராத பல்வேறு நிகழ்வுகளைக் கண்டு வருகின்றனர். கடந்த காலங்களில் பெரிய விஷயமாகப் பார்க்கப்பட்ட பல நிகழ்வுகள் இன்று சர்வசாதாரணமான நிகழ்வுகளாகவே பார்க்கப்படுகின்றன. தொழில் நுட்பம் வளராத காரணத்தினால் அன்று அந்தந்த பிரதேசங்களில் நடப்பவற்றை மட்டுமே மனிதன் அறிந்துகொண்டான். அதனால், அவற்றைப் பெரிதாகவே பார்க்க வேண்டியிருந்தது. இன்று உலகின் பல கோணங்களில் நடைபெறுகின்ற நிகழ்வுகளெல்லாம் உடனுக்குடன் கிடைக்கப்பெறுவதால் அனைத்துமே சர்வசாதாரணமான நிகழ்வுகளாகி விட்டன.

அறிவும், பக்குவமும் கொண்ட உலமாக்கள், சில நிகழ்வுகளை மையமாக வைத்து அவற்றை மறுமை நாளின் அடையாளமாக இருக்கலாம் என இஜ்திஹாத் -ஆய்வு செய்வார்கள். இதற்கு உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் இப்னு ஸய்யாதை தஜ்ஜால் எனக் குறிப்பிட்டதையும்

அதற்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் எந்த மறுப்பும் தெரிவிக்காததையும் குறிப்பிடலாம்.

எனினும், மறுமை நாளின் அடையாளங்களோடு சம்பந்தப்பட்ட ஹதீஸ்களை அல்லது குர்ஆன் வசனங்களை நடைமுறை நிகழ்வுகளோடு சம்பந்தப்படுத்திப் பேசுகின்றபோது அவை மக்கள் மத்தியில் குழப்பங்களை ஏற்படுத்தும் என்றிருந்தால் அவை முற்றாக தவிர்க்கப்பட வேண்டும்.

மறுமைநாளின் அடையாளங்கள் பற்றிய ஹதீஸ்களைப் பார்க்கின்ற பலரும் அவற்றை வரலாற்று நிகழ்வுகளோடும் சமகால சம்பவங்களோடும் ஒப்பிட்டு இதுவே ஹதீஸ்களில் சொல்லப்பட்ட மறுமை நாளின் அடையாளமாகும் எனக் கூறிவிடுகின்றனர்.

இந்த வகையில் “ஈராக்கில் பணமும், பொருளும் முடக்கப்படும்” எனும் செய்தியை பலரும் 1990ம் ஆண்டு ஈராக்கில் அமெரிக்காவினால் ஏற்படுத்தப்பட்ட பொருளாதாரத் தடையோடு ஒப்பிட்டுக் கூறியதைக் காணலாம்.

உண்மையில் மேற்படி ஒப்பீடு சில நேரங்களில் பொருத்தமானதாகத் தென்பட்டாலும் இதுதான், குறிப்பிட்ட அந்த ஹதீஸின் விளக்கம் என உறுதியாகக் கூறுவது பொருத்தமற்றதாகும்.

குர்ஆன், ஹதீஸின் தெளிவான குறிப்புகளின்றி ஹதீஸ்களின் மேலோட்டமான கருத்தை வைத்து அவற்றை சமகால நிகழ்வுகளோடு ஒப்பிட்டு, இதுவே குறிப்பிட்ட ஹதீஸின் விளக்கம் என உறுதியாகக் கூறுவது அறியாமையின் எடுத்துக்காட்டாகும்.

இவ்வறியாமையினால் சிலர், சிலரை மஹ்தி என உறுதியாகக் கூறி பிரச்சாரம் செய்ததால் பல பிரச்சினைகளும் கொலைகளும் நிகழ்ந்திருக்கின்றன என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இதற்கான சில எடுத்துக்காட்டுகள்

“அஸ்ராருஸ் ஸாஆ” எனும் நூலில் “மஹ்தியின் வருகைக்கு முதல் ஈரானின் ஆட்சிபீடம் தஜ்ஜாலிடம் ஒப்படைக்கப்படும்” எனவும், அவரே ஈரானின் ஐந்தாவது ஜனாதிபதியான முஹம்மத் காத்தமி

எனவும் குறிப்பிட்டு அவருக்கு ஆயத்துல்லாஹ் கொர்பஷோ என புனைப் பெயரும் சூட்டப்பட்டுள்ளது.[1]

அவ்வாறே "மஸீஹுத் தஜ்ஜால்" எனும் புத்தகத்தில் அதன் ஆசிரியர் "ஈராக்கின் முன்னாள் தலைவர் சதாம் ஹுசைன்தான் மஹ்தி ஆவார்" எனக் குறிப்பிட்டுள்ளார்.

Armageddon (இறுதிப் போராட்டக் களம்) எனும் நூலில், அமீன் முஹம்மது ஜமால் என்பவர், ஹதீஸ்களில் "சுஃப்யானி" எனக் குறிப்பிடப் பட்டிருப்பவர் சதாம் ஹுசைன் ஆவார் எனக் குறிப்பிட்டுள்ளார்.

"மறுமை நாளின் அடையாளங்களும் மேற்குலகின் தாக்குதல்களும்" எனும் நூலில், "ஹதீஸ்களில் வந்துள்ள சுஃப்யானி என்பவர் முன்னாள் ஜோர்டான் தலைவர் அல் ஹுஸைன் என்பவராவார்" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

உலகில் இடம்பெறுகின்ற நிகழ்வுகளை குர்ஆன், ஹதீஸ் ஆதாரங்களோடு உரசிப் பார்க்கின்றபோது நூறு சதவீதம் சந்தேகத்திற் கிடமின்றி பொருந்திப் போகின்ற விஷயங்களில் மட்டும் ஹதீஸ்களில் சொல்லப்பட்ட முன்னறிவிப்பு இதுவாகத்தான் இருக்கலாம் எனக் கூறுவதில் தவறில்லை. எனினும், உறுதிப்படுத்திக் கூறுவதை தவிர்த்துக் கொள்வது சிறப்பாகும்.

இதற்கான சில உதாரணங்களைப் பார்க்கலாம்.

1. அஸ்மா பின்த் அபூபக்ர் ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் தனது மகன் அப்துல்லாஹ் இப்னு சுபைர் கொல்லப்பட்ட விஷயம் பற்றிப் பேசும்போது "அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் எங்களிடம், "ஸகீஃப் குலத்தாரில் மகா பொய்யன் ஒருவனும் நாசகாரன் ஒருவனும் இருப்பார்கள்" என்று கூறினார்கள். மகா பொய்யனை ('முக்தார் இப்னு அபீஉபைத்'ஐ) நாங்கள் பார்த்து விட்டோம். அந்த நாசகாரன் நீதான் என்றே நான் கருதுகிறேன்" என்று கூறினார். உடனே ஹஜ்ஜாஜ் அங்கிருந்து எழுந்து சென்றுவிட்டார். அஸ்மா (ரலி) அவர்களுக்கு அவர் பதிலேதும் சொல்லவில்லை."[2]

---

1. பார்க்க : அஸ்ராருஸ் ஸாஆ - ஃபஹ்த் ஸாலிம்
2. நூல் : ஸஹீஹ் முஸ்லிம்

''பொய்யனை நாங்கள் கண்டுவிட்டோம்'' என்ற அஸ்மா ரழியல்லாஹு அன்ஹா அவர்களின் கூற்றின் மூலம் "சகீஃப்" கோத்திரத்தைச் சேர்ந்த மிகப்பெரிய பொய்யனான முஹ்தார் இப்னு அபீ உபைதையே நாடப்படுகிறது, தன்னிடம் ஜிப்ரீல் அலைஹிஸ் ஸலாம் அவர்கள் வஹிகொண்டு வருகிறார்கள் என்று கூறியது அவனது மிகப்பெரிய பொய்களுள் ஒன்றாகும். அவ்வாறே, இங்கே கொலைகாரன் என்பதன் மூலம் ஹஜ்ஜாஜ் இப்னு யூசுஃபையே நாடப்படுகிறது என்பதில் அறிஞர்கள் ஒரே கருத்தில் உள்ளார்கள். (அல்லாஹ் மிக அறிந்தவன்).[1]

2. "பசராவிலுள்ள ஒட்டகங்களின் கழுத்துகளுக்கு வெளிச்சம் படக் கூடியளவுக்கு ஹிஜாசிலே பிரமாண்டமான தீயொன்று வெளிப்படாத வரை மறுமை நாள் ஏற்படாது'' என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.[2]

மேலே சொல்லப்பட்ட இந்நெருப்பு ஏற்பட்டு அது மூன்று மாதங்கள் தொடர்ந்து எரிந்து கொண்டிருந்ததாகவும் மதீனாவைச் சேர்ந்த பெண்கள் அந்நெருப்பின் வெளிச்சத்தில் கயிறு திரித்ததாகவும் சொல்லப்படுகிறது.

அபூ ஷாமா என்பவர் மேற்படி சம்பவம் பற்றிக் கூறுகின்றபோது ''ஹிஜ்ரி 654 ஜுமாதல் உக்ரா 3ம் தேதி புதன்கிழமை மதீனாவில் திடீரென பிரமாண்டமானதொரு சப்தம்கேட்டது. தொடர்ந்து வெள்ளிக்கிழமை வரை மணிக்கு ஒருமுறை ஏற்பட்ட நில நடுக்கங்களினால் கதவுகளும், கூரைகளும், சுவர்களும், பூமியும் ஆட்டம் கண்டு கொண்டிருந்தன. பிறகு பனு குரைழாவிற்கு அருகில் உள்ள "ஹர்ரா" எனும் இடத்தில் மிகப்பெரும் தீப்பிழம்பு ஒன்று வெளியானது. அப்போது நாங்கள் மதீனாவில் எங்களது வீடுகளுக்குள்ளிருந்து கொண்டே அதனைக் கண்டோம். "ஷளா'' எனும் ஓடைவரை நீர் வழிந்தோடுவதைப் போல பெரும் கோட்டைகள் போன்ற தீச்சுவாலையுடன் அது காணப்பட்டது.[3]

இமாம் நவவி ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் ''நாங்கள் வாழ்ந்த காலப்பகுதியான ஹிஜ்ரி 654ல் மதீனாவின் கிழக்குப் பகுதியில் ஒரு பெருநெருப்பு வெளியாகியது என்பது அனைவரும் அறிந்த

---

1. பார்க்க : ஷரஹ் ஸஹீஹ் முஸ்லிம்.
2. அறிவிப்பாளர் : அபூஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு, நூல் : ஸஹீஹ் முஸ்லிம்
3, அத்தத்கீர், பக் : 527

விஷயமாகும்." என தனது ஸஹீஹ் முஸ்லிமிற்கான விரிவுரையில் கூறுகிறார்கள்.

"குர்துபி ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்களும் மற்றும் வேறு சில அறிஞர்களின் கருத்துக்களின் படி மதீனாவின் சுற்றுப் புறங்களில் தெரிந்த நெருப்பானது மேற்கண்ட ஹதீஸில் குறிப்பிடப்பட்டிருக்கின்ற நெருப்பே ஆகும்" என இமாம் இப்னு ஹஜர் ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் குறிப்பிடுகின்றார்கள்.[1]

3. குழப்பங்கள் வெளிப்பட்டு, பொய் அதிகரித்து சந்தைகள் சமீபமாகி (ஒன்றுக்கொன்று நெருக்கமாகி), காலம் சுருங்கி, "ஹர்ஜ்" அதிகரிக்கும் வரையும் மறுமைநாள் நிகழாது" என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியபோது, "ஹர்ஜ்" என்றால் என்னவென்று கேட்கப்பட்டது. அதற்கு "ஹர்ஜ்" என்றால் கொலை என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பதிலளித்தார்கள்.[2]

ஃபத்ஹுல் பாரிக்குரிய மேலதிக பிற்சேர்க்கை ஒன்றில் ஷைக் இப்னு பாஸ் ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்கள். "மேலே குறிப்பிடப்பட்டுள்ள "சமீபமாகுதல்" என்பது இன்றைய காலத்தில் சமீபித்துக் காணப்படுகின்ற நகர முறைகளையும், விமானங்கள், வாகனங்கள், தொலைத் தொடர்பு சாதனங்கள் போன்றவற்றால் இன்று பயணக் காலங்களும் நேரங்களும் சுருங்கி (உலகத்தின் ஒரு பகுதி இன்னொரு பகுதிக்கு நெருக்கமாக) சமீபித்துக் காணப்படுகின்ற நிலையையும் குறிப்பிடலாம்."

## விதி - 2

மறுமை நாளின் அடையாளங்கள் மறுமை நிகழ்வதற்கு மிக நெருக்கமாகத்தான் இடம்பெற வேண்டும் என்பது கிடையாது. மாறாக, மறுமை நாளைக்கு பல வருடங்களுக்கு முன்பாகவும் இடம்பெறலாம்.

மறுமை நாள் அடையாளங்கள் என்பவை மறுமைநாள் நெருங்கிவிட்டது என்பதை அறிவிக்கும் அடையாளங்களாகும். அவை மறுமை நிகழ்வதற்கு மிக சமீபத்திலும் ஏற்படலாம் அல்லது தூரத்திலும் ஏற்படலாம்.

1, பார்க்க: ஃபத்ஹுல் பாரி 20/128

2. நூல்: அஹ்மத்

உதாரணமாக நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தனது நடுவிரலையும் சுட்டுவிரலையும் இணைத்துக் காட்டி நானும், மறுமை நாளும் இவை இரண்டும்போல நெருக்கமாக அனுப்பப்பட்டுள்ளோம் எனக் கூறினார்கள்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மரணித்த பின்பும் மறுமை நாளின் பல அடையாளங்கள் இடம்பெற்றிருப்பினும் அவர்களது மரணமும் மறுமை நாளின் அடையாளமாகவே எண்ணப்படுகிறது.

மறுமை நாளின் அடையாளங்களை அவை நடைபெறும் நேரத்தை வைத்துப் பல வகைகளாக பிரித்து நோக்கலாம்.

1. **நடந்து முடிந்தவை:** உதாரணமாக : நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இறைத் தூதராக அனுப்பப்பட்டது. அவர்களது மரணம், பொய் நபிமார்களின் தோற்றம்.
2. **நடந்து கொண்டிருப்பவை:** உதாரணமாக : கொலை அதிகரித்தல், நூல்கள் அதிகரித்தல்.
3. **நடக்க இருப்பவை:** உதாரணமாக : தஜ்ஜாலின் வருகை, அதிசயப் பிராணி.

## விதி - 3

மறுமை நாளின் அடையாளங்கள் பற்றி வந்துள்ள செய்திகளையும் சமகால நிகழ்வுகளையும் தவறான முறையில் தொடர்புபடுத்திப் பேசுவதால் பல விபரீதங்கள் உண்டாகின்றன. அவை பின்வருமாறு

1. அறிவற்ற வாதங்களாகவும் மறைவான விஷயங்களில் தவறாக தலையிடுவதும் ஆகும்.

ஹதீஸ்களில் சொல்லப்பட்டுள்ள மறுமை நாளின் ஓர் அடையாளத்தை வைத்து அதை சமகால சம்பவங்களோடு தொடர்புபடுத்தி இதுதான் இந்த ஹதீஸில் சொல்லப்பட்ட அடையாளமாகும் எனக் கூறுவதால் மார்க்கத்தின் அடிப்படையிலான ஆதாரமும், தெளிவும், தொடர்பும் இருக்க வேண்டும். மார்க்க விஷயங்களில் அறிவில்லாதவற்றைப் பேசக்

கூடாது என ஏவப்பட்டுள்ளதால், மறுமைநாளின் அடையாளங்கள் விஷயத்திலும் தெளிவில்லாததைப் பேசுவது பொருத்தமற்ற செயலாகும்.

2. மார்க்கத்தில் அனுமதிக்கப்பட்டதை விடுவதும் அனுமதிக்கப் படாததை செய்கின்ற நிலையும் உருவாகுதல்

சிலர் மஹ்தி அலைஹிஸ் ஸலாம் அவர்களின் வருகை பற்றிக் கூறுகின்ற புத்தகங்களை வாசிப்பார்கள். அந்த நூல்களில் மஹ்தி என்பவர் இவர்தான் என்று எவரையாவது அடையாளப்படுத்தி கூறியிருப்பார்கள். இதை வாசிப்பவர்களும் இவர்தான் மஹ்தி என நம்பி அதற்காகத் தங்களை தயார்படுத்திக் கொள்வார்கள்.

சிலர் அவற்றை வாசித்துவிட்டு வாள்கள், குதிரைகள் போன்றவற்றை வாங்கி வைத்துக்கொண்டு மஹ்தியுடன் இணைந்து போராடத் தயாராகியதையும், இன்னும் சிலர் தஜ்ஜால் வந்துவிட்டான் என்ற வதந்தியை நம்பி மனைவிமார்களை கைவிட்டதையும், வீடு கட்டுவதை நிறுத்திக் கொண்டதையும் குறிப்பிடலாம்.

3. அல்லாஹ்வையும் அவனது தூதரையும் பொய்ப்பிக்கின்ற அளவு குழப்பமான நிலைக்கு இட்டுச்செல்லும்

தெளிவான அறிவும் ஞானமுமின்றி ஆங்காங்கே நடைபெறுகின்ற சம்பவங்களுக்கும் ஹதீஸில் வந்துள்ள மறுமை நாளின் அடையாளங்களுக்கும் முடிச்சுப் போடுவதால் அவை ஹதீஸ்களைப் பொய்ப்பிக்கின்ற நிலைக்கு சிலரை இட்டுச்செல்கின்றது.

உதாரணமாக ஒருவரை இவர்தான் மஹ்தி என்று சொல்லிவிட்டு பின்னர் அவர் மஹ்தி அல்ல என்பது தெளிவாகத் தெரியவருகின்றபோது மக்கள் குழம்பிப்போய் அனைத்துமே பொய்யான விஷயங்கள் என்று மறுக்க நேரிடுகிறது.

....................................

# மறுமை நாளின் அடையாளங்கள் என்றால் என்ன?



## அடையாளங்கள்

மறுமை நாளின் அடையாளங்கள் என்பது மறுமை நாளையும், அது நிகழ்வதற்கான அறிகுறிகள் மற்றும் காரணிகளைக் குறிக்கின்றது. குறிப்பிட்ட இந்த அடையாளங்களும் காரணிகளும் நிகழ்ந்ததன் பின்பே மறுமை நாள் நிகழும் என்பதே இதன் அர்த்தமாகும்.

## மறுமை நாள்

மறுமை நாள் என்பது மறுமையின் நிகழ்வுகள் ஏற்படும் நேரத்திற்குச் சொல்லப்படும் பெயராகும். மனிதர்களுக்கு ஏற்படவிருக்கும் மிகப்பெரும் ஒரு சப்தத்தினால் படைப்பினங்கள் அனைத்தும் திடீரென ஒரு நாளிலேயே அல்லது ஒரு நேரத்திலேயே அச்சத்தினால் மரணித்துப் போவார்கள் என்பதால் இதற்கு மறுமை நாள் எனக் கூறப்படுகின்றது.

## மறுமை நாள் அடையாளங்களின் வகைகள்

மறுமை நாளின் அடையாளங்களை இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம்

## 1. சிறிய அடையாளங்கள்

சிறிய அடையாளங்களை இரண்டாக வகைப்படுத்தலாம்

1. நீண்ட காலத்திற்கு முன்னர் நடந்து முடிந்துவிட்ட சிறிய அடையாளங்கள்

இதற்கு உதாரணமாக, நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் வருகை, சந்திரன் பிளந்தது, மதினாவில் மிகப்பெரும் நெருப்பு வெளியாவது போன்றவற்றைக் குறிப்பிடலாம். (இந்த அடையாளங்கள் பற்றி பின்னர் விவரிக்கப்படும்)

2. நடந்துவிட்ட, இதுவரை நடந்து கொண்டிருக்கின்ற சிறிய அடையாளங்கள்

இதற்கு உதாரணமாக, ஒரு அடிமைப்பெண் தன் எஜமானியைப் பெற்றெடுத்தல், ஆடை அற்றவர்களும் காலணிகூட இல்லாமல் இருந்தவர்களும், ஆடு மேய்த்துக் கொண்டிருந்தவர்களும் போட்டி போட்டுக் கொண்டு கட்டடங்கள் கட்டுதல், நபி என்று தங்களை வாதிடக் கூடிய முப்பது பொய்யர்கள் தோன்றுதல் போன்ற பல விஷயங்களைக் குறிப்பிடலாம்.

## 2. பெரிய அடையாளங்கள்

இந்த அடையாளங்கள் வெளிப்பட்டுவிட்டால் அதைத் தொடர்ந்து மறுமை நாள் நிகழ்ந்துவிடும் இவை மொத்தம் பத்து அடையாளங்களாகும். இவற்றில் ஒன்றும் இதுவரை வெளிப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

“நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் (மாடி) அறையொன்றில் இருந்தார்கள். நாங்கள் கீழே இருந்தோம். அப்போது அவர்கள் எங்களை எட்டிப் பார்த்து, “என்ன பேசிக் கொண்டிருக்கிறீர்கள்?” என்று கேட்டார்கள். நாங்கள், “யுக முடிவைப் பற்றி (பேசிக் கொண்டிருக்கிறோம்).” என்று கூறினோம்.

அப்போது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், “பத்து அடையாளங்கள் நிகழாதவரை யுகமுடிவு நாள் வராது (எனக் கூறிவிட்டு)

1. கிழக்கில் ஒரு நிலநடுக்கம்
2. மேற்கில் ஒரு நிலநடுக்கம்
3. அரபு தீபகற்பத்தில் ஒரு நிலநடுக்கம்
4. புகை
5. தஜ்ஜால்
6. பூமிக்குள்ளிருந்து வெளிப்படும் (அதிசயப்) பிராணி
7. யஃஜூஜ், மஃஜூஜ்

8. சூரியன் மேற்கிலிருந்து உதிப்பது

9. எமன் நாட்டில் ஏற்படக்கூடிய ஒரு பெரும் நெருப்பு மக்களை அவர்களது மஹ்ஷரின்பால் துரத்திச் செல்லுதல்

10. மர்யமின் மகன் ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்கள் (வானிலிருந்து) இறங்குதல்" என்பவற்றைக் குறிப்பிட்டார்கள்.[1]

இந்த வரிசையில் மஹ்தி அவர்களின் வருகை, கஅபா இடிக்கப்படுதல், அல்குர்ஆன் பூமியிலிருந்து உயர்த்தப்படுதல் போன்ற பல அடையாளங்களும் ஹதீஸ்களில் கூறப்பட்டுள்ளன. இது பற்றியும் இன் ஷா அல்லாஹ் பின்னர் இந்நூலில் விவரிக்கப்படும்.

......................................

1. அறிவிப்பாளர் : ஹுதைஃபா ரழியல்லாஹு அன்ஹு, நூல்: ஸஹீஹ் முஸ்லிம்.

# மறுமை நாளின்
# சிறிய அடையாளங்கள்



## 1. நிகழ்ந்து முடிந்த அடையாளங்கள்

1. நபி முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் வருகை.
2. நபி முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் மரணம்.
3. சந்திரன் பிளக்கப்பட்டது.
4. ஸஹாபாக்கள் (நபித்தோழர்களின்) காலம் முடிவுற்றது.
5. பைதுல் முகத்தஸ் வெற்றி கொள்ளப்பட்டது.
6. ஆடுகளுக்கு ஏற்படுவது போன்ற ஒரு வகையான நோய் மனிதர்களுக்கு ஏற்பட்டு அதன் மூலம் மரணங்கள் அதிகரித்தல்.
7. குழப்பங்கள் அதிகரித்தல்.
8. சேட்டிலைட் சேனல்களின் தோற்றம் (செயற்கைக் கோள்கள், தொலைக் காட்சி அலைவரிசைகள் பரவுவது).
9. சிஃப்ஃபீன் யுத்தம் பற்றிய நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் முன்னறிவிப்பு.
10. கவாரிஜ்கள் (**خوارج** -மார்க்கத்தில் வரம்பு மீறுபவர்கள், முஸ்லிம்களையும் பொதுமக்களையும் கொல்பவர்கள்-) தோன்றுவது.
11. நபி என்று பொய் கூறுபவர்கள், ஏமாற்றக்கூடியவர்கள் தோன்றுதல்
12. பூமியில் வளமும், அச்சமற்ற நிலையும் பரவிக் காணப்படுதல்.
13. ஹிஜாஸ் பகுதியில் பெரும் நெருப்பு ஏற்படுதல்.
14. துருக்கியர்களின் யுத்தம்.
15. மனிதர்களை சாட்டையால் அடித்து நோவினை செய்யக் கூடியவர்கள் தோன்றுதல்.

16. கொலைகள் அதிகரித்தல்.
17. அமானிதம் மோசடி செய்யப்பட்டு அவை உள்ளங்களில் இருந்து எடுக்கப்பட்டு விடுதல்.
18. முற்கால சமுதாயத்தவர்களின் சடங்குகளையும் வழிமுறைகளையும் பின்பற்றுதல்.
19. அடிமைப் பெண் தனது எஜமானியைப் பெற்றெடுத்தல்.
20. ஆடையணிந்தும் நிர்வாணமாக காட்சியளிக்கின்ற பெண்கள் தோன்றுதல்.
21. செருப்பணியவும் ஆடையணியவும் வசதியற்றிருந்த இடையர்கள் உயர்ந்த கட்டடங்களை கட்டுதல்.
22. அறிமுகமானவர்களுக்கு மட்டும் ஸலாம் சொல்லுதல்.
23. வியாபாரம் அதிகமாக பரவுதல்
24. வியாபாரத்தில் பெண்களும் தங்கள் கணவர்களுடன் கூட்டுச்சேர்தல்.
25. குறிப்பிட்ட சில வியாபாரிகள் மட்டுமே சந்தைகளில் ஆதிக்கம் செலுத்துதல்.
26. பொய் சாட்சியங்கள் அதிகரித்தல்.
27. உண்மையான சாட்சியங்கள் மறைக்கப்படுதல்.
28. அறியாமை அதிகரித்தல்.
29. கஞ்சத்தனம் அதிகரித்தல்.
30. உறவுகள் துண்டிக்கப்படுதல்.
31. தொல்லை தரும் அண்டை வீடுகள் அதிகரித்தல்.
32. அநாகரீகமான செயல்பாடுகள் அதிகரித்தல்.
33. நம்பிக்கைக்குரியவர்கள் மோசடிக்காரர்களாகவும் மோசடிக் காரர்கள் நம்பிக்கையாளர்களாகவும் பார்க்கப்படுதல்.
34. மேன்மக்கள் மரணித்து அடுத்து அர்ப்பமானவர்கள் தோன்றுவது

35. வருமானத்தில் ஹலால் ஹராம் பேணாமல் இருப்பது.

36. ஃபைஉ -போரில் கிடைக்கும் செல்வங்கள் செல்வந்தர்களிடத்தில் மட்டும் தங்கிவிடுதல்.

37. அமானிதமாகக் கொடுக்கப்பட்ட பொருள் (அதை வைத்திருப்பவரின்) செல்வமாக ஆகிவிடுவது.

38. ஸகாத் கொடுக்க மனம் வராமை.

39. மனத்தூய்மை இல்லாத கல்வித் தேடல்.

40. மனைவியை திருப்திப்படுத்துவதற்காக தாயைக் கொடுமைப் படுத்துதல்.

41. நண்பர்களோடு நெருங்கிப் பழகுவதும், பெற்றோர்களை விட்டு தூரமாகுவதும்.

42. மஸ்ஜித்களில் சப்தங்கள் உயர்த்தப்படுதல். (கூச்சல், குழப்பம் செய்தல்)

43. பாவிகள் (கோத்திரங்களின்) தலைவர்களாக ஆகுவது.

44. சமுதாய அந்தஸ்து அற்றவர்கள் சமூகத் தலைவர்களாகுதல்

45. ஒருவனின் தீங்கிற்கு பயந்து அவனுக்கு மரியாதை செய்வது.

46. (அந்நிய பெண்களின்) மர்மஸ்தானத்தை ஹலால் -ஆகுமானதாக ஆக்குவது (விபச்சாரம் செய்வது).

47. (ஆண்கள்) பட்டுத் துணியை ஹலால் -ஆகுமானதாக ஆக்குவது.

48. மதுவை -போதை தரும் வஸ்துக்களை -ஹலால்- ஆகுமானதாக ஆக்குவது.

49. இசைக் கருவிகளை ஹலால் -ஆகுமானதாக ஆக்குவது.

50. மரணம் வராதா என எதிர்பார்த்திருக்கும் நிலை உருவாகுதல்.

51. காலையில் முஃமினாக இருப்பவர் மாலையில் காஃபிராகி விடுவது.

52. பள்ளிவாசல் அலங்கரிக்கப்படுவதும், அதை வைத்துப் பெருமை பேசுவதும்

53. வீடுகளை அலங்கரிப்பதும் அழகுபடுத்துவதும்
54. இடி முழக்கங்கள் அதிகரிப்பது.
55. எழுத்து அதிகரிப்பதும் பரவுவதும்.
56. நாவன்மையையும் பேச்சுத் திறனையும் வைத்து பணம் சம்பாதிப்பதும் பெருமைப்படுவதும்
57. குர்ஆன் அல்லாத மற்ற நூல்கள் அதிகமாக பரவுவது.
58. வாசகர்கள் அதிகரித்து அறிஞர்கள் குறைந்து விடுவது.
59. ஆழ்ந்த அறிவும், அனுபவமும் அற்ற இளம் வயதினரிடம் கல்வியைத் தேடும் நிலை உண்டாவது.
60. திடீர் மரணங்கள் அதிகரிப்பது.
61. ஆட்சி அதிகாரங்களில் முட்டாள்கள் அமர்வது.
62. காலம் (சுருங்கி) நெருக்கமாகுவது.
63. அற்பமானவர்கள் முன்னின்று பேசுவது.
64. சமூகத்தில் அடிமட்டத்தில் இருந்தவர்கள் செல்வ செழிப்புள்ளவர்களாக ஆகுவது.
65. பள்ளிவாசல்களை பாதைகளாக பயன்படுத்தப்படுவது.
66. மஹர் தொகை அதிகரிப்பது பின்னர் குறைந்து விடுவது
67. குதிரைகளின் விலை அதிகரித்துப் பின்னர் குறைந்து விடுவது
68. கடை பஜார்கள் நெருக்கமாகக் காணப்படுவது.
69. இஸ்லாமிய உம்மத்திற்கு எதிராக ஏனைய சமூகங்கள் ஒன்றிணைவது.
70. தொழுகையில் இமாமத் செய்ய மக்கள் பின்வாங்குகின்ற நிலைமை உருவாகுவது.
71. முஃமின்களின் கனவு பலிப்பது.
72. பொய் அதிகரிப்பது.
73. மக்களுக்கு மத்தியில் பரஸ்பர அறிமுகமற்ற நிலை உருவாகுவது.

74. நிலநடுக்கம் அதிகரிப்பது.
75. பெண்கள் அதிகரிப்பது.
76. ஆண்கள் குறைந்து விடுவது.
77. மானக்கேடான விஷயங்கள் பகிரங்கமாக நடைபெறுவது.
78. அல்குர்ஆனை (வெறும்) ஓதிவிட்டு அதற்காகக் கூலி வாங்குவது.
79. உடற்பருமன் அதிகரிப்பது.
80. சாட்சி சொல்ல அழைக்கப்படாமலே சாட்சி சொல்பவர்கள் தோன்றுவது.
81. நேர்ச்சை செய்துவிட்டு நிறைவேற்றாதவர்கள் தோன்றுவது.
82. பலசாலிகள் பலம் அற்றவர்களுக்கு அநீதி இழைப்பது.
83. அல்குர்ஆன் அல்லாதவற்றைக் கொண்டு சட்டங்கள் இயற்றப்படுவது.
84. உரோமர்கள் அதிகரித்து அரேபியர்கள் குறைந்து போவது

## 2. இதுவரை நிகழாத அடையாளங்கள்

85. மக்களுக்கு மத்தியில் செல்வம் பெருகிக் காணப்படுதல்.
86. பூமி தனது பொக்கிஷங்களை வெளியாக்குதல்.
87. உருமாற்றம் இடம்பெறுதல்.
88. பூகம்பங்கள் ஏற்படுதல்.
89. கல்மாரி பொழிதல்.
90. கல் வீடுகளை அடித்துச் செல்லும் வெள்ளங்கள்.
91. மழை பொழிந்தும் பயிர் செய்யமுடியாத நிலை ஏற்படுதல்.
92. அரேபியர்களைக் கூண்டோடு அழிக்கும் குழப்பங்கள்.
93. முஸ்லிம்களின் வெற்றிக்காக மரங்கள் பேசுதல்.
94. முஸ்லிம்களின் வெற்றிக்காக கற்கள் பேசுதல்.
95. முஸ்லிம்கள், யூதர்களைக் கொல்லுதல்.

96. ஃபுராத் (யூப்ரடீஸ்) நதியில் தங்க மலை வெளிப்படுதல்

97. பாவம் செய்வதா? அல்லது இயலாதவன் எனப் பெயர் வாங்குவதா என சங்கடப்படும் நிலை உருவாகுதல்.

98. அரேபிய தீபகற்பம் ஆறுகளாகவும் சோலைகளாகவும் மாறுதல்.

99. அஹ்லாஸ்[1] உடைய ஃபித்னா -குழப்பம் உருவாகுதல்.

100. செல்வச் செழிப்பால் ஏற்படும் குழப்பங்கள்

101. துஹைமா[2] எனும் குழப்பங்கள்.

102. ஒருமுறை ஸஜ்தா செய்வது உலகையும் அதிலுள்ளவற்றையும் விடச் சிறந்ததாகக் கருதப்படும் காலம் உருவாகுதல்

103. தலைப் பிறை பெரிதாகத் தோற்றமளித்தல்

104. மக்கள் அனைவரும் ஷாம் தேசத்துடன் இணைந்திருக்கும் நிலை உருவாகுதல்

105. ரோமர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையிலான மிகப் பெரிய யுத்தம்.

106. கான்ஸ்டண்டினோபில் (Constantinople)[3] வெற்றி கொள்ளப்படுதல்[4]

107. வாரிசுச் சொத்துக்கள் பிரிக்கப்படாத நிலை உருவாகுதல்.

108. கனீமத்தைப் பெற்றும் திருப்திடையாத நிலை ஏற்படுதல்.

109. மனிதர்கள் பண்டைய ஆயுதங்கள் மற்றும் வாகனங்களின் பால் திரும்புதல்.

110. பைதுல் முகத்தஸ் புனர் நிர்மாணம் செய்யப்படுதல்.

111. மதீனா நகர் பாழடைந்து போகுதல்.

112. இரும்பை துருத்தி சுத்தப்படுத்துவது போன்று மதீனா தன்னை விட்டும் தீயவர்களை வெளியேற்றி தன்னை சுத்தப்படுத்திக் கொள்ளுதல்

---

1. அஹ்லாஸ்: ஒருவர் ஒருவரை விட்டு விரண்டோடுவதும் முஸ்லிம்களுக்குள் அதிகமான யுத்தங்கள் நிகழ்வதும் ஆகும்.
2. துஹைமா: யாரையும் எவரையும் விட்டு வைக்காத ஒரு குழப்பமாகும்.
3. துருக்கி நாட்டின் இஸ்தான்புல் நகரத்தில் உள்ள ஒரு பகுதியாகும்.
4. முஹம்மத் அல் பாதிஹ் கொண்ட வெற்றி தவிர்ந்த இன்னொரு வெற்றி.

113. மலைகள் அகற்றப்படுதல்.
114. கஹ்தான் கோத்திரத்திலிருந்து ஒரு மனிதர் தோன்றுதலும் அவருக்கு மக்கள் கட்டுப்படுதலும்.
115. ஜஹ்ஜாஹ் என்று அழைக்கப்படுகின்ற ஒருவனின் வருகை.
116. வேட்டைப் பிராணி மற்றும் ஜடப்பொருட்கள் பேசுதல்.
117. சாட்டை பேசுதல்.
118. செருப்புப் பட்டி பேசுதல்.
119. தொடை பேசுதல்.
120. இஸ்லாம் இல்லாமல் ஆகிவிடுதல்.
121. மனிதர்களின் உள்ளங்களிலிருந்தும், ஏடுகளிலிருந்தும் குர்ஆன் உயர்த்தப்படுதல் (மறக்கடிக்கப்படுதல்).
122. கஅபாவை அழிக்கவரும் படையொன்று பூமிக்குள் முழுமையாக விழுங்கப்படுதல்.
123. கஅபாவில் ஹஜ் வழிபாடு நிறைவேற்றப்படாமல் ஆகிவிடுதல்
124. சில அரபு கோத்திரங்கள் மீண்டும் சிலைகளை வழிபட ஆரம்பித்தல்
125. குறைஷிக் கோத்திரம் அழிந்துபோகுதல்.
126. ஹபஷா நாட்டைச் சேர்ந்த ஒருவனால் கஅபா இடிக்கப்படுதல்.
127. முஃமின்களின் உயிரைக் கைப்பற்றும் இதமான காற்று.
128. மக்காவிலுள்ள கட்டிடங்கள் உயர்த்தப்படுதல்.
129. இந்த உம்மத்தின் பிந்தியவர்கள் முந்தியவர்களை சபித்தல்
130. புதிய புதிய வாகனங்கள் கண்டுபிடிக்கப்படுவது
131. மஹ்தி அவர்களின் தோற்றம்.

.....................................

# மறுமை நாளின் சிறிய அடையாளங்கள்

மறுமை நாளின் அடையாளங்களை பெரிய மற்றும் சிறிய அடையாளங்கள் என வகைப்படுத்தலாம் என ஏற்கனவே பார்த்தோம்.

பெரிய அடையாளங்களைப் பொறுத்தவரை அவை மறுமை நாள் நிகழ்வதற்கு மிக சமீபமாக, பெரும் அமளிகளுடன் நிகழும். ஆகவே, அனைவரும் அந்த அடையாளங்களைத் தெளிவாகவே உணர்ந்து கொள்வார்கள்.

சிறிய அடையாளங்களைப் பொறுத்தவரை அவை மறுமை நாளைக்கு குறிப்பிட்ட காலத்திற்கு முன்னர் ஆங்காங்கே நடைபெறும். சிலர் அவற்றை மறுமை நாளின் அடையாளங்கள் என உணர்ந்து கொண்டாலும், மற்றும் பலர் அவற்றை மறுமை நாளின் அடையாளங்கள் என உணர்ந்து கொள்ள மாட்டார்கள்.

தற்பொழுது மறுமை நாளின் சிறிய அடையாளங்களை குர்ஆன் மற்றும் ஹதீஸ் ஆதாரங்களோடு காண்போம்.



## 1. முஹம்மது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் வருகை

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் வருகை மறுமைநாள் நெருங்குகிறது என்பதற்கான சிறிய அடையாளங்களில் முதன்மையானது என அவர்களே சுட்டிக் காட்டியுள்ளார்கள்.

"நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தனது நடு விரலையும் சுட்டு விரலையும் காட்டி நான் நபியாக அனுப்பப்பட்டதும் மறுமை நாளும் இவ்வாறுதான் (நெருக்கமானது)" எனக் கூறியதை நான் கேட்டேன் என ஸஹ்ல் இப்னு ஸஃது ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கின்றார்கள்.[1]

மற்றொரு அறிவிப்பில் "நான் மறுமையின் அடையாளமாக அனுப்பப் பட்டுள்ளேன்" எனக் கூறியுள்ளார்கள்.[2]

"(மறுமை நாளின்) முதல் அடையாளம் நபி முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் வருகையாகும். அவர்களே இறுதி நபியுமாவார்கள் என்பதால் அவர்களுக்கும் மறுமைக்கும் இடையில் வேறு எந்த நபியும் அனுப்பப்பட மாட்டார்கள்."[3]

## 2. முஹம்மது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் மரணம்

மறுமை நாள் நெருங்கிவிட்டது என்பதற்கான ஆரம்ப அடையாளங்களில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் மரணமும் ஒன்றாகும்.

"தபூக் போரின்போது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் நான் சென்றேன். அவர்கள் ஒரு கூடாரத்தில் இருந்தார்கள். அப்போது அவர்கள், 'இறுதி நாள் வருவதற்கு முன்பு (அதற்குரிய) ஆறு அடையாளங்கள் நிகழும். அவற்றை எண்ணிக் கொள்: 1. என்னுடைய மரணம் 2. பைத்துல் முகத்தஸ் வெற்றி கொள்ளப்படுதல். 3. ஆடுகளுக்கு வருகிற (ஒரு வகை) நோயைப்

---

1. நூல் : ஸஹீஹுல் புகாரி
2. நூல் : ஹாகிம்
3. பார்க்க : இமாம் குர்துபி ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்களின் "அத் தத்கிரா"

போன்று கொள்ளை நோய் ஒன்று வந்து உங்களைப் பீடிக்கும் (அதனால் ஏராளமானவர்கள் இறந்து போய் விடுவார்கள்). 4. ஒருவருக்கு நூறு தீனார்கள் கொடுக்கப்பட்ட பின்பும் (அதனை அற்பமாகக் கருதி) அதிருப்தி அடையும் அளவிற்கு செல்வம் பெருகிக் காணப்படும். 5. பிறகு தீமையொன்று தோன்றும். அரபுகளின் வீடுகளில் அது நுழையாத வீடு எதுவும் இருக்காது. 6. பிறகு (ரோமர்களுக்கும்) உங்களுக்குமிடையே சமாதான ஒப்பந்தம் ஒன்று ஏற்படும் (அதை மதிக்காமல்) அவர்கள் (உங்களை) மோசடி செய்து விடுவார்கள். பிறகு உங்களை எதிர்த்துப் போரிடுவதற்காக எண்பது கொடிகளின் கீழே (அணி வகுத்து) அவர்கள் வருவார்கள். ஒவ்வொரு கொடிக்கும் கீழே பன்னிரெண்டாயிரம் போர் வீரர்கள் இருப்பார்கள்.'' எனக் குறிப்பிட்டார்கள்.[1]

(இந்த அடையாளங்கள் பற்றி பின்னர் தெளிவாக விவரிக்கப்படும்)

## 3. சந்திரன் பிளக்கப்படுதல்

**''மறுமை நெருங்கிவிட்டது. (அதற்கு அத்தாட்சியாக) சந்திரனும் பிளந்து விட்டது. எனினும், அவர்கள் எந்த அத்தாட்சியைக் கண்ட போதிலும் (அதைப்) புறக்கணித்து இது சகஜமான சூனியம்தான்'' என்று கூறுகின்றனர் (அல்குர்ஆன் 54 : 1, 2)**

''ஸஹீஹான ஹதீஸ்களில் வந்துள்ள செய்திகளின்படி, சந்திரன், நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது காலத்தில் பிளக்கப்பட்டு விட்டது என்பதிலும், அது அல்லாஹ்வின் அரும்பெரும் அத்தாட்சிகள் ஒன்றென்பதிலும் உலமாக்கள் ஒன்றுபட்ட கருத்தைக் கொண்டுள்ளார்கள் என இமாம் இப்னு கஸீர் ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் கூறுகின்றார்கள்.[2]

''மக்காவாசிகள் நபியவர்களிடம், தான் ஒரு நபியென்பதற்கான அத்தாட்சி ஒன்றைக் காண்பிக்குமாறு கேட்டபோது, நபியவர்கள் சந்திரனைப் பிளந்து காட்டினார்கள்.''[3]

1. அறிவிப்பாளர் : அவ்ஃப் இப்னு மாலிக், நூல் : ஸஹீஹுல் புகாரி 3176
2. தப்ஸீர் இப்னு கஸீர் 7/427
3. அறிவிப்பாளர் : அனஸ் ரழியல்லாஹு அன்ஹு, நூல் : ஸஹீஹுல் புகாரி, ஸஹீஹ் முஸ்லிம்

“நாங்கள் ஒரு முறை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களோடு மினாவில் இருந்தபோது, சந்திரன் மலையின் இரண்டு பக்கங்களிலும் இரண்டாக பிளந்தது. அப்போது நபியவர்கள் இதோ பாருங்கள் என (சந்திரன் பிளந்ததைக்) காட்டினார்கள்.”[1]

## 4. ஸஹாபாக்களின் காலம் முடிவுறுதல்

இந்த உம்மத்தில் நபியவர்களுக்குப் பிறகு மிகச் சிறந்தவர்கள் ஸஹாபாக்கள் ஆவார்கள்.

“நட்சத்திரங்கள் வானத்திற்கு பாதுகாப்பாகும். நட்சத்திரங்கள் இல்லாது போனால் வானத்திற்கு வாக்களிக்கப்பட்ட (சோதனை) வந்துவிடும். என்னுடைய தோழர்களுக்கு நான் பாதுகாப்பாக இருக்கின்றேன். நான் மரணித்துப்போனால் எனது தோழர்களுக்கு வாக்களிக்கப்பட்ட (சோதனை) வந்துவிடும். எனது உம்மத்திற்குப் பாதுகாப்பானவர்கள் எனது ஸஹாபாக்கள். அவர்கள் மரணித்துவிட்டால் எனது உம்மத்திற்கு வாக்களிக்கப்பட்ட (சோதனைகள்) வந்துவிடும்.”[2]

இங்கே, நட்சத்திரங்கள் இல்லாமல் போதல், வானத்தில் எரிகற்கள் வீசப்படுதல் மற்றும் நபிகளாரின் மரணம் என்பன ஸஹாபாக்களின் மறைவோடு இணைத்துக் கூறப்பட்டுள்ளது மிகவும் கவனிக்கத்தக்க விஷயமாகும்.

## 5. மஸ்ஜிதுல் அக்ஸாவின் வெற்றி

முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நபியாக அனுப்பப்பட்டபோது, ‘மஸ்ஜிதுல் அக்ஸா’ பலமும், ஆளுமையும் அதிகாரமும் மிக்க உரோம கிறிஸ்தவர்களின் ஆளுகைக்குள் இருந்தது. எனினும், பிற்காலத்தில் ‘மஸ்ஜிதுல் அக்ஸா’ முஸ்லிம்களால் வெற்றி கொள்ளப்படும் என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நன்மாராயம் கூறியிருந்த அதேவேளை அது மறுமை நாளின் அடையாளங்களின் ஒன்றெனவும் குறிப்பிட்டுள்ளார்கள்.

---

1. அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத் ரழியல்லாஹு அன்ஹு, நூல் : ஸஹீஹுல் புகாரி. ஸஹீஹ் முஸ்லிம்
2. அறிவிப்பாளர்: அபூ மூஸா அல் அஷ்அரி ரழியல்லாஹு அன்ஹு, நூல்: ஸஹீஹ் முஸ்லிம்

“மறுமை நாளுக்கு முன்பாக ஆறு அடையாளங்களை எண்ணிக் கொள்ளுங்கள்” என கூறிய நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மஸ்ஜிதுல் அக்ஸா வெற்றி கொள்ளப்படுவதையும் குறிப்பிட்டார்கள்.[1]

இரண்டாம் கலீஃபா உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் கி.பி. 637ல் பைத்துல் முகத்தஸைக் கைப்பற்றி குஃப்ரிலிருந்து தூய்மையாக்கி, அங்கே பள்ளிவாசல் ஒன்றையும் கட்டினார்கள்.

அந்த வகையில் இஸ்லாமிய வரலாற்றில் மஸ்ஜிதுல் அக்ஸா, முதல் முறையாக உமர் இப்னு கத்தாப் ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் ஆட்சியிலும், இரண்டாம் முறையாக சுல்தான் ஸலாஹுத்தீன் அய்யூபி ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்களின் ஆட்சியிலும் (ஹி 583 - கி.பி 1187) வெற்றி கொள்ளப்பட்டுள்ளது.

மீண்டும் ‘மஸ்ஜிதுல் அக்ஸா’ முஃமின்களால் வெற்றி கொள்ளப்படும். அவ்வேளையில், மரங்களும், கற்களும் முஸ்லிம்களை நோக்கி “முஸ்லிமே! அல்லாஹ்வின் அடியானே! யூதன் எனக்குப் பின்னால் ஒளிந்து கொண்டிருக்கின்றான். வா! அவனைக் கொல்!” எனக் கூறும்.

பைதுல் முகத்தஸை சுற்றி நடந்த போர்கள் மற்றும் முஸ்லிம்களுக்கும் யூதர்களுக்குமிடையில் நிகழ்ந்த போர்கள் பற்றி பின்னர் விவரிக்கப்படும். (94, 95ம் அடையாளங்களைப் பார்க்கவும்)

## 6. ஆடுகளுக்கு ஏற்படுவதுபோன்ற ஒருவகையான நோய் மனிதர்களுக்கு ஏற்பட்டு அதன் மூலம் மரணங்கள் அதிகரித்தல்

ஆடுகளுக்கு சில நோய்கள் ஏற்பட்டால் அவை கூட்டம் கூட்டமாக இறந்து போய்விடும். அவ்வாறான சில நோய்கள் மனிதர்களுக்கு ஏற்பட்டு, மனிதர்களும் அதிகளவில் மரணிப்பது மறுமை நாளின் அடையாளங்களில் ஒன்றாகும்.

இந்நோய் பலஸ்தீனில் உள்ள “எம்மாஉ” எனும் கிராமத்தில் ஏற்பட்டு விட்டது என்ற கருத்தும் நிலவுகிறது.

1. அறிவிப்பாளர் : இப்னு மாலிக் ரழியல்லாஹு அன்ஹு, நூல் : ஸஹீஹுல் புகாரி

“மறுமைக்கு முன்னால் வரவிருக்கின்ற ஆறு விஷயங்களை (குறிப்பிடுகின்றேன்) எண்ணிக் கொள்ளுங்கள்” எனக் கூறிய நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், ஆடுகளைத் தாக்கி, அழிப்பது போன்ற ஒருவகையான தொழு (புற்று) நோய் மனிதர்களைப் பீடித்து அதன் மூலம் அதிகமானவர்கள் மரணிப்பார்கள்” என்பதையும் சுட்டிக் காட்டினார்கள்.[1]

உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் ஆட்சிக் காலத்தில் பைதுல் முகத்தஸ் வெற்றி கொள்ளப்பட்ட பின்னர் ஹிஜ்ரி பதினெட்டில் இப்படியான ஒரு தொற்று நோய், ஷாம் பிரதேசத்தில் கடுமையாகப் பரவி, அதில் கிட்டத்தட்ட இருபத்தி ஐந்தாயிரம் முஸ்லிம்கள் மரணித்துள்ளார்கள் எனக் குறிப்பிடப்படுகின்றது.

முஆத் இப்னு ஜபல் ரழியல்லாஹு அன்ஹு, அபூ உபைதா ரழியல்லாஹு அன்ஹு, ஷர்ஹபீல் ரழியல்லாஹு அன்ஹு, அல் பழ்ல் இப்னு அல் அப்பாஸ் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் போன்ற ஸஹாபாக்களும் இந்நோயில் மரணித்தார்கள்.

Scrapie என அழைக்கப்படும் இந்நோய், மிருகங்களுக்கு ஏற்படும் ஒருவகையான நோயாகும். மிருகங்களுக்கு இந்நோய் ஏற்பட்டுவிட்டால் அவற்றின் மூக்கு துவாரங்களின் வழியாக ஒரு வகையான நீர்வெளியாகி, திடீரென இறந்துவிடும். மனிதர்களுக்கு இந்நோய் ஏற்பட்டால் உடல் கட்டிகளின் மூலமாக அசிங்கமான நீர் (சீழ்) வெளியாகி திடீரென இறந்து விடுவார்கள்.

## 7. குழப்பங்கள் அதிகரித்தல்

இன்று மக்கள் மத்தியில் குழப்பங்கள் அதிகரித்து பரவிக் காணப்படுவதால் மேற்படி அடையாளம் தெளிவாகவே வெளிப்பட்டிருப்பதைக் காணலாம்.

குறிப்பாக, இணைய தளங்கள், சமூக வலைத்தளங்கள், செயற்கைக்கோள் சேனல்கள் மூலமாகவும் கையடக்கத் தொலைபேசிகள் மூலமாகவும் பரவி வருகின்ற அசிங்கமான புகைப் படங்கள், ஆபாசமான மற்றும்

1. அறிவிப்பாளர் : அவ்ஃப் இப்னு மாலிக் ரழியல்லாஹு அன்ஹு, நூல் : ஸஹீஹுல் புகாரி

வன்முறை நிறைந்த காணொலி காட்சிகளினால் பலவகையான குழப்பங்கள் வெளிப்பட்டிருப்பதைக் காணலாம்.

இவ்வாறான ‘ஹராம்’ பாவமானவற்றைப் பார்ப்பதையும் கேட்பதையும் விட்டு யாரெல்லாம் அல்லாஹ்வுக்காக தன்னைத் தூரமாக்கிக் கொள்கிறார்களோ அவர்களே ஈமானின் சுவையை பெற்றவர்கள் ஆவார்கள்.

அதேபோன்று இன்று ஆண், பெண் என அனைவரிடமும் காணப்படுகின்ற மோசமான ஆடை கலாச்சாரங்கள், லஞ்சம், மதுபானம், வட்டி போன்ற ஹராமான வியாபாரங்கள் மூலம் ஏற்படுகின்ற பொருளாதார சீர்கேடுகள் ஆகியவற்றை இந்த குழப்பங்களுக்கு உதாரணமாக குறிப்பிடலாம்.

இவ்வாறான ஹராமான பொருளீட்டின் மூலமாக உண்ணப்படுகின்ற உணவினால் பிரார்த்தனைகள் அங்கீகரிக்கப்படாத ஒரு நிலை உருவாகுவதோடு அது இறை தண்டனையைப் பெற்றுத்தரக்கூடிய பாவம் என்பதும் இங்கே நினைவுபடுத்தப்பட வேண்டிய ஒரு முக்கிய அம்சமாகும்.

இப்படி பல குழப்பங்கள் தோன்றி எல்லோருமே ஏதோ ஒரு வகையில் குழப்பங்களுக்குள் அகப்பட்டிருப்பதால் பயபக்தியோடு, குழப்பங்களில் இருந்து தவிர்ந்து கொள்பவர்களை ஆச்சரியமாக பார்க்கப்படுகின்ற அளவுக்கு குழப்பங்கள் மலிந்துவிட்டன.

“குழப்பங்களில் இருந்து தவிர்ந்து வாழவேண்டும் என எண்ணுகின்ற உண்மையான முஸ்லிம்கள் கூட இது ஃபித்னாதான் என இனங்கண்டு கொள்ள முடியாத அளவு குழப்பங்கள் அதிகரித்துக் காணப்படும். பின்னர் குறிப்பிட்ட இந்த ஃபித்னாவில்தான் எனது அழிவு இருக்கிறது என்று முஸ்லிம் நினைக்கும் போது அது மறைந்து, வேறொன்று தோன்றும் என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

“காரிருள் மிகுந்த இரவின் பகுதிகளைப் போன்ற குழப்பங்கள் தோன்றுவதற்கு முன் விரைந்து (நற்)செயல்கள் புரிந்து கொள்ளுங்கள்.

(அக்குழப்பங்களின்போது) காலையில் இறை நம்பிக்கையாளனாக இருக்கும் ஒரு மனிதன் மாலையில் இறைமறுப்பாளனாக மாறிவிடுவான். மாலையில் இறைநம்பிக்கையாளனாக இருக்கும் ஒருவன் காலையில் இறைமறுப்பாளனாக மாறிவிடுவான். இவ்வுலகின் அற்ப சுகங்களுக்காகத் தனது மார்க்கத்தையே அவன் விற்றுவிடுவான்."[1]

அமாவாசையின் கும்மிருட்டைப் போன்று குழப்பங்கள் நிறைந்து, எது நல்லது எது கெட்டது என அடையாளம் கண்டு கொள்ள முடியாத ஒரு நிலை ஏற்படும். அப்போது நல்லமல்கள் செய்வதற்கு சந்தர்ப்பம் இருக்காது. அதற்கு முன்னர் அதிகமதிகம் நன்மைகளைச் செய்துகொள்ளுங்கள் என்பதையே இந்நபிமொழி நமக்கு உணர்த்துகின்றது.

அதேபோன்று மேற்படி ஹதீஸில் ஒரே நாளில் மனிதன் முஃமினாகவும், காஃபிராகவும் மாறும் அளவிற்கு குழப்பங்கள் நிறைந்து காணப்படும் எனக் கூறப்படுவதன் மூலம் ஏற்படவிருக்கும் குழப்பங்களின் ஆபத்தை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் படம்பிடித்துக் காட்டியுள்ளார்கள்.

## 8. செயற்கைக்கோள் அலைவரிசைகளின் (Satellite Channels) தோற்றம்

பொதுவாக மறுமைநாள் ஏற்படும் முன் பல்வேறு குழப்பங்கள் ஏற்படும் என்பதை முன்சென்ற ஹதீஸ்களில் பார்த்தோம்.

அந்த வகையில், சேட்டிலைட் சேனல்களிலும் பல குழப்பங்கள் குடிகொண்டிருப்பதைக் காணலாம். இன்று விண்வெளியில் கிட்டத்தட்ட 13000கும் அதிகமான சேட்டிலைட் ஓடங்கள் நீந்திக் கொண்டிருக்கின்றன. இவைகளினால் ஏற்படுகின்ற குழப்பங்கள் பற்றி பேசுகின்ற சில ஹதீஸ்களை இங்கே பார்க்கலாம்.

"வறண்ட பாலைவனப் பிரதேசங்களில் கூட வானத்திலிருந்து உங்கள் மீது தீங்குகள் கொட்டப்படும்" என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக ஹுதைபத்துல் யமானி ரழியல்லாஹு

1. அறிவிப்பாளர் : அபூஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு, நூல் : ஸஹீஹ் முஸ்லிம்

அன்ஹு அவர்கள் அறிவிக்கின்றார்கள். இச்செய்தியை இப்னு அபீஷைபா அவர்கள் தனது தொகுப்பில் குறிப்பிட்டுள்ளார்.

(மேலே குறிப்பிட்டுள்ள வானம் எனும் சொல்லுக்கு "மனிதனுக்கு மேலுள்ள அனைத்தும்" என மொழி பெயர்த்தாலும் அது தவறாகாது.)

இன்று வானத்திலிருந்து செயற்கைக்கோள்கள் அனுப்புகின்ற அனைத்து வகையான குழப்பங்களையும் தீங்குகளையும் நமது வீட்டிலுள்ள தொலைக் காட்சிப் பெட்டிகள் உள்வாங்கி பின்னர் வெளிப்படுத்துவதைக் காணலாம். வறண்ட பாலைவனப் பிரதேசங்களில் கூடாரம் அடித்துத் தங்குபவர்கள் கூட செயற்கைகோள் ரிசீவர்கள் மூலம் இசைகள், ஆபாசமான படங்கள் போன்றவற்றைப் பார்த்துக் கொண்டிருக்கின்றனர். இவையனைத்தும் வானத்திலிருந்து கொட்டப்படும் குழப்பங்களேயாகும்.

## 9. ஸிஃப்ஃபீன் யுத்தம் பற்றிய நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் முன்னறிவிப்பு

மறுமை நாளின் அடையாளங்களாக நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பல யுத்தங்களை அடையாளப்படுத்தியுள்ளார்கள். அவற்றுள் சில, முஸ்லிம்களுக்கும் காபிர்களுக்கும் இடையிலும், இன்னும் சில முஸ்லிம்களுக்குள்ளேயே இடம்பெறும் எனவும் குறிப்பிட்டுள்ளார்கள்.

இந்த வகையில் முஸ்லிம்களுக்கிடையில் இடம்பெற்ற யுத்தங்களில், உஸ்மான் ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் மரணத்திற்குப் பின்னால் அலி ரழியல்லாஹு அன்ஹு மற்றும் முஆவியா ரழியல்லாஹு அன்ஹு அவர்களுக்கிடையில் ஹிஜ்ரி 36ல் நடந்த ஸிஃப்ஃபீன் யுத்தமும் ஒன்றாகும்.

"ஒரே கோரிக்கையைக் கொண்ட இரண்டு பிரமாண்டமான அணிகள் தங்களுக்கிடையில் போரிட்டு, பலர் உயிரிழக்கும் நிலை உருவாகாமல் மறுமைநாள் ஏற்படாது" என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் குறிப்பிட்டார்கள்.[1]

---

1. அறிவிப்பாளர் : அபூஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு, நூல் : ஸஹீஹுல் புகாரி, ஸஹீஹ் முஸ்லிம்.

ஸஹாபாக்களுக்கு இடையில் ஏற்பட்ட இந்த குழப்பங்கள் பற்றி அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஅத்தின் நிலைப்பாடு.

**கவனிக்க...!**

ஸஹாபாக்கள் -நபித்தோழர்கள் பொதுவான மனிதர்களைப் போன்றுதான். அவர்கள் நபிமார்கள் அல்ல. எனவே, மனிதர்கள் என்ற வகையில், தவறுகளும் சர்ச்சைகளும் யுத்தங்களும் அவர்களுக்கு மத்தியில் நிகழ்ந்தன. அவர்கள் அனைவரும் நல்லவர்கள், நிரபராதிகள், மற்றும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் வழிமுறைக்கு மிக நெருக்கமாக இருந்தவர்கள் என்பதில் சந்தேகமில்லை. ஆகவே, அவர்களுக் கிடையில் நடந்த சில நிகழ்வுகளை வைத்து அதையே அலசிக் கொண்டிருக்காமலும் அவர்களுக்கிடையில் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகளை விமர்சிக்காமலும் அவற்றைப் பெரிதாக்கி ஸஹாபாக்களின் சிறப்பை கொச்சைப்படுத்தாமலும் மௌனம் சாதிப்பதே அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஅத்தினரின் ஒட்டுமொத்தக் கருத்தாகும்.

## 10. கவாரிஜ்கள் -வரம்பு மீறிகள் தோன்றுவது

மறுமை நாளின் அடையாளங்களில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் விட்டுச் சென்ற கொள்கை கோட்பாடுகளை விட்டு விலகி பலர் பல குழுக்களாகப் பிரிந்து செல்வதும் ஒன்றாகும்.

இந்த வகையில் "கவாரிஜ்கள்" என்பவர்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் நேர்வழியிலிருந்து விலகிச் சென்றவர்களாவர். இவர்கள் அலி ரழியல்லாஹு அன்ஹு அவர்களுடன் சேர்ந்து முஆவியா ரழியல்லாஹு அன்ஹு அவர்களுக்கு எதிராக போர்செய்து, பின்னர் அலி ரழியல்லாஹு அன்ஹு அவர்களுக்கு கட்டுப்படாமல் பிரிந்துசென்று ஹரூரா எனும் இடத்தில் தங்களுக்கென ஒரு தனியான தளத்தை அமைத்துக் கொண்டனர்.

இவர்களது கோட்பாடுகள்

1. (மது, விபச்சாரம் போன்ற) பெரும் பாவங்கள் செய்தவர்கள் காஃபிர்களாக ஆகிவிடுவார்கள். அவர்கள் என்றென்றும் நரகிலேயே தங்கியிருப்பார்கள்.

இவர்களது இக்கோட்பாடு ஒரு வழிகெட்ட கோட்பாடாகும். ஒரு முஃமின் பெரும்பாவம் செய்ததற்காகப் பாவியாகக் கருதப்பட்டாலும் ஒருபோதும் காஃபிராகக் கருதப்பட மாட்டான். அதேநேரம், அவன் வருந்தி தவ்பா செய்து தனது பாவத்திலிருந்து மீண்டு கொள்ளவும் முடியும் என்பதே சரியான கொள்கையாகும்.

2. அலி ரழியல்லாஹு அன்ஹு அவர்களுக்கும் முஆவியா ரழியல்லாஹு அன்ஹு அவர்களுக்கும் இடையில் ஏற்பட்ட பிரச்சினையின்போது எடுக்கப்பட்ட சுமூகமான தீர்ப்பை ஏற்றுக் கொண்ட அனைத்து ஸஹாபாக்களும் காஃபிர்கள் என்பது இவர்களின் கொள்கையாகும்.

3. தவறு செய்கின்ற ஆட்சியாளர்களுக்கு எதிராக கிளர்ச்சி செய்ய வேண்டும். அவர்களது தவறுகள் மார்க்கத்தை விட்டும் வெளியாக்காத தவறுகளாக இருந்தாலும் சரியே! இதுவும் இவர்களது முக்கியமான கொள்கைகளில் ஒன்றாகும்.

இவர்கள் தங்களை வணக்கசாலிகளாகவும், அல்லாஹ்வின் வேதம், அவனது சட்டங்கள் பற்றிய போதிய அறிவில்லாமலேயே தங்களை அறிஞர்களாகவும் (ஆய்வாளர்களாகவும்) காட்டிக் கொள்வார்கள். துல் ஹுவைஸிரா என்பவன் இப்படிப்பட்டவர்களுக்கான சரியான உதாரணமாவான். இவனது விஷயத்தில்தான் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பின்வருமாறு கூறினார்கள். “வேட்டைப் பிராணியைவிட்டு (அதன் உடலைத் துளைக்கின்ற) அம்பு (உடலின் மறுபக்கம்) வெளிப்பட்டுச் சென்று விடுவதைப் போல் மார்க்கத்திலிருந்து அவர்கள் வெளியேறிச் செல்வார்கள்.”[1]

“எனக்குப் பின் என் சமுதாயத்தில்” (“அல்லது எனக்குப் பின் விரைவில் என் சமுதாயத்தில்”) ஒரு கூட்டத்தார் தோன்றுவார்கள். அவர்கள் குர்ஆனை ஓதுவார்கள். ஆனால், அது அவர்களுடைய கழுத்துகளைத் தாண்டிச் செல்லாது. வேட்டைப் பிராணியைவிட்டு

1. அறிவிப்பாளர் : அபூஸயீத் அல் குத்ரி ரழியல்லாஹு அன்ஹு, நூல் : ஸஹீஹுல் புகாரி, எண்: 3610

(அதன் உடலைத் துளைக்கின்ற) அம்பு (உடலின் மறுபக்கம்) வெளிப்பட்டுச் சென்று விடுவதைப்போன்று, மார்க்கத்திலிருந்து அவர்கள் வெளியேறிச் சென்று விடுவார்கள். பிறகு அதன் பக்கம் திரும்பமாட்டார்கள். அவர்கள்தாம் மனிதர்கள் மற்றும் உயிரினங்களிலேயே மோசமானவர்கள் ஆவர்.)[1]

கவாரிஜ்கள் -வரம்பு மீறிகளின் தோற்றம்

சிஃப்ஃபீன் யுத்தம் நடைபெற்று முடிந்து, இரு தரப்பாரும் ஒரு பொதுவான உடன்பாட்டிற்கு வந்ததன் பின்னர் இவர்களைவிட்டுப் பிரிந்து எட்டாயிரம் அல்லது பதினாராயிரம் பேர் ஹரூரா எனும் இடத்திற்குச் சென்றனர்.

பின்னர் அவர்களோடு பேசி அவர்களை நல்வழிப்படுத்துவதற்காக, அலி ரழியல்லாஹு அன்ஹு அவர்கள், இப்னு அப்பாஸ் ரழியல்லாஹு அன்ஹு அவர்களை அனுப்பி வைத்தார்கள். இப்னு அப்பாஸ் ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் உபதேசத்தைக் கேட்ட பலர் உண்மையை விளங்கி அலி ரழியல்லாஹு அன்ஹு அவர்களுக்கே கட்டுப்படுவதாகச் சொல்லி, இப்னு அப்பாஸ் ரழியல்லாஹு அன்ஹு அவர்களோடு திரும்பி விட்டார்கள். ஏனையோர் அவர்களது வழிகேட்டிலேயே நிலைத்து நின்றனர்.

அதன் பின்னர் அலி ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் கூஃபா பள்ளிவாசலில் வைத்து கவாரிஜ்களுக்கென ஓர் உரை நிகழ்த்தினார்கள். அப்போது அங்கிருந்த கவாரிஜ்கள் ‘‘அல்லாஹ்வின் தீர்ப்புக்கு மட்டுமே (கட்டுப்படுவோம்)’’ என்றும் ‘‘நீங்கள் மனிதர்களின் தீர்ப்பிற்கு கட்டுப்பட்டு விட்டீர்கள், அல்லாஹ்வின் வேதத்தை வைத்துத் தீர்ப்பளிக்கவில்லை’’ என்றும் சப்தமிட்டுக் கொண்டிருந்தார்கள்.

அதன் பின்னர் அலி ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் கவாரிஜ்களை நோக்கி “நீங்கள் நமது பள்ளிவாசல்களில் தொழுவதை நாங்கள் தடுக்க மாட்டோம்.”

“கனீமத் -போரில் கிடைக்கும் பொருட்களில் உங்களுக்குச் சேரவேண்டியதையும் தடுக்க மாட்டோம்”

---

1. அறிவிப்பாளர் : அபூ தர் ரழியல்லாஹு அன்ஹு, நூல்: ஸஹீஹ் முஸ்லிம், எண்: 1936

“நீங்கள் குழப்பம் விளைவிக்காவிட்டால் உங்களோடு யுத்தமும் செய்ய மாட்டோம்” எனப் பிரகடனம் செய்தார்கள்.

பின்னர் கவாரிஜ்கள் அனைவரும் ஓர் இடத்தில் ஒன்றுசேர்ந்து கொண்டு, அவ்வழியாக செல்கின்ற மற்ற முஸ்லிம்களை கொலை செய்தனர். ஹப்பாப் இப்னு அரத் ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் மகன் அப்துல்லாஹ்வை கொலை செய்து, அவரது மனைவியின் வயிற்றையும் கிழித்தனர்.

இச்செய்தியை அறிந்த அலி ரழியல்லாஹு அன்ஹு அவர்கள், அவர்களிடம் சென்று “இவரைக் கொலை செய்தவர் யார்?” எனக் கேட்டபோது, “நாங்கள் அனைவரும்தான் கொலைசெய்தோம்” எனக் கூறினார்கள். இதன் பின்னரே அலி ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் கவாரிஜ்களுக்கு எதிராக ஒரு படையைத் தயார் செய்து “நஹ்ரவான்” எனும் இடத்தில் அவர்களோடு போர் செய்து அவர்களை அழித்தொழித்தார்கள்.

## 11. நபியென்று வாதிடுகின்ற பொய்யர்கள் தோன்றுவது

தானும் நபி என வாதிடும் பல பொய்யர்கள் தோன்றி குழப்பங்களை ஏற்படுத்துவது மறுமை நாளின் மற்றுமொரு அடையாளமாகும். அந்த வகையில் கிட்டத்தட்ட முப்பதுக்கும் குறையாத நபி என்று வாதிடுகின்ற பொய்யர்கள் தோன்றுவார்கள் என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

“பெரும் பொய்யர்களான ‘தஜ்ஜால்கள்’ ஏறத்தாழ முப்பது பேர் (உலகில்) தோன்றாத வரை இறுதி நாள் வராது. அவர்களில் ஒவ்வொருவனும் தன்னை இறைத்தூதர் என்று வாதிடுவான்.’[1]

வரலாறு நெடுகிலும் பல பொய்யர்கள் தோன்றி, தானும் நபிதான் என வாதிட்ட நிகழ்வுகள் ஆங்காங்கே நிழ்ந்துள்ளன. இறுதியாக மிகப்பெரும் பொய்யனான தஜ்ஜால் வந்து தானும் ஒரு நபியென வாதிடுவான். அதற்கிடையில் இன்னும் சில பொய்யர்கள் தோன்றி தன்னை நபியென வாதிட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

1. நூல் : ஸஹீஹுல் புகாரி, எண்: 3609

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஒரு முறை குத்பா -பிரசங்கம் செய்யும்போது "முப்பது பொய்யர்கள் தோன்றி (தானும்) நபியென வாதிடும் வரை மறுமை நாள் ஏற்படாது, அவர்களில் இறுதியானவனாக ஒற்றைக் கண் குருடனான தஜ்ஜால் காணப்படுவான்." எனக் குறிப்பிட்டார்கள்.[1]

"எனது உம்மத்தில் ஒரு கூட்டம் இணைவைப்பாளர்களுடன் சேர்ந்து கொண்டு சிலைகளை வணங்கும் வரையில் மறுமை நாள் ஏற்படாது. எனது உம்மத்தில் முப்பது பொய்யர்கள் தோன்றுவார்கள் எல்லோரும் தங்களை நபியென வாதிடுவார்கள். எனினும் நானே இறுதி நபியாவேன். எனக்குப் பின்னால் எந்த நபியும் வரமாட்டார்."[2]

அவ்வாறே மற்றொரு அறிவிப்பில் இருபத்தி ஏழு பொய்யர்கள் தோன்றுவார்கள் என்றும், அவர்களில் நான்கு பேர் பெண்களாக இருப்பார்கள் எனவும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

"எனது உம்மத்தில் இருபத்தி ஏழு பொய்யர்கள் தோன்றுவார்கள் அவர்களில் நான்கு பெண்களும் அடங்குவர். எனினும், நானே இறுதி நபியாவேன். எனக்குப் பின்னால் எந்த நபியும் வரமாட்டார்."[3]

## நபி என்று பொய்யாக தாவா செய்த பலர் கடந்த காலங்களில் தோன்றினர்.

1. மூன்று அல்லது நான்கு மாதங்கள் யமன் பிரதேசத்தை ஆட்சி செய்த, "அல் அஸ்வதுல் அனஸி" என்பவன் நபியவர்களின் இறுதிக் காலப் பகுதியிலேயே தானும் நபிதான் என வாதிட ஆரம்பித்து விட்டான். இஸ்லாத்தை விட்டும் முதன் முதலாக மதம் மாறிய இவன் தன்னோடு இருந்த அப்பாவி மக்களை உஷார்படுத்தி பல கிளர்ச்சிகளை மேற்கொண்டு சுமார் மூன்று அல்லது நான்கு மாதங்களுக்கு இடையிலேயே யமனின் பல பகுதிகளை கைப்பற்றிக் கொண்டான். அப்போது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் யமனில் உள்ள முஸ்லிம்களிடம் இவனைக் கொன்றுவிடுமாறு தூது

1. நூல் : அஹ்மத்
2. அறிவிப்பாளர் : தவ்பான் ரழியல்லாஹு அன்ஹு, நூல் : அபு தாவூத், திர்மிதி
3. அறிவிப்பாளர் : ஹுதைஃபா ரழியல்லாஹு அன்ஹு, நூல் : அஹமத், தபரானி

அனுப்பினார்கள். அத்தூதுக்கு கட்டுப்பட்ட முஸ்லிம்கள் அஸ்வத் அல் அனஸியை அவனது மனைவியின் உதவியோடு கொன்றொழித்தனர்.[1]

இவனது மரணத்திற்குப் பின்பு யமனில் இஸ்லாம் தழைத்தோங்கியது. இச்செய்தி நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு அன்று இரவே அறிவிக்கப்பட்டு, அவர்கள் அச்செய்தியை ஸஹாபாக்களுக்கும் எத்திவைத்தார்கள்.

2. தன்னை நபி என்று வாதிட்ட பொய்யர்களில் “துலைஹா இப்னு குவைலித் அல் அஸதி” என்பவரும் ஒருவராவார். முஸ்லிம்கள் இவரோடு பலமுறை போரிட்டாலும், பிற்காலத்தில் இவர் தனது வாதத்தைக் கைவிட்டு, இஸ்லாத்தை ஏற்று, நேர்வழியில் வாழ்ந்துள்ளார். முஸ்லிம்களோடு சேர்ந்து பல யுத்தங்களில் கலந்துகொண்ட இவர் “நஹாவந்த்” போரில் ஷஹீதாக்கப்பட்டார்.

3. தன்னை நபி என்று வாதிட்ட பொய்யர்கள் வரிசையில் “முஸைலமா” என்பவனும் முக்கியமானவனாவான். இவன் தனக்கு இருளில் வஹி வருவதாக வாதிட்டான். எனவே, இவனிடம் போரிடுவதற்காக அபூபக்கர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் காலித் ரழியல்லாஹு அன்ஹு, இக்ரிமா இப்னு அபூ ஜஹ்ல் ரழியல்லாஹு அன்ஹு மற்றும் ஷுர்ஹபீல் இப்னு ஹஸனா ரழியல்லாஹு அன்ஹு ஆகியோரது தலைமையில் ஒரு படையை அனுப்பி வைத்தார்கள். அப்படை நாற்பதாயிரம் படை வீரர்களைக் கொண்ட முஸைலமாவின் படையோடு வரலாற்று முக்கியத்துவம் மிக்க உக்கிரமான போரொன்றிற்கு முகம் கொடுத்தது. இப்போரின் போது வஹ்ஷி இப்னு ஹர்ப் ரழியல்லாஹு அன்ஹு அவர்களால் முஸைலமா கொல்லப்பட்டான். அத்தோடு இஸ்லாம் வெற்றிபெற்று பரவத் தொடங்கியது.

4. தன்னை நபி என்று வாதிட்ட பொய்யர்கள் வரிசையில் தஃலபிய்யா கோத்திரத்தைச் சேர்ந்த அரபுக் கிறிஸ்தவரான ”சுஜாஹ் பின்த் அல் ஹாரித்” எனும் பெண்ணும் ஒருவராவார். நபி ஸல்லல்லாஹு அலைஹி

1. இவனது மனைவி ஏற்கனவே ஒரு திருமணம் முடித்திருந்தாள், அவள் மீது இவனுக்கு ஏற்பட்ட மோகத்தினால் அவளது கணவனைக் கொன்றுவிட்டு அவளை இவன் திருமணம் செய்துகொண்டான்.

வஸல்லம் அவர்களின் மரணத்திற்கு பின்னால் தான் ஒரு நபி என வாதிட்ட இப்பெண்ணை அவளது சமூகத்திலுள்ள பலரும் நபியென ஏற்றுக் கொண்டாலும். ஏனைய கோத்திரங்கள் பல இவளுக்கு எதிராக போராடத் தொடங்கின. பின்னர் இப்பெண் யமாமாவுக்கு வந்து அங்கே முஸைலமாவைச் சந்தித்தாள், அங்கே முஸைலமாவும் இப்பெண்ணும் திருமணம் செய்து கொண்டனர். பின்னர் முஸைலமாவின் மரணத்திற்குப் பின்னால் தனது நாட்டிற்கு வந்து அங்கேயே வசிக்கத் தொடங்கி இஸ்லாத்தையும் ஏற்றுக்கொண்டாள். பின்னர் பஸராவிற்கு இடம்பெயர்ந்து சென்று அங்கேயே மரணித்து விட்டாள்.

5. தாபிஈன்கள் மற்றும் அவர்களது காலத்திற்குப் பின்னர் நபித்துவத்தை வாதிட்ட பொய்யர்களில் சகீஃப் கோத்திரத்தைச் சேர்ந்த “அல் முக்தார் இப்னு அபி உபைத்” என்பவனும் ஒருவனாவான். முதலில் ஷியாக் கொள்கையைக் கொண்டு தன்னை அறிமுகப்படுத்திக்கொண்ட இவனுக்குப் பின்னால் பல ஷியாக்கள் ஒன்று சேர்ந்தார்கள். தனக்கு ஜிப்ரீல் அலைஹிஸ் ஸலாம் அவர்கள் வஹி கொண்டு வருவதாக வாதிட்டான். பின்னர் இவனுக்கும் “முஸ்அப் இப்னு சுபைர்” என்பவருக்கும் இடையில் பல போர்கள் இடம் பெற்று அப்போர்களில் ஒன்றிலேயே இவன் கொல்லப்பட்டான்.

6. நபி என்று வாதிட்ட பொய்யர்களில் “அல் ஹாரித் இப்னு ஸயீத் அல் கத்தாப்” என்பவனும் ஒருவனாவான். டமஸ்கசில் தன்னை ஒரு வணக்கசாலியாகக் காட்டிக்கொண்ட இவன் பிற்பட்ட காலங்களில் தன்னை ஒரு நபியாகவே வாதிட்டான். இச்செய்தி அன்றைய கலிபாவான “அப்துல் மலிக்” என்பவருக்கு தெரியவரவே பயத்தினால் ஓடி ஒளிந்து கொண்டான். எனினும் கலீஃபா தனது ஆட்களை அனுப்பி அவனைக் கைது செய்து, அவனுக்கு இஸ்லாத்தின் தூய வடிவத்தையும் தான் நபியாக வாதிடுவது தவறு என்பதை எடுத்துச் சொல்வதற்காக சில அறிஞர்களையும் நியமித்தார். அதற்குப் பின்னரும் அவன் தன்னை மாற்றிக் கொள்ளாத காரணத்தால் அவன் கொல்லப்பட்டான்.

7. நவீன காலத்தில் ஒரு நூற்றாண்டுக்கும் சற்று முன்னால் இந்தியாவில் தோன்றிய “மிர்ஸா குலாம் அஹ்மத் அல்காதியானி” என்பவனும்

தன்னை ஒரு நபியெனவும், தனக்கு வஹி வருவதாகவும், தான் எண்பது வருடங்கள் உயிர் வாழ்வேன் என அல்லாஹ் தனக்கு அறிவித்துள்ளதாகவும் கூறினான். இவனுக்குப் பின்னாலும் பலர் அணி திரண்டனர். மிகப் பெரும் அறிஞரான ஸனாவுல்லாஹ் போன்ற பல அறிஞர்கள் இவனது பித்தலாட்டங்களை மக்களுக்குத் தெளிவுபடுத்தினார்கள்.

1908ம் ஆண்டு ''நாம் இருவர்களில் யார் பொய்யரோ அவர் மிக விரைவில் மரணிப்பார்'' என அஹமத் அல் காதியானி, அஷ்ஷெய்க் ஸனாவுல்லாஹ் அவர்களோடு ஒரு சவால் விடுத்தான், இதன் பின்னர் ஷெய்க் அவர்கள் அடிக்கடி அல்லாஹ்விடம் அநியாயக்காரரைப் பிடித்துக் கொள்ளுமாறு பிரார்த்தித்துக் கொண்டிருந்தார்கள். சுமார் ஒரு வருட காலத்திற்குள்ளேயே அஹ்மத் அல் காதியானிக்கு ஒரு வகையான தொற்றுநோய் பீடிக்க, தொடர்ந்து அவன் மரணப் படுக்கையிலேயே இருந்தான்.

இவனது இறுதி நிலையைப் பற்றி இவனது மனைவியின் தந்தை விவரிக்கும்போது : ''இவரது நோய் கடுமையாகி மிகவும் வேதனையால் அவஸ்தைப்பட்டுக் கொண்டிருக்கும்போதும் என்னை எழுப்பினார். அப்போது நான் அவரிடம் சென்று அவர் படுகின்ற வேதனையைப் பார்த்தேன். அப்போது என்னிடம் ''நான் கடுமையான (Cholera) காலரா நோயினால் பாதிக்கப்பட்டுள்ளேன்'' எனக் கூறினார். இந்த வார்தைக்குப் பின்னால் அவர் மரணிக்கும் வரை வேறு எந்த வார்த்தையையும் தெளிவாக பேசவில்லை'' எனக் குறிப்பிடுகின்றார்.

இவ்வாறு, நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் முன்னறிவிப்பின்படி, பொய்யர்கள் ஒருவர் பின் ஒருவராக தோன்றி வருவார்கள். இறுதியாக மறுமை நாள் ஏற்படுவதற்கு சற்று முன்னர் மிகப்பெரிய பொய்யனான தஜ்ஜால் தோன்றுவான். தஜ்ஜாலை கொலை செய்வதற்காக ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்கள் இறங்குவார்கள்.

தஜ்ஜாலின் பாதிப்புக்களில் இருந்து அல்லாஹ் நம் அனைவரையும் பாதுகாப்பானாக!

தெளிவு

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் முப்பது பொய்யர்கள் தோன்றுவார்கள் என அறிவித்துள்ளார்கள். ஆனால், வரலாற்றைப் பார்க்கும்போது அதைவிட அதிகமானவர்கள் தோன்றியுள்ளதாகத் தெரிகின்றதே!

முப்பது என்ற எண்ணிக்கை தமக்கென தனி நாட்டையும், பக்தர்களையும்; கொண்டிருந்த பிரசித்தி பெற்ற பொய்யர்களையே குறிக்கின்றது. ஏனைய, சாதாரணமாக ஆங்காங்கே தோன்றியவர்கள் இதற்குள் அடங்கமாட்டார்கள்.

## 12. பூமியில் வளமும் அச்சமற்ற நிலையும் ஏற்படுவது

ஒரு காலத்தில் முஸ்லிம்கள் மக்காவிலும் மதினாவிலும் வாழுகின்றபோது போர்களுக்கும், சண்டைகளுக்கும் மத்தியில் வாழ்ந்து கொண்டிருந்தார்கள். அப்போதே நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் “அரபு தேசம் ஆறுகளாகவும், சோலைகளாகவும் மாறும் வரையிலும், ஈராக்கிலிருந்து மக்காவிற்குச் செல்லும் ஒரு பயணி வழி தவறிவிடுவோமோ என்ற பயத்தைத் தவிர வேறு எதற்கும் பயப்படாத ஒரு நிலை தோன்றும் வரையிலும், ஹர்ஜ் அதிகரிக்கும் வரையிலும் மறுமைநாள் ஏற்படாது” என்றார்கள். (அப்போது ஸஹாபாக்கள்) அல்லாஹ்வின் தூதரே ‘ஹர்ஜ்’ என்றால் என்ன எனக் கேட்டார்கள். அதற்கு நபியவர்கள் “கொலை” என பதிலளித்தார்கள்.[1]

“நான் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் இருந்தபோது ஒருவர் அவர்களிடம் வந்து (தன்னுடைய) வறுமை நிலை பற்றி முறையிட்டார். பிறகு மற்றொருவர் அவர்களிடம் வந்து, வழிப்பறி பற்றி முறையிட்டார். உடனே, நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், “அதீயே! நீ ‘ஹிரா’வைப் பார்த்ததுண்டா?” என்று கேட்டார்கள். ‘நான் அதைப் பார்த்ததில்லை. ஆனால், அது பற்றி எனக்கு சொல்லப்பட்டிருக்கிறது” என்று பதிலளித்தேன்.

---

1. நூல் : அஹ்மத்

அதற்கு அவர்கள், 'நீ நீண்ட நாள் வாழ்ந்தால், நிச்சயம் காண்பாய். ஒட்டகையில் அமர்ந்திருக்கும் ஒரு பெண் இறையில்லம் கஅபாவை (வலம் வருவதற்காக)ப் பயணித்து ஹீராவிலிருந்து வருவாள். அவள் (வழியில்) அல்லாஹ்வைத் தவிர வேறெவருக்கும் அஞ்சமாட்டாள்' என்று கூறினார்கள். - நான் என் மனத்திற்குள், 'அப்படியென்றால் நாட்டையே தன் அராஜகத்தால் நிரப்பிவிட்ட 'தய்யி' குலத்து வழிப்பறிக் கொள்ளையர்கள் (அப்போது) எங்கே சென்றிருப்பார்கள்? 'என்று கேட்டுக் கொண்டேன்."[1]

(மஹ்தி, மற்றும் ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்கள் காலத்தில் அநியாயங்கள் அழிந்து செல்வம் கொழித்து நீதி நிலைகொண்டிருக்கும்.) அல்லாஹ் மிக அறிந்தவன்.

## 13. ஹிஜாஸ் பகுதியில் பெரும் நெருப்பு ஒன்று ஏற்படுதல்

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அறிவித்துள்ள மறுமை நாளின் அடையாளங்களில் மதீனாவிற்கு அருகிலுள்ள ஹிஜாஸ் பகுதியில் வெளியாகிய நெருப்பும் ஒன்றாகும். இந்நெருப்பு ஹிஜ்ரி 654ல் ஏற்பட்டதாக சில வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிடுகின்றனர்.

இமாம் இப்னு கஸீர் ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் இது பற்றிக் கூறும் போது "பஸராவில் உள்ள ஒட்டகங்களின் கழுத்துகள் மின்னுமளவு பெரிய நெருப்பொன்று ஹிஜாஸில் உண்டாகாமல் மறுமை நாள் ஏற்படாது" என ஹதீஸில் சொல்லப்பட்டுள்ள இந்நெருப்பானது ஹிஜாஸில் வெளியாகி விட்டது. அந்நெருப்பு சுமார் மூன்று மாதங்கள் எரிந்து கொண்டிருந்ததாகவும், மதீனத்துப் பெண்கள் அந்நெருப்பொளியில் நூல் பின்னிக் கொண்டிருந்ததாகவும் சொல்லப்படுகின்றது" எனக் கூறியுள்ளார்கள்.[2]

அபூஷாமா அவர்கள் இச்சம்பவத்தை விவரிக்கும்போது "ஹி 654, 6ம் மாதம் மூன்றாம் தேதி புதன்கிழமை மதீனாவில் மிகப்பெரிய சப்தமொன்று கேட்டது. தொடர்ந்து வெள்ளிக்கிழமை வரைக்கும் பூமியும், சுவர்களும், வீட்டின் முகடுகளும், கதவுகளும், ஒவ்வொரு

---

1. அறிவிப்பாளர் : அதி இப்னு ஹாதிம் ரழியல்லாஹு அன்ஹு, நூல் : ஸஹீஹுல் புகாரி (3595)
2. பார்க்க : அல்பிதாயா வன் நிஹாயா 13/199

மணிநேரத்திற்கு ஒருமுறை உலுக்கப்பட்டுக் கொண்டிருந்தன. அதனைத் தொடர்ந்து மதீனாவின் அல்ஹுர்ரா எனும் இடத்தில் நெருப்பொன்று வெளியாகியது. மதீனாவில் எங்களது வீடுகளில் இருந்து கொண்டே நாங்கள் அந்நெருப்பைப் பார்த்துக் கொண்டிருந்தோம். ஷழா எனும் ஓடையில் நீரோடுவதுபோன்று பெரும் பெரும் கோட்டைகள் அளவு தீச்சுவாலைகளுடன் நெருப்பு வழிந்தோடுவது போன்றிருந்தது" எனக் கூறிக் காட்டுகின்றார்.[1]

## 14. துருக்கியர்களுடன் போர் செய்தல்

மறுமை நாளின் அடையாளங்கள் பற்றி நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அறிவித்த முன்னறிவிப்புகளில், முஸ்லிம்களுக்கும் முஸ்லிம் அல்லாதவர்களுக்கும் இடையில் இடம் பெறும் போர்களும் யுத்தங்களும் குறிப்பிடத்தக்கவைகளாகும். இந்த வரிசையில் முஸ்லிம்களுக்கும் துருக்கியர்களுக்கும் இடையில் நடந்த போரும், மறுமை நாளின் அடையாளங்களில் ஒன்றாகும். இந்தப் போர் ஸஹாபாக்கள் உயிரோடிருந்த காலத்திலேயே குறிப்பாக உமையா அவர்களுடைய ஆட்சியின் ஆரம்ப பகுதிகளிலேயே இடம் பெற்று விட்டது. அதில் துருக்கியர்கள் தோற்கடிக்கப்பட்டு முஸ்லிம்கள் வெற்றி பெற்றார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

"யுக முடிவு நாளுக்கு முன், முடியினாலான காலணிகளை அணிகின்ற சிவந்த முகமும் சிறிய கண்களும் கொண்ட ஒரு கூட்டத்தாருடன் நீங்கள் போர் செய்வீர்கள். அவர்களின் முகங்கள் தோலால் மூடப்பட்ட கேடயங்களைப் போன்று (அகன்று) இருக்கும்" என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.[2]

மேலுள்ள ஹதீஸில் வர்ணிக்கப்பட்டவர்கள், ஹிஜ்ரி 606 (கி.பி 1258) இல் இஸ்லாமிய நாடுகளைப் கூண்டோடு அழிப்பதற்காக கொலைகள் பல புரிந்த மங்கோலிய நாட்டைச் சேர்ந்த தாத்தாரியர்களாகவே இருக்க வேண்டும்.

அல்லாஹ் மிக அறிந்தவன்.

---

1. பார்க்க: அத்தத்கிரா, பக்கம் : 527
2. அறிவிப்பாளர்: அபூஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு, நூல்: ஸஹீஹுல் புகாரி, ஸஹீஹ் முஸ்லிம்

## 15. சாட்டையால் அடிக்கும் அநியாயக்காரர்கள்

ஒருகாலத்தில் சில ஆட்சியாளர்களின் அடிவருடிகள் மக்களை ரப்பர், மரம், மின்சாரம், தோல், மாட்டுவால் போன்ற சாட்டைகளால் தண்டிப்பார்கள். இது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அடையாளப்படுத்திய மறுமை நாளின் அடையாளங்களில் ஒன்றாகும்.

"யுக முடிவுக் காலத்தில் சிலர் தோன்றுவார்கள். அவர்களிடம் மாட்டு வால்களைப் போன்ற சாட்டைகள் காணப்படும். (அதனைக் கொண்டு மக்களை அநியாயமாகத் தண்டிப்பதன் மூலம்) அல்லாஹ்வின் கோபத்தையும் வெறுப்பையும் சம்பாதித்துக் கொள்வார்கள்" என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.[1]

"இரு பிரிவினர் நரகவாசிகளில் அடங்குவர். அந்த இரு பிரிவினரையும் நான் பார்த்ததில்லை. (அதில் முதலாவது பிரிவினர்,) பசு மாட்டின் வாலைப் போன்ற (நீண்ட) சாட்டைகளைத் தம்மிடம் வைத்துக்கொண்டு, மக்களை அடி(த்து இம்சி)ப்பவர்கள்."[2]

"நீ நீண்ட நாள் வாழ்ந்தால், ஒரு சமுதாயத்தைப் பார்க்கக்கூடும். அவர்களின் கைகளில் மாட்டின் வாலைப் போன்று (நீளமான சாட்டைகள்) இருக்கும். அவர்கள் அல்லாஹ்வின் கோபத்துடனேயே காலையில் புறப்படுவார்கள். அல்லாஹ்வின் கடுங்கோபத்துடனேயே மாலையில் திரும்புவார்கள்."[3]

இறுதியாக சொல்லப்பட்ட ஹதீஸில், மக்களை அடிப்பார்கள் என தெளிவாக சொல்லப்படாவிட்டாலும் அவர்கள் அல்லாஹ்வின் சாபத்திற்கும் வெறுப்பிற்கும் உள்ளாவார்கள் என்பதன் மூலம் அவர்கள் மக்களுக்கு அநியாயம் செய்பவர்களாக இருப்பார்கள் என்பதை அறியமுடிகிறது.

---

1. அறிவிப்பாளர்: அபூ உமாமா ரழியல்லாஹு அன்ஹு, நூல் : அஹ்மத்
2. அறிவிப்பாளர்: அபூஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு, நூல்: ஸஹீஹ் முஸ்லிம்
3. அறிவிப்பாளர் : அபூஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு நூல் : ஸஹீஹ் முஸ்லிம் 5488

## 16. ஹர்ஜ் (هرج கொலைகள்) அதிகரிப்பது

கொலை செய்தவனுக்கு, தான் ஏன் இவனைக் கொலை செய்தேன் என்பதும், கொலை செய்யப்பட்டவனுக்கு நான் எதற்காகக் கொலை செய்யப்படுகின்றேன் என்பதும் புரியாத அளவிற்கு கொலைகள் அதிகரித்துக் காணப்படுதல் மறுமை நாளின் அடையாளங்களில் ஒன்று என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

"எனது உயிர் எவனது கைவசம் இருக்கிறதோ, அவன் மீது சத்தியமாக! கொலை செய்தவனுக்கு தான் எதற்காக கொலை செய்தேன் என்பதும் கொலை செய்யப்பட்டவனுக்கு தான் எதற்காக கொலை செய்யப்பட்டேன் என்பதும் தெரியாத அளவிற்கு கொலைகள் அதிகரித்துக் காணப்படுகின்ற ஒரு நிலை உருவாகாமல் இந்த உலகம் அழிந்து போகாது" என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.[1]

உஸ்மான் ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் கொலையில் இருந்து ஆரம்பித்த இந்தக் கொலைப் பட்டியல், இன்று, மிகப்பெரிய பயங்கரமான ஆயுதங்களைப் பயன்படுத்தி மக்களைக் கொலை செய்யும் அளவிற்குச் சென்றிருக்கிறது.

இந்த வகையில் குறிப்பிட்ட சில யுத்தங்களின் கொலைப் பட்டியல் பின்வருமாறு

1. முதலாம் உலகப் போர் 15 மில்லியன்
2. இரண்டாம் உலகப் போர் 55 மில்லியன்
3. வியட்னாம் போர் 3 மில்லியன்
4. ரஷ்ய உள்நாட்டுப் போர் 10 மில்லியன்
5. ஸ்பெய்ன் உள்நாட்டுப் போர் 12 மில்லியன்
6. ஈராக் - ஈரான் போர் 1 மில்லியன்
7. ஈராக் போர் 1 மில்லியனுக்கும் அதிகம்

---

1. அறிவிப்பாளர் : அபூஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு, நூல் : ஸஹீஹ் முஸ்லிம்

கொலைகளின் எண்ணிக்கை அதிகரித்துவிடும் என்ற ஹதீஸுக்கு உதாரணமாக இவை பட்டியலிடப்பட்டுள்ளன.

## 17. அமானிதத்தில் மோசடி செய்யப்படுவது, உள்ளங்களில் இருந்து நம்பிக்கை எடுபட்டுவிடுதல்.

பொருத்தமானவர்கள் பொருத்தமான இடங்களில் வைக்கப்படுவதே சமூகத்தின் நிலைத் தன்மைக்கும் சமுதாய ஒழுங்கமைப்பிற்கும் எழுச்சிக்கும் அடிப்படையாகும். மாறாக (பொருத்தமற்றவர்கள் தகுதியற்ற இடங்களில் அமர்த்தப்பட்டு) அமானிதம் மோசடி செய்யப்படுகின்ற போது நிலைமை தலைகீழாக மாறி குழப்பங்களும் ஒழுங்கீனங்களும் தலைவிரித்தாடத் தொடங்கும். இந்நிலை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களால் முன்னறிவிப்புச் செய்யப்பட்ட மறுமை நாளின் அடையாளங்களில் ஒன்றாகும்.

அமானிதம் மோசடி செய்யப்படுவதற்கான அடிப்படைக் காரணிகள்

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அமானிதம் உயர்த்தப்படுவது பற்றிக் கூறிய செய்தியை ஹுதைஃபா ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் பின்வருமாறு அறிவிக்கின்றார்கள்.

“இறைத் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் எங்களுக்கு (அமானிதம் தொடர்பாக) இரண்டு செய்திகளைக் கூறினார்கள். அவற்றில் ஒன்றை நான் (என் வாழ்நாளிலேயே) பார்த்துவிட்டேன். மற்றொன்றை எதிர்பார்த்திருக்கிறேன்.

அதில் ஒரு செய்தி ‘(இயற்கையாகவே) மனிதர்களின் ஆழ்மனதில் அமானிதம் இடம் பிடித்தது. பின்னர் குர்ஆனிலிருந்தும் பிறகு (என்னுடைய வழியான) சுன்னாவிலிருந்தும் (அதை) அறிந்து கொண்டார்கள்” என்பதாகும். இதை நான் பார்த்து விட்டேன்.

இரண்டாவது செய்தி, நம்பகத்தன்மை அகற்றப்படுவது தொடர்பானதாகும். ‘மனிதன் ஒரு முறை உறங்குவான். (உறக்கத்திலேயே) அவனுடைய உள்ளத்திலிருந்து நம்பகத்தன்மை (சிறிது) அகற்றப்பட்டு விடும், அகற்றப்பட்டதன் அடையாளமாக சிறு (கரும்) புள்ளி அளவுக்கு அது எஞ்சியிருக்கும். பிறகு மீண்டும் ஒரு முறை அவன்

உறங்குவான். அப்போது (மறுபடியும்) அது கைப்பற்றப்பட்டு, அ(து அகற்றப்பட்ட)தன் அடையாளமாக (கடின உழைப்பால் கையில் ஏற்படும்) காய்ப்பு அளவுக்கு எஞ்சியிருக்கும். (இவ்வாறு முதலில் 'நம்பகத் தன்மை' எனும் ஒளி உள்ளத்தில் ஏற்றப்பட்டுப் பிறகு சிறிது சிறிதாக அது அணைக்கப்படுவதானது) காலில் நெருப்புக் கங்கை உருட்டிவிட்டு, அதனால் கால் கொப்பளித்து உப்பிவிடுவதைப் போன்றதாகும். பார்வையில் அது உப்பிப் பெரிதாகத் தெரியுமே தவிர, அதனுள் ஒன்றும் இருக்காது" என்பதாகும்.

பின்னர் (தொடர்ந்தும்) மக்கள் தங்களிடையே கொடுக்கல் வாங்கல் செய்து கொள்வார்கள். (ஆனால், அவர்களில்) யாருமே நம்பிக்கையைக் காப்பாற்ற முயற்சிக்க மாட்டார்கள். இன்னார் நம்பிக்கையானவர் என்று (தேடிக் கண்டுபிடித்து) சொல்லப்படும் அளவுக்கு நம்பிக்கையாளர்கள் அரிதாகி விடுவார்கள்.

மேலும், ஒருவரைப் பற்றி, 'அவரின் அறிவுதான் என்ன? அவரின் விவேகம்தான் என்ன? அவரின் வீரம்தான் என்ன?' என்று (சிலாகித்துக்) கூறப்படும். ஆனால், அந்த மனிதருடைய இதயத்தில் கடுகளவுகூட ஈமான் -நம்பிக்கை இருக்காது.

(இந்த ஹதீஸின் அறிவிப்பாளர்: ஹுதைஃபா அவர்கள் பின்வருமாறு கூறுகின்றார்கள்) ஒரு காலத்தில் நான் யாரிடம் கொடுக்கல் வாங்கல் செய்கிறேன் என்று பொருட்படுத்தியதில்லை. அவர் முஸ்லிமாக இருந்தால், இஸ்லாம் (என்னுடைய பொருளை அவரிடமிருந்து) எனக்குத் திருப்பித் தந்துவிடும். கிறிஸ்தவராக இருந்தால் அவருக்கான அதிகாரி என்னுடைய பொருளை அவரிடமிருந்து எனக்கு மீட்டுத் தந்துவிடுவார். ஆனால், இன்றோ நான் இன்னார், இன்னாரிடம் மட்டுமே கொடுக்கல் வாங்கல் செய்கிறேன்.[1]

பெரும்பாலான மனிதர்களின் உள்ளங்கள் மாசுபட்டுள்ளன. பொறுப்புகள் தகுதியற்றவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. அமானிதம் -நம்பகத் தன்மை அற்றுப்போய் விட்டது. இவையெல்லாம் மறுமை நெருங்கி விட்டது என்பதற்கான அடையாளங்களில் உள்ளவையாகும்.

1. அறிவிப்பாளர்: ஹுதைஃபா (ரலி), நூல் : ஸஹீஹுல் புகாரி 6497.

‘ஓர் அவையில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மக்களுக்கு அறிவுரை வழங்கிக் கொண்டிருந்தபோது அவர்களிடம் நாட்டுப் புறத்து அரபி ஒருவர் வந்தார். ‘மறுமை நாள் எப்போது?” எனக் கேட்டார். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தங்களின் பேச்சைத் தொடர்ந்து கொண்டிருந்தார்கள். அப்போது (அங்கிருந்த) மக்களில் சிலர், ‘நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அம்மனிதர் கூறியதைச் செவியுற்றார்கள். எனினும், அவரின் இந்தக் கேள்வியை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் விரும்பவில்லை’ என்றனர். வேறு சிலர், ‘நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அம்மனிதர் கூறியதைச் செவியுறவில்லை’ என்றனர். முடிவாக நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தங்களின் பேச்சை முடித்துக் கொண்டு, ‘மறுமை நாளைப் பற்றி (என்னிடம்) கேட்டவர் எங்கே?’ என்று கேட்டார்கள். உடனே (கேட்டவர்) இறைத் தூதர் அவர்களே! “இதோ இருக்கின்றேன்” என்றார். அப்போது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ‘அமானிதம் பாழ்படுத்தப்பட்டால் நீர் மறுமை நாளை எதிர் பார்க்கலாம்’ என்றார்கள். அதற்கவர், ‘அது எவ்வாறு பாழ்படுத்தப்படும்?’ எனக் கேட்டதற்கு, ‘ஒரு காரியம் (பொறுப்பு) தகுதியற்றவர்களிடம் ஒப்படைக்கப்பட்டால் நீர் மறுமை நாளை எதிர்பாரும்” எனக் கூறினார்கள்.[1]

மேலே சொல்லப்பட்ட அடையாளம் சமகாலத்தில் பரவலாக இடம் பெற்றுக் கொண்டிருப்பதைக் காணலாம். அமைச்சரவைகளிலும், பல்கலைக் கழகங்களிலும் மக்களின் நலன் கருதி அமைக்கப்படுகின்ற சமூக நிறுவனங்களிலும் இன்று தகுதியானவர்கள் பொறுப்புதாரியாக நியமிக்கப்படுவதற்குப் பதிலாக, உயர் அதிகாரிகளுக்கு நெருக்கமானவர்கள், அமைச்சர்களுக்கும் கட்சிகளுக்கும் ஆதரவு வழங்குபவர்கள் ஆகியோர்தான் பொறுப்புகளையும் பதவிகளையும் பெறுகிறார்கள்.

ஆம்! தகுதியற்றவர்களுக்கு பொறுப்பு(ம் அதிகாரமும்) கொடுக்கப்பட்டால் மறுமை நாளை எதிர்பாருங்கள்.

---

1. அறிவிப்பாளர் : அபூஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு, நூல் : ஸஹீஹுல் புகாரி

## 18. சென்றுபோன சமுதாயங்களின் கலாச்சாரத்தைப் பின்பற்றுதல்

யூதர்கள், கிறிஸ்தவர்கள் போன்ற முன் சென்ற சமூகத்தாரை கண்மூடித்தனமாக பின்பற்றிக் கொண்டு அவர்களைப் போன்றே வாழ முற்படுவது, இன்று முஸ்லிம்கள் எதிர்கொள்கின்ற மிகப்பெரிய குழப்பங்களில் ஒன்றாகும்.

தனது உம்மத்தில் சிலர் யூதர், கிறிஸ்தவர்களின் வாழ்க்கை முறைகளை கண்மூடித்தனமாக பின்பற்றி நடப்பார்கள் என ஏற்கனவே நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் முன்னறிவிப்புச் செய்து விட்டார்கள்.

"எனது உம்மத்தில் சிலர் முன்சென்ற சமூகத்தாரை சாணுக்குச் சாண், முழத்திற்கு முழம் பின்பற்றாத வரை மறுமை நாள் ஏற்படாது" என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியபோது "அல்லாஹ்வின் தூதரே உரோமர்களையும், பாரசீகர்களையுமா (பின்பற்றுவார்கள்)! எனக் கேட்கப்பட்டது. அதற்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், "அவர்களை அல்லாமல் வேறு யார்?" என்று (திருப்பிக்) கேட்டார்கள்.[1]

"அவர்கள் உடும்பின் பொந்துக்குள் நுழைந்து கொண்டால் (இதுதான் நாகரீகமோ என்றெண்ணி) நீங்களும் அதில் நுழைந்து கொள்ளும் அளவிற்கு நீங்கள் உங்களுக்கு முன்சென்ற சமூகத்தாரை சாணுக்குச் சாண் முழத்திற்கு முழம் பின்பற்றுவீர்கள்!" என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். அப்போது நாங்கள், யூதர்கள், கிறிஸ்தவர்களையா சொல்கிறீர்கள் எனக் கேட்டோம்." அதற்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், வேறு யார்?! எனத் திருப்பிக் கேட்டார்கள்.[2]

"ஹதீஸ்களில் கூறப்பட்டுள்ள, சாண், முழம், உடும்புப் பொந்தில் நுழைதல் ஆகிய பிரயோகங்கள், முஸ்லிம்கள் எந்தளவுக்கு மாற்று மதத்தினரைப் பின்பற்றுவார்கள் என்பதற்கான உவமானங்களாகும்,

1. அறிவிப்பாளர் : அபூஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு, நூல் : ஸஹீஹுல் புகாரி.
2. அறிவிப்பாளர் : அபூஸயீத் அல் குத்ரி ரழியல்லாஹு அன்ஹு, நூல் : ஸஹீஹுல் புகாரி, ஸஹீஹ் முஸ்லிம்.

என அல்காழி இயாழ் ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் குறிப்பிடுகின்றார்கள்."[1]

யூத, கிறிஸ்தவர்களைப் பின்பற்றுவது கூடாது என்று இங்கே நாம் குறிப்பிடுவது மார்க்கத்திற்கு முரண்படாத வகையில் அவர்களது கண்டு பிடிப்புக்கள், நிர்வாக ரீதியான ஒழுங்கு முறைகளைப் பயன்படுத்துவதைக் குறிக்காது. மாறாக அவர்களது ஆடைகள், பழக்க வழக்கங்கள், ஆண் பெண் கலப்பு, ஹிஜாப் இல்லாத வாழ்வு போன்ற சமுதாய, கலாசார செயல்பாடுகள் மற்றும் வட்டி போன்ற மார்க்கத்திற்கு முரணான பொருளாதாரச் செயல் முறைகள் என்பவற்றில் அவர்களைப் பின்பற்றுவதை விட்டும் தவிர்ந்து கொள்ளவேண்டும் என்பதையே சுட்டிக் காட்டுகின்றது.

## 19. அடிமைப் பெண் தனது எஜமானியைப் பெற்றெடுத்தல்

ஜிப்ரீல் அலைஹிஸ் ஸலாம் அவர்களது ஹதீஸ் என்று பெயர் பெற்ற பிரபலமான ஒரு ஹதீஸில் ஜிப்ரீல் அலைஹிஸ் ஸலாம் அவர்கள் நபிகளாரிடம் மறுமை நாளின் அடையாளங்களைப் பற்றி அறிவிக்குமாறு கேட்டபோது, "ஓர் அடிமைப் பெண் தனது எஜமானியைப் பெற்றெடுப்பாள்" என்பதையும் இணைத்துக் கூறிக் காட்டினார்கள்.

ஒரு சுதந்திரமான மனிதன், தனது அடிமைப் பெண்ணோடு உடலுறவு வைத்துக் கொள்வதன் மூலம் ஒரு குழந்தை பிறந்தால் அந்தக் குழந்தை சுதந்திரமான குழந்தையாக இருக்கும். அதேவேளை அக்குழந்தையைப் பெற்ற தாய் தொடர்ந்தும் அடிமையாகவே இருப்பாள். இந்நிலையில் அக்குழந்தை பருவ வயதை அடையும்போது, மகள் என்கின்ற நிலையில் இருக்கும் அதே வேளை, தான் சுதந்திரமானவள் என்பதனால் அத்தாய்க்கு எஜமானியாகவும் இருப்பாள். இதுவே ஒரு பெண் தனது எஜமானியைப் பெற்றெடுப்பாள் என்பதன் பொருளாகும்.

## 20. ஆடையணிந்தும் நிர்வாணமாக தோற்றமளிக்கும் பெண்கள்

பெண்கள் வீட்டை விட்டு வெளியேறி வீதிகளில் அலைந்து திரிவதும், இறுக்கமான ஆடைகள் அணிவதன் மூலம் தங்களது உடம்பின்

1. பத்ஹுல் பாரி

முப்பரிமாணங்களை வெளிக்காட்டுவதும், கண்ணாடி போன்ற ஆடைகளின் மூலம் தங்களது அங்க அவயங்களை படம் பிடித்துக் காட்டுவதும், ஆடையணிந்தும் நிர்வாணமான நிலைக்கு எடுத்துக் காட்டுகளாகும். இது மறுமை நாளின் அடையாளங்களில் ஒன்று என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் முன்னறிவிப்புச் செய்துள்ளார்கள்.

“இரு பிரிவினர் நரகவாசிகளில் அடங்குவர். அந்த இரு பிரிவினரையும் நான் பார்த்ததில்லை. (முதலாவது பிரிவினர்) பசு மாட்டின் வாலைப் போன்ற (நீண்ட) சாட்டைகளைத் தம்மிடம் வைத்துக் கொண்டு, மக்களை அடி(த்து இம்சி)ப்பார்கள்.

(இரண்டாவது பிரிவினர்) மெல்லிய உடையணிந்து, (அந்நிய ஆடவர்களின் கவனத்தை) தன்பால் ஈர்க்கக்கூடிய பெண்கள் ஆவர். அவர்களது தலை(முடி), கழுத்து நீண்ட ஒட்டகங்களின் சாயக்கூடிய திமில்களைப் போன்றிருக்கும்.

அவர்கள் சொர்க்கத்தில் நுழைய மாட்டார்கள், (ஏன்) சொர்க்கத்தின் வாடையைக்கூட நுகர மாட்டார்கள். சொர்க்கத்தின் நறுமணமோ (அவர்களை விட்டும்) இந்தளவு பயணத் தொலைவிலிருந்தே வீசிக் கொண்டிருக்கும்.”[1]

## 21. செருப்பும் ஆடையும் அணிய வசதியற்றிருந்த இடையர்கள் பெரும் கட்டடங்களை கட்டுதல்

ஆடை, காலணி அணிவதற்கே வசதியில்லாமல் ஆடு மேய்த்தவர் களெல்லாம் பெரும் பெரும் உயரமான, ஆடம்பரமான கட்டடங்கள் கட்டுவதில் போட்டியும் பெருமையும் கொள்வார்கள் என்பது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் முன்னறிவிப்புச் செய்தது, நடந்து முடிந்த ஓர் அடையாளமாகும்.

முஸ்லிம்கள் பல நாடுகளை வெற்றி கொண்டு, ஆடம்பரம் அதிகரித்து, உலகாதாய போட்டிகளும் நிலவ ஆரம்பித்தபோதே இந்நிலையும் ஏற்பட ஆரம்பித்து விட்டது எனலாம்.

1. அறிவிப்பாளர் : அபூஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு, நூல் : ஸஹீஹ் முஸ்லிம் 4316

ஜிப்ரீல் அலைஹிஸ் ஸலாம் அவர்கள் ஒரு முறை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் வந்து, மறுமை நாளின் அடையாளங்கள் பற்றிக் கேட்டபோது “ஓர் அடிமை தனது எஜமானியைப் பெற்றெடுப்பாள், ஆடை மற்றும் செருப்பணிய வசதியற்ற இடையர்கள் உயர உயரமான கட்டிடங்களை கட்டுவார்கள்” என பதிலளித்தார்கள்.[1]

இன்னொரு அறிவிப்பில் “செருப்பணிய வசதியற்று, உணவுக்காக மற்றவர்களை எதிர்பார்த்து வாழ்ந்தவர்களெல்லாம் சமூகத் தலைவர்களாக மாறுவதைக் காண்கின்றேன். இது மறுமை நாளின் அடையாளங்களாகும்” என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். அப்போது அல்லாஹ்வின் தூதரே அவர்கள் யார் எனக் கேட்கப்பட்டது அதற்கு நபியவர்கள் “அரபிகள்தான்” என பதிலளித்தார்கள்.[2]

மக்களிடத்தில் பணப் புழக்கம் அதிகரிக்கும் போதெல்லாம் உயரமான கட்டிடங்கள், வீடுகள் கட்டப்படுவதும், அளவு கடந்து அழகுபடுத்துவதும், தேவையின்றி பெரிய பெரிய அறைகளாகக் கட்டப்பட்டு பயன்பாடற்றுக் கிடப்பதும், அடுக்கடுக்கான கோபுரங்களை (Towers) அமைப்பதும் இன்று சர்வ சாதாரணமாக மாறிவிட்டது.

நாட்டுப் புறங்களில் ஆடு மேய்த்துக்கொண்டு அதன் மூலமே தங்களது முழு வருமானங்களையும் பார்த்துக் கொண்டிருந்த அரபியர்களெல்லாம் நகர்ப் புறங்களில் குடியேறி அங்கு பெரிய பெரிய கட்டடங்களையும் வீடுகளையும் அமைத்துக்கொண்டு தனது கட்டிடமே மிக உயரமாக இருக்க வேண்டும் எனப் பெருமையடித்துக் கொள்கின்றனர்.

மாடிக்கு மேல் மாடிகளை அடுக்கிச் செல்வது, அளவுக்கதிகம் ஆடம்பரப்படுத்தி (தேவையற்ற) அறைகளை வைத்து கட்டிடங்களையும் வீடுகளையும் அமைப்பதும், கட்டடங்கள் கட்டுவதில் போட்டி போடுகின்ற நிலையின் வெளிப்பாடுகளாகும்.

இப்போட்டி இன்று அரபிகளிடத்தில் மட்டுமன்றி எல்லோரிடத்திலும்

1. அறிவிப்பாளர்: உமர் இப்னு கத்தாப் ரழியல்லாஹு அன்ஹு, நூல் : ஸஹீஹ் முஸ்லிம்
2. நூல் : அஹ்மத்

காணப்படுகின்றது. ஒவ்வொரு நாடும் கூட தனது நாட்டிலேயே அதி உயரமான கட்டிடங்களும் கோபுரங்களும் இருக்க வேண்டும் எனப் போட்டி போட்டுக் கொண்டிருக்கின்ற நிலை காணப்படுகின்றது.

## 22. அறிமுகமானவர்களுக்கு மட்டும் ஸலாம் சொல்லுதல்

பரஸ்பரம் ஒருவருக்கொருவர் ஸலாம் சொல்லுதல் எனும் ஒரு விஷயத்தை, அல்லாஹ் மனிதர்களுக்கிடையில் அன்பின் அடையாளமாகவும், உறவுப் பாலமாகவும் ஆக்கியுள்ளான். எனவேதான் சிறியவர் - பெரியவர், செல்வந்தர் - வறியவர், அரபியர் - அரபியல்லாதவர், வெள்ளையர் - கறுப்பர் (என அனைவரும், அனைவருக்கும்) ஸலாம் சொல்ல வேண்டும் என இஸ்லாம் வலியுறுத்துகின்றது.

“நீங்கள் ஈமான் கொள்ளாத வரையில் சொர்க்கத்தில் நுழைய முடியாது. நீங்கள் ஒருவரை ஒருவர் நேசிக்காதவரை (முழுமையான) முஃமினாக முடியாது. ஒரு விஷயத்தை உங்களுக்கு அறிவிக்கின்றேன். அதை நீங்கள் செயல்படுத்தினால் ஒருவரை ஒருவர் நேசம் கொள்வீர்கள். (எனக் கூறிய நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்) உங்களுக்கு மத்தியில் ஸலாமைப் பரப்புங்கள்” எனக் குறிப்பிட்டார்கள்.[1]

அறிந்தவருக்கும் அறியாதவருக்கும் ஸலாமைப் பரப்புங்கள் என ஸுன்னாவில் கூறப்பட்டிருந்தும் கூட, ஒரு மனிதன் தனக்கு தெரிந்த வரை சந்திக்கும் போது மட்டும் ஸலாம் சொல்வதும், தெரியாதவருக்கு ஸலாம் சொல்வதை தவிர்த்துக் கொள்வதும் மறுமை நாளின் அடையாளங்களில் ஒன்றாகும்.

“அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் ஒரு மனிதரை சந்தித்தார்கள். அம்மனிதர் இப்னு மஸ்ஊத் ரழியல்லாஹு அன்ஹு அவர்களை நோக்கி : இப்னு மஸ்ஊத் அவர்களே! அஸ்ஸலாமு அலைக்கும்! என்று கூறினார். அதற்கு அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் அல்லாஹ்வும் அவனுடைய தூதரும் உண்மை உரைத்து விட்டார்கள், “ஒரு மனிதன் பள்ளிவாசலை கடந்து செல்வான், ஆனால் அதிலே இரண்டு

1. ஸஹீஹ் முஸ்லிம்

ரக்அத்கள் தொழ மாட்டான். தனக்கு தெரிந்தவர்களுக்கு மாத்திரமே ஸலாம் கூறுவான். இவை மறுமைநாளின் அடையாளங்களாகும்'' என அல்லாஹ்வின் தூதர் கூற நான் கேட்டேன் எனக் கூறினார்கள்.[1]

ஒரு மனிதர் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் வந்து, இஸ்லாமில் சிறந்தது எது? எனக் கேட்டார். அதற்கு நபியவர்கள் “ஏழைகளுக்கு உணவளிப்பதும், அறிந்தவர்கள் மீதும் அறியாதவர்கள் மீதும் ஸலாம் கூறுவதுமாகும் என்றார்கள்.”[2]

## 23. வியாபாரம் அதிகமாகி விடுதல்

## 24. வியாபாரத்தில் பெண்களும் தங்கள் கணவர்களுடன் கூட்டுச் சேருதல்

## 25. குறிப்பிட்ட வியாபாரிகள் மட்டுமே சந்தைகளில் ஆதிக்கம் செலுத்துதல்

வியாபார நிர்வாகங்களில் பெண்களும் தங்கள் கணவர்களோடு கூட்டு சேருமளவுக்கு வியாபாரம் அதிகரித்துக் காணப்படுதல் மற்றும் வியாபாரத்தை மட்டுமே சிறந்த (தொழிலாகத்) தேர்ந்தெடுத்தல் எனும் இரண்டு அடையாளங்களும் ஒரே ஹதீஸிலேயே குறிப்பிடப்பட்டுள்ளது.

“மறுமை நாள் நெருங்கி வரும்போது அறிமுகமானவர்களுக்கு (மட்டும்) ஸலாம் கூறுதல், ஒரு பெண் வியாபாரத்தில் தன் கணவனுடன் கூட்டுச்சேரும் அளவுக்கு வியாபாரம் அதிகரித்துப் பரவுதல், உறவுகளைத் துண்டித்தல், பொய் சாட்சி சொல்லுதல், உண்மை சாட்சியம் மறைக்கப்படுதல், எழுது கருவிகள் அதிகரித்தல் ஆகியவை நிகழும் என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.[3]

“மறுமை நாள் நெருங்கும்போது செல்வம் கொழிக்கும், வியாபாரம் பெருகும், அறியாமை அதிகரிக்கும், (சாதாரண) வியாபாரிகள் தமது வியாபாரப் பொருட்களுக்கு விலை நிர்ணயம் செய்யும்போது

---

1. அறிவிப்பாளர் : அபூஜஃத் ரழியல்லாஹு அன்ஹு, நூல் : இப்னு குஸைமா
2. நூல் : ஸஹீஹுல் புகாரி, ஸஹீஹ் முஸ்லிம்
3. நூல் : அஹ்மத்

சந்தையை ஆக்கிரமித்திருக்கும் வியாபாரிகளிடத்திலேயே விலை நிர்ணயம் செய்து கொள்வார்கள். தனது வியாபார ஒப்பந்தங்களை எழுதிக் கொள்வதற்காக அந்தப் பகுதி முழுக்க ஒரு நல்ல நீதியான எழுத்தாளரைத் தேடியும் பெற்றுக்கொள்ள முடியாத நிலை காணப்படும்."[1]

இங்கே, நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் வார்த்தைகளை கவனிக்கும்போது "ஒரு பொருளை சந்தை ஒன்றில் விற்க முயற்சிக்கின்ற ஒருவர், தனது பொருளுக்கு விலை நிர்ணயம் செய்யும் விஷயத்தில் அச்சந்தையை ஆக்கிரமித்திருக்கும் குறிப்பிட்ட சில வியாபாரிகளிலேயே தங்கியிருக்க வேண்டிய நிலை காணப்படும். அப்பகுதியில் தனது வியாபார உடன்படிக்கைகளை நீதி நியாயத்தோடு எழுதக்கூடிய ஒரு பதிவாளரைக் கண்டு கொள்வதும் சிரமமாக காணப்படும். பண முதலைகளும், பெரும் பெரும் மொத்த வியாபாரிகளுமே சந்தைகளைத் தங்களது கட்டுப் பாட்டிற்குள் வைத்துக் கொள்வார்கள். ஏற்றுமதி, இறக்குமதி, மொத்த விற்பனைகள், விலை நிர்ணயங்கள் போன்ற அனைத்தும் அவர்களின் கட்டுப்பாட்டிலேயே காணப்படும். சில்லறை வியாபாரிகள், மேற் கூறிய மொத்த வியாபாரிகளைச் சார்ந்தே தொழில் செய்ய வேண்டிய நிலை காணப்படும். வியாபாரத்தின் சட்டதிட்டங்களை நன்கறிந்த, நீதி நியாயமான, யாரையும் சாராத முறையில் எழுதக்கூடிய நல்ல எழுத்தாளர்களைக் கண்டு கொள்வது கடினமாக இருக்கும்" என்பன போன்ற விஷயங்களை உணர முடிகின்றது.

## 26. பொய் சாட்சியங்கள் அதிகரித்தல்

(ஒருமுறை) இறைத் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் 'பெரும் பாவங்களிலேயே மிகப் பெரும் பாவங்களை நான் உங்களுக்கு அறிவிக்கட்டுமா?" என்று மூன்று முறை கேட்டார்கள். நாங்கள், 'ஆம், இறைத் தூதர் அவர்களே! (அறிவியுங்கள்)' என்று கூறினோம். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், 'அல்லாஹ்வுக்கு இணை வைப்பதும், பெற்றோரைப் புண்படுத்துவதும்' என்று சொல்லிவிட்டு சாய்ந்து கொண்டிருந்த அவர்கள் எழுந்து

1. அறிவிப்பாளர் : அம்ர் இப்னு தக்லிப் ரழியல்லாஹு அன்ஹு, நூல்: அந்நஸாயீ

அமர்ந்து, 'அறிந்து கொள்ளுங்கள்: பொய் பேசுவதும் பொய் சாட்சியமும் (மிகப் பெரும் பாவம்தான்), பொய் பேசுவதும் பொய் சாட்சியமும் (மிகப் பெரும் பாவம்தான்)" என்று கூறினார்கள். இதை அவர்கள் திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டேயிருந்தார்கள். (இதைக் கண்ட நான்) 'அவர்கள் நிறுத்திக் கொள்ளக் கூடாதா?' என்றேன்.[1]

மறுமை நாள் ஏற்படுவதற்கான அடையாளங்களில் பொய் சாட்சியங்கள் அதிகரிப்பதும் ஒன்றாகும் எனக் கூறுகின்ற நபிமொழியை வைத்துப் பார்க்கும்போது, இன்று மக்கள் மத்தியில் பொய் சாட்சியங்கள் அதிகரித்துக் காணப்படுவது மறுமை நிகழப் போகின்றது என்பதற்கான அடையாளமென்பதை தெளிவாக அறியமுடிகிறது.

பொய் சாட்சியம் என்பது நீதிமன்றங்களில் சொல்லப்படுபவை மட்டும் தான் என கருதிவிடக் கூடாது. மாறாக தொழிலாளர்கள் தங்கள் அதிகாரிகளிடத்திலும், மக்கள் தங்களுக்குள்ளும், பாடசாலைகளிலும், கல்விக் கூடங்களிலும், மாணவர்கள் தங்கள் ஆசிரியர்களிடத்திலும், பிள்ளைகள் தங்கள் பெற்றோர்களிடத்திலும் சொல்கின்ற பொய்யான பேச்சுகளும், பொய்யான சத்தியங்களும், பொய் சாட்சியத்தில் இது உள்ளடங்கும்.

பொய் சாட்சி சொல்வதையும், மக்களின் உரிமைகள் மற்றும் சொத்துக்களை பொய்யான சத்தியங்கள் மூலம் தனதாக்கிக் கொள்வதையும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கடுமையாக எச்சரித்துள்ளார்கள்.

'ஒரு முஸ்லிமின் செல்வத்தை அபகரித்துக் கொள்வதற்காகப் பொய் சத்தியம் செய்பவன் (மறுமையில்) தன் மீது அல்லாஹ் கோபம் கொண்டிருக்கும் நிலையில் அல்லாஹ்வை சந்திப்பான்' என்று இறைத் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். அப்போது உடனே,

**'அல்லாஹ்வுடன் செய்த உடன்படிக்கையையும் தம் சத்தியங்களையும் அற்ப விலைக்கு விற்று விடுகிறவர்களுக்கு மறுமையில் எந்த**

---

1. அறிவிப்பாளர்: அபூபக்ரா நுபைஉ இப்னு ஹாரிஸ் ரழியல்லாஹு அன்ஹு நூல் : ஸஹீஹுல் புகாரி, ஸஹீஹ் முஸ்லிம்

**நற்பேறுமில்லை. இறுதித் தீர்ப்பு நாளில் அல்லாஹ் அவர்களிடம் பேசவும் மாட்டான்; அவர்களைப் பார்க்கவும் மாட்டான். மாறாக, அவர்களுக்குத் துன்புறுத்தும் தண்டனைதான் இருக்கிறது'**

**(அல்குர்ஆன் 3:77)**

என்னும் குர்ஆன் வசனத்தை அல்லாஹ் அருளினான்."[1]

"யார் சத்தியம் செய்து அதன் மூலம் இன்னொரு முஸ்லிமின் சொத்தை அபகரித்துக் கொள்கின்றாரோ, அல்லாஹ் அவருக்கு சொர்க்கத்தை தடுத்து, நரகத்தை கடமையாக்கி விடுகின்றான்" என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியபோது "அது கொஞ்சமாக இருந்தாலுமா" என ஒருவர் கேட்டார். அதற்கு நபியவர்கள். 'ஆம் அது அராக் மரத்தின் குச்சியாக இருந்தாலும் சரியே' என்றார்கள்.

**"எவர்கள் அல்லாஹ்விடத்தில் செய்த வாக்குறுதியையும், தங்கள் சத்தியங்களையும் சொற்ப விலைக்கு விற்று விடுகிறார்களோ அவர்களுக்கு மறுமையில் நிச்சயமாக ஒரு (நற்)பாக்கியமுமில்லை. மேலும், அல்லாஹ் (மறுமையில்) அவர்களுடன் (விரும்பிப்) பேசவும் மாட்டான்; (அன்புடன்) அவர்களை இறுதி நாளில் திரும்பிப்பார்க்கவும் மாட்டான்; அவர்களைப் புனிதப்படுத்தவும் மாட்டான். அவர்களுக்குத் துன்புறுத்தும் வேதனையும் உண்டு.'' (அல்குர்ஆன் 3 : 77)**

## 27. உண்மைச் சாட்சியங்கள் மறைக்கப்படுதல்

ஒரு முஸ்லிம் அநியாயக்காரனாக இருந்தால் அந்த அநியாயத்தை விட்டு அவனைத் தடுப்பதன் மூலமாகவும், அவன் அநியாயம் செய்யப்பட்டவனாக இருந்தால் அவனது உரிமைகளை பெற்றுக் கொடுப்பதன் மூலமாகவும் அவனுக்கு உதவி செய்ய வேண்டும்.

இதுபற்றி அல்லாஹ் பின்வருமாறு கூறுகின்றான் :

**"சாட்சியத்தை நீங்கள் மறைக்கவேண்டாம். எவரேனும் அதை மறைத்தால், அவருடைய உள்ளம் நிச்சயமாக பாவத்திற்குள்ளாகி விடுகிறது.'' (அல்குர்ஆன் 2 : 283)**

---

1. நூல் : ஸஹீஹுல் புகாரி

சாட்சியத்தை மறைப்பது ஹராம் என்பதை இவ்வசனம் எடுத்துக் காட்டுகின்றது.

மறுமை நாள் வரும்போது மனிதர்கள் ஒருவர் மற்றவரின் உரிமைகளைப் பறிப்பார்கள், உண்மையை அறிந்தவர்களும் வாய்மூடி மௌனமாகி விடுவார்கள். அதிகாரம் இருந்தும் தமது சுயநலம் பாதிக்கப்பட்டுவிடக் கூடாது என்பதற்காக அநியாயத்திற்கு எதிராகப் பேசமாட்டார்கள்.

மறுமை நாளின் அடையாளங்கள் பற்றி அஹ்மத் எனும் ஹதீஸ் கிரந்தத்தில் வந்திருக்கின்ற ஹதீஸ் தொடர் ஒன்றில், “உண்மைச் சாட்சியங்கள் மறைக்கப்படுவது” மறுமை நாளின் அடையாளங்களில் ஒன்றெனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

## 28. அறியாமை அதிகரித்தல்

அல்லாஹு தஆலா, நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை நோக்கி, **“எனது ரப்பே! எனக்கு அறிவை அதிகப் படுத்துவாயாக!”** (அல்குர்ஆன் 20 : 114) என பிரார்த்திக்குமாறு பணித்திருப்பதன் மூலம் நபியவர்கள் கற்பவர்களாகவும் கற்பிப்பவர்களாகவும் காணப்பட்டுள்ளார்கள் என்பது தெளிவாக தெரிய வருகின்றது.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அறியாமையை கடுமையாக இகழ்ந்துள்ளார்கள். “கடுமையான சுபாவம் கொண்டவர்களோடும், கடைத் தெருக்களில் சத்தமிட்டுத் திரிபவர்களோடும், இரவு வேளைகளில் பிணங்களைப் போன்றும் பகல் வேளைகளில் கழுதைகளைப் போன்றும் திரிபவர்களையும், உலக விஷயங்களை (போதிய அளவு) அறிந்துகொண்டு, மறுமை சம்மந்தப்பட்ட விஷயங்களில் எந்த அறிவும் இல்லாமல் இருப்பவர்களோடும் அல்லாஹ் கோபிக்கின்றான்” என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.[1]

அறியாமை ஆட்கொள்வது மறுமை நாளின் அடையாளங்களில் ஒன்றென நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

1. நூல் : ஸஹீஹ் இப்னு ஹிப்பான்

“மறுமை ஏற்படுவதற்கு முன்னர் அறிவு உயர்த்தப்பட்டு அறியாமை பரவும்.”[1]

“ஒரு காலம் வரும், அக்காலத்தில் மக்களுக்கு தொழுகை, நோன்பு, ஸகாத் என்றாலே என்னவென்று தெரியாத நிலை காணப்படும்” என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியுள்ளார்கள்.[2]

இன்று இஸ்லாமிய நாடுகளில் வாழ்கின்ற முஸ்லிம்கள் கூட தொலைபேசி, கணினி, வாகனங்கள் என உலகியல் விஷயங்களில் முடியுமான அளவு அறிவைப் பெற்றுக்கொண்டாலும், மறுபக்கம், “அல்லாஹுஸ் ஸமத்” அல்லது “வமின் ஷர்ரி காஸிகின் இதா வகப்” எனும் வசனங்களின் கருத்துக்களைப் பற்றிக் கேட்டாலோ, அல்லது தொழுகையில் மறதி ஏற்பட்டால் எப்படி ஸஜ்தா செய்ய வேண்டும் எனக் கேட்டாலோ அது பற்றி அவர்களுக்கு எந்த அறிவுமற்ற நிலையிலேயே காணப்படுகின்றார்கள்.

ஒருமுறை, ஒரு சகோதரர் என்னிடம் வந்து “நஃபிலான தொழுகைக்கும் உளு செய்து கொள்வது அவசியமா?” எனக் கேட்டதும் எனக்கு ஆச்சரியமாகி விட்டது. அவர் கல்லூரியில் மேற்படிப்பு படிக்கின்ற மாணவன் என்பதை அறிந்ததும் நான் இன்னும் ஆச்சரியப்பட்டேன்.

அதையும் தாண்டி, இன்று, அனைவரும் அறிந்திருக்க வேண்டிய முக்கிய விஷயங்களாகிய, தலாக் சட்டங்கள், திருமணம் சம்பந்தமான சட்டங்கள், கொடுக்கல் வாங்கல் தொடர்பான சட்டங்கள், இபாதத்கள் உடைய சட்டங்கள் இன்னும் இதுபோன்ற முக்கியமான சட்டங்களைக்கூட பலர் அறவே அறியாதவர்களாக இருக்கின்றார்கள். உலக விஷயங்களில் வீணாணவற்றை அறிந்து கொள்வதில் நேரங்களைக் கழித்துக் கொண்டிருக்கின்ற பலர், அறிவியல் அமர்வுகள் மற்றும் பயான் நிகழ்ச்சிகள், பயனுள்ள புத்தகங்கள் படித்தல், உலமாக்களுடனான தொடர்புகள் போன்ற விஷயங்களை விட்டு தூரமாகிக் கொண்டே செல்வதால் இத்தகைய அறியாமை அதிகரித்துக் கொண்டிருக்கிறது. (இந்நிலையிலிருந்து நாம் மீளுவதற்கு) அல்லாஹ்விடமே உதவிதேடப்படுகிறது.

1. நூல் : ஸஹீஹுல் புகாரி, ஸஹீஹ் முஸ்லிம்.

2. நூல் : தபரானி

## 29. கஞ்சத்தனம் அதிகரித்தல்

## 30. உறவுகள் துண்டிக்கப்படுதல்

## 31. தொல்லை தரும் அண்டை வீடுகள் அதிகரித்தல்

மறுமை நாள் ஏற்படுவதற்கு முன்னர் சமூகத்தில் ஏற்படுகின்ற உளவியல் நோய்களில் ஒன்றுதான் கஞ்சத்தனமாகும். "கஞ்சத்தனம் அதிகரித்தல் மறுமை நாளின் அடையாளங்களில் ஒன்றாகும்."[1]

"(மறுமை உண்டாவதற்கு முன்னர்) காலம் நெருங்கி வரும், அமல்கள் குறைவடையும், கஞ்சத்தனம் பரவும், கொலைகள் அதிகரிக்கும்" என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியுள்ளார்கள்.[2]

"அசிங்கமான செயல்களும் அதனை ஊக்குவிப்பவர்களும், உறவுகள் துண்டிக்கப்படுவதும், அண்டை வீட்டார் தொல்லை தருபவராக இருப்பதும் நிகழாத வரை மறுமை நாள் ஏற்படாது" என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியுள்ளார்கள்.[3]

"எனது ஆத்மா எவன் கைவசம் இருக்கின்றதோ அவன் மீது சத்தியமாக அனாச்சாரங்கள் வெளிப்பட்டு, கஞ்சத்தனம் அதிகரித்து, நம்பிக்கைக்குரியவர்கள் சந்தேகிக்கப்பட்டு, மோசடிக்காரர்கள் நம்பப்பட்டு, கண்ணியவான்கள் மறைந்து போய், அடையாளமின்றி இருந்தவர்கள் எல்லாம் சமுதாய அந்தஸ்துள்ளவர்களாக மாறுகின்ற வரை மறுமை நாள் ஏற்படாது" என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.[4]

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அறிவித்தது போலவே, இன்று குழப்பங்களும் சீர்கேடுகளும் வெளிப்படையாகவே நடக்கின்றன. அவை ஊக்குவிக்கப்படுகின்றன. உறவுகளிடையே காணப்பட வேண்டிய அன்பு, பரிவு, ஒற்றுமை என்பன இல்லாமலாகி விட்டன. கோபமும், பகைமையும், பரவிவிட்டன. அண்டை வீட்டுக்காரர் யாரென்று அறியாத நிலையும், உறவினர்களை யாரோ எனப் பார்க்கும் நிலையும் ஏற்பட்டு விட்டன. இன்னும், அவர்கள்

---

1. அறிவிப்பாளர் : அபூஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு, நூல் : தபரானி
2. நூல் : ஸஹீஹுல் புகாரி, ஸஹீஹ் முஸ்லிம்
3. நூல் : அஹ்மத், அல்ஹாக்கிம்
4. அறிவிப்பாளர்: அபூஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு, நூல் : அல் ஹாக்கிம்

உயிரோடு இருக்கின்றார்களா அல்லது மரணித்து விட்டார்களா? என்பதைக்கூட தெரியாத அளவிற்கு நிலைமைகள் மோசமாகி விட்டன.

## 32. அநாகரிகமான செயல்கள் அதிகரித்தல்

அநாகரிகமான செயல்கள் என்பதற்கு அரைகுறை ஆடைகளோடு அலைதல், செவியுறுபவர்கள் வெட்கப்படக்கூடிய அளவிற்கு அசிங்கமான, ஆபாசமான வார்த்தைகளை உபயோகித்தல், மற்றவர்களை ஏசுதல் போன்றவற்றை உதாராணமாகக் கூறலாம்.

கீழ்த்தரமான செயல்கள் அதிகரித்துச் செல்வது மறுமை நாளின் அடையாளங்களில் ஒன்றாகும். “முஹம்மதுடைய உயிர் எவன் கைவசம் இருக்கின்றதோ அவன் மீது சத்தியமாக கீழ்த்தரமான செயல்கள் தோன்றும் வரை மறுமை நாள் ஏற்படாது.” என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.[1]

## 33. நம்பிக்கைக்குரியவர்கள் மோசடிக்காரர்களாகவும் மோசடிக் காரர்கள் நம்பிக்கைக்குரியவர்களாகவும் பார்க்கப்படுதல்

அமானிதம் உயர்த்தப்படுதல், தகுதியற்றவர்களுக்குத் தலைமைத்துவம் கொடுக்கப்படுதல் போன்றவை மறுமை நாளின் அடையாளங்கள் என ஏற்கனவே பார்த்தோம்.

அவ்வாறே நம்பிக்கைக்குரிய மக்கள் மோசடிக்காரர்களாகவும், ஏமாற்றுப் பேர்வழிகள் நம்பிக்கைக்குரியவர்களாகவும் பார்க்கப்படுவது மறுமை நாளின் அடையாளங்களில் ஒன்றென நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அடையாளப்படுத்துகின்றார்கள்.

“நம்பப்பட வேண்டிய மனிதர்கள் சந்தேகிக்கப்படுகின்ற வரை மோசடிக்காரர்கள் நம்பப்படுகின்ற வரை மறுமை நாள் நிகழாது.”[2]

## 34. சான்றோர்கள் மறைந்து, சாதாரணமானவர்கள் தோன்றுவது

சமூகத்தில் அறிவாளிகள், ஞானமிக்கவர்கள், புத்திசாலிகள், அறிஞர்கள்,

1. நூல் : அல் ஹாக்கிம்
2. அறிவிப்பாளர் : அபூஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு, நூல் : ஹாகிம்

கல்விமான்கள் இல்லாமல் போய்விடுவார்கள். ஆகவே, இத்தகைய சிறந்தோர்கள் இன்றி இடம் காலியாகிவிட்டதால் அவ்விடத்தில் அவர்களுக்குப் பதிலாக சாதாரணமானவர்களும், அறிவு ஞானமற்றவர்களும் உருவாகி விடுவார்கள். இதுவும் மறுமைநாளின் அடையாளங்களில் ஒன்றாகும்.

“எனது உயிர் எவன் கைவசம் இருக்கின்றதோ அவன் மீது சத்தியமாக வுஊல் (**وعول**) மறைந்து (**تحوت**) துஹூத் தோன்றும் வரை மறுமை நாள் ஏற்படாது” என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள், அப்போது ஸஹாபாக்கள், அல்லாஹ்வின் தூதரே! (**وعول**) வுஊல், (**تحوت**) துஹூத் என்றால் என்ன? எனக் கேட்டார்கள் அதற்கு நபியவர்கள், வுஊல் என்பவர்கள் மக்களில் சிறந்து விளங்குகின்றவர்கள் இன்னும் அவர்களில் மிக முக்கியமானவர்கள் ஆவார்கள். (**تحوت**) துஹூத் என்பவர்கள் மக்களுக்கு மத்தியில் அறியப்படாமல் இருந்த கீழ்தரமானவர்கள்” என பதிலளித்தார்கள்.[1]

இன்று, சமூகத்தில் முகவரியற்று இருந்த பலர் திடீரென உயர் பதவிகளில் அமர்த்தப்படுவதன் மூலமாகவும், விளம்பரங்களின் மூலமாகவும், சுற்றி இருக்கின்ற அவர்களது ரசிகர்களின் மூலமாகவும் உலகளவில் பிரபல்யமாகிக் கொண்டிருக்கின்ற அதேவேளை, சமூகத்தில் அறிவும் அந்தஸ்தும் கொண்ட, சமூகத்திற்குத் தேவையான பலர், யாருமே கண்டு கொள்ளாத நிலைக்குத் தள்ளப்பட்டு உள்ளனர்.

விளையாட்டுகளிலும், ஆடல், பாடல்களிலும் ஈடுபடுபவர்களுக்கு அந்தஸ்தும் அங்கீகாரமும் புகழும் மரியாதையும் கொடுக்கப்படுகின்றன. மார்க்க ஞானம் பெற்றவர்கள், சிறந்த மருத்துவர்கள், கல்வி வல்லுணர்கள், கண்டுபிடிப்பாளர்கள் இன்னும் இவர்கள் போன்ற அறிஞர்கள் கண்டு கொள்ளப்படுவது இல்லை.[2]

## 35. வருமானத்தில் ‘ஹராம்’ ‘ஹலால்’ பேணாமல் இருப்பது

ஒரு முஸ்லிமிடம் மார்க்கப்பற்று இல்லாமல் போகும்போது அவனிடம் மார்க்க விஷயத்தில் பேணுதலும் இல்லாமலாகி விடுகின்றது. மார்க்கத்தில் பேணுதல் இல்லாமலாகி விடுகின்றபோது மார்க்கம்

1. நூல் : ஹாக்கிம்
2. நடிகர், நடிகைகள்

பற்றிய பல்வேறு சந்தேகங்கள் இயல்பாகவே உருவாகி விடுகின்றன. சந்தேகங்கள் உருவாகின்றபோது எது ஹலால் (-அனுமதிக்கப்பட்டது) எது ஹராம் (-தடுக்கப்பட்டது) என்ற தெளிவு நிலை அற்றுப்போய் ஹராம் ஹலால் பார்க்காமல் வருமானம் ஈட்டுகின்ற நிலைக்குத் தள்ளப்படுகின்றான். இந்நிலையை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பின்வருமாறு கூறுகின்றார்கள்.

"ஒரு காலம் வரும், அக்காலத்தில் மனிதன் தனது பொருளீட்டல் ஹராமானதா அல்லது ஹலாலானதா என்பதைப் பற்றிப் பொருட்படுத்த மாட்டான்."[1]

அல்லாஹ், அல்குர்ஆனில் (ஹலாலான) நல்லதை மட்டுமே உண்ணுங்கள் எனக் கூறியிருந்தும், பணம் சம்பாதிப்பதில் ஹராம் - ஹலால் பேணப்படாததால் வியாபார உடன்படிக்கைகள் அடிக்கடி முறிக்கப்படுகின்றன. ஹராமான வியாபாரங்கள் சர்வ சாதாரணமாகி விட்டன. போதை வஸ்த்துக்கள், இஸ்லாமிய பெண்கள் அணியத் தகுதியற்ற அரைகுறை ஆடைகள் விற்பனை செய்யப்படுகின்றன, வியாபார நிலையங்கள் ஹராமான தொழில்கள் செய்வோருக்கு வாடகைக்கு விடப்படுகின்றன. இவ்வாறு பலரும் பலவிதமாக ஹராம் - ஹலால் பாராமல் சம்பாதித்துக் கொண்டிருப்பதைக் காணமுடிகின்றது.

அல்லாஹ் தூய்மையானவன், அவன் தூய்மையானவற்றைத் தவிர வேறெதையும் விரும்பமாட்டான் என்பதற்கேற்ப, ஹராமில் வளர்ந்த எந்த உடம்புக்கும் நரகநெருப்பே பொருத்தமான தங்குமிடமாகும்.

ஹலாலா? அல்லது ஹராமா? என்ற சந்தேகம் ஏற்படும்போது, பயந்து அதைவிட்டு தவிர்ந்து கொள்வோர் அரிதாகவே காணப்படுகின்றனர். அவர்களை மிகப்பெரிய ஒரு மனிதராக பார்க்கப்படுகிறது.

ஹராமை பயந்து, லஞ்சங்களை ஏற்காமல் வாழக்கூடிய பல அதிகாரிகளும் அலுவலர்களும் தங்களது பதவியிலும், அதிகாரத்திலும் பொறுப்பிலும் நீடிக்க முடியாத நிலையே காணப்படுகின்றது.

"அனுமதிக்கப்பட்டதும் (ஹலால்) தெளிவானது, தடை செய்யப்பட்டதும் (ஹராம்) தெளிவானது. இவ்விரண்டிற்கும்

1. அறிவிப்பாளர் : அபூஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு, நூல் : ஸஹீஹுல் புகாரி

இடையில் சந்தேகத்திற்கிடமானவை (முஷ்தபிஹாத்) இருக்கின்றன. மக்களில் பெரும்பாலோர் அவற்றை அறியமாட்டார்கள். எனவே, யார் சந்தேகத்திற்கிடமானவற்றைத் தவிர்க்கிறாரோ அவர் தமது மார்க்கத்தையும் தமது மானத்தையும் காப்பாற்றிக் கொள்கிறார். யார் சந்தேகத்திற்கிடமானவற்றில் வீழ்ந்து விடுகின்றாரோ, அவர் அனுமதிக்கப்படாதவற்றில் வீழ்ந்து விடுவார்" என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.[1]

அல்லாஹ் நம்மனைவருக்கும் நேர்வழியையும், மார்க்கத்தில் உறுதியையும் தருவானாக!

## 36. 'ஃபைவு' செல்வந்தர்களிடத்தில் மட்டும் தங்கி விடுதல்

ஃபைவு என்பது யுத்த களத்தில் எதிரிகள் பின்வாங்கி ஓடுவதன் மூலமாகவோ யுத்தமின்றி எதிரிகள் அனைவரும் இஸ்லாத்தை ஏற்றுவிடுவதன் மூலமாகவோ முஸ்லிம்களுக்கு கிடைக்கின்ற கனீமத் பொருட்களாகும். இதனைப் பின்வரும் அல்லாஹ்வின் வசனத்திற்கேற்ப அவரவருக்குப் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்பது இஸ்லாமின் கட்டளையாகும்.

**"அவ்வூராரிடம் இருந்தவற்றில் அல்லாஹ் தன் தூதருக்குக் கொடுத்தவை அல்லாஹ்வுக்கும், அவனுடைய தூதருக்கும், அவருடைய உறவினர்களுக்கும், அனாதைகளுக்கும், ஏழைகளுக்கும், வழிப்போக்கர்களுக்கும் உரித்தானதாகும். செல்வம் உங்களிலுள்ள பணக்காரர்களுக்கிடையில் மட்டுமே சுற்றிக் கொண்டிருக்காமல் (மற்றவர்களுக்கும் கிடைக்கும் பொருட்டு, இவ்வாறு பொருளைப் பங்கிடும்படி கட்டளையிடுகிறேன்.) ஆகவே, நம் தூதர் உங்களுக்குக் கொடுத்ததை நீங்கள் (மனமுவந்து) எடுத்துக்கொள்ளுங்கள். அவர் எதை விட்டும் உங்களைத் தடுத்தாரோ, அதைவிட்டு நீங்கள் விலகிக் கொள்ளுங்கள். (இவ்விஷயத்தில்) நீங்கள் அல்லாஹ்வுக்குப் பயந்து நடந்து கொள்ளுங்கள். நிச்சயமாக அல்லாஹ் கடும் தண்டனை தருபவனாவான்."(அல்குர்ஆன் 59 : 7)**

அல்லாஹ் மனிதர்களுக்கு இவ்வாறு கட்டளையிட்டிருந்தும்,

1. நூல் : ஸஹீஹ் முஸ்லிம் 3259

மறுமைநாள் நெருங்கும்போது செல்வங்கள் அனைத்தையும் தலைவர்களும், அரசியல்வாதிகளும், அதிகாரிகளும் பங்கிட்டுக் கொள்வார்களே தவிர, அதில் ஒரு பகுதியைக்கூட போய்ச் சேரவேண்டிய ஏழைகளுக்குச் சேர விட மாட்டார்கள். இது மறுமை நாளின் அடையாளங்களில் ஒன்றாகும்.

## 37. அமானிதங்களை தனது உடமையாக்குதல்

அமானிதம் பேணப்பட வேண்டும் என்பதும், அமானிதத்தை அதன் சொந்தக்காரர்களிடம் அவர்கள் கேட்கும்போது கொடுத்துவிட வேண்டும் என்பதும் இஸ்லாமின் கட்டளைகளாகும்.

**“அமானிதங்களை அதன் சொந்தக்காரர்களிடத்தில் நீங்கள் ஒப்படைக்க வேண்டும் என அல்லாஹ் உங்களுக்கு கட்டளை இடுகின்றான்.”** **(அல்குர்ஆன் 4 : 58)**

மறுமைநாள் நெருங்கும்போது, சிலர் அமானிதமாகத் தம்மிடம் ஒப்படைக்கப்படுகின்ற பொருட்களை அதன் சொந்தக்காரர்களிடத்தில் ஒப்படைத்து விடாமல் தமதாக்கிக் கொள்வார்கள்.

## 38. ஸகாத் கொடுக்காமல் இருப்பது

ஸகாத் என்பது முஸ்லிம்கள் மீது விதிக்கப்படும் வரியோ, தண்டப் பணமோ அல்ல. மாறாக, செல்வத்தை சுத்தம் செய்து, அல்லாஹ்வின் பக்கம் நெருக்கத்தை ஏற்படுத்தித் தருகின்ற ஓர் உயரிய அமலாகும்.

மறுமை நாள் நெருங்கும்போது கஞ்சத்தனம் பெருகி, பணம் படைத்தவர்கள் ஸகாத்தைக் கொடுக்கின்றபோது தனது பணம் போகின்றதே எனும் மன உளைச்சலுடனும், நான் இவ்வளவு பணத்தையும் ஸகாத்தாகக் கொடுப்பதா? என்ற ஏக்கத்துடனும், அதனைத் தன்மீது சுமத்தப்பட்ட ஒரு பெரும் சுமையாக எண்ணியும் வெறுப்புடனுமே கொடுப்பார்கள். தூய எண்ணம் இல்லாமல் இப்படி மன வேதனையுடன் ஒருவர் ஸகாத் கொடுத்தால் அவர் அதற்குரிய நன்மையை பெறமாட்டார்.

## 39. இக்லாஸ் (-மனத்தூய்மை) இல்லாமல் கல்வி கற்பது

மார்க்கக் கல்வியைக் கற்றுக் கொள்வது ஒரு இபாதத்தாகும்.

“மனிதர்களுக்கு நல்லதைக் கற்றுக் கொடுக்கின்ற ஆசிரியர்களுக்காக அல்லாஹ்வும், வானவர்களும், வானம் பூமியில் வாழ்கின்றவர்களும், பொந்துக்குள் இருக்கின்ற எறும்புகளும் கடலிலுள்ள மீன்களும் ஸலவாத் சொல்கின்றன” என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.[1]

எனினும் மறுமை நெருங்கும்போது, மக்கள் அல்லாஹ்வுக்காக அன்றி பெருமைக்காகவும், புகழுக்காகவும், வேறு நோக்கங்களுக்காகவும் கல்வி கற்பார்கள்.

எனவேதான், நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் (மறுமை நாளின் அடையாளங்கள் பற்றிக் குறிப்பிடுகின்றபோது) அல்லாஹ்வுக்காக அன்றி கல்வி கற்கப்படுவதையும் சேர்த்துக் குறிப்பிட்டுள்ளார்கள்.

## 40. மனைவியைத் திருப்திப்படுத்துவதற்காகத் தாயைக் கொடுமைப்படுத்துதல்

சில கணவர்கள் மனைவியைத் திருப்திப்படுத்துவதற்காகவும், அவளது அன்பையும் நெருக்கத்தையும் பெற்றுக்கொள்வதற்காகவும், மனைவியிடத்தில் கட்டுண்டு தனது பெற்றோரைக் கொடுமைப்படுத்துகின்ற நிலை இன்று பரவலாகக் காணப்படுகின்றது. சில பிள்ளைகள் அவர்களது தாய்மார்களை கேட்பதுமில்லை, பார்ப்பதுமில்லை என்ற நிலையில் தனியான வீடுகளில், தனியாக வாழவைத்து விடுகின்றனர். (அல்லது எப்போதாவது) நேரம் கிடைத்தால் மட்டும் சென்று பார்த்துவிட்டு வருகின்றார்கள். அதேநேரம் தனது மனைவி பிள்ளைகளோடு உல்லாசமாக சுற்றுலாக்கள், பூங்காக்கள் என சுற்றித் திரிந்து சந்தோசமாக வாழ்ந்து கொண்டிருக்கக்கூடிய நிலையைப் பார்க்கின்றோம். இது மறுமை நாளின் அடையாளமாகும்.

“கனீமத் பணம் செல்வந்தர்களிடத்தில் மாத்திரமே பரிமாறப்பட்டால், மனைவிக்குக் கட்டுண்டு தாயைப் புறக்கணித்தால், நண்பனோடு நெருங்கிப் பழகி தந்தையை விட்டும் தூரமாகினால்....” மறுமையை

---

1. நூல் : திர்மிதி

எதிர்பார்க்குமாறு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.[1]

## 41. நண்பர்களோடு நெருங்கிப் பழகுதலும் பெற்றோர்களை விட்டும் தூரமாகுதலும்

சில பிள்ளைகள் தமது தந்தையுடன் பழகுவதைவிட தமது நண்பர்களுடன் நெருக்கமாகப் பழகுவதிலேயே சந்தோஷப் படுகின்றார்கள். குறிப்பாகப் பெற்றோர் வயது முதிர்ந்தவர்களாகவோ, அதிகம் ஆலோசனை கூறக்கூடியவர்களாகவோ அல்லது அதிகம் முரண்பாட்டுச் சிந்தனை உள்ளவராகவோ இருக்கின்றபோது பிள்ளைகள் இப்படி நடந்து கொள்வதைக் காணமுடிகின்றது.

நண்பர்களோடு சந்தோஷமாகவும் அன்னியோன்யமாகவும் இருந்து கொண்டு பெற்றோர்களுடன் தூரமாக நடந்து கொள்வது பெற்றோரை நோவினை செய்கின்ற ஒரு செயலாக இருப்பதோடு மறுமை நாளின் அடையாளங்களில் ஒன்றாகவும் இருக்கின்றது.

**“தனது தாய் தந்தைக்கு நன்றி செய்யும்படி மனிதனுக்கு நாம் நல்லுபதேசம் செய்தோம். அவனுடைய தாய் துன்பத்தின் மேல் துன்பத்தை அனுபவித்து(க் கர்ப்பத்தில்)அவனைச் சுமந்து கொண்டு அலைந்தாள். (பிறந்த) பிறகும் இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னரே அவனுக்குப் பால் மறக்கடித்தாள். ஆகவே, நீ எனக்கும் நன்றி செலுத்து; உன் தாய் தந்தைக்கும் நன்றி செலுத்து. முடிவில் நீ நம்மிடமே வந்து சேர வேண்டியதிருக்கிறது.” (அல்குர்ஆன் 31 : 14)**

என்ற அல்குர்ஆன் வசனத்திற்கு இணங்க பிள்ளைகள் தங்களது தாய், தந்தை விஷயத்தில் தங்கள் மீதுள்ள கடமைகளையும் பொறுப்புகளையும் மறந்துவிடக் கூடாது.

## 42. பள்ளிவாசல்களில் சப்தங்கள் உயர்த்தப்படுதல்

பள்ளிவாசல்கள் அமைதியாகவும் கண்ணியமான முறையிலும் இருப்பதே அடிப்படையாகும். அதைவிடுத்து, பள்ளிவாசல்களில்

1. இந்த ஹதீஸின் அறிவிப்பாளர் வரிசை தொடர்பாக சில விமர்சனங்கள் இருப்பது குறிப்பிடத்தக்கது. அறிவிப்பாளர்: அபூஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு, நூல் : திர்மிதி.

சப்தங்களை உயர்த்துவதும் சண்டை சச்சரவுகளில் ஈடுபடுவதும், வாக்குவாதங்கள் செய்வதும் மறுமை நாளின் அடையாளங்களில் உள்ளவையாகும்.

## 43. பாவிகள் தலைவர்களாகுதல்

ஒரு நாட்டையோ சமுதாயத்தையோ ஆளுகின்ற ஒருவர் நீதியும், அறிவும், ஞானமும் கொண்ட ஒருவராக இருப்பது இன்றியமையாததாகும். எனினும், பாவிகள் தங்களது செல்வம், அந்தஸ்து, அதிகாரம், அறிமுகங்கள், என்பவற்றைப் பயன்படுத்தி தலைமைப் பொறுப்புக்களைப் பெற்றுக்கொள்வது மறுமை நாளின் அடையாளமாகும்.

## 44. சமுதாய அந்தஸ்து அற்றவர்கள் சமூகத் தலைவர்களாகுதல்

இதுவும் மேலே சொல்லப்பட்ட விஷயம் போன்றதே, சாதாரண ஒரு பயணமாக இருந்தாலும் அல்லது ஏதாவது ஒரு வேலைக்காக ஓரிடத்தில் ஒன்று சேர்ந்தாலும் அவர்களில் தகுதியும் அறிவும் அற்றவர்களே பொறுப்புக்களைப் பெற்றுக்கொள்ள முனைகின்றனர், இது மறுமை நாளின் அடையாளங்களில் ஒன்றாகும்.

இந்நிலைக்குக் காரணம், அக்காலத்தில் மக்கள் முற்றிலும் சீர்கெட்டு இருப்பார்கள். அல்லது தகுதியற்றவர்கள் ஆதிக்கம் செலுத்துவார்கள்.

## 45. ஒருவனது தீங்கிற்கு பயந்து அவனுக்கு மரியாதை செய்தல்

பாவிகளும் கயவர்களும் அதிகாரங்களை கைப்பற்றுவதால், அவர்களை மதித்து, அவர்களில் சிலரது தலைகளை முத்தமிட வேண்டிய நிலைகள் கூட ஏற்படுகின்றன.

மேற்கூறிய அனைத்து அடையாளங்களையும், பின்வரும் அபூஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு அவர்களது ஹதீஸ் உண்மைப்படுத்துவதைக் காணலாம்.

“கனீமத் (போன்ற பொதுச்) சொத்துக்கள் செல்வந்தர்களிடத்தில் தங்கி விட்டால், அமானிதங்கள் மோசடி செய்யப்பட்டால், ஸகாத் கொடுக்க விருப்பமற்ற மனோ நிலை ஏற்பட்டால், மார்க்கக்

கல்வியின் முக்கியத்துவம் இழக்கப்பட்டுவிட்டால், கணவன் மனைவிக்குக் கட்டுப்பட்டு தாயை நோவினை செய்யும் நிலை ஏற்பட்டால், நண்பன் நெருக்கமாகி தந்தை தூரமாக்கப்பட்டால், பள்ளிவாசல்களில் சப்தங்கள் உயர்த்தப்பட்டால், பாவிகள் தலைமைப் பொறுப்புக்களை ஏற்றால், ஒருவனின் அதிகாரத்திற்குப் பயந்து அவன் கண்ணியப்படுத்தப்பட்டால், பாடல்களும் இசைக் கருவிகளும் அதிகரித்தால், மதுபானம் அருந்தப்பட்டால், பிற்காலத்தினர் முற்காலத்தினரை (மதிக்காமல்) அவர்களை லஃனத் செய்யும் நிலை ஏற்பட்டால், வேகமான காற்றையும், பூகம்பங்களையும், பூமி விழுங்குவதையும், உருமாற்றப்படுவதையும், கல்மழை பொழிதலையும், அறுந்துபோன மணிக்கோர்வையில் மணிகள் ஒன்றன் பின் ஒன்றாக கழண்டு வருவதைப்போன்று தொடராக வருகின்ற மறுமை நாளின் பெரிய அடையாளங்களையும் எதிர் பாருங்கள்'' என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.[1]

### 46. மர்மஸ்தானம் (மனைவி அல்லாத பெண்கள்)

### 47. பட்டு

### 48. மது

### 49. இசை ஆகியவை ஹலாலாக -அனுமதிக்கப்பட்டதாக பார்க்கப்படுதல்

விபச்சாரம், மது அருந்துதல், உணர்வுகளைத் தூண்டும் இசைகளுக்கு அடிமைப்படல், ஆண்கள் பட்டாடை அணிதல் ஆகியவை மார்க்கத்தில் ஹராமாக்கப்பட்டுள்ள விஷயங்கள் என்பதை முஸ்லிம்கள் எவரும் அறியாமல் இருக்கமாட்டார்கள். எனினும், தனது உம்மத்தில் ஒரு கூட்டம் உலக முடிவு காலத்தில் இவற்றையெல்லாம் ஹலால்போன்று செய்து கொண்டிருப்பார்கள் எனக்கூறிய நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இவற்றை மறுமை நாளின் அடையாளங்கள் என குறிப்பிடுகின்றார்கள்.

மேற்கூறிய விஷயங்களை ஹலாலாக பார்க்கப்படுவதற்குரிய காரணங்கள்:

---

1. இந்த ஹதீஸின் அறிவிப்பாளர் வரிசையில் கருத்துவேறுபாடுகள் உள்ளன. அறிவிப்பாளர் : அபூஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு , நூல் : திர்மதி

1. அடிப்படையில் இவைகள் அனைத்தும் ஹலாலானவையே என எண்ணி செயல்படுதல்.

2. மேற்கூறிய ஹராமான அம்சங்களைச் செய்து பழகிப்போய் யாரும் அதைக் கண்டுகொள்ளாத நிலையும், அந்த ஹராமைச் செய்கின்றவருக்கு அது ஹராம் என்கின்ற எந்த உறுத்தலும் இல்லாத ஒரு நிலையும் உருவாகுதல்.

“எனது உம்மத்தில் சிலர் விபச்சாரம், பட்டு, மது, இசை போன்றவற்றை ஹலாலாக்கிக் கொள்வார்கள். இன்னும் சிலர் மலையடிவாரங்களில் பண்ணைகள் வைத்திருப்பார்கள், ஏழைகள் வந்து ஏதாவது உதவி கேட்டால் நாளை வா என்பார்கள். அல்லாஹ் அவர்களை இரவோடு இரவாக அழித்து அம்மலைகளை அவர்கள்மீது விழவைப்பான், சிலரை மறுமை நாள் வரையும் குரங்குகளாகவும், பன்றிகளாகவும் மாற்றிவிடுவான்” என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.[1]

இன்று பல இஸ்லாமிய நாடுகள் விபச்சாரம், மது போன்ற விஷயங்களில் அலட்சியமாக இருக்கின்றன. விபச்சார விடுதிகளுக்கு சட்ட ரீதியான அங்கீகாரம் வழங்கப்பட்டு, விபச்சாரிகளுக்கான தொழில்முறையான அனுமதி அடையாள அட்டைகளும் வழங்கப்படுகின்றன.

இன்று பல முஸ்லிம் மற்றும் அரபு நாடுகளிலும் மதுபானம் பட்டப் பகலில் பகிரங்கமாக கடைகளில் விற்கப்படுகின்றன.

‘‘எனது உம்மத்தில் சிலர் பெண்களின் (ஆடல், பாடல்) இசைகளோடு, “மது” எனக் குறிப்பிடாமல் (நவீன) பெயர்களை வைத்து மது அருந்திக் கொண்டிருப்பார்கள். அல்லாஹ் அவர்களை பூமியைக்கொண்டு விழுங்க வைப்பான். அவர்களில் சிலர் குரங்குகளாகவும், பன்றிகளாகவும் மாற்றப்படுவார்கள்’’ என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.[2]

இன்று அதிகமான உள்ளங்கள் நோய்வாய்பட்டு, தொழுகை அற்றவர்களாகவும், அல்லாஹ்வை மறந்தவர்களாகவும்,

---

1. நூல் : இப்னுமாஜா
2. நூல் : இப்னுமாஜா

அல்குர்ஆனுக்கும் தமக்கும் எந்த சம்பந்தமும் இல்லாதவர்களாகவும் மாறுவதற்கு இசை பெரும் பங்காற்றுகிறது.

**“மனிதரில் பலர் இருக்கின்றனர். அவர்கள் வீணான விஷயங்களை விலைக்கு வாங்கி (அவற்றை மக்களுக்கு ஓதிக் காண்பித்து) அல்லாஹ்வுடைய மார்க்கத்தில் இருந்து ஞானமின்றி மக்களை வழிகெடுத்து அதைப் பரிகாசமாகவும் எடுத்துக் கொள்கின்றனர். இவர்களுக்கு இழிவு தரும் வேதனை நிச்சயமாக உண்டு.”**

**(அல்குர்ஆன் 31 : 6)**

“வீணான விஷயங்கள்” என்பது பாட்டும், இசையும் என அறிஞர்கள் விளக்கம் கொடுக்கின்றனர்.

“எனது உம்மத்தில் சிலர் விபச்சாரத்தையும், பட்டையும், மதுவையும், இசைக் கருவியையும் தங்களுக்கு ஹலாலாக்கிக் கொள்வார்கள்” என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இசை கேட்பதை விபச்சாரத்தோடும் மது அருந்துவதோடும் இணைத்துப் பேசியுள்ளது இங்கே கவனிக்கத் தக்கதாகும்.

இன்று பல்வேறுபட்ட இசைகளுக்கும் பாடல்களுக்கும் என்றே பிரத்தியேகமான வானொலி மற்றும் தொலைக்காட்சி நிறுவனங்களும் அலைவரிசைகளும் உருவாக்கப்பட்டு, செய்திகளுக்கோ, அல்குர்ஆன் ஓதப்படுவதற்கோ இடைவெளி இல்லாதவாறு 24 மணிநேரமும் இசையும் பாடலும் ஒலித்துக் கொண்டிருக்கின்றன.

எனவே, ஒரு முஸ்லிம் இசை விஷயத்தில் எச்சரிக்கையாக இருப்பது அவசியமாகும். இதன் விபரீதத்தை இப்னு மஸ்ஊத் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் பின்வருமாறு கூறுகின்றார்கள்

“தண்ணீர் எப்படி பயிரை முளைக்கச் செய்கின்றதோ அவ்வாறே இசை கேட்பது உள்ளத்தில் நயவஞ்சகத்தை முளைக்கச் செய்யும்”

## 50. மனிதர்கள் தமக்கு மரணம் வராதா என எதிர்பார்த்தல்

ஒரு காலத்தில் மனிதர்கள் கடுமையான குழப்பங்களாலும்,

சோதனைகளாலும் மூழ்கிக் கொண்டிருப்பார்கள். அப்போது சில மனிதர்கள் கப்ருகளை (-அடக்கஸ்தலங்களை)ப் பார்க்கும்போது நாங்களும் மரணித்து இவ்விடங்களில் அடக்கப்பட்டிருக்கலாமே! அப்படி அடக்கப்பட்டிருந்தால் நமக்கு இந்த சோதனைகளும், வேதனைகளும் ஏற்பட்டிருக்காதே! என அங்கலாய்ப்பார்கள். உயிரோடு இருப்பதைவிட மரணிப்பது எவ்வளவோ மேல் என எண்ணுவார்கள்" என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் முன்னறிவிப்புச் செய்துள்ளார்கள்.

"ஒரு மனிதன் மற்றொரு மனிதனின் மண்ணறையைக் கடந்துசெல்லும் போது, 'அந்தோ! நான் இவனுடைய இடத்தில் (மண்ணறைக்குள்) இருந்திருக்கக் கூடாதா? என்று (ஏக்கத்துடன்) கூறாத வரை மறுமை நாள் வராது." என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.[1]

"ஒரு காலம் வரும். அக்காலத்தில், உங்களில் ஒருவர் மரணம் விலைக்கு விற்கப்படுவதைக் கண்டால் அதை விலை கொடுத்து வாங்கி விடுவார்" என இப்னு மஸ்ஊத் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் குறிப்பிடுகின்றார்கள்.

மேலுள்ள ஹதீஸ்களில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மரணத்தை தேடும்படியோ அல்லது ஆதரவு வைக்கும்படியோ சொல்லவில்லை. மாறாக அக்காலத்தில் காணப்படுகின்ற குழப்பங்கள், மற்றும் பாவச்செயல்களைப் பார்க்கின்ற மனிதர்களின் உள்ளங்களில் தாம் மரணித்து விட்டால் போதும் என்ற உணர்வு ஏற்படும். இதையே சுட்டிக் காட்டுகின்றார்கள்.

அதே நேரம் யுகமுடிவு நெருங்கும்போது எல்லா முஃமின்களும் மரணத்தை அழைக்கக்கூடியவர்களாக இருப்பார்கள் என்பதற்கில்லை, மனிதர்கள் ஈமானிலும் கஷ்டங்களைத் தாங்குவதிலும் மாறுபட்ட நிலைகளில் உள்ளனர் என்பதால் அவ்வப்போது சிலர் இவ்வாறு சிந்திப்பார்கள் என்பதையே மேற்படி ஹதீஸ் சுட்டிக் காட்டுகின்றது.

---

1. அறிவிப்பாளர் : அபூஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு, நூல் : ஸஹீஹுல் புகாரி, ஸஹீஹ் முஸ்லிம்

## 51. காலையில் 'முஃமின்' -நம்பிக்கையாளராக இருப்பவர் மாலையில் 'காஃபிர்' -நிராகரிப்பாளராகி விடுதல்

மறுமைநாள் நெருங்கும்போது குழப்பங்கள் அதிகரித்து, மக்கள் குழப்பங்களுக்கும் கருத்து வேறுபாடுகளுக்கும் இடையில் சிக்குண்டு, மனோ இச்சைகளுக்குக் கட்டுப்பட்டு நடக்கின்ற ஒரு நிலை ஏற்படும். அப்போது நல்ல மனிதர்கள் இறந்து விடுவார்கள், மக்கள் நம்பிக்கையில் நிலைத்திருக்க மாட்டார்கள். இப்படி ஒரு பயங்கரமான நிலை தோன்றும்போதே காலையில் முஃமின்களாக இருப்பவர்கள் மாலையாகும்போது காஃபிராகி விடுவார்கள்.

"இருள் மிகுந்த இரவின் பகுதிகளைப் போன்ற குழப்பங்கள் தோன்றுவதற்கு முன் விரைந்து (நற்)செயல்கள் புரிந்து கொள்ளுங்கள். (அக்குழப்பங்களின்போது) காலையில் இறை நம்பிக்கையாளனாக இருக்கும் ஒரு மனிதன் மாலையில் இறைமறுப்பாளனாக மாறி விடுவான். மாலையில் இறைநம்பிக்கையாளனாக இருக்கும் ஒருவன் காலையில் இறைமறுப்பாளனாக மாறிவிடுவான். இவ்வுலகின் அற்ப பொருளுக்காகத் தனது மார்க்கத்தை அவன் விற்றுவிடுவான்."[1]

இரவு எப்படி படிப்படியாக அதிகரித்து பின்னர் கும்மிருட்டாக மாறுகின்றதோ அதேபோன்று குழப்பங்கள் அதிகரிக்கும் என்பதையும், அதன் மிக உச்சகட்டமாக ஒரு நாளைக்குள்ளேயே முஃமினான ஒருவன் காபிராக மாறுகின்ற நிலை ஏற்படும் எனவும் சுட்டிக்காட்டி இந்நிலையிலிருந்து நம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்காக நல்லமல்களை அதிகம் அதிகம் செய்துகொள்ள வேண்டும் எனவும் மேற்படி ஹதீஸ் நம்மைத் தூண்டுகின்றது.

மனிதர்கள் மார்க்க விஷயங்களில் உறுதியாக இல்லாமல், அகீதா -கொள்கையில் தடுமாறியவர்களாக இருப்பார்கள். சுயநலத்திற்காக மார்க்கத்தை விற்றுவிடுவார்கள். இத்தகைய ஒரு காலத்தைப் பற்றியே இச்செய்தி நமக்குக் குறிப்பிடுகிறது. நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்ற இக்காலம் இதற்கான சிறந்த எடுத்துக் காட்டாகும்.

---

1. அறிவிப்பாளர் : அபூஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு, நூல் : ஸஹீஹ் முஸ்லிம்

## 52. பள்ளிவாசல்கள் அலங்கரிக்கப்படுவதும், அதை வைத்துப் பெருமை கொள்வதும்

பள்ளிவாசல்கள் அல்லாஹ்வை வணங்குவதற்காக, நன்மையை நாடி கட்டப்படுகின்ற இடமாகும்.

ஆனால், பள்ளிவாசலைக் கட்ட வேண்டும் என்பதிலும், அது ஏனைய பள்ளிவாசலைவிட அழகாகவும் கவரக்கூடியதாகவும் இருக்க வேண்டும் என்பதிலும் மறுமைநாள் ஏற்படுவதற்கு முன்னர் மனிதர்கள் அதிக கவனம் செலுத்துவார்கள். மக்களும் அங்கே சென்று தொழவேண்டும் என்பதைவிட அந்தப் பள்ளியைச் சென்று பார்க்கவேண்டும் என்பதிலேயே அதிக கவனம் செலுத்துவார்கள்.

"மனிதர்கள் தங்களது பள்ளிவாசல்களை வைத்துப் பெருமை பேசிக் கொள்ளாதவரை மறுமை ஏற்படாது."[1]

பள்ளிவாசல்களில் இபாதத் செய்வதற்கு ஆர்வம் காட்டுவதை விட அதனை அழகுபடுத்திப் பார்க்கின்ற விஷயத்தில் அக்கறை கொள்வதை பல ஸஹாபாக்கள் எச்சரித்துள்ளார்கள். இப்னு அப்பாஸ் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள், "நீங்கள் யூத - கிறிஸ்தவர்கள் (தமது வணக்கத் தலங்களை) அழகுபடுத்துவதைப் போன்று அழகுபடுத்துகின்றீர்களே!" எனக் கடிந்து கூறியிருக்கின்றார்கள்.[2]

"யூதர்கள், கிறிஸ்தவர்கள் தங்களது வேத நூல்களை மாற்றிக்கொண்ட அதே வேளையில் வணக்கத் தலங்களையும் அழகுபடுத்தத் தொடங்கினார்கள்" என இமாம் பகவி ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் கூறுகிறார்கள்.[3]

"யூதர்கள், கிறிஸ்தவர்கள் தங்களது வேதங்களை மாற்றியபோது மார்க்கத்தை தொலைத்துவிட்டு வணக்கஸ்தலங்களை அலங்கரிப்பதிலும் அழகுபடுத்துவதிலுமே ஆர்வம் காட்டினார்கள்."[4]

இன்று வண்ணவண்ண நிறங்கள், பலவகையான விளக்குகள்,

---

1. அறிவிப்பாளர் : அனஸ் ரழியல்லாஹு அன்ஹு, நூல் : அபூதாவூத், நஸாயீ
2. நூல் : அஹ்மத், அபூதாவூத்
3. பார்க்க : ஃபத்ஹுல் பாரி (2/175)
4. -அல்ஹத்தாபி ரஹ்மதுல்லாஹி அலைஹி-

கட்டிட கலை அலங்காரங்கள், விரிப்புகள், சுவர்களில் குர்ஆன் வசனங்களை எழுதுதல் என பல்வேறு கோலங்களில் பள்ளிவாசல்கள் அலங்கரிக்கப்படுவதை காணமுடிகிறது.

அதையும் தாண்டி, இன்று பள்ளிவாசல்களில் வீணான அலங்காரங்களுக்காக செய்யப்படுகின்ற செலவீனங்களைப் பார்க்கின்றபோது, ஒரு பள்ளிவாசலின் அலங்காரத்திற்காக செலவழிக்கப்படுகின்ற செல்வத்தை வைத்து பல பள்ளிவாசல்களை கட்டிவிடலாம்.

பள்ளிவாசல்களின் அலங்காரம் பற்றிப் பேசுகின்றபோது, பள்ளிவாசல்கள் கட்டக் கூடாதென்றோ வசதியான விரிப்புகளையும், தேவையான வசதிகளையும் செய்யக்கூடாது என்றோ பழைய அமைப்புக்களில் சிறிய பள்ளிகளை மட்டும் கட்டவேண்டும் என்றோ கூறுவதாக எண்ணிவிட வேண்டாம். மாறாக அளவிற்கு மிஞ்சிய அலங்காரங்களும் வீண்விரயங்களும் கூடாதென்பதே இங்கு சுட்டிக் காட்டப்படுகின்ற முக்கிய விஷயமாகும்.

“நீங்கள் உங்களது பள்ளிவாசல்களை அளவுக்கதிகமாக அலங்கரித்தால், உங்கள் குர்ஆனை (தங்கம், வெள்ளி போன்றவற்றால்) அழகுபடுத்தினால் உங்களுக்கு அழிவு ஏற்பட்டுவிடும்.”[1]

## 53. வீடுகளை அலங்கரித்தலும் அழகுபடுத்தலும்

**“அளவு கடந்து (வீண்) செலவு செய்யாதீர்கள். ஏனென்றால், அளவு கடந்து (வீண்) செலவு செய்பவர்களை நிச்சயமாக அல்லாஹ் நேசிப்பதில்லை.” (அல்குர்ஆன் 6 : 141)**

மேற்படி வசனத்தின் மூலம் ஆடம்பரம், வீண்விரயம், சொத்துக்களை வைத்து பெருமையும், பகட்டும் காட்டுவது என்பன இஸ்லாம் வெறுக்கின்ற விஷயங்கள் என்பதைப் புரிந்துகொள்ளலாம். எனினும், மறுமை நாள் நெருங்குகின்றபோது மக்கள் தங்களது வீட்டுச் சுவர்களிலும், ஜன்னல்களிலும் விலையுயர்ந்த பல அழகிய வேலைப் பாடுகளைக் கொண்ட திரைகளை தொங்கவிட்டு தங்களது வீடுகளை அலங்காரம் செய்து அதில் பெருமைப்படுவார்கள்.

1. அறிவிப்பாளர் : அபுத்தர்தா ரழியல்லாஹு அன்ஹு, நூல் : அபூதாவூத்

“மக்கள் தங்களது ஆடைகளை அலங்காரம் செய்வது போன்று வீடுகளையும் அலங்காரம் செய்யும்வரை மறுமை நாள் ஏற்படாது.”[1]

வீடுகளை அழகுபடுத்துவதோ திரைகளை பயன்படுத்துவதோ மார்க்கம் வெறுக்கின்ற விஷயங்களன்று. மாறாக, அலங்காரம் என்ற பெயரில் அளவு கடந்து வீண்விரயம் செய்யப்படுவதையும் அதனைப் பெருமையாகப் பேசுவதையுமே இஸ்லாம் வெறுக்கின்றது.

## 54. இடிமுழக்கங்கள் அதிகரித்தல்

இடி முழக்கங்கள் அதிகரித்தலும் அதனால் அதிகளவில் மரணங்கள் ஏற்படுவதும் மறுமை நாளின் அடையாளங்களில் உள்ளவையாகும்.

“மறுமை நாள் நெருங்கும்போது மனிதர்கள் அவர்களுக்குள், இன்று இடி முழக்கத்தால் யாரெல்லாம் மரணித்தார்கள்? என சாதாரணமாகவே கேட்டுக் கொள்வார்கள். (அப்போது மக்களும் சாதாரணமாகவே) இன்னார் இன்னார் மரணித்துள்ளார்கள் எனக் கூறுவார்கள். அந்தளவிற்கு இடிமுழக்கங்கள் அதிகரிக்கும்.”[2]

இடி என்பது மின்னல் வெட்டும்போது வானிலிருந்து வருகின்ற மிகப்பெரிய சப்த முழக்கமாகும். இப்படிப்பட்ட இடியினால் அல்லாஹ் பல சமூகங்களை அழித்துள்ளான்.

**“ஸமூது என்னும் மக்களோ, அவர்களுக்கும் நாம் (நம் தூதரை அனுப்பி) நேரான வழியை அறிவித்தோம். எனினும், அவர்களும் நேர்வழியில் செல்லாது குருடராய் இருப்பதையே விரும்பினார்கள். ஆகவே, அவர்கள் செய்து கொண்டிருந்த (தீய) செயலின் காரணமாக இழிவான வேதனையைக் கொண்டுள்ள இடி முழக்கம் அவர்களைப் பிடித்துக் கொண்டது.” (அல்குர்ஆன் 41 : 17)**

**“ஆகவே, அவர்கள் (நம்பிக்கை கொள்ளாது) புறக்கணித்தால், நீர் கூறுவீராக: “ஆது, ஸமூது என்னும் மக்களுக்கு ஏற்பட்ட இடி முழக்கம் போன்றதொரு இடி முழக்கத்தையே நான் உங்களுக்கு அச்சமூட்டி எச்சரிக்கை செய்கிறேன்.” (அல்குர்ஆன் 41 : 13)**

---

1. அறிவிப்பாளர் : அபூஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு, நூல் : ஸஹீஹுல் புகாரி
2. இந்த செய்தி பலவீனமான அறிவிப்பாளரைக் கொண்டது. அறிவிப்பாளர்: அபூஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு, நூல் : அஹ்மத்.

இடி என்பது மிகப் பயங்கரமானது என்பதனால் அதனை அல்லாஹ் "தாகியா" (அண்டம் திடுக்கிடச் செய்யும் பெரும் சப்தம்) என வர்ணிக்கின்றான்.

**"ஆகவே, 'ஸமூத்' மக்கள் பெரும் சப்தத்தைக்கொண்டு அழிக்கப் பட்டனர்." (அல்குர்ஆன் 69 : 5)**

## 55. எழுத்து அதிகரித்தலும் பரவுதலும்

ஒரு காலத்தில் நூல்கள் பெரியளவில் காணப்படவில்லை என்பதைவிட நூற்கள் அரிது என்றே சொல்லலாம். எனினும், நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மறுமைநாளின் அடையாளங்களாக எழுதுகோல்களும், எழுத்துகளும், நூல்களும், அதிகரிக்கும் எனக் குறிப்பிட்டுள்ளார்கள்.

"மறுமைக்கு முன்னால் குறிப்பிட்டவர்களுக்கு மட்டும் ஸலாம் சொல்லுதல், மனைவியும் தனது கணவனோடு சேர்ந்து வியாபாரத்தில் ஈடுபடுகின்ற அளவிற்கு வியாபாரம் பெருகிவிடுகுதல், உறவினர்களைத் துண்டித்து வாழுதல், பொய்சாட்சி சொல்லுதல், உண்மை சாட்சியம் மறைக்கப்படுதல், எழுது கருவிகள் அதிகரித்து, எல்லோரும் எழுதத்தொடங்குதல் போன்ற அம்சங்கள் இடம்பெறும்."[1]

இன்று எல்லோரும் எழுதுகின்றனர். எழுதுகோல்களின் வகைகளும் அதிகரித்து விட்டன. எழுத்துகளும் இன்று காணப்படுகின்ற ஊடகங்களின் மூலமாக உடனுக்குடன் பரப்பப்படுகின்றன. இதுவே, மேற்படி ஹதீஸின் வெளிப்பாடாகக் கூட இருக்கலாம்.

## 56. நாவன்மையையும் பேச்சுத் திறனையும் வைத்து பணம் சம்பாதித்தலும் பெருமைப்படுதலும்

மார்க்கம் அனுமதித்த முறைகளில் பணம் சம்பாதிப்பதில் எந்தவித தவறும் கிடையாது. அந்த வகையில் ஆசிரியர்கள், சட்டத் தரணிகள் (வழக்கறிஞர்கள்) போன்றோர் தங்களிடத்தில் காணப்படுகின்ற கல்வி கற்பித்தல், படைப்பாற்றல், பேச்சுத்திறமை போன்றவற்றை வைத்து அல்லாஹ் அனுமதித்த முறைகளில் பணம் சம்பாதிப்பதில் எந்தத் தவறுமில்லை.

1. அறிவிப்பாளர் : இப்னு மஸ்ஊத் ரழியல்லாஹு அன்ஹு, நூல் : அஹ்மத்

எனினும், சிலர் தனது நாவன்மையை வைத்து இஸ்லாம் அனுமதிக்காத முறையில் பொய் சத்தியம், பொய் பேசுதல், ஏமாற்றுதல், போலியாகப் புகழ்ந்து ஆதாயம் தேடுதல் போன்றவற்றின் மூலமாகப் பணம் சம்பாதிக்கின்றனர். இதுவே, இங்கு நாம் குறிப்பிடவரும் இஸ்லாம் விரும்பாத பொருளீட்டல் முறையாகும்.

ஸஃத் இப்னு அபீ வக்காஸ் ரழியல்லாஹு அன்ஹு அவர்களுடைய மகனார் உமர் இப்னு ஸஃத் ஒரு முறை தனது தந்தையிடம் தனது தேவையொன்றை நிறைவேற்றிக் கொள்வதற்காக வந்தார். அப்போது மக்கள் தங்களது தேவைகளை இன்னொருவரிடத்தில் நிறைவேற்றிக் கொள்ளும்போது பயன்படுத்துகின்ற சில புகழ் வார்த்தைகளை உபயோகித்தார். (அவ்வார்த்தைகளைக் கேட்ட அவரது) தந்தை ஸஃத் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் "...ஒரு காலம் வரும், அப்போது மாடுகள் தனக்குத் தேவையான உணவுகளை நாவின் மூலமாக உள்ளே எடுத்துக் கொள்வதைப் போன்று சிலர் தனது நாவன்மையைப் பயன்படுத்தி மக்களது சொத்துக்களை உண்பார்கள்" என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதை நான் கேட்டுள்ளேன் எனக் கூறினார்கள்.[1]

"கண்ணியமானவர்கள் தாழ்த்தப்படுவதும், பாவிகள் உயர்த்தப்படுவதும் மற்றும் குர்ஆன் அல்லாத மற்ற நூல்கள் பரவிக் காணப்படுவதும் மறுமையின் அடையாளங்களில் உள்ளவையாகும்."[2]

## 57. அல்குர்ஆன் புறக்கணிக்கப்பட்டு, ஏனைய நூல்களுக்கு முக்கியத்துவம் அளித்தல்

மனிதர்கள் அல்குர்ஆனைவிட ஏனைய நூல்களையே அதிகம் விரும்பி வாசிப்பதும், அந்நூல்களே நூலகங்களிலும், கடைகளிலும், அச்சகங்களிலும் முதன்மை வகிப்பதும் மறுமை நாளின் அடையாளங்களில் ஒன்றாகும்.

"...சமூகத்தில் மஸாஅத் பரவுதலும் மறுமை நாளின் அடையாளங்களில் ஒன்றாகும்" என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்

---

1. நூல் : அஹ்மத்
2. அறிவிப்பாளர் : அப்துல்லாஹ் இப்னு அம்ரு ரழியல்லாஹு அன்ஹு, நூல் : தபரானி.

கூறினார்கள். அப்போது, அல்லாஹ்வின் தூதரே! “மஸாஅத்” (المساءة) என்றால் என்ன? எனக் கேட்டேன், அதற்கு நபியவர்கள் “அல்லாஹ்வின் வேதத்தை தவிர்த்து எழுதப்படுகின்ற மற்ற அனைத்தும் மஸாஅத்களாகும்” என பதிலளித்தார்கள்.[1]

## 58. வாசகர்கள் அதிகரித்து அறிஞர்கள் குறைந்து விடுதல்

அறிஞர்கள் குறைந்து வாசகர்கள் அதிகரிப்பது மறுமை நாளின் அடையாளங்களில் ஒன்றென நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

வெறும் ‘‘வாசகர்கள் அதிகரித்து உலமாக்கள் (-அறிஞர்கள்) குறைந்து, அறிவு முடக்கப்பட்டு “ஹர்ஜ்” அதிகரிக்கின்ற ஒருகாலம் வரும்’’ என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் குறிப்பிட்டார்கள். அப்போது அங்கிருந்தவர்கள் ‘‘ஹர்ஜ்’’ என்றால் என்ன? என வினவினார்கள். அதற்கு நபியவர்கள் ‘‘(ஹர்ஜ் என்றால்) உங்களுக்கு மத்தியில் ஏற்படுகின்ற கொலைகளாகும்” எனக் குறிப்பிட்டுவிட்டு, பின்னர் ஒரு காலம் வரும் அக்காலத்தில் சிலர் அல்குர்ஆனை ஓதுவார்கள் எனினும் அது அவர்களது தொண்டைக் குழியைக்கூடத் தாண்டிச் செல்லாது. அதன் பின்னர் இன்னொரு காலம் வரும் அக்காலத்தில் ஒரு முஃமின் பேசுவதைப் போலவே இணைவைக்கக்கூடிய இறை மறுப்பாளரான நயவஞ்சகன் முஃமின்களிடத்தில் வாதம் புரிவார்கள்.’’

குறிப்பாக உலமாக்கள் மரணிக்கின்ற போது நிலமை மோசமடைந்து மார்க்க அறிவற்றவர்களையெல்லாம் மக்கள் மார்க்கத் தலைவர்களாக ஆக்கிக்கொள்வார்கள். அவர்களும் தாம் நினைத்ததையெல்லாம் ஃபத்வா -மார்க்கத் தீர்ப்பாகக் கொடுப்பார்கள். அதன்மூலம் அவர்களும் வழிகெட்டு மற்றவர்களையும் வழிகெடுத்து விடுவார்கள்.

‘அப்துல்லாஹ் இப்னு அம்ர் இப்னுல் ஆஸ் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள், (நாங்கள் இருந்த இடம் வழியாக) எங்களைக் கடந்து ஹஜ் செய்யச் சென்றார்கள். அவ்வேளை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக பின்வருமாறு கூறினார்கள், ‘அல்லாஹ்

1. அறிவிப்பாளர் : அப்துல்லாஹ் இப்னு அம்ரு ரழியல்லாஹு அன்ஹு, நூல் : தபரானி

உங்களுக்குக் கல்வியை வழங்கிய பின் அதை ஒரேயடியாகப் பறித்துக் கொள்ளமாட்டான். மாறாக, கல்விமான்களை அவர்களின் கல்வியுடன் கைப்பற்றிக் கொள்வதன் மூலம் அவர்களிடமிருந்து அதை கொஞ்சம் கொஞ்சமாகப் பறித்துக்கொள்வான். பின்னர், அறிவீனர்களே எஞ்சியிருப்பார்கள். அவர்களிடம் மார்க்கத் தீர்ப்புக் கோரப்படும். அவர்களும் தமது சொந்தக் கருத்துப்படி தீர்ப்பளித்து (மக்களை) வழிகெடுத்து தாமும் வழிகெட்டுப் போவார்கள்."[1]

மேலுள்ள ஹதீஸின் அடிப்படையில், அறிவு உயர்த்தப்படுவது என்பது அறிவைச் சுமந்துள்ளவர்களை மரணிக்கச் செய்வதையே குறிக்கின்றது என்பதைப் புரிந்துகொள்ளலாம். அந்த வகையில் சென்ற பத்தாண்டு களுக்குள் மிகப்பெரும் இஸ்லாமிய அறிஞர்களாகக் கணிக்கப்பட்ட பல உலமாக்கள் மரணித்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

சவூதி அரேபியாவின் மூத்த அறிஞர்கள் அமைப்பின் தலைவர் இமாம் அப்துல் அஸீஸ் பின் பாஸ் ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் 1999ம் ஆண்டில் மரணித்தார்கள்.

ஹதீஸ் கலை மேதை நாஸிருத்தீன் அல்பானி ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் 1999ம் ஆண்டு மரணித்தார்கள்.

பன்முக அறிஞர் முஹம்மத் ஸாலிஹ் அல் உஸைமீன் ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் 2000ம் ஆண்டு மரணித்தார்கள். இவ்வாறு அறிஞர்களாக இருந்த பலரும் மரணித்துச் செல்வதன் மூலம் அறிவு முடக்கப்பட்டுள்ளதைக் காணலாம்.

இன்று சமகால உம்மத்தில் பலர் அழகிய குரலில் ஓதவேண்டும் என்பதிலும், தான் ஒரு ஆலிம் எனப் பெயர் வாங்குவதிலும், ஆக்ரோஷமாகப் பேசி மக்களிடம் (Marks) புள்ளிகள் வாங்குவதிலும் கவனம் செலுத்துகின்றார்களே தவிர அறிவைப் பெற்றுக் கொள்வதில் எந்த அக்கறையும் செலுத்துவதாகத் தெரியவில்லை. இன்று பீரங்கிப் பேச்சாளர்கள் எனப் பெயர்பெற்ற பலரிடம் சுத்தம் பற்றியோ, சஜ்தாவின் சட்டம் பற்றியோ கேள்வி கேட்டால் அவர்களிடம் அறிவார்ந்த எந்த பதிலையும் காணமுடியாது.

1. அறிவிப்பாளர் : உர்வா இப்னு ஸுபைர் ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் நூல் : ஸஹீஹுல் புகாரி 7307.

## 59. ஆழ்ந்த அறிவும், அனுபவமும் இல்லாத இளம் வயதினரிடம் கல்வி கற்றல்

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் காலம்தொட்டு மக்கள், வயதில் மூத்த உலமாக்களிடத்திலும், சட்ட மேதைகளிடத்திலுமே தங்களது அறிவை பெற்றுக் கொண்டனர். எனினும், பிற்காலத்தில் மக்கள் அறிவிலும், வயதிலும் குறைந்த சிறுவர்களை நம்பி அவர்களிடத்தில் தங்களது இஸ்லாமிய அறிவை வளர்த்துக் கொள்ள முனைகின்றனர்.

சற்றுமுன் நாம் பார்த்த நபிமொழியில் கல்வி ஞானமற்ற சிறுவர்களிடத்தில் கல்வி கற்க மக்கள் நாடுவார்கள், சிறுவர்களும் கல்வி அறிவின்றி 'ஃபத்வா' -மார்க்கத் தீர்ப்பு கொடுத்து தாங்களும் வழிகெட்டு மற்றவர்களையும் வழிகெடுப்பார்கள் அந்தளவிற்கு உலமாக்கள் குறைந்து போவார்கள் எனவும், ஆங்காங்கே சொல்லப்பட்டுள்ள கருத்துக்களை காப்பியடித்து அவற்றை அப்படியே மக்களுக்குக் கொடுத்துக் கொண்டிருப்பவர்களே அதிகரிப்பார்கள் எனவும் பார்த்தோம்.

"சிறுவர்கள் அறிஞர்களாக்கப்படுவது மறுமை நாளின் அடையாளங்களில் ஒன்றாகும்."[1]

இங்கே சிறுவர்கள் என்று யாரை குறிப்பிடப்படுகிறது? என இமாம் அப்துல்லாஹ் இப்னு முபாரக் ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்களிடம் கேட்கப்பட்டபோது "எந்தவொரு அடிப்படையோ நுணுக்கமான ஆதாரங்களோ இன்றி, நினைத்ததையெல்லாம் சொல்லக்கூடியவர்கள்" என பதிலளித்தார்கள்.

அஸாகிர் -சிறியவர்கள் (أصاغر) என்பதற்கு "பித்அத் செய்பவர்கள்" எனவும் ஒரு கருத்துக் கூறப்படுகின்றது.

"நபித் தோழர்களிடமிருந்தும் தங்களுடைய மூத்த அறிஞர்களிடம் இருந்தும் கல்வி அறிவைப் பெற்றுக் கொள்ளும் காலமெல்லாம் மனிதர்களுக்கு நலவுதான். சிறியவர்களிடமிருந்து அறிவைப் பெற்றுக்கொள்ளும்போது அவர்கள் அழிந்து போவார்கள்."[2]

---

1. அறிவிப்பாளர் : அபூ உமையா அல்ஜும்ஹி
2. அறிவிப்பாளர் : அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத் ரழியல்லாஹு அன்ஹு

இன்று சமூகத்தில், மூத்த அறிஞர்கள் பலர் காணப்பட்டாலும், மாணவர்களாக இருக்கவேண்டிய இளைஞர்கள் உலமாக்களைப் போன்று பார்க்கப்படுகின்றனர், வலைத் தளங்களில் அவர்களே பிரசித்தி பெற்றுக் காணப்படுவதோடு மக்களும் கல்வி எனும் பெயரில் அவர்களையே நாடிச் செல்கின்றனர், அவர்களையே மாமேதைகளாகவும் எண்ணிக் கொள்கின்றனர்.

மேலே குறிப்பிட்ட விஷயங்களை வைத்து முதுமை என்பது அறிவின் அடைக்கலமாகவும் இளைமை என்பது அறியாமையின் உறைவிடம் எனவும் எண்ணிவிடக் கூடாது. ஏனெனில், “அறிவென்பது வயதை வைத்துக் கணிக்கக்கூடிய ஒன்றல்ல.”[1]

“அறிவென்பது இளம் வயதினருக்கோ அல்லது வயது முதிர்ந்தவர்களுக்கோ உரித்தான தனிச் சொத்தாகக் கருதமுடியாது, மாறாக அல்லாஹ் தான் நாடியவர்களுக்கு அதைக் கொடுக்கின்றான்.”[2]

எனினும் கல்வியைத் தேடுகின்ற விஷயத்தில் மூத்த உலமாக்கள் புறக் கணிக்கப்பட்டு புதிது புதிதாக உருவாகின்ற சிறுவர்கள் உலமாக்களை விட முன்னுரிமைப்படுத்தப்படுவதையே இங்கு குறையாக பார்க்கப்படுகின்றது.

எனவே, தற்போது மக்கள் மத்தியில் ஆலிம்கள் எனப் பிரபல்யமாகி இருக்கின்ற பேச்சாளர்கள் அறிவுத் தேடல்களிலும், ஆய்வு முயற்சிகளிலும் தங்களை ஈடுபடுத்தவேண்டும். மேலும், அறிவிலும் அனுபவத்திலும் விளக்கம் அளிப்பதிலும் சிறந்து விளங்குகின்ற மூத்த ஆலிம்களோடு தொடர்புகளை அதிகப்படுத்த வேண்டும். இதன்மூலம் அவர்கள் தங்களையும் ஆலிம்களாக உருவாக்கிக் கொள்ளலாம்.

## 60. திடீர் மரணங்கள் அதிகரித்தல்

சமகாலத்தில் நாம் கண்கூடாக பார்த்து வருகின்ற மறுமை நாளின் அடையாளங்களில் ஒன்றுதான் திடீர் மாரடைப்பாலும் வாகன மற்றும் விமான விபத்துகளாலும் ஏற்படுகின்ற மரணங்கள்.

“திடீர் மரணங்கள் மறுமை நாளின் அடையாளங்களில் ஒன்றாகும்.”[3]

---

1. -இமாம் அஹ்மத்
2. -உமர் இப்னு ஹத்தாப் ரழியல்லாஹு அன்ஹு
3. அறிவிப்பாளர் : அனஸ் இப்னு மாலிக் ரழியல்லாஹு அன்ஹு, நூல் : தபரானி

சென்ற காலங்களில் ஒருவர் தான் மரணிப்பதற்கு முன்னரே மரணத்திற்கான முன் அடையாளங்களைக் கண்டுகொள்வார். தனக்கு ஏற்படுகின்ற நோயின் மூலம் இது மரணத்திற்கான நோய்தான் என்பதை புரிந்து கொண்டு மரணத்திற்காகத் தயாராகத் தொடங்கி விடுவார், தனது வஸியத்தை (-மரண சாசனத்தை) எழுதுவார், குடும்பத்தாரிடம் விடைபெறும் வார்த்தைகளைக் கூறுவார், தனது பிள்ளைகளுக்கு இறுதி உபதேசங்கள் செய்வார், தவ்பாச் செய்வார், தனது இறுதி முடிவு நல்லதாக அமைய அடிக்கடி ஷஹாதத் (-லாயிலாஹ இல்லல்லாஹ் முஹம்மதுர் ரசூலுல்லாஹ்) கூறுவார்.

ஆனால், இன்று அதற்கு நேர் மாற்றமாக எந்தவித நோயும் இல்லாமல், உடல் ஆரோக்கியமாக இருக்கின்ற பலர் திடீர் திடீரென மாரடைப்புகளாலும், விபத்துகளாலும் நொடிப்பொழுதில் மரணமடைந்து போவதைக் கண்கூடாகக் கண்டு கொண்டிருக்கின்றோம். எனவேதான், எப்போதும் மரணத்தை சந்திக்கத் தயாராக இருப்பவனே உண்மையான புத்திசாலியாவான்.

***ஓய்வு நேரங்களில் தொழுது நன்மையை கொள்ளைகொள்!***
***உன் மரணம் ஒருநாள் திடீரென வந்துவிடும்!***
***நோயின்றி ஆரோக்கியத்துடன் வாழ்ந்த பலரை நான் பார்த்திருக்கிறேன்.***
***அவர்களின் ஆரோக்கியமான உயிர் திடீரென போய்விட்டன.***

## 61. முட்டாள்கள் ஆட்சி, அதிகாரங்களில் அமர்தல்

ஒரு சமூகத்தின் எழுச்சி அச்சமூகத்தின் தலைமையை மையப்படுத்தியே அமைந்திருக்கும். தலைவர் சிறந்தவராக இருக்கும்போது அச்சமூகமும் சிறப்புறும். தலைமை தவறிப்போகும்போது அச்சமூகமும் குழப்பத்திலேயே மூழ்கியிருக்கும்.

அதனாலேயே அல்குர்ஆனுக்கும் ஹதீஸுக்கும் கட்டுப்படாத, உபசேதங்களைக் கண்டுகொள்ளாத முட்டாள்கள் தலைவர்களாக அமர்த்தப்படுவது மறுமை நாளின் அடையாளங்களில் ஒன்றென நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

“நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கஃஅப் இப்னு

உஜ்ரா எனும் நபித்தோழருக்கு கஃஅபே! (தகுதியற்ற) முட்டாள்களின் ஆட்சியிலிருந்து அல்லாஹ் உன்னைப் பாதுகாப்பானாக!" எனக் கூறினார்கள். அப்போது கஅப் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் "அல்லாஹ்வின் தூதரே! முட்டாள்கள் ஆட்சியமைத்தல் என்றால் என்ன?! எனக் கேட்டார்கள். அதற்கு நபியவர்கள் "எனக்குப் பின்னால் சில தலைவர்கள் தோன்றுவார்கள் அவர்கள் என்னை முன்மாதிரியாக எடுக்கவும் மாட்டார்கள். எனது வழிமுறையைப் பின்பற்றவும் மாட்டார்கள். அப்போது யார் அவர்களது பொய்களை நம்பி அவர்களின் அநியாயத்திற்கு துணைபோகின்றார்களோ அவர்கள் என்னைச் சேர்ந்தவர்களுமல்ல; நான் அவர்களைச் சேர்ந்தவனுமல்ல. அவர்கள் எனது 'ஹவ்ழி'ற்கு[1] வரவும் மாட்டார்கள்.

யார் அவர்களது பொய்களை உண்மைப்படுத்தாது அவர்களது அநியாயங்களுக்கு துணை போகவில்லையோ அவர்கள் என்னைச் சேர்ந்தவர்களாவார்கள், நானும் அவர்களைச் சேர்ந்தவனாவேன். அவர்களே மறுமையில் எனது ஹவ்ழிற்கு வருகை தருவார்கள்.

கஃஅப் இப்னு உஜ்ராவே! நோன்பு ஒரு கேடயமாகும், ஸதகா பாவங்களைக் அழித்துவிடக் கூடியது, தொழுகை ஓர் அத்தாட்சியாகும்.

கஃஅப் இப்னு உஜ்ராவே! ஹராம் ஆகுமாகாத செல்வத்தில் வளர்ந்த உடல் அறவே சொர்க்கம் நுழையாது. நரகம்தான் அதற்கு பொருத்தமான இடமாகும்.

கஃஅப் இப்னு உஜ்ராவே! இரு வகை மனிதர்கள் இருக்கின்றார்கள். சிலர் தங்களை நரகத்திலிருந்து விடுவித்துக் கொள்கிறார்கள். சிலர் தங்களை நரகத்தில் தள்ளி அழித்துக் கொள்கிறார்கள்."[2]

"ஒவ்வொரு சமூகத்திற்கும் அதிலுள்ள முனாஃபிக்குகள் (-நயவஞ்சகர்கள்) தலைமை தாங்கும் வரை மறுமை நாள் ஏற்படாது."[3]

இங்கே முனாஃபிக்குகள் எனக் குறிப்பிடப்படுபவர்கள், ஈமான்

---

1. ஹவ்ழ்: மறுமை நாளில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு வழங்கப்படுகின்ற நீர்த் தடாகமாகும். சொர்க்கவாசிகள் இதிலிருந்து நீர் பருகிவிட்டு சொர்க்கம் செல்வார்கள். இதற்கு அல் கவ்ஸர் என்றும் பெயர் கூறப்படுகிறது.
2. நூல் : அஹ்மத்
3. இது ஆதாரப்பூர்வமான நபிமொழியா என்பதில் சர்ச்சை உள்ளது. நூல் : தபரானி

-இறைநம்பிக்கையில் குறைவான, அல்லாஹ்வின் பயமற்ற, அதிகம் பொய் பேசக்கூடிய, அறியாமை மிகைத்தவர்கள் ஆவார்கள்.

முட்டாள்களின் தலைமைத்துவம் நீடித்துச் செல்லும்போது நிலைமைகள் தலைகீழாக மாறிவிடும். நல்லவர்கள் கெட்டவர்களாகவும், கெட்டவர்கள் நல்லவர்களாகவும் பார்க்கப்படுவார்கள். ஏமாற்றுப் பேர்வழிகள் நம்பிக்கைக் குரியவர்களாகவும், நம்பிக்கைக்குரியவர்கள் ஏமாற்றுபவர்களாகவும் பார்க்கப்படுவார்கள். அறிவு ஜீவிகள் அமைதி அடைந்து, முட்டாள்கள் சமூகத்தின் அனைத்துச் செயல்பாடுகளையும் முன்னெடுத்துச் செல்லக்கூடியவர்களாக மாறிவிடுவார்கள்.

“அறிவு அறியாமையாகவும், அறியாமை அறிவாகவும் பார்க்கப்படும் வரை மறுமை நாள் ஏற்படாது”[1]

இவையனைத்தும் மறுமைநாள் ஏற்படுவதற்கு முன்னர் நடைபெற இருக்கின்ற தலைகீழான சில செயல்பாடுகளாகும்.

“(சமூகத்தில் உள்ள) நல்லவர்கள் புறக்கணிக்கப்பட்டு மோசடிக்காரர்கள் முக்கியஸ்தர்களாக மாறுவது மறுமை நாளின் அடையாளங்களில் ஒன்றாகும்.”[2]

## 62. காலம் (சுருங்கி) நெருக்கமாகுதல்

காலம் சுருங்குதல் அல்லது நெருக்கமாகுதல் என்பது மறுமை நாளின் அடையாளங்களில் ஒன்றென நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

மறுமை நாளின் அடையாளங்கள் பற்றி கூறுகின்றபோது “காலம் சுருங்கும், அறிவு குறைவடையும், குழப்பங்கள் அதிகரித்து, கஞ் சத்தனம் குடிகொண்டு, ஹர்ஜ் அதிகரிக்கும்” என்றார்கள். அப்போது அல்லாஹ்வின் தூதரே ஹர்ஜ் என்றால் என்ன எனக் கேட்கப்பட்டது. அதற்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் “கொலை, கொலை” என பதிலளித்தார்கள்.[3]

---

1. -அஷ்ஷஅபி ரஹ்மதுல்லாஹி அலைஹி
2. அறிவிப்பாளர் : இப்னு உமர் ரழியல்லாஹு அன்ஹு, நூல் : ஹாகிம்
3. அறிவிப்பாளர் : அபூஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு, நூல் : ஸஹீஹுல் புகாரி, ஸஹீஹ் முஸ்லிம்

"காலம் சுருங்கும்" என்பதற்கு உலமாக்கள் பல கருத்துக்களைக் குறிப் பிட்டுள்ளார்கள்.

1. காலம் சுருங்குதல் என்பது நேரத்தில் அபிவிருத்தி (பரக்கத்) இல்லாமல் போகின்ற ஒரு நிலையாகும்.

நமது முன்னோர்கள் ஒரு மணி நேரத்தில் செய்து முடித்த அதே வேலைகளை இன்று பல நேரங்களில் கூட செய்து முடிப்பது முடியாத காரியமாக இருப்பதைப் பார்க்கலாம்.

"சமகாலத்தில் இந்நிலையை நன்கு உணர முடிகின்றது. முன்னர் இல்லாதவாறு தற்போது நாட்கள் வேகமாகச் சென்று கொண்டிருக்கின்றன."[1]

2. தொலைதொடர்பு சாதனங்கள், தரை மற்றும் வான்வழியான போக்குவரத்து வசதிகள் என்பவற்றால் மனிதர்களுக்கு மத்தியில் ஏற்பட்டிருக்கின்ற நெருக்கமே காலம் சுருங்குதுல் என்பதன் பொருளாகும்.

இன்று தூரம் என்பது ஒரு பொருட்டே இல்லாமல் அனைத்துமே நெருக்கமாக மாறியிருப்பதைப் பார்க்கலாம்.

3. அல்லாஹ் அனைத்திற்கும் சக்தி பெற்றவன், காலத்தை சுருக்கவும், நீட்டவும், இரவு பகலை மாற்றியமைக்கவும் சக்தி பெற்றவன் என்பதால், மேலே சொல்லப்பட்ட காலம் சுருங்குதல் என்பது மறுமைநாள் வரும்போது ஏற்படுகின்ற நிதர்சனமான விஞ்ஞான ரீதியான காலத்தின் வேகமான ஓட்டத்தையே குறிக்கின்றது.

தஜ்ஜால் வரும்போது ஒருநாள் ஒருவாரமாக, ஒரு மாதம் ஒரு வருடமாக இருக்கும் என்ற செய்தியும் இக்கருத்தை இன்னும் உறுதி செய்கின்றது.

"ஒருவருடம் ஒரு மாதம் போன்றும், ஒரு மாதம் ஒரு வாரம் போன்றும், ஒரு வாரம் ஒரு நாள் போன்றும், ஒரு நாள் ஒரு மணி நேரம் போன்றும், ஒரு மணி நேரம் மின்னி மறைகின்ற ஓர் ஒளிக் கீற்றைப் போன்றும் ஆகும் வரை மறுமை நாள் ஏற்படாது.[2]

---

1. - இமாம் இப்னு ஹஜர் ரஹ்மதுல்லாஹி அலைஹி
2. அறிவிப்பாளர் : அபூஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு, நூல் : அஹ்மத்

மேலே உள்ள ஹதீஸ்கள் மூலம் மறுமை நாள் நெருங்கும்போது காலம் நெருப்புக் கீற்றைப்போன்று மிக வேகமாகச் செல்லும் என்பதைப் புரிய முடிகின்றது.

4. காலம் சுருங்குதல் என்பது ஆயுள் குறைவதையே குறிக்கின்றது என்ற கருத்தும் உலமாக்களால் முன்வைக்கப்படுகின்றது.

## 63. “ருவைபிழா” (மடையர்கள்) முன்னின்று பேசுதல்

ஒரு சமூகத்திற்காக முன்னின்று பேசுபவர் அறிஞராக, கல்விமானாக, தெளிவாக பேசுபவராக இருக்கவேண்டும். எனினும், மறுமை நாள் நெருங்கும்போது இந்நிலை மாறி அற்பர்களும், மடையர்களும் வீணர்களும். சமூகத்தின் சார்பாக பேசுவார்கள்.

“ஏமாற்றுகள் நிறைந்த ஒரு காலம் வரும் அப்போது பொய்யர்கள் உண்மையாளர்களாகவும், உண்மையாளர்கள் பொய்யர்களாகவும், ஏமாற்றுக்காரர்கள் நம்பிக்கையாளர்களாகவும், நம்பத்தகுந்தவர்கள் ஏமாற்றுக்காரர்களாகவும் பார்க்கப்படுவார்கள். அப்போது “ருவைபிழா” (-மடையர்கள்) பேசத் தொடங்கி விடுவார்கள்” என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் குறிப்பிட்டார்கள். அப்போது (அல்லாஹ்வின் தூதரே) “ருவைபிழா” (**رويبضة**) என்றால் யார்? எனக் கேட்கப்பட்டது. அதற்கு நபியவர்கள் “மடையர்கள் பொதுமக்களின் காரியம் பற்றி பேசுதல்” என பதிலளித்தார்கள்.[1]

சமுதாய அந்தஸ்தற்ற அற்பர்கள் மதிப்பிற்குரியவர்களாக ஆக்கப்பட்டு, சமூகப் பொறுப்புகள் அவர்களிடம் ஒப்படைக்கப்படுவது மறுமை நாளின் அடையாளமாகும். இன்று இந்நிலை பரவலாகக் இருப்பதைக் காணமுடிகிறது.

எனவே, அறிவு ஜீவிகளும், சமுதாய அக்கறை உள்ளவர்களுமே அரசியலிலும், சமுதாயம் சார்ந்த விஷயங்களிலும் முற்படுத்தப்பட வேண்டும். எனினும், தற்போது மக்கள் மார்க்க விஷயம் என்றுகூட பார்க்காமல் தங்களது சுயநலத்தையும், அபிலாசைகளையும் நிறைவேற்றிக் கொள்ளும் பொருட்டு அற்பர்களாக இருந்தாலும்

1. அறிவிப்பாளர் : அபூஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு, நூல் : தபரானி

தாங்கள் நினைப்பவர்களையே தலைவர்களாக்கிக் கொள்வதைக் காணலாம்.

## 64. சமூகத்தின் அடிமட்டத்தில் இருந்தவர்கள் மிகப்பெரும் செல்வந்தர்களாகுதல்

பொய்யர்கள் உண்மையாளர்களாகவும், உண்மையாளர்கள் பொய்யர்களாகவும், ஏமாற்றுக்காரர்கள் நம்பிக்கைக்குரியவர்களாகவும், நம்பத்தகுந்தவர்கள் ஏமாற்றுக்காரர்களாகவும் பார்க்கப்படுதல், தகுதியற்ற கயவர்களிடத்தில் சமூகப் பொறுப்புகள் ஒப்படைக்கப்படுதல் என்பன மறுமை நாளின் அடையாளங்களாகும்.

“நற்குணமும் நல்லறிவும் இல்லாதவர்கள் இவ்வுலகத்தின் பெரும் பாக்கியசாலிகளாக (செல்வ செழிப்பில் வாழ்பவர்களாக) ஆகாதவரை இரவு பகல் அழிந்து (மறுமை உண்டாகி) விடாது.[1]

“நற்குணமும் நல்லறிவும் இல்லாதவர்கள் விரைவில் உலகத்தின் மீது ஆதிக்கம் செலுத்துவார்கள்.”[2]

“நற்குணமும் நல்லறிவும் இல்லாதவர்களிடம் இவ்வுலக(செல்வமும் ஆட்சி அதிகாரமு)ம் செல்கின்றவரை அது அழிந்து போகாது.”[3]

## 65. பள்ளிவாசல்கள் பாதைகளாக பயன்படுத்தப்படுதல்

பள்ளிவாசல்கள் நடைபாதைகளாக ஆக்கப்படுதல் என்பது பள்ளி வாசல்களை தாண்டிச் செல்லவேண்டிய தேவை உள்ளவர்கள் பள்ளி வாசலுக்குள் நுழைந்து செல்வதையும் அதன்மூலம் பள்ளிவாசலில் தொழுகையாளிகளை விட அதன் வழியாக குறுக்கே செல்பவர்களே அதிகமானவர்களாக இருப்பதைக் குறிக்கின்றது. (அந்தளவு பள்ளிவாசல்கள் விசாலமானதாகக் காணப்படும்)

“....பள்ளிவாசல்கள் பாதைகளாக உபயோகிக்கப்படுவதும், தெரிந்தவர்களுக்கு மட்டும் ஸலாம் சொல்லுவதும், ஆண்களும்

---

1. அறிவிப்பாளர் : அனஸ் ரழியல்லாஹு அன்ஹு, நூல் : தபரானி
2. இந்த ஹதீஸின் அறிவிப்பாளர் தொடர் ஸஹாபியுடன் முடிவடைந்ததாகும். நூல் : அஹ்மத்
3. நூல் : அஹ்மத்

பெண்களும் சேர்ந்து ஒன்றாக வியாபாரம் செய்வதும், பெண்கள் மற்றும் குதிரைகளின் மதிப்பு அதிகரித்துப் பின்னர் மீண்டும் எழாதவாறு மதிப்பு குறைவடைவதும் மறுமை நாளின் அடையாளங்களாகும்."[1]

## 66. மஹர்[2] உடைய மதிப்பு அதிகரித்து பின்னர் குறைந்து விடுதல் 67. குதிரைகளின் மதிப்பு அதிகரித்து பின்னர் குறைந்துவிடுதல்

"நாங்கள் அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத் ரழியல்லாஹு அன்ஹு அவர்களோடு அவர்களது வீட்டிலிருந்து (பள்ளிவாசலுக்குச்) சென்றோம், அப்போது, இமாம் ருகூவில் இருந்தார். நாங்களும் அவர்களோடு ருகூவில் சேர்ந்து கொண்டு ஸஃப்ஃபை முழுமைப்படுத்தினோம். (நாங்கள் தொழுது முடித்தப் பின்னர்) அவ்வழியாக (பள்ளியைத் தாண்டி) சென்ற ஒருவர் "அப்துர் ரஹ்மானின் தந்தையே! அஸ்ஸலாமு அலைக்கும் என்றார்" அதற்கு அவர்கள் "அல்லாஹு அக்பர்! அல்லாஹ்வும் அவனது தூதரும் உண்மை உரைத்து விட்டனர்" என்றார்கள். தொழுகை முடிந்ததும் அப்துர் ரஹ்மானின் தந்தையே! அந்த மனிதரது ஸலாம் உங்களை ஆச்சரியப்படுத்தி விட்டதா? எனக் கேட்டோம். அதற்கவர்கள் ஆம், பள்ளிவாசல்கள் பாதைகள் போன்று உபயோகிக்கப்படுவதும் தெரிந்தவர்களுக்கு மட்டும் ஸலாம் சொல்வதும், ஆண்களும் பெண்களும் சேர்ந்து ஒன்றாக வியாபாரம் செய்வதும், பெண்களின், குதிரைகளின் மதிப்பு அதிகரித்துப் பின்னர் மீண்டும் எழாதவாறு மதிப்பு குறைவதும் மறுமை நாளின் அடையாளங்கள் எனக் கூறப்பட்டுள்ளது" என்றார்கள்.[3]

## 68. கடைத் தெருக்கள் நெருக்கமாகக் காணப்படுதல்

இன்று காணப்படுகின்ற நவீன தொலைத்தொடர்பு வசதிகளாலும், வாகனங்கள், விமானங்கள் என போக்குவரத்தில் ஏற்பட்டிருக்கின்ற

1. இந்த ஹதீஸ் அறிவிப்பாளர் வரிசையில் எனக்குத் தெரியாதவர்களும் இருக்கிறார்கள் என இமாம் ஹைதமி ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் குறிப்பிடுகின்றார். நூல் : ஹாகிம், தபரானி.
2. திருமணத்தின்போது மனைவிக்கு கணவன் கட்டாயமாக கொடுக்கவேண்டிய அன்பளிப்பிற்கு மஹர் என்று சொல்லப்படும்.
3. இந்த ஹதீஸ் அறிவிப்பாளர் வரிசையில் எனக்குத் தெரியாதவர்களும் இருக்கிறார்கள் என இமாம் ஹைதமி ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் குறிப்பிடுகின்றார். நூல் : ஹாகிம், தபரானி.

முன்னேற்றங்களாலும், மக்கள் தாங்கள் போக வேண்டிய இடங்களுக்கு நொடிப் பொழுதில் சென்றடைவதையும், பல நாட்கள் பயணித்துச் சென்று வாங்கவேண்டிய பொருட்களையும், அவற்றின் விலைகளையும் நொடிப் பொழுதுகளிலேயே பெற்றுக் கொள்வதையும் காணலாம்.

“குழப்பங்களும் பொய்களும் அதிகரித்து கடைகள் நெருக்கமாகும் வரை மறுமை நாள் ஏற்படாது.”[1]

கடைகள் நெருக்கமாகுதல் என்பதை மூன்று வகையாக கருதலாம்

1. பொருள்களின் விலை உயர்வு மற்றும் குறைவு பற்றிய தகவல்களை வேகமாக அறிந்துகொள்வது.
2. கடைத் தெருக்கள், வியாபார நிலையங்கள் எவ்வளவு தூரமாக இருந்தாலும் மிகக்குறுகிய நேரத்தில் ஓர் இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு துரிதமாக சென்றுவிடுவது.
3. உலகின் எந்த பாகத்திற்குச் சென்றாலும் பொருட்களின் விலைகளில் பெரிய வித்தியாசம் எதுவுமின்றி, (கிட்டத்தட்ட) ஒரே மாதிரியான விலை காணப்படுவது.

மேலே நாம் குறிப்பிட்ட “கடைத் தெருவுகள் நெருக்கமாகுதல்” பற்றிய ஹதீஸுக்கு அப்துல் அஸீஸ் இப்னு பாஸ் ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் விளக்கம் அளிக்கும்போது கூறினார்கள் “விமானங்கள், வாகனங்கள், தொலைத் தொடர்பு சாதனங்கள் போன்றவற்றால் இன்று நகரங்களும், நாடுகளும், கண்டங்களும் (குறுகிய பயணத்தில்) நெருக்கமாகக் காணப்படுவதும், அந்நகரங்களுக்கு இடையிலான பயண நேரம் மிகக் குறைவானதாக காணப்படுவதையும் குறிக்கிறது. அல்லாஹ்வே மிக அறிந்தவன்.”

## 69. முஸ்லிம் சமுதாயத்திற்கு எதிராக மற்ற சமுதாய மக்கள் ஒன்றிணைதல்

ஏனைய மக்கள் ஒன்றிணைந்து முஸ்லிம் சமுதாயத்திற்கெதிராக கிளர்ந்தெழுவது மறுமை நாளின் மிக நெருக்கமான அடையாளங்களில் ஒன்றாகும்.

---

1. அறிவிப்பாளர் : அபூஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு, நூல் : ஸஹீஹுல் புகாரி

வரலாற்றைப் புரட்டிப் பார்க்கின்ற எவரும் முஸ்லிம் சமுதாயம் பல உக்கிரமான போர்களையும் பிரச்சினைகளையும் எதிர் கொண்டிருக்கின்றது என்பதையும், அல்லாஹ் எப்போதும் முஸ்லிம்களைப் பாதுகாக்கிறான் என்பதையும் அறிந்துகொள்வர்.

சிலுவை யுத்தங்களின் போது கிறிஸ்தவர்கள் ஒன்றிணைந்து செயல்பட்ட போதும், தாத்தாரியர்கள் முஸ்லிம் சமுதாயத்தை கருவறுக்க முனைந்தபோதும் அல்லாஹ் அவர்களது சூழ்ச்சிகளை முறியடித்து முஸ்லிம்களுக்கு வெற்றியைக் கொடுத்தான். இன்று கிறிஸ்தவர்களும் யூதர்களும் ஒன்றிணைந்து முஸ்லிம்களுக்கு எதிராகச் செயல்படுகின்றனர்.

"உணவுத் தட்டை நோக்கி மிருகங்கள் ஒன்றுபட்டு கூட்டமாக வருவதைப் போன்று ஏனைய சமூகங்கள் அனைத்தும் ஒன்று சேர்ந்து உங்களுக்கு எதிராக (உங்களை சாப்பிடுவதற்காக) அழைப்பு விடுப்பார்கள்" என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியபோது, அங்கிருந்த ஸஹாபாக்களில் ஒருவர் நாங்கள் அப்போது எண்ணிக்கையில் குறைந்தவர்களாக இருப்பதால் தான் அப்படி நடக்குமா? எனக் கேட்டார். அதற்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் "இல்லை நீங்கள் அப்போது எண்ணிக்கையில் அதிகமானவர்களாக இருப்பீர்கள், எனினும் வெள்ளத்தில் அடித்துச் செல்லும் சருகுகளைப்போன்று இருப்பீர்கள். உங்களது எதிரிகளின் உள்ளங்களிலிருந்து உங்களைப் பற்றிய பயத்தை அல்லாஹ் எடுத்துவிட்டு உங்களது உள்ளங்களில் "வஹ்னை" ஏற்படுத்துவான்" என்றார்கள். அப்போது "வஹ்ன்" என்றால் என்ன? எனக் கேட்கப்பட்டது. அதற்கு நபியவர்கள் "வஹ்ன்" என்றால் உலக ஆசையும் மரணத்தை வெறுப்பதுமாகும் என பதிலளித்தார்கள்.[1]

இன்று முஸ்லிம் சமுதாயம் எண்ணிக்கையில் 180 கோடியை விட அதிகமாக இருந்தாலும், வஹ்ன் என்ற இந்நோயின் காரணமாக வெள்ளத்தில் அடிபட்டு, மிதந்து செல்கின்ற நுரைகள் மற்றும் சருகுகளைப் போன்று வீரியமற்ற சமூகமாக மாறியிருப்பதையும், எதிரிகளின் உள்ளங்களில் இருந்து முஸ்லிம்களைப் பற்றிய அச்ச

---

1. அறிவிப்பாளர் : தவ்பான் ரழியல்லாஹு அன்ஹு, நூல் : அபூதாவூத், அஹ்மத்

உணர்வு எடுபட்டு, அவர்களை எப்படியும் குனியவைத்துக் குட்டி விடலாம் என்ற எண்ணம் மேலோங்கி இருப்பதையும் காணலாம். இதனால், உணவுத்தட்டை நோக்கி வருகின்ற மிருகங்களைப் போன்று ஏனைய சமுதாயங்கள் அனைத்தும் ஒன்றுசேர்ந்து முஸ்லிம்களுக்கு எதிராக செயல்படுவதையும் பார்க்க முடிகின்றது. இந்நிலை மறுமை நாளின் அடையாளங்களில் ஒன்றாக இருக்கின்ற அதேவேளை, நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் மேற்படி முன்னறிவிப்பு அப்படியே இடம்பெறுவதால் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அல்லாஹ்வின் தூதர் என்பதையும் உறுதிப்படுத்துகின்றது.

## 70. 'இமாமத்' -தொழுகை நடத்துவதற்கு மக்கள் தயங்குதல்

மறுமை நாள் நெருங்கும்போது அறியாமை அதிகரித்துக் காணப்படும். அந்த வகையில் தொழுகை அதன் சட்டங்கள் பற்றிய அறிவின்மையாலும் குர்ஆனை சிறந்த முறையில் ஓதத் தெரியாத காரணத்தாலும் மக்கள் தொழுகை நடத்துவதற்கு முன்வர மாட்டார்கள். இந்நிலை மறுமை நாளின் அடையாளங்களில் ஒன்றாகும்.

"பள்ளிவாசலில் தொழுகை நடத்துவதற்காக இமாம் இல்லாமல் மக்கள் தடுமாறுவார்கள். பள்ளியில் இருக்கின்றவர்களும் (தொழ வைப்பதற்காக அழைக்கப்படும் போது அடுத்தவரையே தள்ளி விடுவார்கள்) இந்நிலை மறுமை நாளின் அடையாளங்களில் ஒன்றாகும்.[1]

"ஒரு காலம் வரும் அப்போது மக்கள் பள்ளிவாசல்களில் தொழுவார்கள். ஆனால், எவரும் முஃமினாக இருக்கமாட்டார்கள்."[2]

ஆங்காங்கே பள்ளிவாசல்களில் பயான் நிகழ்வுகளும், ஹதீஸ் வகுப்புகளும், குர்ஆன் வகுப்புகளும் நடப்பதால் மேற்படி ஹதீஸில் குறிப்பிடப்பட்ட நிலை இதுவரை ஏற்படவில்லை எனலாம்.

அல்ஹம்துலில்லாஹ்!

1, இந்த ஹதீஸின் அறிவிப்பாளர் வரிசையில் சில கருத்து வேறுபாடுகள் உண்டு. அறிவிப்பாளர்: ஸலாமா பின்த் அழ்ஹர் ரழியல்லாஹு அன்ஹு, ஆதாரம் : அபூதாவூத்

2. அறிவிப்பாளர் : அப்துல்லாஹ் இப்னு அம்ர் ரழியல்லாஹு அன்ஹு, நூல் : ஹாகிம்.

## 71. முஃமின்களின் கனவுகள் பலித்தல்

கனவுகள் என்பது காலைப் பொழுதைப் போன்ற தெளிவான கனவுகள். பொய் கனவுகள், தெளிவற்ற குழப்பமான கனவுகள், மனப்பதிவுகள் என பல வகைப்படும். அதன் சட்டங்கள், கருத்துகள் கூட பல வகையாக பார்க்கப்படுகின்றன. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சில கனவுகளை மறுமை நாளின் அடையாளங்களோடு தொடர்புபடுத்திக் கூறியுள்ளார்கள்.

நல்ல கனவுகள் என்பவை நுபுவ்வத் -நபித்துவத்தின் 46 பகுதிகளில் ஒன்றாகும். ‘‘எனக்குப் பின்னால் நபித்துவத்தில் ‘முபஷ்ஷிராத்துகளைத்’ தவிர வேறெதுவும் இருக்காது’’ என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். அப்போது அங்கிருந்த ஸஹாபாக்கள் அல்லாஹ்வின் தூதரே ‘முபஷ்ஷிராத்துக்கள்’ என்றால் என்ன? எனக் கேட்டார்கள். அதற்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் “மனிதர்கள் காண்கின்ற அல்லது அவர்களுக்குக் காட்டப்படுகின்ற நல்ல கனவுகளாகும்’’ என்றார்கள்.[1]

கனவுகள் பலிப்பதும் அவை முஃமின்களுக்கு நன்மாராயமாக அமைவதும் மறுமை நாள் நெருங்கி விட்டது, உலகம் அழியப்போகிறது என்பதற்கு அடையாளங்களாகும்.

இன்று கனவுகள் அதிகம் உண்மைப்படுத்தப்படுவதையும் ஆச்சரியமான முறையில் சமகால நிகழ்வுகளோடு ஒன்றிப்போவதையும் காணமுடிகின்றது.

‘‘மறுமை நாள் நெருங்கும்போது முஸ்லிமுடைய கனவுகள் பொய்யாகாது. நீங்கள் உண்மை பேசும் அளவிற்கு உங்களது கனவுகளும் உண்மையாக நிகழும். ஒரு முஸ்லிமின் கனவு நபித்துவத்தின் 54 பகுதிகளில் ஒன்றாகும்.

மேலும் கனவுகள் மூன்று வகைப்படும்.

1. நல்ல கனவுகள், இவை அல்லாஹ்விடமிருந்து வரும் நன்மாராயங்களாகும்.

---

1. அறிவிப்பாளர் : ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹு, நூல் : அஹ்மத்

2. சில கனவுகள் ஷைத்தான் நம்மைக் கவலையடைய வைப்பதற்காக பயன்படுத்தும் கனவுகளாகும்.

3. சில கனவுகள் மனப் பதிவுகளாகும்.

எனவே, உங்களில் யாரேனும் ஒருவர் வெறுக்கத்தக்க கனவுகளைக் கண்டால் எழுந்து (இடது புறமாக உமிழ் நீர் வராமல்) துப்பிவிடட்டும். இன்னும் (அந்தக் கனவை) யாரிடமும் சொல்லாமலும் இருக்கட்டும். கனவில் கால்கள் கட்டப்பட்டிருப்பதை நான் விரும்புகின்றேன். ஏனெனில் கட்டப்படுவது மார்க்கத்தில் நிலையாக இருப்பதைக் காட்டுகின்றது. அதேநேரம் கழுத்து கட்டப்படுவதை வெறுக்கின்றேன்'' என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.[1]

அறிஞர் இப்னு ஹஜர் கூறுகிறார்கள்: "இறுதி காலத்தில் இறை விசுவாசியின் கனவு பெரும்பாலும் பலிக்காமல் போய்விடாது'' என்பதன் கருத்து: அக்கனவுகள் தெளிவானதாக இருக்கும். எளிதில் புரிந்து கொள்ளக்கூடிய வகையில் இருக்கும். விளக்கம் தேடித்திரியவேண்டிய அளவுக்கு மூடலாக இருக்காது. அக்கனவுகள் எப்படி பார்க்கப்பட்டனவோ அப்படியே நிகழ்ந்து விடும். அதனால் அவற்றில் பொய்யைக் கலக்க வேண்டிய அவசியம் இருக்காது. அதேநேரம், ஏனைய கனவுகள் தெளிவற்றதாகவும். விளக்கம் சொல்வது கடினமானதாகவும் காணப்படும். அப்படியே விளக்கம் சொல்லப்பட்டாலும் அதன்படி அது நடக்காமல் போய்விடும். ஆகவே, அந்த கனவுகள் உண்மையற்ற பொய் கனவுகளாக ஆகிவிடும்.

''இஸ்லாம் அந்நியமாக தோன்றியது, மீண்டும் அந்நிலைக்கே சென்று விடும்'' எனும் நபிமொழிக்கேற்ப மறுமைநாள் வரும்போது முஃமின்கள் ஆச்சரியமாகப் பார்க்கப்படுவார்கள். அவர்களுக்கு நண்பர்களோ, உதவி செய்யக்கூடியவர்களோ இருக்க மாட்டார்கள். அவ்வேளையில் அல்லாஹ் நல்ல கனவுகள் மூலம் அவர்களை உண்மையின் பக்கம் உறுதிப்படுத்தி அதை அவர்களுக்கு நன்மாராயமாகவும் ஆக்கிவிடுகின்றான். அதனால் இறுதிக் காலங்களில் முஃமின்களின் கனவுகள் பொய்ப்பிக்கப்பட முடியாதளவிற்கு நடந்து கொண்டிருக்கும்.[2]

---

1. நூல் : அஹ்மத், ஸஹீஹ் முஸ்லிம்
2. பார்க்க : ஃபத்ஹுல் பாரி (19/451), இமாம் இப்னு ஹஜர் ரஹ்மதுல்லாஹி அலைஹி

முஃமின்களின் கனவு பலிக்கின்ற காலம் எது என்பதில் இரண்டு விதமான கருத்துக்கள் கூறப்படுகின்றன.

1. மறுமை நாள் நெருங்கும்போது குழப்பங்கள், கொலைகள் அதிகரித்து, அறிவு உயர்த்தப்பட்டு, இஸ்லாமிய ஷரீஅத் சட்டங்கள் பின்பற்றப்படாமல் ஆகி ஒருவர் முஃமினாக இருப்பதே ஆச்சரியமாகப் பார்க்கப்படுகின்ற காலம் வரும். அக்காலத்திலேயே உண்மைகளையும் நன்மைகளையும் அல்லாஹ் நல்ல கனவுகளின் மூலம் முஃமின்களுக்கு அடையாளப்படுத்திக் காட்டுவான்.[1]

2. ஸஹாபாக்களின் முழுமையான மரணத்திற்குப் பின்னால் இச்சமூகத்தில் தோன்றுகின்ற மிகச் சிறந்த காலம் ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்களது காலமாகும். எனவே, அவர்களது காலத்தில் அவர்கள் காணும் கனவுகளே பொய்ப்பிக்க முடியாதளவிற்கு உண்மையானதாக இருக்கும்.

## 72. பொய் அதிகரித்தல்

பொய் பேசுவது மிக விபரீதமான ஒரு செயல்பாடாகும். சிலர் அதிகமாகப் பொய் சொல்வதன் மூலம் அல்லாஹ்விடம் பொய்யன் என்றே எழுதப்பட்டு விடுகின்றனர்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தனது குடும்பத்தில் எவரிடத்திலாவது ஒரு பொய்யைக் கண்டால் அவர் அதற்காக உடனே தவ்பா செய்துவிடும் அளவிற்கு அதை கண்டிப்பார்கள்.

பொய் என்பது மோசமான பல தீய விளைவுகளை ஏற்படுத்தக்கூடியது என்றிருந்தும் மறுமை நாள் நெருங்கும்போது பொய் பெருமளவு பரவிக் காணப்படும், தான் பொய் சொல்கின்றேன் என்ற எந்த கூச்சமுமின்றி மனிதர்கள் பொய் சொல்வார்கள். தான் சொல்வது உண்மைதானா என்பதை சற்றேனும் சரிபார்க்க மாட்டார்கள்.

“இறுதி காலத்தில் நீங்களோ உங்களது முன்னோர்களோ கேட்டிராத பொய்களைச் சொல்லக்கூடிய பல பெரிய பொய்யர்கள் தோன்றுவார்கள். நான் உங்களையும் அவர்களையும் எச்சரிக்கிறேன். அவர்கள்

1. பார்க்க : பத்ஹுல் பாரி (19/451), இப்னு ஹஜர் ரஹ்மதுல்லாஹி அலைஹி

உங்களை வழிகெடுத்து விடவேண்டாம்; உங்களை குழப்பத்தில் தள்ளிவிட வேண்டாம்.'' என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.[1]

இன்று பரவலாகக் காணப்படுகின்ற வதந்திகள், செய்திகளில் மேற் கொள்ளப்படுகின்ற கூட்டல், குறைத்தல்கள் அனைத்தும் இஸ்லாம் ஹராமாக்கிய, தடைசெய்த பொய்களேயாகும்.

## 73. மக்களுக்கு மத்தியில் பரஸ்பர அறிமுகமற்ற நிலை உருவாகுதல்

மனிதர்களுக்கு மத்தியில் குழப்பங்களும் சோதனைகளும் ஏற்படுகின்ற போது அவர்களுக்கு மத்தியில் காணப்படுகின்ற தொடர்புகளும் குறைந்து விடுகிறது. ஒருவரோடு மற்றவருக்கு உள்ள தொடர்புகள் துண்டிக்கப்பட்டு உள்ளங்களுக்கிடையே இடைவெளியும் அதிகரித்து விடுகிறது. அதையும் தாண்டி ஏதாவது, தொடர்புகள் இருந்தாலும் அது உலக ஆதாய, சுய நலன்களுக்கான தொடர்புகளாகவே காணப்படும்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடத்தில் மறுமை நாளைப் பற்றிக் கேட்கப்பட்டபோது "அதுபற்றிய அறிவு என் இறைவனிடமே உள்ளது. அவனையன்றி வேறெவரும் (அது எப்போது வரும் என) அதன் நேரத்தை அறிய மாட்டார்கள். எனினும், அதன் அடையாளங்களையும் அது நிகழ்வதற்கு முன் நடைபெறவிருக்கின்ற நிகழ்வுகளையும் சொல்லித் தருகின்றேன்" எனக் கூறிவிட்டு "மறுமை நாள் ஏற்படும்போது குழப்பங்களும் "ஹர்ஜ்"ம் அதிகரிக்கும்" என்றார்கள். அப்போது ஸஹாபாக்கள் அல்லாஹ்வின் தூதரே ஃபித்னா என்றால் என்னவென்று தெரியும். ஆனால், "ஹர்ஜ்" என்றால் என்ன எனக் கேட்டார்கள். அதற்கு நபியவர்கள் ''கொலை மற்றும் மக்களுக்கு மத்தியில் ஒருவருக்கு மற்றவரைப் பற்றித் தெரியாத நிலை'' என பதிலளித்தார்கள்.[2]

மேலே உள்ள ஹதீஸில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு ''மனிதர்களுக்கு மத்தியில் அறிமுகமற்ற நிலை'' இன்று பரவலாகக் காணப்படுவதைப் பார்க்கலாம். சிலர் தங்களது நெருங்கிய உறவினர்களைக்கூட

---

1. அறிவிப்பாளர் : அபூஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு, நூல் : ஸஹீஹ் முஸ்லிம்
2. அறிவிப்பாளர் : ஹுதைஃபா இப்னுல் யமான் ரழியல்லாஹு அன்ஹு, நூல்: அஹ்மத்

அறியாதவர்களாக இருக்கின்றார்கள். பொது இடங்களில் (ஏதாவது நிகழ்ச்சிகளில்) ஒன்று சேர்கின்றபோது ஒருவக்கொருவர் அறிமுகமாகிக் கொள்கின்றனர். அப்போதுதான் இவர் தனது நெருங்கிய உறவினர் என்பதைப் புரிந்து கொள்கின்றனர்.

இன்று உறவுகளும் தொடர்புகளும் அல்லாஹ்வுக்காக என்றில்லாமல் வெறும் சுயநலத்தையும் உலகியல் நலனையும் மட்டுமே நோக்கமாகக் கொண்டு கட்டியெழுப்பப்படுகின்றன. அதனால், தனக்கு ஏதும் நலவிருந்தால் யாருடனாக இருந்தாலும் உறவைப் பலப்படுத்துகின்றனர். தனக்கு எந்த இலாபமும் இல்லை என்று தெரிந்ததும் தனது நெருங்கிய உறவினர்களாக இருந்தாலும் உடனே அவரைக் கழட்டி விடுகின்றனர்.

## 74. நிலநடுக்கம் அதிகரித்தல்

மறுமை நாள் நெருங்கும்போது வித்தியாசமான, தொடர்ச்சியான பல நிலநடுக்கங்கள் உலகின் பல பாகங்களிலும் இடம்பெறும். இவ்வனைத்து நில நடுக்கங்களும் மறுமை நாளின் அடையாளங்களாகும்.

இந்த நிலநடுக்கங்கள் இந்த உம்மத்தின் பாவங்கள் மன்னிக்கப்படுவதற்கான ஒரு நிகழ்வாகவோ அல்லது குழப்பங்களுக்கும் பாவங்களுக்கும் தண்டனையாகவோ அமையலாம்.

“எனது உம்மத் (அல்லாஹ்வினால்) இரக்கம் காட்டப்பட்ட உம்மத்தாகும். கொலைகள், நிலநடுக்கங்கள், குழப்பங்கள் என்பவற்றை இவ்வுலகத்தில் வேதனையாகக் கொடுப்பதன் மூலம் மறுமையில் பலவேதனைகளை நீக்கி விடுகின்றான்.”[1]

“அறிவு கைப்பற்றப்படாமல், நிலநடுக்கங்கள் அதிகரிக்காமல் மறுமைநாள் ஏற்படாது.”[2]

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இப்னு ஹவாலாவின் தலையில் கையை வைத்துக் கொண்டு “ஹவாலாவின் மகனே! புனித (மதீனா) பிரதேசத்திலிருந்து கிலாபத் அகற்றப்பட்டு, பூகம்பங்களும், குழப்பங்களும், பயங்கரமான பெரிய விஷயங்களும்

1. அறிவிப்பாளர் : அபூ மூஸா அல் அஷ்அரி ரழியல்லாஹு அன்ஹு, நூல் : அஹ்மத்
2. அறிவிப்பாளர் : அபூஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு, நூல் : ஸஹீஹுல் புகாரி

நிகழத் தொடங்கி விட்டால், மறுமைநாள் எனது இரு கைகளுக்கும் உனது தலைக்கும் இடைப்பட்ட தூரத்திற்கு வந்துவிட்டது (என்பதை அறிந்துகொள்)" என்றார்கள்.[1]

## 75. பெண்கள் அதிகரித்தல், 76. ஆண்கள் குறைதல்

பெண்கள் அதிகரிப்பதும் ஆண்கள் குறைவதும் மறுமை நாளின் அடையாளங்களில் உள்ளதாகும்.

யுத்தம் போன்ற குழப்பங்களின் மூலம் அதிக கொலைகள் இடம் பெற்று அதிகளவில் ஆண்கள் மரணமடைவதால் பெண்களின் எண்ணிக்கை அதிகரித்து ஆண்களின் எண்ணிக்கை குறைந்து விடுகின்றது என சில அறிஞர்கள் கூறுகின்றனர்.

இமாம் இப்னு ஹஜர் ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் ஃபத்ஹுல் பாரியில் (1/133) பின்வருமாறு கூறுகின்றார்கள்.

"(பெண்கள் அதிகரிப்பது, ஆண்கள் குறைந்து விடுவது என்பது) ஆண் பிள்ளைகள் பிறப்பது குறைந்து விடும்படியும், பெண் பிள்ளைகள் பிறப்பது அதிகமாகிவிடும்படியும் அல்லாஹ் ஏற்படுத்துகின்ற ஒரு ஏற்பாடாகும். இது மறுமை நாளின் ஓர் அடையாளத்திற்காக அல்லாஹ் ஏற்படுத்தி இருக்கின்றான். ஆகவே, இதற்காக வேறு காரணங்களைக் கூறமுடியாது."

மறுமை நாளின் அடையாளங்கள் பற்றிய இன்னொரு ஹதீஸில் ".... விபச்சாரம் பரவி, ஆண்கள் குறைந்து பெண்கள் அதிகரிப்பார்கள்" எனக் கூறப்பட்டுள்ளது."[2]

இன்று ஆண், பெண் பிறப்பு சதவிகிதத்தையும், எண்ணிக்கையும் கவனித்துப் பார்க்கின்ற ஒருவர் மேற்படி அடையாளம் தற்காலத்தில் வெளிப்படையாகவே நிகழ்வதை காணமுடியும்.

## 77. மானக்கேடான விஷயங்கள் பகிரங்கமாக நடைபெறுதல்

மறுமை நாள் நெருங்கும்போது பாவங்களும், அனாச்சாரங்களும்

1. அறிவிப்பாளர் : இப்னு ஹவாலா ரழியல்லாஹு அன்ஹு, நூல்: அபூதாவூத்
2. நூல் : ஸஹீஹுல் புகாரி, ஸஹீஹ் முஸ்லிம்

அதிகரித்துக் காணப்படும் என அறிவித்த நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அந்த அனாச்சாரங்களும் பாவங்களும் பாதையோரங்களில் பகிரங்கமாக நடைபெறும் எனவும் அறிவித்துள்ளார்கள்.

இங்கே இரண்டு விஷயங்கள் இருக்கின்றன. ஒன்று அனாச்சாரங்களும் பாவங்களும் அதிகரிப்பது. மற்றொன்று அவை பகிரங்கமாக செய்யப்படுவது. இவை இரண்டும் தனித்தனி விஷயங்களாகும்.

“அல்லாஹ்வுக்குத் வேண்டியவர்கள் (வணக்கசாலிகள்) யாருமே எஞ்சியிராமல் (மரணிக்கின்ற) வரையிலும், பகல் வேளைகளில் பகிரங்கமாகவே நடுத் தெருக்களில் ஒரு பெண்ணோடு புணர்ந்து கொள்ளும் வரையிலும் மறுமை நாள் உண்டாகாது. அவ்வேளை யாரும் அச்செயலைத் தடுக்கவும் மாட்டார்கள். கேவலமாகப் பார்க்கவும் மாட்டார்கள். அப்போது அச்சமூகத்தில் சிறந்தவர்களில் சிலர் “பாதையைவிட்டும் ஓர் ஓரத்திற்குச் செல்லலாமே!” எனக் கூறுகின்ற நிலை உண்டாகும். அக்காலத்தில் சிறந்தவர்கள் எனக் குறிப்பிடப்படுபவர்கள் தற்போது உங்களுக்கிடையில் இருக்கின்ற அபூபக்கர் ரழியல்லாஹு அன்ஹு, உமர் ரழியல்லாஹு அன்ஹு போன்றவர்களாக இருப்பார்கள்.”

(இந்த ஹதீஸை ஷைக் அல்பானி அவர்கள் பலவீனமான ஹதீஸ் எனக் குறிப்பிட்டாலும் இச்செய்தியை உறுதிப்படுத்துகின்ற வகையில் இன்னொரு செய்தி ஸஹீஹுல் புகாரி, ஸஹீஹ் முஸ்லிமில் இடம் பெற்றுள்ளது)

“அறிவு உயர்த்தப்படுவது, அறியாமை வெளிப்படுவது, மதுபானம் அருந்துவது, விபச்சாரம் பரந்து காணப்படுவது மறுமை நாளின் அடையாளங்களாகும்.”

இன்னொரு அறிவிப்பில் “விபச்சாரம் பெருகும், ஆண்கள் அதிகரித்துப் பெண்கள் குறைவடைவார்கள்” எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இன்று ஒரு முஃமின், பார்ப்பதற்கே வெட்கப்படக்கூடிய படங்கள், ஆபாசமான காட்சிகள் என்பன, தொலைக் காட்சிகள் மூலமாகவும், ஆபாசப் படங்கள் மூலமாகவும், இணைய தளங்கள் மூலமாகவும்

பரிமாறப்படுகின்றன. இவை அனைத்தும் அனாச்சாரங்கள் பகிரங்கமாகவே நடைபெறுகின்றன என்பதற்கான தெளிவான அடையாளங்களாகும்.

எனவே, முஃமினான ஆண்களும் பெண்களும் இவ்வாறான அனாச்சார சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு தங்களது பார்வைகளைத் தாழ்த்தி, தங்களது உள்ளங்களையும், மர்மஸ்தானங்களையும் பாதுகாத்து, கெட்டவர்களின் சவகாசத்திலிருந்து விலகி இருப்பதோடு, எப்போதும் அல்லாஹ்விடத்தில் தூய்மைக்காகவும் பாவங்களிலிருந்து விடுபடவும் துஆச் செய்து கொண்டிருப்பது அவசியமாகும்.

## 78. குர்ஆனை ஓதிவிட்டு அதற்காக கூலி வாங்குதல்

குர்ஆன் ஓதுதல் அல்லாஹ்விடத்தில் நெருக்கத்தை ஏற்படுத்துவதற்காக செய்யப்படுகின்ற ஓர் இபாதத்தாகும். எந்தவொரு இபாதத்தையும் அல்லாஹ்விற்காக மட்டும் செய்ய வேண்டுமே தவிர உலக இலாபத்திற்காக செய்யக் கூடாது.

எனினும், மறுமை நாள் நெருங்கும்போது மேடைகளிலும் மரண வீடுகளிலும், பணம் பெற்றுக்கொள்வதையே நோக்கமாகக் கொண்டு அழகிய குரலில் அல்குர்ஆனை ஓதுகின்ற ஒரு நிலை ஏற்படும்,

இம்ரான் இப்னு ஹுஸைன் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் ஓர் இடத்தில் சென்று கொண்டிருந்தார்கள். அப்போது அங்கு ஒரு மனிதர் சிலரை வைத்துக் கொண்டு அல்குர்ஆனை ஓதிக் கொண்டிருந்தார். ஓதி முடித்ததும் அவர்களிடத்தில் பணத்தைக் கேட்டார். இதைக் கண்ட இம்ரான் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் "இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன்" "யார் அல்குர்ஆனை ஓதுகின்றாரோ அவர் அதற்கான கூலியை அல்லாஹ்விடத்திலேயே கேட்கட்டும், சிலர் அல்குர்ஆனை ஓதிவிட்டு அதற்கான (கூலியை) மனிதர்களிடத்தில் கேட்பார்கள்" என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூற நான் கேட்டிருக்கின்றேன் என்றார்கள்.[1]

"நாங்கள் ஒருமுறை அல்குர்ஆன் ஓதிக் கொண்டிருக்கும் போது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் வந்தார்கள். எங்களில்

---

1. நூல் : அஹ்மத்

நாட்டுப்புற அரபிகளும், அரபிகள் அல்லாதவர்களும் இருந்தோம். அப்போது நபியவர்கள் ஓதுங்கள், அனைவரும் நன்றாகவே ஓதுகின்றீர்கள். பிற்காலத்தில் சிலர் தோன்றுவார்கள் அவர்கள் அல்குர்ஆனைத் திறம்பட ஓதுவார்கள். எனினும், அதற்கான கூலியை இவ்வுலகிலேயே எதிர்பார்ப்பார்கள். மறுமைக்காகப் பிற்படுத்த மாட்டார்கள்'' எனக் கூறினார்கள்.[1]

## 79. உடல் பருமன் அதிகரித்தல்

''உங்களில் சிறந்தவர்கள் என் தலைமுறையினர் ஆவார்கள். பிறகு அவர்களை (உங்களை) அடுத்து வருபவர்கள். பிறகு அவர்களை அடுத்து வருபவர்கள். பிறகு அவர்களை அடுத்து வருபவர்கள்" என்று கூறினார்கள். அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தம் தலைமுறையினருக்குப் பிறகு ("அவர்களை அடுத்து வருபவர்கள்" என்று) இரண்டு தடவை கூறினார்களா, அல்லது மூன்று முறை கூறினார்களா என்பது எனக்குத் தெரியவில்லை. பிறகு "அவர்களுக்குப்பின் ஒரு சமுதாயத்தவர் (வர) இருக்கிறார்கள். அவர்கள் சாட்சியமளிக்கும்படி கோரப்படாமலே (தாமாக வந்து) சாட்சியம் அளிப்பார்கள். அவர்கள் நம்பிக்கை மோசடி செய்வார்கள். அவர்களிடம் எதையும் நம்பி ஒப்படைக்கப்பட மாட்டாது. அவர்கள் நேர்ச்சை செய்வார்கள். ஆனால், அதை நிறைவேற்ற மாட்டார்கள். அவர்களிடையே உண்டு கொழுப்பது (வயிறு பெருகுவது) தோன்றும்" என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் குறிப்பிட்டார்கள்.[2]

இன்று பரவலாகக் காணப்படும் சுகபோகம், விதவிதமான உணவகங்கள், உணவுகள், தொழிநுட்ப வளர்ச்சியால் ஏற்பட்டுள்ள சோம்பல் தன்மை, அதனால் குறைந்து போயுள்ள மனித இயக்கங்கள் போன்ற காரணங்களால் இன்று சிறுவர்களும் பெரியவர்களும் அளவுக்கதிகம் கொழுத்துப் போயுள்ளதைக் காண முடிகின்றது. இன்று உலக மக்கள் தொகையில் ஆறில் ஒரு பகுதியினர் எடை அதிகரிப்பால் கஷ்டப்படுவதாக அறிக்கைகள் சுட்டிக் காட்டுகின்றன.

---

1. அறிவிப்பாளர் : ஜாபிர் ரழியல்லாஹு அன்ஹு, நூல் : அபூதாவூத்
2. அறிவிப்பாளர் : இம்ரான் இப்னு ஹுஸைன் ரழியல்லாஹு அன்ஹு, நூல்: ஸஹீஹுல் புகாரி, ஸஹீஹ் முஸ்லிம்.

அதனால்தான் இன்று எடைகளைக் குறைப்பதற்கான மருந்துகளும், கொழுப்பை அகற்றுவதற்கான பல அறுவைச் சிகிச்சை முறைகளும் அதிகரித்து இருப்பதைக் காணலாம்.

## 80. சாட்சி சொல்ல அழைக்கப்படாமல் சாட்சி சொல்வார்கள்

## 81. நேர்ச்சை செய்துவிட்டு நிறைவேற்ற மாட்டார்கள்

“உங்களில் சிறந்தவர்கள் என் தலைமுறையினர் ஆவார்கள். பிறகு அவர்களை (உங்களை) அடுத்து வருபவர்கள். பிறகு அவர்களை அடுத்து வருபவர்கள். பிறகு அவர்களை அடுத்து வருபவர்கள்” என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தம் தலைமுறையினருக்குப் பிறகு (“அவர்களை அடுத்து வருபவர்கள்” என்று) இரண்டு தடவை கூறினார்களா, அல்லது மூன்று முறை கூறினார்களா என்பது எனக்குத் தெரியவில்லை. பிறகு “அவர்களுக்குப்பின் ஒரு சமுதாயத்தவர் (வர) இருக்கிறார்கள். அவர்கள் சாட்சியமளிக்கும்படி கோரப்படாமலே (தாமாக வந்து) சாட்சியம் அளிப்பார்கள். அவர்கள் நம்பிக்கை மோசடி செய்வார்கள்; அவர்களிடம் எதையும் நம்பி ஒப்படைக்கப்பட மாட்டாது. அவர்கள் நேர்ச்சை செய்வார்கள்; ஆனால், அதை நிறைவேற்ற மாட்டார்கள். அவர்களிடையே உண்டு கொழுக்கும் (தொந்தி பெருக்கும்) நிலை தோன்றும்.”[1]

இன்று, மனிதர்கள் எந்தவித முன்னறிவிப்பும் இன்றி, சாட்சிக்காக அழைக்கப்படாமலேயே சாட்சி சொல்லக்கூடிய நிலையும், எவ்வளவு நேர்ச்சை செய்தாலும் அதை நிறைவேற்றாத நிலையும் ஏற்பட்டிருக்கின்றது. இந்நிலை மக்களின் உள்ளங்களில் ஈமான் வலுவிழந்துள்ளதையும், அல்லாஹ்வைப் பற்றிய மகத்துவம் குறைந்து விட்டதையும் காட்டுகின்றது.

---

1. அறிவிப்பாளர் : இம்ரான் இப்னு ஹுஸைன் ரழியல்லாஹு அன்ஹு, நூல் : ஸஹீஹுல் புகாரி, ஸஹீஹ் முஸ்லிம்

## 82. பலசாலிகள் பலம் அற்றவர்களுக்கு அநீதி இழைத்தல்

நபியவர்கள் ஒருமுறை ஆயிஷாவே! உன்னுடைய சமுதாயமே எனது உம்மத்தில் விரைவாக என்னை வந்தடையக்கூடிய சமூகமாகும் எனக் கூறியவாறு வந்தார்கள். அவர்கள் வந்து அமர்ந்தவுடன் நான் அவர்களிடம் "அல்லாஹ்வின் தூதரே! அல்லாஹ் என்னை உங்களுக்கு அர்ப்பணமாக ஆக்கியுள்ளான். என்னை திடுக்கிடச் செய்யக்கூடிய ஒரு செய்தியைக் கூறியவாறு வருகின்றீர்களே" என்றேன். அதற்கு நபியவர்கள் "அப்படி என்ன" (சொல்லி விட்டேன்) எனக் கேட்டார்கள். அதற்கு அவர்கள் எனது சமுதாயம்தான் உங்களது உம்மத்தில் உங்களை வேகமாக வந்து சேர்கின்ற சமுதாயம்" எனக் கூறினீர்களே என்றேன். அதற்கு நபியவர்கள் "ஆம்" என்றார்கள். "எதனால் அப்படியான நிலை" எனக் கேட்டேன். அதற்கு நபியவர்கள் (மிருகங்கள் வேட்டைப் பிராணிகளைப் பிடிப்பது போன்று) மரணம் அவர்களை வேகமாகப் பிடிக்கும்" என்றார்கள். "அந்த நேரம் மக்களின் நிலை எப்படியிருக்கும்?" எனக் கேட்டேன். அதற்கு நபியவர்கள். "பூச்சிகள் (அதன் சிறகு முளைப்பதற்கு முன்னர் பலமுள்ளவை பலமற்றதை சாப்பிட்டு விடுவதைப்) போன்று மறுமைநாள் ஏற்படும் வரையும் பலசாலிகள் பலமற்றவர்களை (அநீதி இழைப்பதன் மூலம்) சாப்பிட்டுக் கொண்டிருப்பார்கள் (அழித்துக் கொண்டிருப்பார்கள்)" என பதிலளித்தார்கள்.[1]

மேலுள்ள ஹதீஸை வைத்துப் பார்க்கின்றபோது, மறுமை நாள் நெருங்கும் போது ஒருவரை ஒருவர் தின்றுவிடும் (அழித்துவிடும்) அளவு குழப்பங்கள் உண்டாகும் என்பதை அறியமுடிகிறது.

## 83. குர்ஆன் அல்லாதவற்றைக் கொண்டு சட்டங்கள் இயற்றப்படுதல்

அல்லாஹ் இறக்கியருளிய குர்ஆனைக் கொண்டு சட்டங்களை இயற்றுவது மார்க்கத்தின் மிகப் பிரதானமான கடமையாகும்.

**"எவர்கள் அல்லாஹ் இறக்கிய (வேதத்)தைக் கொண்டு தீர்ப்பளிக்க வில்லையோ அவர்கள் நிச்சயமாக நிராகரிப்பவர்களே!"**

**(அல்குர்ஆன் 5 : 44)**

1. அறிவிப்பாளர் : ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா, நூல்: அஹ்மத்

மறுமை நாள் நெருங்கும்போது இஸ்லாமின் பிடிகள் ஒவ்வொன்றாகத் தளர்ந்து செல்லும். அதில் முதலாவதாகத் தளர்வது அல்குர்ஆனை வைத்துத் தீர்ப்பு வழங்கப்படுகின்ற நிலையாகும்.

“இஸ்லாமின் பிடிகள் ஒவ்வொன்றாகத் தளர ஆரம்பிக்கும். ஒவ்வொரு பிடியும் தளரும்போது மக்கள் அடுத்த பிடியைப் பிடித்துக் கொள்வார்கள். அல்லாஹ் அருளியதைக் கொண்டு தீர்ப்புச் சொல்லுகின்ற பிடியே முதலாவதாக தளர்ந்து போகும். இறுதியாக, தொழுகை எனும் பிடி தளர்ந்து போகும்.”[1]

இன்று பல இஸ்லாமிய நாடுகளில் கூட திருமணம், வாரிசுரிமை போன்ற ஒருசில விஷயங்களில் மட்டுமே இஸ்லாமிய அடிப்படையில் தீர்ப்புக்கள் வழங்கப்படுகின்றன. ஏனைய வியாபாரம், தண்டனை முறைகள், போன்றவற்றில் ஆங்கிலேய அல்லது ஐரோப்பிய சட்டங்களே நடைமுறையில் இருக்கின்றன. இவை, அல்லாஹ் அருளிய அல்குர்ஆன் அல்லாததைக் கொண்டு தீர்ப்புகள் வழங்கப்படுகின்றன என்பதற்கு சிறந்த எடுத்துக் காட்டுகளாகும்.

**“அறியாமைக் காலத்தின் சட்ட (திட்ட)ங்களையா இவர்கள் விரும்புகின்றனர்? மெய்யாகவே, (மறுமையை) உறுதி கொண்ட மக்களுக்கு அல்லாஹ்வைவிட அழகான தீர்ப்பளிப்பவர் யார்?”**

**(அல்குர்ஆன் 5 : 50)**

## 84. ரோமர்கள் அதிகரிப்பதும் அரேபியர்கள் குறைந்து விடுவதும்

ரோமர்கள் எனப்படுபவர்கள் பொதுவாக இன்றுள்ள ஐரோப்பியர்கள் மற்றும் அமெரிக்கர்களைக் குறிக்கின்றது.

முஸ்தவ்ரித் பின் ஷத்தாத் அல்குறஷீ (ரலி) அவர்கள், அம்ர் பின் அல் ஆஸ் (ரலி) அவர்களிடம், “அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், “ரோமின் மக்கள் தொகை அதிகமாக இருக்கும்போது யுக முடிவு ஏற்படும்” என்று கூறியதை நான் கேட்டுள்ளேன்” என்றார்கள். அப்போது அம்ர் இப்னு ஆஸ் (ரலி) அவர்கள், “நீர் சொல்வதை (நன்றாக) யோசித்துச் (சொல்)” என்று

1. அறிவிப்பாளர் : உமாமா அல் பாஹிலி, நூல் : அஹ்மத்

கூறினார்கள். அதற்கு முஸ்தவ்ரித் (ரலி) அவர்கள், "அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடமிருந்து செவியுற்றதையே நான் சொல்கிறேன்" என்றார்கள்.

"அப்படியாயின் அவர்களிடையே (ரோமர்களிடையே பின்வரும்) நான்கு குணங்கள் இருக்கும் (என்பதையும் அறிந்துகொள்) எனக் கூறிய அம்ர் இப்னு ஆஸ் (ரலி) அவர்கள்,

1. அவர்கள் சோதனையின்போது மிகவும் நிதானத்தைக் கடைபிடிப்பார்கள்.
2. சோதனைக்குப் பின்னர் மிக விரைவாக விழித்துக் கொள்வார்கள்.
3. (களத்திலிருந்து) வெருண்டோடிய பின்னர் மிக விரைவாகத் திரும்பி வருவார்கள்.
4. ஏழைகள், அநாதைகள், மற்றும் நலிவுற்றோருக்கு உதவிகள் புரிவார்கள்.

ஐந்தாவதாக அவர்களிடம் அழகிய குணம் ஒன்று உண்டு. ஆட்சியாளர்களின் அநீதியிலிருந்து (மக்களைக்) காப்பார்கள்" எனக் குறிப்பிட்டார்கள்.[1]

"நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், "மக்கள் தஜ்ஜாலிடமிருந்து வெருண்டோடி மலைகளுக்குச் சென்று விடுவார்கள்" என்று கூறக்கேட்டேன். அப்போது நான், "அல்லாஹ்வின் தூதரே! (இறைவழியில் போராடும்) அரபியர் அப்போது எங்கே இருப்பார்கள்?" என்று கேட்டேன். அதற்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், "அப்போது அவர்கள் மிகக் குறைவான எண்ணிக்கையிலேயே இருப்பார்கள்" என்று பதிலளித்தார்கள்.[2]

ரோமர்கள் அதிகமாக இருப்பார்கள் என்பதற்கு சில அறிஞர்கள், அரபுமொழி தூரமாக்கப்பட்டு, அதைப் பேசுபவர்களும் குறைவடைந்து, ரோம, ஐரோப்பிய மொழியான ஆங்கிலம் பேசக்கூடியவர்கள் அதிகமாக இருப்பார்கள் எனவும் விளக்கம் கொடுக்கின்றனர்.

---

1. நூல் : ஸஹீஹ் முஸ்லிம்
2. அறிவிப்பாளர் : உம்மு ஷுரைக் ரழியல்லாஹு அன்ஹு, நூல் : ஸஹீஹ் முஸ்லிம்

## 85. மக்களிடம் செல்வம் பெருகுதல்

நபியோடு வாழ்ந்த பல ஸஹாபாக்களும் அதற்குப் பின்னர் வாழ்ந்த பல முஸ்லிம்களும் பல ஆண்டு காலமாக கஷ்டப்பட்டே வாழ்ந்துள்ளனர். நபிகளாரின் வீட்டில் கூட பல மாதங்களாக அடுப்பெரியாமல், பேரித்தம் பழத்தோடும், நீரோடும் தங்களது வாழ்க்கையைக் கழித்துள்ளார்கள்.

எனினும், மறுமை நாளின் அடையாளங்களில் ஒன்றாக, இந்த கஷ்டமான சூழல் மாறி, மக்களிடத்தில் பணப்புழக்கம் அதிகரிக்கும், சிலர் தங்களது ஸகாத் பணத்தை யாருக்காவது கொடுத்துவிட வேண்டும் என்பதற்காக மாதம் முழுவதும் முயற்சி செய்தும், மக்களிடம் செல்வம் அதிகரித்திருப்பதால் யாருக்குமே கொடுக்க முடியாத ஒரு நிலை இருக்கும்.

“செல்வம் பெருகிக் கொழிக்காதவரை யுகமுடிவு நாள் நிகழாது. எந்த அளவிற்கு (செல்வம் பெருகும்) எனில், ஒருவர் தமது செல்வத்திற்குரிய ஸகாத்தை எடுத்துக் கொண்டு (யாருக்காவது கொடுத்து விடலாம் என எண்ணிப்) புறப்பட்டுச் செல்வார். ஆனால், அவரிடமிருந்து அதைப் பெற்றுக் கொள்ள ஒருவரையும் காணமாட்டார். மேலும், அரபிய பிரதேசம் மேய்ச்சல் நிலங்களாகவும், (கரை புரண்டோடும் தண்ணீர்) வாய்க்கால்களாகவும் மாறாதவரை (யுகமுடிவு நாள் நிகழாது).”[1]

“ஒரு காலம் வரும், அப்போது ஒருவர் தனது ஸதகாப் பொருளான தங்கத்தை வைத்துக்கொண்டு அலைந்து திரிவார். ஆனாலும் அதனைப் பெற்றுக் கொள்ளக்கூடிய எவரையும் காணமாட்டார்” என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக அபூ மூஸா அல் அஷ்அரி ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கின்றார்கள்.[2]

இந்த அடையாளம் ஏற்பட்டுவிட்டதா? அல்லது இதுவரை ஏற்படவில்லையா? என்பதில் அறிஞர்களிடையே கருத்து வேறுபாடுகள் காணப்படுகின்றன.

---

1. அறிவிப்பாளர் : அபூஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு, நூல்: ஸஹீஹுல் புகாரி, ஸஹீஹ் முஸ்லிம்
2. நூல் : ஸஹீஹ் முஸ்லிம்

ஸஹாபாக்களின் காலங்களில் ரோம, பாரசீகம் வெற்றி கொள்ளப்பட்டு அவர்களது சொத்துக்கள் கனீமத்துகளாகப் பெறப்பட்ட காலங்களில் இந்நிலை ஏற்பட்டுவிட்டதாகவும் சொல்லப்படுகிறது.

உமர் இப்னு அப்துல் அஜீஸ் ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்களது ஆட்சிக் காலத்தில் ஸகாத் கொடுக்கத் தகுதியான ஒருவர் தனது ஸகாத் பணத்தை எடுத்துக்கொண்டு அதைப் பெற்றுக்கொள்ளக் கூடியவர்கள் யாராவது இருப்பார்களா? எனத் தேடித்திரிந்தும் எவருமே கிடைக்காதபோது, இன்னாருக்குத் தேவை இருக்கலாம் எனக்கருதி ஒருவரிடம் தனது ஸகாத் பணத்தை ஒப்படைக்கும்போது அவரும் எனக்குப் பணம் தேவையில்லை எனக் கூறிவிடுகின்ற நிலை காணப்பட்டதாகவும் வரலாறுகளில் பதியப்பட்டுள்ளது.

மேற்படி செல்வம் கொழிக்கும் நிலை உலகம் அழிகின்ற இறுதிக் காலத்தில்தான் இடம்பெறும் எனவும் கூறப்படுகின்றது. குறிப்பாக மஹ்தி அவர்களின் காலத்தில் தங்கம் வெள்ளி போன்றவை கணக்கின்றி அள்ளி அள்ளிக் கொடுக்கப்படுகின்ற அளவிற்கு செல்வம் கொழித்து, பரக்கத் நிறைந்து காணப்படுவதோடு, பூமியானது தங்கம் மற்றும் வெள்ளிப் பாலங்களை வெளிப்படுத்தும் என்ற கருத்தையும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சுட்டிக் காட்டியுள்ளார்கள்.

நாங்கள் ஜாபிர் இப்னு அப்தில்லாஹ் ரழியல்லாஹு அன்ஹு அவர்களுடன் இருந்தோம். அப்போது அவர்கள் கூறினார்கள்: “.... பிறகு அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், என் இறுதிச் சமுதாயத்தில் ஓர் ஆட்சியாளர் (கலீஃபா) வருவார். அவர் கணக்குப் பார்க்காமல் வாரி வாரி வழங்குவார் எனக் கூறினார்கள்.”

இதன் அறிவிப்பாளரான ஜுரைரீ ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் பின்வருமாறு கூறுகிறார்கள்:

நான், அபூ நள்ரா மற்றும் அபுல் அலா ரஹ்மதுல்லாஹி அலைஹி ஆகியோரிடம், “அந்த ஆட்சியாளர் உமர் இப்னு அப்தில் அஜீஸ் அவர்களாகத்தான் இருக்க வேண்டும் என நீங்கள் இருவரும்

கருதுகிறீர்களா?” என்று கேட்டேன். அதற்கு அவர்கள் இருவரும் “இல்லை” என பதிலளித்தார்கள்.[1]

## 86. பூமி தனது பொக்கிஷங்களை வெளியாக்குதல்

உலக அழிவு காலங்களில் மனிதர்கள் மத்தியில் செல்வம் கொழித்துக் காணப்படுவதால் பூமி தனக்குள் புதைந்து கிடக்கின்ற பொக்கிஷங்கள் அனைத்தையும் வெளியாக்கிவிடும். அதேநேரம், மக்களிடமும் அதிகளவு செல்வம் காணப்படுவதால், அப்பொக்கிஷங்களை எடுத்துக் கொள்ள வேண்டும் என்கின்ற ஆர்வம் சாதாரண மக்களிடம்கூட காணப்படாது.

பூமி தனது தங்கம், வெள்ளிக் கட்டிகளை வெளிப்படுத்தும். அப்போது கொலைகள் பல புரிந்தவன் “நான் இதற்காகத்தானா பலரைக் கொலை செய்தேன்!?” என கைசேதப்படுவான். உறவுகளைத் துண்டித்து வாழ்ந்தவனும் “இதற்காகத்தானா எனது உறவுகளை துண்டித்து வாழ்ந்தேன்!?” எனக் கூறுவான். திருடனும்; “இதற்காகத்தானா எனது கை வெட்டப்பட்டது!?” என்பான். அவர்கள் எல்லோருக்கும் தங்கம் மற்றும் வெள்ளிக் கட்டிகளை எடுத்துக்கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்படும். எனினும், அவர்கள் அதிலிருந்து எதையுமே எடுக்க மாட்டார்கள்.[2]

மேலுள்ள ஹதீஸிலிருந்து, “பூமி தனக்குள் புதையுண்டிருக்கின்ற அனைத்துப் புதையல்களையும் வெளிக் கொண்டுவரும் என்பதைப் புரியமுடிகின்றது. அதேவேளை, தங்கம், வெள்ளிக் கட்டிகள் எனக் கூறப்படுவதன் மூலம் தங்கம் வெள்ளியின் அளவு மிக அதிகரித்துக் காணப்படும் என்பதையும் புரியமுடிகிறது.” என இமாம் நவவி ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் குறிப்பிடுகின்றார்கள்.[3]

## 87. உருமாற்றம் 88. பூமி விழுங்குதல் 89. கல்மாரி பொழிதல்

இவைகள் மறுமை நாள் நெருங்கும்போது ஏற்படவிருக்கின்ற சில தண்டனைகளாகும்.

---

1. நூல் : ஸஹீஹ் முஸ்லிம்
2. அறிவிப்பாளர் : அபூஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு, நூல் : ஸஹீஹ் முஸ்லிம்
3. -ஷரஹ் ஸஹீஹ் முஸ்லிம்

“இந்த சமுதாயத்தில் உருமாற்றமும், பூமி விழுங்குதலும், கல்மாரி பொழிதலும் இடம்பெறும்” என அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியபோது, அங்கிருந்த ஒருவர் “அல்லாஹ்வின் தூதரே! அது எப்போது இடம்பெறும்” எனக் கேட்டார். அதற்கு நபியவர்கள், “பாடகிகளும், இசைக் கருவிகளும் அதிகரிக்கும் போது (இடம்பெறும்)” என பதிலளித்தார்கள்.”[1]

“இந்த உம்மத்தின் இறுதி காலத்தில் உருமாற்றமும், பூமி விழுங்குதலும், கல்மாரி பொழிதலும் இடம்பெறும்” என அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியபோது, “அல்லாஹ்வின் தூதரே! நம்மில் நல்லவர்கள் இருக்கும் போதும் இவ்வாறு நாங்கள் அழிக்கப்படுவோமா?” எனக் கேட்டேன். அதற்கு நபியவர்கள், “ஆம், அசிங்கமான செயல்பாடுகள் அதிகரிக்கும் போது (அவ்வாறு அழிக்கப்படுவார்கள்)” எனக் கூறினார்கள்.[2]

கொள்கையில் குழப்பங்களை ஏற்படுத்தி, புதிய கொள்கைகளை உருவாக்குகின்ற பித்அத் வாதிகள் அதிகரிக்கும் போதும் இவ்வாறான தண்டனைகள் இடம்பெறும் என ஹதீஸ்களில் குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

“நாங்கள் அப்துல்லாஹ் இப்னு உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்களோடு அமர்ந்திருந்தோம், அப்போது அங்கே ஒரு மனிதர் வந்து (ஷாம் தேசத்து ஒருவரது பெயரைச் சொல்லி) அவர் தங்களுக்கு ஸலாம் கூறியதாகச் சென்னார், அதற்கு இப்னு உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் (எனக்கு ஸலாம் சொல்லி அனுப்பிய) அவர் மார்க்கத்தில் புதிய கொள்கையை உருவாக்கி விட்டதாகக் கேள்விப்பட்டேன், அது உண்மையாக இருந்தால், அவருக்கு எனது (பதில்) ஸலாமை தெரிவிக்க வேண்டாம். (ஏனெனில்) “எனது உம்மத்(தில் சிலர்) கதரிய்யாக்களாகவும் ஸின்தீக்குகளாகவும்[3] இருக்கும் போது

1. அறிவிப்பாளர் : இம்ரான் இப்னு ஹுஸைன் ரழியல்லாஹு அன்ஹு, நூல்: திர்மிதி
2. அறிவிப்பாளர் : ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா, நூல் : திர்மிதி
3. கதரிய்யா (**قدرية**) - விதியை மறுப்பவர்கள் : படைப்புகள் தங்களது செயல்களை தாமே செய்கின்றன, படைக்கின்றன; படைப்புகளின் செயலுக்கும் அல்லாஹ்விற்கும் எவ்விதத்திலும் தொடர்பு இல்லை என்பது இவர்களது கொள்கையாகும்.
   ஸின்தீக்குகள் (**زنديق**) : இஸ்லாமிய மார்க்கத்திற்குள் இருந்துகொண்டு இஸ்லாமிய அடிப்படைகளை மறுக்கக் கூடியவர்கள்.

உருமாற்றமும், பூமி விழுங்குதலும், கல்மாரி பொழிதலும் இடம்பெறும்'' என அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதை நான் கேட்டிருக்கின்றேன்.'' எனக் கூறினார்கள்.[1]

இறுதி காலத்தில் கஅபாவைத் தாக்கி அழிப்பதற்காக ஒரு பெரும் படை வரும். அப்படை முழுவதையும் பூமி விழுங்கும். இத்தகைய ஒரு செய்தியும் ஹதீஸ்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

"(நீங்கள் வசிக்கும் மதீனாவிற்கு) அருகாமையில் ஒரு (பெரும் படையை) பூமி விழுங்கி விட்டதாகக் கேள்விப்பட்டால் மறுமை நாள் உங்களுக்கு நெருங்கிவிட்டது என்பதை அறிந்து கொள்ளுங்கள்'' என அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதை நான் கேட்டேன்.[2]

மக்கள் பாவத்திலும் கொள்கைக் குழப்பங்களிலும் மூழ்கி, கொள்கை மாறிச் செல்லும்போது, மற்றவர்கள் அதைக் கண்டும் மௌனமாக இருக்கும் போதும் இந்நிலைகள் ஏற்படும், எனவே அனைத்து முஸ்லிம்களும் இந்த விஷயத்தில் எச்சரிக்கையாக இருப்பது அவசியமாகும்.

## 90. கல் வீடுகளை அடித்துச்செல்லும் வெள்ளங்கள்

ஒட்டகத் தோல்களால் செய்யப்பட்ட சாதாரண பாலைவன வீடுகள் (கூடாரங்கள்) தாக்குப் பிடிக்க, பெரும் பெரும் கல் வீடுகளை மட்டும் அடித்துச் செல்லக்கூடிய வெள்ளங்கள் ஏற்படுவது மறுமை நாளின் அடையாளங்களில் ஒன்றாகும் என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

''தோல்களால் செய்யப்பட்ட வீடுகள் (கூடாரங்கள்) தாக்குப் பிடித்தாலும் கல் வீடுகளால் தாக்குப்பிடிக்க முடியாத அளவு மழைகள் பொழியாதவரை மறுமை நாள் ஏற்படாது.''[3]

---

1. அறிவிப்பாளர் : இப்னு உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்களது அடிமை, நூல்: அஹ்மத்
2. அறிவிப்பாளர் : பகீரா ரழியல்லாஹு அன்ஹு, நூல் : அஹ்மத்.
3. அறிவிப்பாளர் : அபூஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு, நூல் : அஹ்மத்

## 91. மழை பொழிந்தும் பயிர் செய்யமுடியாத நிலை

அடிக்கடி மழை பொழிந்தாலும், அதன் மூலம் விவசாயம் செய்யமுடியாத நிலை ஏற்படுவது மறுமை நாளின் அடையாளங்களில் ஒன்று என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

“பரவலாக மழை பொழிந்தும் பயிர்கள் செய்யமுடியாத நிலை ஏற்படுகின்ற வரை மறுமை நாள் ஏற்படாது.”[1]

பரகத் (-இறை அபிவிருத்தி) இல்லாத நிலை ஏற்படும்போது, மழைபெய்தும் பயிர்செய்ய முடியாத நிலை ஏற்படும் என்பதை இங்கே புரிந்துகொள்ள முடிகின்றது.

“மழையின்றிப் போவது வறட்சியல்ல, மழை பொழிந்தும் பயிர்செய்ய முடியாத நிலையே உண்மையான வறட்சியாகும்.”[2]

## 92. அரேபியர்களைக் கூண்டோடு அழிக்கும் குழப்பங்கள்

இறுதி காலத்தில் பெரிய குழப்பங்கள் ஏற்பட்டு அதன்மூலம் பெரும்பாலான அரேபியர்கள் அழிந்து போவார்கள். இந்நிலை மறுமை நாளின் அடையாளங்களில் ஒன்றாகக் காணப்படுகிறது.

“(மிகப்பெரும்) குழப்பம் ஒன்று ஏற்பட்டு அதன்மூலம் அரேபியர்கள் கூண்டோடு அழிக்கப்படுவார்கள். அதில் கொலை செய்யப்படுபவர்கள் நரகவாசிகளாவார்கள்! அந்நேரத்தில் நாவு (கூரிய) வாள்களை விடக் கடுமையானதாக இருக்கும்.”[3]

மேற்படி ஹதீஸில் “அதில் கொலை செய்யப்படுபவர்கள் நரகவாசிகளாவார்கள்!” என்பதன் மூலம் குறிப்பிட்ட ஃபித்னாவின் போது மக்கள் இஸ்லாமிற்காக அன்றி ஷைத்தானுக்குக் கட்டுப்பட்டு, உலக ஆதாயத்திற்காகவும், ஆட்சி அதிகாரங்களுக்காகவும் யுத்தங்கள் செய்து கொலை செய்யப்படுவார்கள் என்பதும், அவர்களுள் தவ்ஹீத்

---

1. அறிவிப்பாளர் : அனஸ் ரழியல்லாஹு அன்ஹு, நூல்: அஹ்மத்
2. நூல் : அஹ்மத்
3. இந்த ஹதீஸில் சில கருத்துவேறுபாடுகள் உள்ளன. அறிவிப்பாளர் : அப்துல்லாஹ் இப்னு அம்ரு ரழியல்லாஹு அன்ஹு, நூல் : அஹ்மத்

வாதிகளும் இருக்கும் பட்சத்தில் அவர்கள் நரகத்தில் நுழைந்தாலும் நிரந்தர நரகவாதிகளாக இருக்கமாட்டார்கள் என்பதும் குறிப்பிடத்தக்க விஷயங்களாகும்.

அவ்வாறாக குழப்பமான காலங்களில் ஒருவர் மற்றவரைக் குறை கூறுவதற்காகவும், குழப்பங்களின் பக்கம் அழைப்பு விடுப்பதற்காகவும் பயன்படுத்துகின்ற வார்த்தைகள் மிகவும் கேவலமானதாகவும், வாள்களினால் தாக்குவதைவிட பெரிய காயங்களை ஏற்படுத்தக் கூடியதாகவும் காணப்படும் என்பதையும் மேலுள்ள ஹதீஸ் நமக்குத் தெளிவுபடுத்துகின்றது.

மேற்படி ஹதீஸில் கூறப்பட்டுள்ள "நாவு என்பதன் பொருள், போருக்காக தூண்டுவதும் போரை மூட்டுவதும் சண்டை ஏற்படும்படி பேசுவதும் வாள்கள் நீளுவதை விட கடுமையான பாதிப்புகளை ஏற்படுத்தும்."[1]

## 93. 94. மரங்களும், கற்களும் முஸ்லிம்கள் சார்பாகப் பேசுவது, 95. யூதர்களை முஸ்லிம்கள் கொல்வது

யூதர்களை முஸ்லிம்கள் கொலைசெய்கின்ற இந்த நிலை உலக அழிவின் இறுதிக் காலங்களில் நடைபெறுகின்ற ஒரு நிகழ்வாகும். அப்போது மரங்களும் கற்களும், முஸ்லிமே! அல்லாஹ்வின் அடியானே! எனக்குப் பின்னால் யூதன் ஒளிந்திருக்கின்றான் வந்து அவனைக் கொன்றுவிடு எனக் கூறும். அல்லாஹ்விடமிருந்து முஸ்லிம்களுக்கு வெற்றியைப் பெற்றுக் கொடுக்க வேண்டும் என்பதற்காக அவை முஸ்லிம்களோடு பரிவுடன் நடந்துகொள்ளும்.

"யூதர்கள் உங்களோடு போராடுவார்கள், அவர்கள் கற்களுக்குப் பின்னால் ஒளிந்து கொள்ளும்போது அக்கற்கள் "முஸ்லிமே எனக்குப் பின்னால் யூதன் ஒளிந்திருக்கின்றான் அவனைக் கொன்றுவிடு" எனக் கூறுமளவிற்கு நீங்கள் அவர்களை ஆக்கிரமித்துக் கொள்வீர்கள்."

கற்கள் மரங்கள் பேசுவது மறுமை நாளின் அடையாளங்களில் ஒன்றாகக் காணப்பட்டாலும், கர்கத் (**غرقد**) எனும் மரம் யூதர்களின் மரம் என்பதால் அது மட்டும் அவர்களைக் காட்டிக் கொடுக்காது.

---

1. பார்க்க: மிர்காதுல் மபாதீஹ்

“முஸ்லிம்கள் யூதர்களோடு போர் செய்யாதவரை மறுமை நாள் ஏற்படாது (அப்போரில்), யூதர்கள் கற்களுக்கும் மரங்களுக்கும் பின்னால் சென்று ஒளிந்து கொள்ளும் அளவிற்கு முஸ்லிம்கள் அவர்களைக் கொலை செய்வார்கள். அப்போது அந்தக் கல், அல்லது அந்த மரம், “முஸ்லிமே! அல்லாஹ்வின் அடியாரே! இதோ எனக்குப் பின்னால் யூதன் ஒருவன் இருக்கிறான். உடனே வந்து அவனைக் கொன்றுவிடு” என்று கூறும். கர்கத் எனும் மரத்தைத் தவிர. ஏனெனில், அது யூதர்களின் மரமாகும்.”[1]

இன்னொரு அறிவிப்பில் “(முஸ்லிம்களாகிய) நீங்கள் யூதர்களுடன் போரிடுவீர்கள், (அப்போரில்) அவர்களில் ஒருவன் கல்லின் பின்னால் ஒளிந்து கொள்வான் (அப்போது) அந்தக் கல், ‘அல்லாஹ்வின் அடியானே! இதோ, என் பின்னால் ஒரு யூதன் இருக்கிறான். அவனைக் கொன்று விடு’ என்று கூறும்.[2]

அல்லாஹ் அனைத்திற்கும் சக்தியுள்ளவன். மரங்களையும் கற்களையும் பேச வைப்பது அல்லாஹ்விற்கு இலகுவான விஷயங்களாகும். எனவே இங்கு மரங்கள், கற்கள் பேசும் என்று கூறும்போது, அவை, அவற்றின் உண்மையான பேச்சுகளையே குறிக்கின்றன என்று நம்பிக்கை கொள்ள வேண்டும்.

## 96. ‘ஃபுராத்’ (யூப்ரடீஸ்) நதியில் தங்க மலை வெளிப்படுதல்

யூப்ரடீஸ் நதி என்பது அதிகளவு நீரைக் கொண்ட ஒரு பிரபலமான நதியாகும். எனினும், மறுமைநாள் நெருங்கும் போது இந்நதி வற்றிப்போய் அதன் நீரோட்டத்தில் மாற்றம் ஏற்பட்டு அதனால் ஒரு தங்கமலை வெளிப்படும். அப்போது மக்கள் அதற்காகச் சண்டையிட்டு பலர் அதில் கொல்லப்படுவார்கள்.

தங்க மலையில் இருந்து ஒவ்வொருவரும் எதையாவது எடுக்க வேண்டும் என ஆசைப்படுவதால் ஏற்படவிருக்கின்ற குழப்பங்கள், கொலைகளைக் கருத்தில் கொண்டு அதன் பக்கம் சென்றுவிட வேண்டாம் என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நமக்கு எச்சரிக்கை செய்துள்ளார்கள்.

---

1. அறிவிப்பாளர் : அபூஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு, நூல் : ஸஹீஹ் முஸ்லிம்
2. அறிவிப்பாளர் : அப்துல்லாஹ் இப்னு உமர் (ரலி), நூல் : ஸஹீஹுல் புகாரி

“(மேற்காசியாவில் பாயும்) யூப்ரடீஸ் நதி வற்றி, தங்க மலை ஒன்றை வெளிப்படுத்தாத வரை யுக முடிவு நாள் வராது. அதற்காக (உரிமை கொண்டாடி) மக்கள் சண்டையிடுவார்கள். அப்போது ஒவ்வொரு நூறு பேரிலிருந்தும் தொண்ணூற்றொன்பது பேர் கொல்லப்படுவர். அவர்களில் ஒவ்வொருவரும் உயிர் பிழைப்பவர் நானாக இருக்க வேண்டுமே!” என்று கூறுவர்.”[1]

“அப்பகுதியில் வாழ்கின்றவர்கள் கூட அம்மலையிலிருந்து எதனையும் எடுக்கச் செல்ல வேண்டாம்.”[2]

(ஒரு முறை) நான் உபை இப்னு கஅப் ரழியல்லாஹு அன்ஹு அவர்களுடன் நின்று கொண்டிருந்தேன். அப்போது அவர்கள், “உலகத்தைத் தேடுவதில் மக்கள் தம் கழுத்துகளை நீட்டிக் கொண்டேயிருக்கிறார்கள் (அல்லவா?)” என்று கூறினார்கள். நான் “ஆம்” என்றேன். அதற்கு உபை இப்னு கஅப் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் : “அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பின்வருமாறு கூறியதை நான் கேட்டுள்ளேன். யூப்ரடீஸ் நதி வற்றி, தங்கமலை ஒன்றை வெளிப்படுத்தப் போகிறது. அதைப் பற்றி மக்கள் கேள்விப்படும்போது, அதை நோக்கிச் செல்வார்கள். அப்போது அந்த மலைப்பகுதியில் இருப்பவர்கள், சிறிதளவை எடுத்துக் கொள்ளட்டும் என மக்களை நாம் விட்டுவிட்டால், முழுவதுமாகக் கொண்டு போய்விடுவார்கள் (எனவே அவர்களை விடக் கூடாது) என்று கூறி, அதற்காகச் சண்டையிடுவார்கள். அப்போது ஒவ்வொரு நூறு பேரிலிருந்தும் தொண்ணூற்று ஒன்பது பேர் கொல்லப்படுவார்கள்.”[3]

மேலே ஹதீஸ்களில் குறிப்பிடப்பட்டிருக்கக்கூடிய தங்க மலை என்பது, தற்போது புறாத் நதியின் அடியில், மண்ணிற்குள் மறைக்கப்பட்டிருக்கலாம், நதியின் நீர் வேறு திசைகளின் பக்கம் திருப்பப்படுகின்றபோது, நதியின் நீர்மட்டம் குறைந்துவிடும்போது குறிப்பிட்ட தங்க மலை தெரிய ஆரம்பிக்கலாம்.

---

1. அறிவிப்பாளர் : அபூஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு, நூல்: ஸஹீஹ் முஸ்லிம்
2. நூல் : ஸஹீஹுல் புகாரி, ஸஹீஹ் முஸ்லிம்
3. அறிவிப்பாளர் : உபை இப்னு கஅப் ரழியல்லாஹு அன்ஹு, நூல் : ஸஹீஹ் முஸ்லிம்

எனவேதான், அங்கு நடக்க இருக்கின்ற குழப்பங்கள் இன்னும் கொலைகளை காரணமாக வைத்து, குறிப்பிட்ட மலையில் இருந்து எதையாவது பெற்றுக் கொள்ள வேண்டும் என ஆசையுடன் அங்கே சென்றுவிட வேண்டாம் என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

யூப்ரடீஸ் நதியின் நீரோட்டத்தைக் குறைக்கின்ற அளவிற்கு இன்று துருக்கி, சிரியா போன்ற நாடுகள் அந்நதியில் பல அணைகளை நிறுவியுள்ளன. மேலும், அதன் அருகில் தொழிற்சாலைகளை அமைத்துள்ளன. இவையனைத்தும் யூப்ரடீஸ் நதியின் நீரோட்டம் குறைந்துபோய் மேலே குறிப்பிடப்பட்டுள்ள தங்கமலை வெளிப்படுவதற்கான அறிகுறிகளாக இருக்கலாம்.

இதுவரை வெளிப்படாத இந்த அடையாளம் எப்போது வெளிப்படும் என்பதை அல்லாஹ்வே மிக அறிந்தவன்.

## 97. பாவம் செய்வதா? அல்லது இயலாதவன் எனப் பெயர் வாங்குவதா? என சங்கடப்படுதல்

மறுமை நாள் நெருங்கும்போது பாவங்களைச் செய்து தானும் எல்லோரையும் போன்ற ஒருவன்தான் என்பதை அடையாளப்படுத்திக் கொள்வதா? அல்லது பாவத்தைவிட்டும் தூரமாகிவிட்டு 'பிற்போக்குவாதி, பழமைவாதி, இயலாதவன்' என மக்கள் ஏசுவதைக் கேட்டு சகித்துக்கொள்வதா? என்ற சங்கடமான நிலைக்கு தள்ளப்படுகின்ற நிலை ஏற்படும் என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியுள்ளார்கள்.

“ஒருகாலம் வரும், அக்காலத்தில் மனிதர்கள் பாவத்தைச் செய்வதா? அல்லது (பாவத்தை தவிர்ப்பதன் மூலம்) இவன் இயலாதவன் என்ற பெயர் வாங்குவதா? என, எதனைத் தேர்ந்தெடுப்பது என்ற (சங்கடமான) நிலைக்கு உள்ளாகுவார்கள். அக்காலத்தில் வாழ்பவர்கள், பாவத்தை செய்துவிடாமல் இயலாதவன் என்ற பெயரையே வாங்கிக் கொள்ளட்டும்” என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியுள்ளார்கள்.[1]

1. அறிவிப்பாளர் : அபூஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு, நூல் : அஹ்மத் (இந்த ஹதீஸின் அறிவிப்பாளர் வரிசையில் சில குறைகள் உள்ளன)

மேற்படி ஹதீஸில் குறிப்பிடப்பட்டுள்ள நிலை, இன்று நமது காலத்தில் சர்வசாதாரணமாகிவிட்டதை பார்க்கலாம். இன்று ஹிஜாப் அணிகின்ற பெண்களையும், அணியச் சொல்கின்ற ஆண்களையும், வட்டி, லஞ்சம் போன்றவற்றிலிருந்து தவிர்ந்து வாழ்பவர்களையும், சினிமா, ஆடல், பாடல், இசை, போன்ற தடுக்கப்பட்ட செயல்களிலிருந்து தவிர்ந்து வாழ்பவர்களையும் பிற்போக்குவாதிகள், பழமைவாதிகள், ஒன்றும் தெரியாதவர்கள், காலத்தோடு ஒத்துப் போகாதவர்கள், அறிவியல் தெரியாதவர்கள், இணங்கி வாழத்தெரியாதவர்கள், முற்போக்கு கல்விஞானமற்றவர்கள் என்றெல்லாம் விமர்சிக்கப்படுவதைக் காண்கின்றோம்.

## 98. அரேபிய தீபகற்பம் ஆறுகளாகவும், சோலைகளாகவும் மாறுதல்

அரேபிய தீபகற்பத்தின் முழு நிலப்பரப்பில் எழுபது சதவீதம் வறண்ட பாலைவனமாக இருப்பதை யாவரும் அறிவோம். எனினும், மறுமை நாள் நெருங்கும்போது வறண்டுபோயுள்ள அரேபிய தீபகற்பம் சோலைகளாகவும், நதிகளாகவும் மாறும் என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அடையாளப்படுத்தியுள்ளார்கள்.

“அரேபிய தீபகற்பம் சோலைகளாகவும் நதிகளாகவும் மாறும் வரையிலும், மக்காவிற்கும் ஈராக்கிற்கும் இடையில் பயணிக்கும் ஒரு பயணி வழிதவறி விடுமோ என்ற பயத்தைத் தவிர வேறெந்தப் பயமுமின்றி பயணம் செய்யும் நிலை உருவாகும் வரையிலும், “ஹர்ஜ்” அதிகரிக்கும் வரையிலும் மறுமை நாள் நிகழாது” என நபியவர்கள் கூறினார்கள். அப்போது (ஸஹாபாக்கள்) அல்லாஹ்வின் தூதரே! “ஹர்ஜ்” என்றால் என்ன? எனக் கேட்டார்கள். அதற்கு நபியவர்கள் கொலை என பதிலளித்தார்கள்.[1]

செல்வம் அதிகரித்து நிரம்பி வழியும் வரையிலும் ஸகாத்தைக் கொடுக்கும் போது அதை வாங்குவதற்கு ஆளில்லாத நிலை ஏற்படும் வரையிலும், அரேபிய பூமி சோலைகளாகவும், நதிகளாகவும் மாறும் வரையிலும் மறுமைநாள் ஏற்படாது.[2]

---

1. அறிவிப்பாளர் : அபூஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு, நூல் : அஹ்மத்
2. அறிவிப்பாளர் : அபூஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு, நூல் : ஸஹீஹ் முஸ்லிம்

"நாங்கள் அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடன் "தபூக்" போரின்போது புறப்பட்டுச் சென்றோம். அப்போது அவர்கள் (இரு நேரத்) தொழுகைகளை (ஒரே நேரத்தில்) சேர்த்துத் தொழுது வந்தார்கள். ளுஹரையும் அஸரையும் சேர்த்து ஒரே நேரத்தில் தொழுதார்கள். மஃரிபையும் இஷாவையும் சேர்த்து ஒரே நேரத்தில் தொழுதார்கள்.

பின்னர் ஒரு நாள் தொழுகையைத் தாமதப்படுத்திவிட்டு, பிறகு வந்து ளுஹரையும் அஸரையும் சேர்த்து ஒரே நேரத்தில் தொழுதார்கள். பிறகு உள்ளே சென்றுவிட்டு, பின்னர் வந்து மஃரிபையும் இஷாவையும் சேர்த்து ஒரே நேரத்தில் தொழுதார்கள்.

பிறகு, "அல்லாஹ் நாடினால், நாளை நீங்கள் தபூக் ஊற்றுக்குச் செல்வீர்கள். முற்பகலுக்கு முன் நீங்கள் அங்கு சென்று விடாதீர்கள். நான் வருவதற்குமுன் உங்களில் எவரும் அங்கு சென்று விட்டால், அங்குள்ள தண்ணீரில் கை வைத்துவிட வேண்டாம்" என்று கூறினார்கள்.

அவ்வாறே நாங்கள் அங்கு சென்றோம். அப்போது இரு மனிதர்கள் எங்களை முந்திக்கொண்டு அந்த ஊற்றை நோக்கிச் சென்றனர். செருப்பு வார் அளவுக்கு அந்த ஊற்றில் தண்ணீர் சிறிதளவே சுரந்து கொண்டிருந்தது. பிறகு (அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் வந்து சேர்ந்தார்கள்.) அவர்கள் இருவரிடமும் "அதன் தண்ணீரில் கை வைத்தீர்களா?" என்று கேட்டார்கள். அவர்கள் இருவரும் "ஆம்" என்று பதிலளித்தனர். அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அவ்விருவரையும் கண்டித்தார்கள். அவர்கள் சொல்ல வேண்டுமென அல்லாஹ் நாடியதையெல்லாம் அவ்விருவரிடமும் கூறினார்கள்.

பிறகு மக்கள் தம் கைகளால் அந்த ஊற்றிலிருந்து சிறிது சிறிதாகத் தண்ணீர் அள்ளி ஓரிடத்தில் சேர்த்தனர். அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அந்தத் தண்ணீரில் தமது கையையும் முகத்தையும் கழுவி அந்த ஊற்றிலேயே அந்தத் தண்ணீரை விட்டார்கள். அப்போது ஊற்றிலிருந்து ஏராளமான

தண்ணீர் "பீறிட்டு" அல்லது "நிறைந்து" ஓடியது. (அறிவிப்பாளர் அபூ அலீ ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்களே இவ்வாறு ஐயத்துடன் அறிவிக்கிறார்கள்.) மக்கள் அனைவரும் தண்ணீர் அருந்தினர். பிறகு அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், "முஆதே! (எனக்குப் பிறகு) நீங்கள் நீண்ட நாட்கள் வாழ்ந்தால், இவ்விடத்தில் தோட்டங்கள், குடியிருப்புகள் ஆகியவை நிறைந்திருப்பதைக் காண்பீர்கள்" என்று (முன்னறிவிப்பாகக்) கூறினார்கள்.[1]

பட்டுப்போன பாலைவனைத்தை ஆறுகள், நதிகள், நீரூற்றுகள் மூலம் பூஞ்சோலைகளாகவும் தோட்டங்களாகவும் நிழல் தருகின்ற மரங்களையுடைய பூமிகளாகவும் மாற்றுவதற்கு நிச்சயமாக அல்லாஹ் சக்தி பெற்றவன்.

புற்பூண்டுகளை முளைப்பிக்கச் செய்யும் மழைக் குணங்களைக் கொண்ட பனிப்படலம் ஒன்று அரேபிய தீபகற்பத்தை நோக்கியே நகர்ந்து கொண்டிருக்கிறது என இன்று பல விஞ்ஞானிகள் கூறுகின்றனர். இந்த அடையாளம் இன்னும் பெரியளவில் இடம்பெறவில்லை என்றாலும் மிக விரைவில் இடம்பெறும் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

அதேநேரம் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் முஆத் ரழியல்லாஹு அன்ஹு அவர்களிடம் "முஆதே! (எனக்குப் பிறகு) நீங்கள் நீண்ட நாட்கள் வாழ்ந்தால், இவ்விடத்தில் தோட்டங்கள், குடியிருப்புகள் ஆகியவை நிறைந்திருப்பதைக் காண்பீர்கள்" எனக் கூறியதற்கேற்ப இன்று பெரிய விவசாயத் திட்டங்கள் மூலமாக தபூக் பிரதேசம் தோட்டங்கள் நிறைந்த பிரதேசமாக மாறியிருப்பதைக் கண் கூடாகக் காணலாம்.

## 99. 100. 101. அஹ்லாஸ் (أحلاس), செல்வச் செழிப்பு, மற்றும் துஹைமா (دهيماء) எனும் குழப்பங்கள்

மறுமை நாள் ஏற்படுவதற்கு முன்னர் மூன்று வகையான குழப்பங்கள் ஏற்படும் என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

1. அறிவிப்பாளர் : முஆத் இப்னு ஜபல் ரழியல்லாஹு அன்ஹு, நூல் : ஸஹீஹ் முஸ்லிம்

“நாங்கள் (ஒரு முறை) நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களோடு அமர்ந்திருந்தபோது அதிகமான குழப்பங்களைப் பற்றி கூறினார்கள். அஹ்லாஸ் குழப்பங்கள் பற்றியும் குறிப்பிட்டார்கள். அப்போது அங்கிருந்தவர்களில் ஒருவர் அல்லாஹ்வின் தூதரே! அஹ்லாஸ் ஃபித்னா என்றால் என்ன? எனக் கேட்டார். அதற்கு நபியவர்கள், ‘அஹ்லாஸ்’ குழப்பம் என்றால் ஒருவர் மற்றவரை எதிரியாகப் பார்ப்பதும், ஒருவர் அடுத்தவருடைய செல்வத்தைச் சூறையாடுவதும் எனக் கூறினார்கள்.

அதன் பின்னர் மிக சுபிட்சமான ஒரு காலம் தோன்றும், அதை வைத்து எனது குடும்பத்தைச் சார்ந்த ஒருவர் குழப்பங்களை வளர்த்துக் கொண்டிருப்பார். அவர் என்னைப் பின்பற்றுபவராக இருக்க மாட்டார். (நிச்சயமாக) இறையச்சமுள்ளவர்களே எனது நேசர்களாவார்கள்.

அதன் பின்னர் மக்கள், சீர்திருத்தம் எனும் பெயரில் உறுதியற்ற ஒருவரின் தலைமையில் ஒன்று சேர்வார்கள். ஆனால் அதில் நிலைத்திருக்க மாட்டார்கள்.

அதன் பின்னர், துஹைமா எனும் மிகக் கடுமையான குழப்பம் நிறைந்த காலம் உருவாகும். இந்த உம்மத்திலுள்ள ஒவ்வொருவரையும் அது தாக்கும். குழப்பங்கள் குறைந்து செல்வதைப்போன்று இருக்கும். அப்போது குழப்பங்கள் குறைந்து செல்கிறது என மக்கள் பேசிக்கொண்டிருக்கும் போதே மீண்டும் கிளர்ந்தெழும். அக்காலத்தில் காலையில் முஃமினாக இருப்பவர்கள் மாலையடையும் போது காஃபிராயிருப்பார்கள். அக்காலத்தில் மக்கள் ஒன்றில் நயவஞ்சகம் கலக்காத முஃமின்கள் எனவும் ஈமானே இல்லாத நயவஞ்சகர்கள் என்றும் இரு சாராராகக் காணப்படுவார்கள். உங்களது காலத்தில் இந்நிலை காணப்பட்டால் அன்றோ அல்லது மறுநாளோ தஜ்ஜாலை எதிர்பாருங்கள் எனக் கூறினார்கள்.[1]

இந்நிலை இன்னும் ஏற்படவில்லை, இந்நிலையின் தீங்குகளை விட்டும் அல்லாஹ்விடம் பாதுகாப்புத் தேடுவோம்.

---

1. அறிவிப்பாளர் : அப்துல்லாஹ் இப்னு உமர் ரழியல்லாஹு அன்ஹு, நூல் : அபூதாவூத்

## 102. ஒருமுறை ஸஜ்தா செய்வது உலகையும் அதில் உள்ளவற்றையும்விடச் சிறந்ததாகக் கருதப்படுதல்

இந்நிலை ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்கள் பூமிக்கு இறங்கியதன் பின்னர் உருவாகின்ற ஒன்றாகும்.

ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்களின் காலம் மிகச் சிறந்த ஒரு காலமாகக் காணப்படும். இபாதத்துகள் -வணக்க வழிபாடுகளைப் பொறுத்தவரை அவை செய்யப்படுகின்ற இடம் மற்றும் நேரத்தைப் பொறுத்து அதன் கூலிகளிலும், நன்மைகளிலும் வித்தியாசங்கள் காணப்படுகின்றன. எனவே, அக்காலத்தில் செய்யப்படுகின்ற இபாதத்துகள் சிறந்த இபாதத்துகளாகவும் காணப்படும்.

“என் உயிரைத் தன் கையில் வைத்திருப்பவன் மீது சத்தியமாக! விரைவில் (உலக அழிவுக்கு முன்) மர்யமின் மகன் உங்களிடையே நேர்மையாகத் தீர்ப்பளிக்கும் நீதிபதியாக இறங்கவிருக்கிறார். அவர் சிலுவையை உடைப்பார், பன்றியைக் கொல்வார், ஜிஸ்யா (எனும் காப்பு) வரியை வாங்க மறுப்பார், (இஸ்லாம் ஒன்றையே மக்களிடமிருந்து ஏற்பார்.) செல்வங்களை பெறுபவர் எவருமே இல்லாத அளவிற்கு செல்வம் வழிந்தோடும். அந்த நேரத்தில், (மக்களின் பார்வையில்) ஒரேயொரு சஜ்தா (நெற்றி நிலத்தில் பட அல்லாஹ்வை வணங்குவது) இந்த உலகத்தையும் அதிலுள்ளவற்றையும் விடச் சிறந்ததாகப் பார்க்கப்படும்.[1]

ஜிஸ்யா என்பது இஸ்லாமிய நாட்டில் வாழுகின்ற காஃபிர்கள், இஸ்லாமிய அரசுக்குச் செலுத்துகின்ற வரிப்பணமாகும். இவ்விடத்தில் ஜிஸ்யா இல்லாமல் ஆக்கப்படும் என்பதன் மூலம் அவர்கள் ஒன்று முஸ்லிமாக இருக்க வேண்டும் அல்லது அவர்கள் கொலை செய்யப்படுவார்கள் என்பதைப் புரிந்துகொள்ளலாம்.

அக்காலத்தில் மனிதர்கள் உலகப்பற்றோ, பேராசையோ அற்றவர்களாகவும் மறுமை நாள் நெருங்கிவிட்டது என்பதை உறுதியாக அறிந்தவர்களாகவும் காணப்படுவார்கள். எனவே, தொழுகை மற்றும்

1. அறிவிப்பாளர் : அபூஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு, நூல் : ஸஹீஹுல் புகாரி, ஸஹீஹ் முஸ்லிம்

ஏனைய வணக்கங்களில் அதிக ஆர்வமுள்ளவர்களாக இருப்பார்கள் என்பதையே மேலுள்ள ஹதீஸ் சுட்டிக் காட்டுகின்றது.

காழி இயாழ் ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் இந்த ஹதீஸின் ஒரு பகுதிக்கு விளக்கம் கொடுக்கும்போது "அக்காலத்தில் மக்களிடத்தில் கஞ்சத்தனம் இருக்காது. ஜிஹாத் போன்ற தேவைகளுக்குச் செலவு செய்யவேண்டிய அவசியம் காணப்படாது, மக்களிடத்தில் செல்வம் தாராளமாக இருக்கும், (எனவே, மக்கள் செல்வத்தின்மேல் எந்த நாட்டமும் இல்லாதவர்களாக மாறிவிடுவார்கள். பொருள் சார்ந்த வணக்கங்கள் இல்லாமல் ஆகிவிடும்.) ஆகவே, தொழுகையாளி ஒருவர் ஒரு முறை சஜ்தா செய்வதை உலகையும் அதிலுள்ளவற்றையும் விடச் சிறப்பாகக் கருதுவார்.

ஸஜ்தா என்பதற்கு நேரடியாக ஸஜ்தா என்ற கருத்தும் அல்லது தொழுகை என்ற கருத்தும் உண்டு. அல்லாஹ் மிக அறிந்தவன்" எனக் குறிப்பிடுகின்றார்கள்.

## 103. தலைப் பிறை பெரிதாகத் தோற்றமளித்தல்

மாதத்தின் ஆரம்பத்தில் சிறிதாகத் தோன்றிப் பின்னர் படிப்படியாகப் பெருத்து பின்னர் அம்மாதத்தின் அடுத்த அரைப் பகுதியில் சிறிதாக மாறுகின்ற சந்திரனையே நாம் பிறை என்கின்றோம்.

எனினும், மக்கள், மாதத்தின் முதல் பிறையை இரண்டாம் நாள் பிறையைப் போன்று பெரிதாகக் காண்பது மறுமை நாளின் அடையாளமாகும்.

"பிறை பெரிதாகி மக்கள் முதல் பிறையைக் கண்டு, இது இரண்டாம் பிறையைப் போன்றிருக்கிறதே என்பார்கள். இது மறுமை நாளின் அடையாளமாகும்" என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.[1]

## 104. மக்கள் அனைவரும் ஷாம் தேசத்துடன் இணைந்து விடுதல்

ஷாம் தேசம் என்பது, இன்று சிரியாவையும் அதனைச் சூழவுள்ள

1. நூல் : தபரானி

லெபனான், ஜோர்டான், பலஸ்தீன் போன்ற நாடுகளை உள்ளடக்கிய பிரதேசமாகும். ஷாம் தேசம் என்பது மஹ்ஷர்[1] பூமியாக இருக்கின்ற அதேவேளை நபிமார்கள் வாழ்ந்த பூமியாகும். ஷாம் வாசிகளுக்கென பல சிறப்புகள் உள்ளன.

“சிரியா வாசிகள் நாசமாகி விட்டால் அதற்குப் பின்னால் உங்களில் எந்த நலவும் இருக்காது. எனது உம்மத்தில் ஒரு கூட்டம் காணப்படும், அவர்கள் (அல்லாஹ்வின் புறத்திலிருந்து) உதவி பெற்றவர்களாக இருப்பார்கள். அவர்களை கைவிட்டவர்கள் அவர்களுக்கு எந்தப் பாதிப்பையும் ஏற்படுத்த முடியாது. அப்படிப்பட்ட கூட்டம் மறுமை வரைக்கும் காணப்படும்.”[2]

மறுமை ஏற்படுவதற்கு முன்னர் ஷாம் பிரதேசமே முஃமின்களின் புகலிடமாகக் காணப்படும். “முஸ்லிம்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் இடையில் நடைபெறும் ஒரு பெரிய போரின்போது முஸ்லிம்கள் டமாஸ்கஸுக்கு அருகில் உள்ள ஒரு பகுதியைத் தங்களது ஒன்று சேரும் இடமாக ஆக்கிக் கொள்வார்கள். சிரியாவிலே உள்ள நகரங்களில் அதுவே மிகச் சிறந்த நகரமாகும்” என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.[3]

மேலே உள்ள நபி மொழியில் சொல்லப்பட்ட போர்க்களம், மஹ்தி அவர்களின் வருகைக்கு முன்னர் அல்லது மஹ்தி வந்ததன் பின்னர் அவர்களது காலத்தில் அல்லது வேறொரு காலத்திலோ இடம்பெறலாம்.

எனினும், சிரியா பிரதேசமே முஃமின்களின் ஒதுங்குமிடம் என்பதனாலும், அதுவே மஹ்ஷரின் பூமி என்பதனாலும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், மக்களை அங்கே குடியேறுமாறு கூறியிருக்கின்றார்கள், நாங்கள் எங்கே சென்று குடியேறலாம் என நபித் தோழர்கள் நபியவர்களிடத்தில் கேட்டபோது, ஷாம் பிரதேசத்தை நோக்கிக் கையைக் காட்டினார்கள்.

“அல்லாஹ்வின் தூதரே! நான் எங்கே சென்று வாழவேண்டும்” என்று

1. மஹ்ஷர்: உலகம் முடிவு நாளுக்குப்பின் படைப்புகளை எழுப்புவதற்காக அல்லாஹ் ஏற்படுத்துகின்ற பெரிய மைதானத்தை இது குறிக்கும்.
2. நூல் : திர்மிதி
3. அறிவிப்பாளர் : அபுத் தர்தா ரழியல்லாஹு அன்ஹு, நூல் : அஹ்மத்

கேட்டபோது தனது கையை ஷாம் (சிரியா)வின் பக்கம் நோக்கிக் காட்டி “இங்கேதான்” என்றார்கள்.[1]

மறுமைநாள் ஏற்படுவதற்கு முன்னர் பெரும்பாலான முஃமின்கள் ஷாம் தேசம் சென்று விடுவார்கள். “ஒரு காலம் வரும் அக்காலத்தில் முஃமின்கள் அனைவரும் ஷாமை (சிரியாவை) சென்றடைந்து விடுவார்கள்” என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக அப்துல்லாஹ் இப்னு அம்ர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கின்றார்கள்.

## 105. 106. ரோமர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையே படுகொலைகள் நிறைந்த பெரும் போர் ஏற்படுவதும், காண்ஸ்டன்டினோபில்[2] வெற்றி கொள்ளப்படுவதும்.

சமாதானம், போர், போர் நிறுத்தம், மிகப்பெரும் படுகொலைகள் நிறைந்த பல வரலாற்று நிகழ்வுகளைக் கொண்டதுதான் முஸ்லிம்களுக்கும் ரோம கிறிஸ்தவர்களுக்கும் இடையே உள்ள உறவு. முஸ்லிம்களுக்கும் ரோமர்களுக்கும் உள்ள இன்றைய உறவு கூட நிலையற்றதாகவே காணப்படுகின்றது.

மஹ்தி அவர்கள் தோன்றுவதற்கு முன் முஸ்லிம்களுக்கும் ரோமர்களுக்கும் இடையில் படுகொலைகள் நிறைந்த பெரிய போர் நிகழும். அதில் முஸ்லிம்கள் வெற்றிபெற்று தொடர்ந்து காண்ஸ்டன்டினோபிலையும் வெற்றி கொள்வார்கள். அதன் பின்னர் தஜ்ஜால் வெளிப்படுவான் என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் முன்னறிவிப்புச் செய்துள்ளார்கள்.

“பைத்துல் முகத்தஸ் புனர்நிர்மாணம் செய்யப்பட்டால் மதீனா தூர்ந்து போய்விடும், மதீனா தூர்ந்து போனால் படுகொலைகள் நிறைந்த போர்

---

1. நூல் : திர்மிதி
2. கான்ஸ்டண்டினோபில் என்பது ரோமன்/பைசாண்டினிய அரசின் தலைநகரமாக விளங்கியது. அது பேரரசர் கான்ஸ்டன்டைனால் கி.பி.324ல் ரோமானிய அரசின் தலைநகராக அறிவிக்கப்பட்டது. பின்னாளில் இலத்தீன் மற்றும் ஒட்டோமான் பேரரசுகளின் தலைநகரமாக கான்ஸ்டண்டினோபில் விளங்கியது. இன்று அதன் பெயர் இஸ்தான்பூல். இது தற்போது துருக்கியின் தலைநகராக விளங்குகிறது. -மேலதிக விவரங்களுக்கு பார்க்க: https://ta.wikipedia.org/wiki/ கான்ஸ்டண்டினோபில்.

உருவாகும், அத்தகைய போர் ஏற்பட்டால் காண்ஸ்டன்டிநோபில் வெற்றி கொள்ளப்படும், காண்ஸ்டன்டிநோபில் வெற்றி கொள்ளப் பட்டால் தஜ்ஜால் வெளியாகுவான்'' என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் குறிப்பிட்டார்கள்.[1]

"நீங்கள் ரோமர்களோடு ஓர் அமைதி ஒப்பந்தம் செய்வீர்கள். பின்னர் இரு தரப்பாரும் சேர்ந்து பொதுவான ஒரு எதிரியை எதிர்த்துப் போராடி, அதில் வெற்றி பெறுவீர்கள். பின்னர் மர்ஜ்[2] எனும் இடத்திற்கு வருவீர்கள். அப்போது கிறிஸ்தவர்களில் ஒருவன் சிலுவையை உயர்த்தி சிலுவைதான் வெற்றி பெற்றது எனக் கூறுவான். இதைக்கேட்டு ஆத்திரமடைந்த ஒரு முஸ்லிம் அவனை அடித்து விடுவான். இச்செயலை மையமாக வைத்து ரோமர்கள் மாபெரும் போருக்குத் தயாராவார்கள்.''[3]

இந்த ஹதீஸை அறிவிக்கின்ற வேறுசில அறிஞர்கள் ''அப்போது ஆத்திரமடைந்த முஸ்லிம்கள் தங்களது ஆயுதங்களால் அவ்விடத்தில் போராடி அங்கேயே ஷஹீதாகுவார்கள்'' எனவும் குறிப்பிடுகின்றார்கள்.

இந்நிகழ்வு பற்றி ஸஹீஹ் முஸ்லிமில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

"ரோம பைஸாந்தியர், அஃமாக் மற்றும் தாபிக் ஆகிய இடங்களில் நிலைகொள்ளாத வரை யுக முடிவு நாள் ஏற்படாது. அவர்களை நோக்கி மதீனாவிலிருந்து ஒரு படை புறப்படும். அன்றைய நாளில் பூமியில் வசிப்போரில் அவர்களே சிறந்தவர்களாயிருப்பர். அவர்கள் அணிவகுத்து நிற்கும்போது ரோமர்கள், எங்களுக்கும் எங்களில் சிறைக் கைதிகளாகப் பிடிபட்டோருக்குமிடையே நாங்கள் போர் செய்ய எங்களை விட்டு விடுங்கள்" என்று கூறுவார்கள். அப்போது முஸ்லிம்கள், "இல்லை அல்லாஹ்வின் மீதாணையாக! எங்கள் சகோதரர்கள் மீது போர் தொடுக்க உங்களை நாங்கள் அனுமதிக்கமாட்டோம்" என்று சொல்வார்கள். ஆகவே, ரோமர்கள் முஸ்லிம்கள் மீது போர் தொடுப்பார்கள். அப்போது முஸ்லிம்களில் மூன்றிலொரு பகுதியினர்

---

1. அறிவிப்பாளர் : முஆத் ரழியல்லாஹு அன்ஹு, நூல் : அபூதாவூத், திர்மிதி
2. இவ்விடம் எதுவென குறிப்பாக இதுவரைக்கும் அடையாளப்படுத்தப்படவில்லை.
3. நூல் : அபூதாவூத்

தோற்று வெருண்டோடுவார்கள். அவர்களை அல்லாஹ் ஒருபோதும் மன்னிக்கவே மாட்டான். அவர்களில் மூன்றிலொரு பகுதியினர் கொல்லப்படுவார்கள். அவர்கள் அல்லாஹ்விடம் மிகச் சிறந்த உயிர்த்தியாகிகளாகக் காணப்படுவார்கள். மூன்றிலொரு பகுதியினர் (ரோமர்களை) வெற்றிகொள்வார்கள். அவர்கள் (அதன் பின்னர்) ஒருபோதும் சோதனைக்கு உள்ளாக்கப்பட மாட்டார்கள்.

இவ்வாறு அவர்கள் கான்ஸ்டண்டிநோபிலை வெற்றி கொள்வார்கள். அவர்கள் தம் வாள்களை ஆலிவ் (ஸைத்தூன்) மரங்களில் தொங்க விட்டு கனீமத்துகளை பங்கிட்டுக் கொண்டிருக்கும்போது, “நீங்கள் புறப்பட்டு வந்த பின் உங்கள் குடும்பத்தாரிடையே மஸீஹ் (தஜ்ஜால்) வந்து விட்டான்” என்று ஷைத்தான் குரலெழுப்புவான். உடனே அவர்கள் தம் குடும்பத்தாரை நோக்கிப் புறப்பட்டுச் செல்வார்கள். ஆனால், அது பொய்யான செய்தியாயிருக்கும். அவர்கள் ஷாமுக்கு வரும்போதே (தஜ்ஜால்) வெளிப்படுவான்.

இந்நிலையில் அவர்கள் போருக்காக ஆயத்தமாகி அணிகளை சீர்செய்து கொண்டிருக்கும்போது, தொழுகைக்காக இகாமத் சொல்லப்படும். அப்போது மர்யமின் புதல்வர் ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்கள் (வானிலிருந்து) இறங்கி வந்து அவர்களுக்குத் தலைமையேற்பார்கள். அவரை அல்லாஹ்வின் விரோதி (யாகிய தஜ்ஜால்) காணும்போது, தண்ணீரில் உப்பு கரைவதைப் போன்று கரைந்து போவான். அவனை ஒன்றும் செய்யாமல் விட்டுவிட்டால்கூட அவன் தானாகக் கரைந்து அழிந்துவிடுவான். ஆயினும், ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்களின் கரத்தால் அவனை அல்லாஹ் அழிப்பான். அப்போது ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்கள் தமது ஈட்டி முனையில் (தஜ்ஜாலைக் கொலை செய்து, அதில்) படிந்துள்ள அவனது இரத்தத்தை மக்களுக்குக் காட்டுவார்கள்.[1]

குறிப்பிட்ட யுத்தம் பற்றிய இன்னொரு அறிவிப்பில்....

(ஒரு முறை ஈராக்கிலுள்ள) கூஃபாவில் அனல் காற்று வீசியது. அப்போது ஒரு மனிதர், “அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத் அவர்களே! யுகமுடிவு வந்து விட்டது” என்று திரும்பத் திரும்பச் சொல்லிக்கொண்டே

1. அறிவிப்பாளர் : அபூஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு, நூல் : ஸஹீஹ் முஸ்லிம்

வந்தார். உடனே சாய்ந்துகொண்டிருந்த அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் நேராக எழுந்து அமர்ந்து,

“சொத்துகள் பங்கு போடப்படாத நிலையும் போர்ச்செல்வத்தின் மூலம் மகிழ்ச்சியடையாத நிலையும் ஏற்படாத வரையில் யுகமுடிவு ஏற்படாது” என்று கூறிவிட்டு, தமது கரத்தால் (ஷாம் நாட்டின் திசையை நோக்கி) சைகை செய்து,” முஸ்லிம்களைத் தாக்குவதற்காக எதிரிகளின் படையொன்று ஒன்றுதிரளும். அவர்களை எதிர்கொள்வதற்காக முஸ்லிம்களும் ஒன்று திரள்வார்கள்” என்று கூறினார்கள்.

உடனே நான், “ரோமர்களையா (எதிரிகள் என்று) கூறுகிறீர்கள்?” என்று கேட்டேன். அதற்கு அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் “ஆம்” என்று கூறிவிட்டுப் பின்வருமாறு கூறினார்கள்:

“அந்தப் போரின் போது கடுமையான பலப்பிரயோகம்[1] நடக்கும். அப்போது முஸ்லிம்கள் முதலில் ஒரு படையை அனுப்புவார்கள். ஒன்று வீர மரணம், அல்லது வெற்றியை இலக்காகக் கொண்டு அவர்கள் புறப்பட்டுச் செல்வார்கள். அவர்கள் (சென்று) போரிடும்போது இரவு நேரம் குறுக்கிடும். ஆகவே, அவர்களில் எவரும் வெற்றி பெறாமல் இரு அணியினரும் (தாக்குதலை நிறுத்திவிட்டுத் தமது முகாமிற்குத்) திரும்பி விடுவர். ஆனால், முதலில் சென்ற படையினர் (போரில்) அழிந்து விடுவர்.

பிறகு (மறுநாள்) முஸ்லிம்கள், ஒன்று வீர மரணம் அல்லது வெற்றி என்ற இலக்கில் மற்றொரு படையை முதலில் அனுப்புவார்கள். அவர்கள் (சென்று) போரிடுவார்கள். இரவு குறுக்கிடும்போது அவர்களில் எவருமே வெற்றி பெறாமல் திரும்பி விடுவர். ஆனாலும், முதலில் சென்ற அணியினர் அழிந்து விடுவார்கள்.

பிறகு (மூன்றாம் நாளு)ம், ஒன்று வீர மரணம் அல்லது வெற்றியை இலக்காக்கி மற்றொரு படையை முஸ்லிம்கள் அனுப்புவார்கள். அவர்கள் (சென்று) மாலை நேரமாகும் வரை போரிட்டு எவருக்கும் வெற்றி கிட்டாமல் திரும்பி விடுவர். அப்போதும் முதலில் சென்ற அணியினர் அழிந்து விடுவார்கள்.

---

1. ஒருவர் மற்றொருவரின் மீது தனது முழு ஆற்றலையும் வெளிப்படுத்துவது.

நான்காம் நாளாகும்போது முஸ்லிம் (படை)களில் எஞ்சியிருப்பவர்கள் எதிரிகளை நோக்கி முன்னேறிச் செல்வார்கள். அப்போது அவர்களுக்கு அல்லாஹ் தோல்வியையே தருவான். (இருந்தாலும்) அவர்கள் ஏராளமானோரைக் கொலை செய்திருப்பார்கள். அதைப் போன்ற ஓர் உயிரிழப்பை உலகம் கண்டிராது. (கொலை செய்யப்பட்டவர்களைச்) சுற்றி பறவைகள் பறக்கும். அவற்றில் ஒன்றுகூட அவர்களைக் கடந்து செல்ல முடியாமல் செத்து விழும் (அந்த அளவுக்குப் பெரிய பரப்பளவில் அவர்கள் மடிந்து கிடப்பார்கள்). நூறு பேர் கொண்ட ஒரு குடும்பத்தில் ஒரேயொருவர் மட்டுமே எஞ்சுவார்.

அப்படியிருக்கும் போது எவ்வாறு கனீமத் பொருட்களைக் கொண்டு மகிழ்ச்சியடைவது!? எதைப் பங்கிடுவது!?

இவ்வாறிருக்கும்போது, இதைவிட மிகப்பெரிய பேராபத்து ஒன்றைப் பற்றி அவர்கள் கேள்விப்படுவார்கள். அப்போது ஒருவர் (வந்து), உங்கள் குடும்பத்தாரிடையே தஜ்ஜால் வந்துவிட்டான்" என்று கூவியறிவிப்பார். உடனே அவர்கள் தம் கைகளிலுள்ளவற்றை அப்படியே போட்டுவிட்டு (தம் குடும்பத்தாரை) முன்னோக்கி வருவார்கள். அதற்கு முன்னதாக (தஜ்ஜாலைப் பற்றி அறிவதற்காக) பத்துக் குதிரை வீரர்களை உளவு பார்ப்பதற்காக அனுப்பி வைப்பார்கள்.

அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்: "நான் அவர்களுடைய பெயர்களையும் அவர்களுடைய தந்தையரின் பெயர்களையும் அவர்களுடைய குதிரைகளின் நிறங்களையும் நன்கறிவேன். அன்றைய நாளில் பூமியின் மீதுள்ள குதிரை வீரர்களில் அவர்களே சிறந்தவர்களாக இருப்பார்கள். அல்லது அன்றைய நாளில் பூமியின் மீதுள்ள சிறந்த குதிரை வீரர்களில் அவர்களும் அடங்குவர்."[1]

நாம் மேலே குறிப்பிட்டிருக்கின்ற இம்மாபெரும் படுகொலைகள் நிறைந்த போர் டமாஸ்கஸ் நகரத்தின் ஒரு பகுதியில் இடம்பெறும். அதில் கலந்து கொள்பவர்கள் உலகிலேயே மிகச்சிறந்தவர்களாக இருப்பார்கள். அல்லாஹ் அவர்களுக்கு வெற்றியைக் கொடுப்பான்.

---

1. அறிவிப்பாளர் : அப்துல்லா இப்னு மஸ்ஊத் ரழியல்லாஹு அன்ஹு, நூல் : ஸஹீஹ் முஸ்லிம், அஹ்மத்

மிகப்பெரும் படுகொலைகள் நிறைந்த போர் இடம்பெறும்போது "டமாஸ்கஸ் நகரத்தின் பசுமையான ஒரு பகுதியில் முஸ்லிம்கள் ஒன்று சேர்வார்கள்." என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுவதை நான் கேட்டேன் என அபுத் தர்தா ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் குறிப்பிடுகின்றார்கள்.[1]

முஸ்லிம்கள் மஹ்தி அவர்களின் வழி காட்டலில் எந்தவித ஆயுதமுமின்றி வெறும் தக்பீரோடும், லாஇலாஹ இல்லல்லாஹ் என்ற கலிமாவோடும் மட்டுமே கான்ஸ்டண்டினோபிலையும் வெற்றி கொள்வார்கள்.

"ஒரு பகுதி நீராலும், அடுத்த பகுதி நிலத்தாலுமான ஒரு நகர் பற்றிக் கேள்விப்பட்டுள்ளீர்களா?" என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கேட்டார்கள். அங்கிருந்தவர்கள், "ஆம் அல்லாஹ்வின் தூதரே! என பதிலளித்தார்கள். அப்போது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் "நபி இஸ்ஹாக்கின் சந்ததிகள் எழுபதாயிரம் பேர் அந்நகரில் யுத்தம் செய்வதற்காக வருவார்கள். அவர்கள் அந்த நகருக்குள் வந்திறங்கியதும் ஆயுதங்களோ, அம்புகளோ இன்றி "லாஇலாஹ இல்லல்லாஹ், அல்லாஹு அக்பர்" எனும் வார்த்தைகளைக் கொண்டே அந்நகரின் ஒருபக்கம் முஸ்லிம்களிடம் வீழ்ந்துவிடும்[2] எனக் கூறினார்கள்.

பின்னர் இரண்டாம் முறையும் தக்பீரோடு அடுத்த பகுதியும் வீழ்ந்துவிடும். பின்னர் மூன்றாம் முறையும் தக்பீர் சொல்லுவார்கள். அதனோடு அவர்கள் (அந்நகரத்தை) முழுமையாக வெற்றிகொண்டு அங்குள்ள கனீமத் பொருட்களையும் பெறுவார்கள். பின்னர் அவற்றைப் பங்கு வைக்கும் பொது தஜ்ஜால் வந்து விட்டான் என ஒரு கூக்குரல் கேட்கும். உடனே அனைவரும் தங்களது கைகளில் இருந்தவற்றை வீசி விட்டுத் திரும்பி விடுவார்கள்."[3]

---

1. நூல் : அஹ்மத்
2. இப்னு யஸீத் அவர்கள் இந்த ஹதீஸை அறிவிக்கும்போது முஸ்லிம்களின் கைகளில் விழும் இப்பகுதி நீரோடை உள்ள பகுதியாகும். மற்ற பகுதி பற்றி எனக்குத் தெரியாது எனக் கூறினார்கள்.
3. அறிவிப்பாளர் : அபூஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு, நூல் : அஹ்மத்

மேலே குறிப்பிடப்பட்டுள்ள 'நகரம்' என்பது கான்ஸ்டண்டிநோபிலாகும் என இமாம் காழி இயாழ் ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் குறிப்பிட்டுள்ளதாக இமாம் நவவி ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் குறிப்பிடுகின்றார்கள்.

மேற்படி அரேபியர்களுக்கும் ரோமர்களுக்கும் இடையில் மாபெரும் போர் ஏற்பட்டு அதன் தொடர்ச்சியாக கான்ஸ்டண்டிநோபிலும் வெற்றி கொள்ளப்படும் என்பதே பெரும்பாலான அறிஞர்களின் கருத்தாகும்.

## 107. வாரிசுச் சொத்துக்கள் பங்கு வைக்கப்படாமல் இருப்பது

## 108. கனீமத் செல்வம் கிடைக்கப்பெற்றும் திருப்தியடையாமல் இருப்பது

கொலைகளும், கிறிஸ்தவர்களுடனான யுத்தங்களும் அதிகரித்துச் செல்வது மறுமை நாளின் இருபெரும் அடையாளங்களாகும்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தனது கையை ஷாம் தேசத்தின் பக்கம் சுட்டிக்காட்டி "வாரிசுச் சொத்துக்கள் பிரிக்கப்படாமலும், மக்கள் கனீமத் பொருட்களைப் பெற்றும் திருப்தியடையாத நிலையும் ஏற்படாமல் மறுமை நாள் ஏற்படாது" எனக் கூறினார்கள்.[1]

## 109. மக்கள் பழங்கால ஆயுதங்கள் மற்றும் வாகனங்களின் பக்கம் திரும்புதல்

"..... இவ்வாறிருக்கும்போது, இதைவிட மிகப்பெரிய பேராபத்து ஒன்றைப் பற்றி அவர்கள் கேள்விப்படுவார்கள். அப்போது ஒருவர் (வந்து), "உங்கள் குடும்பத்தாரிடையே தஜ்ஜால் வந்துவிட்டான்" என்று கூவி அறிவிப்பார். உடனே அவர்கள் தம் கைகளிலுள்ளவற்றை அப்படியே போட்டுவிட்டு (தம் குடும்பத்தாரை) முன்னோக்கி வருவார்கள். அதற்கு முன்னதாக பத்துக் குதிரை வீரர்களை (தஜ்ஜாலைப் பற்றி உளவு) பார்ப்பதற்காக அனுப்பி வைப்பார்கள்.

அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்

1. அறிவிப்பாளர் : இப்னு மஸ்ஊத் ரழியல்லாஹு அன்ஹு, நூல் : ஸஹீஹ் முஸ்லிம்

கூறினார்கள்: " நான் அவர்களுடைய பெயர்களையும் அவர்களுடைய தந்தையரின் பெயர்களையும் அவர்களுடைய குதிரைகளின் நிறங்களையும் நன்கறிவேன். அன்றைய நாளில் பூமியின் மீதுள்ள குதிரை வீரர்களில் அவர்களே சிறந்தவர்களாக இருப்பார்கள். அல்லது அன்றைய நாளில் பூமியின் மீதுள்ள சிறந்த குதிரை வீரர்களில் அவர்களும் அடங்குவர்."[1]

இங்கே இறுதிக்கால யுத்தங்களில் பழங்கால ஆயுதமான குதிரைகள் பயன்படுத்தப்படும் என்பதைப் புரிந்துகொள்ள முடிகிறது.

## 110. பைத்துல் முகத்தஸ் புனர் நிர்மாணம் செய்யப்படுவதும், 111. மதீனா பாழடைவதும்

"பைத்துல் முகத்தஸ் புனர் நிர்மாணம் செய்யப்பட்டால், யத்ரிப் (மதீனா) பாழடைந்துவிடும். யத்ரிப் (மதீனா) பாழடைந்துவிட்டால் (அறிவிக்கப்பட்ட) போர்கள் நிகழும், போர்கள் நிகழ்ந்தால் கான்ஸ்டண்டிநோபில் வெற்றி கொள்ளப்படும், கான்ஸ்டண்டிநோபில் வெற்றி கொள்ளப்பட்டால், தஜ்ஜால் வெளியாகி விடுவான்" என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள், பின்னர், நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் முஆத் ரழியல்லாஹு அன்ஹு அவர்களுடைய தோளில் அல்லது தொடையின் மீது அடித்து கூறினார்கள்: "நீர் (இப்போது) இந்த இடத்தில் இருப்பது எவ்வளவு உண்மையோ அவ்வாறே நான் கூறிய இந்த விஷயங்களும் உண்மை என்பதில் சந்தேகமில்லை" எனக் கூறினார்கள்.[2]

மேலுள்ள ஹதீஸ்களில், பைத்துல் முகத்தஸ் புனர் நிர்மாணம் செய்யப்பட்டு, அங்குள்ள கட்டிடங்களும் அதிகரித்துப் புதுப்பொலிவு பெற்று மக்கள் அங்கு அதிகம் செல்லவும் குடியேறவும் ஆரம்பித்தவுடன் மக்கள் மதீனாவிற்கு வருவதும் அங்கு தங்கி இருப்பதும் குறைந்துவிடும்.

---

1. அறிவிப்பாளர் : அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத் ரழியல்லாஹு அன்ஹு, நூல் : ஸஹீஹ் முஸ்லிம், அஹ்மத்
2. அறிவிப்பாளர் : முஆத் இப்னு ஜபல் ரழியல்லாஹு அன்ஹு, நூல் : அபூதாவூத் 4294.

சமகாலத்திலும் கூட மக்களின் தொகையும் வருகையும் மதீனாவில் குறைந்து வருவதையும் அதிகமானோர் மதீனாவிலிருந்து வெளியேறுவதையும் உணர முடிகின்றது.

இன்னொரு அறிவிப்பில், “மதீனா நகரம் அது மிக அழகுடன் இருக்கின்ற நிலையில் அப்படியே (கேட்பாரற்று) விட்டுவிடப்படும். (மதீனாவுடைய) பள்ளிவாசலின் சுவர்களில் சிலவற்றின் மீது அல்லது மிம்பரின் மீது நாய்; அல்லது ஓநாய் சிறுநீர் கழிக்கும்” என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள், “அப்போது மதீனாவில் இருக்கின்ற விளைச்சல்களையும் பழங்களையும் யார் அனுபவிப்பார்கள்” என அங்கிருந்தவர்கள் கேட்டபோது “பறவைகளும் வேட்டை மிருகங்களும்” அனுபவிக்கும் எனக் கூறினார்கள்.

“ஓரிடத்திலிருந்து கனீமத்களைப் பெற்றுக் கொள்வதற்காக நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் எங்களை அனுப்பி வைத்தார்கள், நடந்து சென்ற நாங்கள் எதையும் பெற்றுக் கொள்ளாத நிலையில் திரும்பினோம். எங்களது முகங்களில் களைப்பைக் கண்ட நபியவர்கள் யாஅல்லாஹ்! இவர்களை என்பக்கம் சாட்டிவிடாதே, இவர்களுக்கு எதுவும் செய்யமுடியாத நிலையில் நான் உள்ளேன். இவர்களை இவர்களின் பக்கமும் சாட்டிவிடாதே! இவர்களும் எதற்கும் இயலாதவர்கள். இவர்களை மக்களின் பக்கம் சாட்டிவிடாதே! மக்கள் இயலாதவர்களை அடக்கியாள முயல்வார்கள்” எனக்கூறிவிட்டு,

அவர்களது கையை எனது தலைமீது (அல்லது முன்னெற்றியில்) வைத்து “ஹவாலாவின் மகனே! பைத்துல் முகத்தஸில் கிலாஃபத் ஏற்பட்டுவிட்டால் நில நடுக்கங்களும், பதட்டங்களும், புதுமைகளும், ஆச்சரியமான பல சம்பவங்களும் இடம்பெறும், அப்படி இடம் பெற்றால் எனது கை உனது தலைக்கு எவ்வளவு நெருக்கமாக இருக்கிறதோ அதைவிட மறுமைநாள் நெருக்கமாகி விட்டது என்பதை அறிந்துகொள்” என்றார்கள்.[1]

---

1. அறிவிப்பாளர் : அப்துல்லாஹ் இப்னு ஹவாலா ரழியல்லாஹு அன்ஹு, நூல் : அஹ்மத், அபூதாவூத்

## 112. துருத்தி இரும்பைச் சுத்தப்படுத்துவது போன்று மதீனா தன்னை விட்டும் தீயவர்களை வெளியேற்றி தன்னை சுத்தப்படுத்துதல்

ஏற்கனவே, மதீனா பாழடைந்துவிடும் எனவும், அது மக்கள் குடியேற்றமின்றிக் காணப்படும் என்பதைப் பார்த்தோம். தற்போது இங்கு சொல்லப்படும் மறுமை நாளின் அடையாளம், மேலே சொல்லப்பட்ட நிலைக்கு அடுத்து நிகழக்கூடியதாக இருக்கும் என புரியமுடிகிறது.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் ஹிஜ்ரத்தோடு மதீனா பள்ளிவாசல் (மஸ்ஜிதுன் நபவி) உருவாக்கப்பட்டு வளர்ச்சியடைந்து மக்கள் குடியேற்றமும் அதிகரித்துக் கொண்டே சென்றது. எனினும், மறுமைநாள் நெருங்கும்போது மதீனா பாழடைந்து, கவனிப்பாரற்ற நிலைக்குத் தள்ளப்படும்.

“மக்களுக்கு ஒரு காலம் வரும். அன்று ஒருவர் தம் தந்தையின் சகோதரர் மகனையும் தம் உறவினரையும் செழிப்பான இடத்திற்கு வா! செழிப்பான இடத்திற்கு வா!” என அழைப்பார். ஆனால், அவர்கள் (உண்மையை) அறிந்திருப்பாராயின் மதீனாவே அவர்களுக்குச் சிறந்ததாகும். என் உயிர் எவன் கையிலுள்ளதோ அவன்மீது சத்தியமாக! அவர்களில் எவரேனும் மதீனாவை வெறுத்து அதிலிருந்து வெளியேறினால், அவருக்குப் பதிலாக அவரைவிடச் சிறந்தவரை அங்கு அல்லாஹ் அமர்த்தாமல் இருப்பதில்லை.

“அறிந்து கொள்ளுங்கள்! மதீனா, (கொல்லனின்) உலையைப் போன்று அசுத்தங்களை அகற்றிவிடும். இரும்பின் துருவை (கொல்லனின்) உலை நீக்கிவிடுவதைப் போன்று, மதீனா தன்னிலுள்ள தீயவர்களை வெளியேற்றாமல் இறுதி நாள் நிகழாது.” என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக அபூஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கின்றார்கள்.[1]

உமர் இப்னு அப்துல் அஸீஸ் ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் ஒருமுறை மதீனாவை விட்டு வெளியில் சென்றார்கள். அப்போது

1. நூல் : ஸஹீஹ் முஸ்லிம்

தனது அடிமையாகிய மஸாஹிமைப் பார்த்து “மஸாஹிமே மதீனா சிலரை வெளியாக்கிவிடும் என்று சொல்லப்பட்டுள்ளதே நாங்களும் அவர்களில் உள்ளவர்களாக இருக்கலாம் என நினைக்கிறீரா?” என்று கேட்டதாக ஒரு செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பல சிறப்புமிக்க ஸஹாபாக்களெல்லாம் தஃவா மற்றும் ஜிஹாதிய நோக்கங்களுக்காக மதீனாவை விட்டும் வேறு இடங்களுக்குக் குடிபெயர்ந்துள்ளார்கள் எனவே, மேலே சொல்லப்பட்டுள்ள செய்திகளை வைத்து, மதீனாவிலிருந்து குடிபெயர்ந்து வேறு இடங்களுக்குச் செல்பவர்கள் அனைவருமே மதீனா வெளியாக்கிய மோசமானவர்கள் எனக் கூறிவிட முடியாது.

“மதீனா வளமிக்க நகராக இருந்தும், இரைதேடக்கூடிய பறவைகளும் விலங்குகளும் மட்டுமே நாடி வரக்கூடியதாக அதை மக்கள் விட்டு(ச் சென்று) விடுவார்கள்! மறுமை நாளில், இறுதியாக எழுப்பப்பட இருப்பவர்கள் முஸைனா குலத்தைச் சேர்ந்த இரண்டு இடையர்களாவர்! அவர்கள் இருவரும் தம் ஆடுகளை (இடையர்களின் பாணியில்) அதட்டி அழைத்த வண்ணம் மதீனாவை நாடிச் செல்வார்கள். (மதீனாவைச் சென்றடைந்ததும்) மதீனாவை (மனித சஞ்சாரமற்ற) மிருகங்களின் வசிப்பிடமாகக் காண்பார்கள்: இறுதியில் ‘வதா’ (எனும்) மலைக்குன்றை அடைந்தவுடன் முகம் குப்புற மூர்ச்சையுற்று விழுந்து (இறந்து) விடுவார்கள்!”[1]

அதாவது, மதீனாவில் வாழ்வதற்கான வாய்ப்புகளும், வசதிகளும் இருந்தும் கூட, மக்கள் சந்திக்கின்ற குழப்பங்கள் அவர்களை மதீனாவை விட்டும் வெளியேறுவதற்கு நிர்ப்பந்தித்துவிடும். மதீனாவில் வீடுகளும், பாதைகளும். பள்ளிவாசல்களும், வெறிச்சோடிப் போய், அங்குள்ள பள்ளிவாசல்களில் நாய்கள் சிறுநீர் கழிக்கின்ற நிலை ஏற்படும். அவற்றைத் தடுக்கக்கூட அங்கே யாரும் இருக்க மாட்டார்கள்.

## 113. மலைகள் அகற்றப்படுதல்

அல்லாஹ் மலைகளை பலமானதாகவும், பூமிக்கு நங்கூரமாகவும் ஆக்கியிருக்கின்றான். இம்மலைகளை அகற்றுவது மறுமை நாளின்

---

1. அறிவிப்பாளர் : அபூஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு, நூல் : ஸஹீஹுல் புகாரி

அடையாளங்களில் ஒன்றாகும் என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

பூகம்பங்கள், இடி விழுதல், மலைகளை உடைத்து கட்டிடங்கள் கட்டுதல், ஆங்காங்கே இடம்பெறுகின்ற மலைச் சரிவுகள் போன்றவற்றால் மலைகள் அதன் இடங்களிலிருந்து அகற்றப்படுவதைப் பார்க்கிறோம்.

“மலைகள் அவை இருக்கின்ற இடங்களை விட்டும் அகற்றப்படும் வரையிலும், நீங்கள் கண்டிராத பல திகிலூட்டும் சம்பவங்களைக் காணும் வரையிலும் மறுமை நாள் ஏற்படாது” என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.[1]

## 114. கஹ்தான் கோத்திரத்திலிருந்து ஒரு மனிதர் தோன்றுவதும் அவருக்கு மக்கள் கட்டுப்படுவதும்

யுக முடிவு நாள் நெருங்கும்போது கஹ்தான் எனும் அரபுக் கோத்திரத்தில் இருந்து ஒருவர் தோன்றுவார். மக்கள் ஒருமித்த கருத்தில் அவரோடு ஒன்றிணைந்து அவருக்குக் கட்டுப்படுவார்கள்.

“கஹ்தான்’ குலத்திலிருந்து ஒருவர் தோன்றி, தம் (அதிகார) கைத்தடியால் மக்களை ஓட்டிச் செல்லாத வரை மறுமை நாள் வராது.” என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.[2]

மேற்படி, ஹதீஸில் அம்மனிதன் மக்களைத் தனது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருப்பார் எனக் கூறப்பட்டிருந்தாலும், “கஹ்தான் கோத்திரத்தில் இருந்து ஒருவர் வெளியாகுவார். அவர்கள் அனைவரும் நல்லவர்களே” எனும் நபிமொழியை வைத்துப் பார்க்கின்றபோது, அவர் ஒரு நல்ல மனிதராகவே காணப்படுவார் என்பதை புரியமுடிகிறது. ஆகவே, அந்த மனிதர் தனது அடக்கு முறையால் மக்களை கட்டுப்படுத்த மாட்டார். தனது சீர்திருத்த கொள்கையாலும் சன்மார்க்க போதனைகளாலும் மக்களை வழி நடத்தி தனது கட்டுப்பாட்டில் வைத்திருப்பார் என்பதையும் புரியமுடிகிறது.

1. அறிவிப்பாளர் : ஸம்ரா ரழியல்லாஹு அன்ஹு, நூல் : தபரானி
2. அறிவிப்பாளர் : அபூஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு, நூல் : ஸஹீஹுல் புகாரி, ஸஹீஹ் முஸ்லிம்

## 115. ஜஹ்ஜாஹ் உடைய வருகை

மறுமை நாளின் அடையாளமாக ஜஹ்ஜாஹ் எனும் பெயருடைய ஒருவர் தோன்றுவார் எனவும் நபிமொழிகளில் கூறப்பட்டுள்ளது.

கஹ்தானிகள் சுதந்திரவாதிகளாகவும், ஜஹ்ஜாஹ் (جهجاه) அடிமைகளில் ஒருவராகவும் காணப்படுவதால் இவருக்கும் நாம் மேலே கூறிய கஹ்தான் கோத்திரத்தைச் சேர்ந்தவருக்கும் சம்பந்தம் இல்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

யுக முடிவு காலங்களில் பல மனிதர்கள் தோன்றுவார்கள், அவர்கள் மக்கள் மத்தியில் செல்வாக்குச் செலுத்துவார்கள் எனக் கூறிய நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், அப்படிப்பட்ட சிலரின் பெயர்களையும் மற்றும் சிலரின் பண்புகளையும் அடையாளப்படுத்தியுள்ளார்கள். இவர்களில் நாம் இங்கு குறிப்பிடுகின்ற ஜஹ்ஜாஹ் என்பவரும் ஒருவராவார்.

“ஜஹ்ஜாஹ்” எனப்படும் ஒரு மனிதர் ஆட்சி செய்யாத வரை இரவு பகல் அழிந்து போய்விடாது. (அதாவது மறுமை நாள் ஏற்படாது.)” என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.[1]

ஜஹ்ஜாஹ் என்றால், அதிகம் சப்தமிடுபவர் என இமாம் இப்னு ஹஜர் ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் தனது பத்ஹுல் பாரி என்ற நூலில் குறிப்பிடுகின்றார்கள்.

## 116. வேட்டைப் பிராணி பேசுதல், 117. சாட்டை பேசுதல், 118. செருப்புப் பட்டி பேசுதல், 119. தொடை பேசுதல்

மறுமை நாள் நெருங்கும்போது அதன் அடையாளங்களாக வேட்டை மிருகங்கள், சாட்டை, செருப்புப் பட்டி, தொடை ஆகியவை பேசும் என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

“எனது உயிர் எவன் கைவசம் இருக்கின்றதோ அவன் மீது சத்தியமாக வேட்டைப் பிராணிகளும், சாட்டையும், செருப்புப் பட்டியும் மனிதர்களோடு பேசாத வரையிலும், (ஒருவர் தனது) வீட்டில் இல்லாத

1. அறிவிப்பாளர் : அபூஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு, நூல் : ஸஹீஹ் முஸ்லிம்

நேரத்தில் அவரது குடும்பத்தில் என்ன நடந்தது என்பதை (அவரது) தொடை அவரிடம் சொல்லிக் கொடுக்கும் (நிலை ஏற்படாத) வரையிலும் மறுமை நாள் நிகழாது" என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.[1]

சாட்டை மற்றும் தொடை என்பன இதுவரை பேசியதாகக் காணக்கிடைக்கவில்லை (அல்லாஹ் மிக அறிந்தவன்). எனினும், இச்செய்திகள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் மூலமாக அல்லாஹ்விடமிருந்து வந்த செய்திகளாகக் காணப்படுவதால் நிச்சயமாக மறுமை நாள் நிகழ்வதற்கு முன் இடம்பெறும் என்பதில் சந்தேகமில்லை.

மேற்படி மறுமை நாளின் அடையாளங்களுக்கு விளக்கம் கொடுக்க முனைந்த ஆய்வாளர்கள் சிலர் அவைகளுக்கு நேரடியான அர்த்தம் கொடுக்காமல் இன்று காணப்படுகின்ற நவீன தொலைபேசி, SMS, MMS, VOICE MESSAGE என்பவைகளை அவற்றின் விளக்கமாகக் கொடுக்கின்றனர்.

எனினும் பல உலமாக்கள் அவற்றுக்கு நேரடியான அர்த்தம் கொடுத்து உண்மையில் செருப்பின் பட்டியும், சாட்டையும், தொடையும் பேசும் எனக் குறிப்பிடுகின்றனர். (அல்லாஹ் மிக அறிந்தவன்)

**வேட்டை மிருகம், நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் காலத்திலேயே பேசிவிட்டது.**

"மதீனாவின் பகுதிகளில் நாட்டுப்புற அரபியொருவர் எங்களோடு ஆடுகளை வளர்த்து வந்தார். ஒருநாள் ஓநாயொன்று அவரது ஆடுகளில் ஒன்றை கவ்விக் கொண்டது. எனினும், அந்த நாட்டுப்புறத்து அரபி தனது ஆட்டை ஓநாயிடமிருந்து பாதுகாத்துப் பறித்து எடுத்துக் கொண்டபோது அந்த ஓநாய் அவரைப் பார்த்து முறைத்துக் குரைத்துவிட்டு சென்றது. மீண்டும் தனது வாலை கால்களுக்குள் மடித்துக்கொண்டு தனது கைகளை பூமியல் நாட்டியவாறு "அல்லாஹ் எனக்களித்த உணவைப் பறித்துக் கொண்டாயே" எனக் கூறியது.

1. அறிவிப்பாளர் : அபூஸயீத் அல் குத்ரி ரழியல்லாஹு அன்ஹு, நூல் : திர்மிதி

இதனைக்கேட்ட அந்த மனிதன் "என்ன ஆச்சரியம்! ஓநாய் பேசுகிறதே!" என ஆச்சரியமாகக் கூறினான். அப்போது அந்த ஓநாய் "நீ இதைவிட ஆச்சரியமானதையெல்லாம் தவற விட்டுவிட்டாயே!" எனக் கூறியது.

அப்போது அம் மனிதன் : "அப்படி என்ன ஆச்சரியத்தை விட்டுவிட்டேன்" எனக் கேட்டான்.

அதற்கு அந்த ஓநாய்: "மலைப்பாங்கான இரண்டு கிராமங்களுக்கிடையில் பேரிச்சை மரங்களுக்கு மத்தியில் (வசிக்கின்ற) அல்லாஹ்வின் தூதர் ஒருவர் முடிந்த மற்றும் நடக்கவிருக்கும் சென்றகால மற்றும் வருங்கால செய்திகளை சொல்கின்றாரே!" எனக் கூறியது.

இதனைக் கேட்ட அம்மனிதன் தனது ஆடுகளை ஒன்று சேர்த்து அங்குள்ள சில மதீனாவாசிகளிடம் ஒப்படைத்துவிட்டு, அல்லாஹ்வின் தூதரைத் தேடிச் சென்று கதவைத் தட்டினான். வெளியே வந்த நபியவர்கள் "ஆடு மேய்க்கும் நாட்டுப்புற அரபி எங்கே? எனக் கேட்டார்கள். அம்மனிதர் எழுந்து நின்றதும் "நீ கண்டதையும் கேட்டதையும் மக்களுக்குச் சொல்" என்றார்கள். அவர் (தான் கண்டதையும் கேட்டதையும்) சொல்லி முடித்ததும் "இம்மனிதர் கூறியவை (அனைத்தும்) உண்மையாகும். இது மறுமை நாளின் அடையாளங்களில் ஒன்றாகும். எனது உயிர் எவன் கைவசம் இருக்கிறதோ அவன் மீது சத்தியமாக உங்களில் ஒருவர் (வீட்டை விட்டும்) வெளியே சென்ற பின்னர், உங்களது குடும்பத்தில் என்ன நடந்தது? என்பதை உங்கள் செருப்புப் பட்டியும், சாட்டையும் அல்லது கைத்தடியும் அறிவித்துத் தருகின்ற நிலை ஏற்படுவதற்கிடையில் மறுமை நாள் உண்டாகாது" எனக் குறிப்பிட்டார்கள்.[1]

**மாடும் பேசி விட்டது**

"இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஸுப்ஹுத் தொழுதுவிட்டு மக்களை நோக்கி, '(பனூ இஸ்ராயீல் சமுதாயத்தில்) ஒருவர் ஒரு பசுமாட்டை ஓட்டிச் சென்று கொண்டிருக்கையில் அதை அடித்து, அதில் ஏறி சவாரி செய்து கொண்டிருந்தார். அப்போது அந்தப்

1. அறிவிப்பாளர் : அபூஸயீத் அல் குத்ரி ரழியல்லாஹு அன்ஹு, நூல் : அஹ்மத்

பசுமாடு, 'நாங்கள் இதற்காக (மனிதர்களாகிய உங்களைச் சுமந்து செல்வதற்காகப்) படைக்கப்படவில்லை. நாங்கள் படைக்கப்பட்டது (நிலத்தில்) உழுவதற்காகத்தான்' எனக் கூறியதாகக் கூறினார்கள். (இதைக் கேட்ட) மக்கள், 'சுப்ஹானல்லாஹ்! பசுமாடு பேசுமா?" என்று (வியந்து) கேட்டார்கள். இதைக் கேட்ட நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், 'நானும் அபூபக்கரும் உமரும் இதை நம்புகிறோம்' என்று கூறினார்கள்.

அப்போது அங்கே அபூபக்கர் ரழியல்லாஹு அன்ஹு அவர்களும் உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்களும் இருக்கவில்லை.

தொடர்ந்து, நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், 'ஒருவர் தன் ஆடுகளுக்கிடையே (அவற்றை மேய்த்துக் கொண்டு) இருந்தபோது ஓநாய் (ஆட்டு மந்தைக்குள் புகுந்து) ஓடி, ஆட்டை(த் தாக்கிக் கவ்விக் கொண்டு சென்றது. அந்த ஆட்டை ஓநாயிடமிருந்து அவர் காப்பாற்றி விட்டார். உடனே, அந்த ஓநாய் அவரைப் பார்த்து, 'நீ இதை என்னிடமிருந்து இன்று காப்பாற்றி விட்டாய். ஆனால், கொடிய விலங்குகள் ஆதிக்கம் செலுத்தும் (உலக முடிவு) நாளில் இதற்கு (பாதுகாவலர்) யார் இருக்கிறார்கள்? அந்நாளில் இதற்கு என்னைத் தவிர பாதுகாவலர் யாரும் இல்லையே!' என்று கூறியது' எனக் கூறினார்கள். இதைக் கேட்ட மக்கள், 'சுப்ஹானல்லாஹ்! ஓநாய் பேசுமா?' என்று கேட்டார்கள். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், 'நானும் அபூபக்கரும், உமரும் இதை நம்புகிறோம்' என்று கூறினார்கள். அபூபக்கர் ரழியல்லாஹு அன்ஹு அவர்களும் உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்களும் அங்கே அப்போது இருக்கவில்லை.[1]

"...நிச்சயமாக அல்லாஹ் அனைத்தின் மீதும் ஆற்றல் உள்ளவன்" என்கின்ற அல் குர்ஆன் வசனத்தை வைத்துப் பார்க்கின்றபோது மேலே மிருகங்கள் பேசுவதாகக் குறிப்பிடப்படுவது அவற்றின் உண்மையான பேச்சுக்களைப் பற்றியே என்பதை வெளிப்படையாகவே உணர முடிகின்றது.

1. அறிவிப்பாளர் : அபூஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு, நூல் : ஸஹீஹ் முஸ்லிம்

## 120. இஸ்லாம் ஆதரவற்றுப் போவது

## 121. மனிதர்களது உள்ளங்களிலிருந்தும், ஏடுகளிலிருந்தும் குர்ஆன் உயர்த்தப்படுவது

அறியாமையும், பாவங்களும், அதிகரித்தல், இஸ்லாம் ஆதரவற்று உள்ளங்களிலிருந்தும், ஏடுகளிலிருந்தும் அல்குர்ஆன் உயர்த்தப்படுதல், தொழுகை நோன்பு போன்ற வணக்கங்கள் பற்றிய அறியாமை, மனிதர்கள் லாஇலாஹ இல்லல்லாஹ் என்ற கலிமாவைப் பற்றிய அறிவுகூட இல்லாதிருத்தல் போன்ற அனைத்தும் மறுமை நாளின் அடையாளங்களாகும்.

"ஆடை மங்கிப்போவது போன்று இஸ்லாமும் மங்கிப்போய், தொழுகை, நோன்பு, குர்பானி, ஸதகா போன்ற (அடிப்படையான விஷயங்களில் கூட) அறிவில்லாத ஒரு நிலை ஏற்படும். ஒரு நள்ளிரவில் அல்குர்ஆனின் ஒரு ஆயத்துக்கூட இல்லாமல் அனைத்தும் உயர்த்தப்பட்டுவிடும், எஞ்சியிருக்கக்கூடிய சில வயோதிகர்களிடத்தில் "லாஇலாஹ இல்லல்லாஹ்" (எனும் கலிமாவைப்) பற்றிக் கேட்டால், எங்களது முன்னோர்கள் "லாஇலாஹ இல்லல்லாஹ்" என்ற கலிமாவை சொல்லுவார்கள் நாங்களும் அதைச் சொல்கிறோம் என்பார்கள்" என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் குறிப்பிட்டார்கள்.[1]

ஹுதைஃபா ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் இச்செய்தியைக் கூறியபோது அங்கிருந்தவர்கள் ஆச்சரியப்பட்டார்கள். அப்போது ஸிலா இப்னு ஸஃபர் எனும் அறிவிப்பாளர் "ஹுதைஃபாவே! தொழுகை, ஸதகா மற்றும் குர்பானி போன்ற (அடிப்படை) விஷயங்களைப் பற்றியே தெரியாதபோது "லாஇலாஹ இல்லல்லாஹ்"வை மட்டும் தெரிந்திருப்பதால் என்ன பயன்? எனக் கேட்டார்கள். இக்கேள்வியை ஹுதைஃபா ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் கண்டு கொள்ளாமல் மூன்று முறை மீண்டும் மீண்டும் மேற்படி ஹதீஸை கூறினார்கள். பின்னர் "ஸிலாவே! (அந்த கலிமா) அவர்களை நரக நெருப்பை விட்டும் பாதுகாக்கும்" என்றார்கள்.[2]

---

1. அறிவிப்பாளர் : ஹுதைஃபா ரழியல்லாஹு அன்ஹு
2. நூல் : இப்னு மாஜா

## 122. கஅபாவை அழிப்பதற்கு வருகின்ற படை பூமிக்குள் விழுங்கப்படுதல்

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் உம்மத்தில் ஒரு கூட்டம் கஅபாவை இடிப்பதற்காகப் படையோடு வந்து மஹ்தி அவர்களைப் போருக்கு அழைப்பார்கள். அப்போது அல்லாஹ் அவர்கள் அனைவரையும் பூமிக்குள் விழுங்கிவிடச் செய்வான்.

“ஹாரிஸ் இப்னு அபூ ரபீஆ மற்றும் அப்துல்லாஹ் இப்னு ஸஃப்வான் ரஹ்மதுல்லாஹி அலைஹி ஆகியோர் இறைநம்பிக்கையாளர்களின் அன்னை உம்மு ஸலமா ரழியல்லாஹு அன்ஹா அவர்களிடம் சென்றனர். அப்போது அவ்விருவருடன் நானும் இருந்தேன். அவர்கள் இருவரும் உம்மு ஸலமா ரழியல்லாஹு அன்ஹா அவர்களிடம், பூமிக்குள் புதைந்துபோகும் படையினரைப் பற்றிக் கேட்டார்கள்.[1]

அதற்கு உம்மு ஸலமா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள், அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் (கூறியதாக) “ஒருவர் கஅபா (எல்லை)க்குள் அபயம் தேடி வருவார். அவரை நோக்கிப் படையொன்று அனுப்பப்படும். அப்படையினர் ஒரு சமவெளியில் இருக்கும்போது, பூமிக்குள் புதைந்துபோய் விடுவார்கள்” (இதைக் கேட்ட) நான், “அல்லாஹ்வின் தூதரே! நிர்ப்பந்தமாகப் புறப்பட்டு வந்தவர்களின் நிலை என்ன?” எனக் கேட்டேன். ”அவர்களுடன் சேர்த்து (நிர்ப்பந்தமாக வந்தவர்களும்) புதைந்துபோவார்கள். எனினும், மறுமை நாளில் அவரவர் எண்ணங்களுக்கேற்ப எழுப்பப்படுவார்கள்” எனக் கூறினார்கள்.[2]

திர்மிதியில் வரக்கூடிய இன்னொரு அறிவிப்பில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பூமி விழுங்கும் படையைப்பற்றி கூறியபோது, உம்மு ஸலமா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் “அவர்களில் விருப்பமின்றி வந்தவர்களும் இருப்பார்களல்லவா” எனக் கேட்டார்கள், அதற்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி

---

1. இது அப்துல்லாஹ் இப்னு ஸுபைர் ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் காலத்தில் நடைபெற்றது.
2. அறிவிப்பாளர் : உபைதுல்லாஹ் இப்னு அல்கிப்திய்யா ரழியல்லாஹு அன்ஹு, நூல் : ஸஹீஹ் முஸ்லிம்.

வஸல்லம் அவர்கள் “ஒவ்வொருவரும் அவரவர் எண்ணத்திற்கு ஏற்றாற்போல் மறுமையில் எழுப்பப்படுவார்கள்'' என பதிலளித்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது.

அவர்களில் விருப்பமின்றி வந்தவர்களும், விருப்பத்தோடு வந்தவர்களும், வேறு பிரயாணிகளும் கூட இருக்கலாம், எனினும் அல்லாஹ்வுடைய சோதனை வருகின்றபோது அது பாவிகளை மாத்திரமின்றி பாவிகளோடு சேர்ந்திருப்பவர்களையும் பீடிக்கும். எனினும் மறுமையில் கூலி கொடுக்கப்படும் போது ஒவ்வொருவருக்கும் அவரது எண்ணங்களுக்கேற்ப கூலி வழங்கப்படும்.

மேற்படி ஹதீஸின் மூலம் பாவிகளோடு சேர்ந்திருப்பதனால் ஏற்படுகின்ற பாதிப்புக்களையும், தண்டனை வருகின்றபோது நம்மையும் சேர்த்தே பீடித்துக்கொள்ளும் என்பதையும், குறிப்பிட்ட படை மக்காவிற்குள் நுழைவதற்கு முன்னரே பூமியால் விழுங்கப்படுவார்கள் என்பதையும் அறியமுடிகின்றது.

இப்படை பற்றி வருகின்ற ஹதீஸ்களின் போக்கைப் பார்க்கின்றபோது, இப்படை கஅபாவைத் தனது புகலிடமாகக் கொண்டிருக்கின்ற ஒருவருக்கு எதிராகவே போரிட வருவார்கள் என்பதை அறியமுடிகின்றது. கஅபாவை முஹம்மத் இப்னு அப்துல்லாஹ் எனும் மஹ்தி அவர்களே யுகமுடிவுக் காலத்தில் தனது புகலிடமாக ஆக்கிக்கொள்வார்கள், எனவே இப்படை மஹ்தி அவர்களுக்கு எதிராகப் போரிடவே வருவார்கள் என்பது இதன் மூலம் தெளிவாகிறது.

(ஒரு நாள்) அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் படுக்கையில் புரண்டு புரண்டு படுத்துக் கொண்டிருந்தார்கள். நாங்கள், “அல்லாஹ்வின் தூதரே! தாங்கள் உறங்கும்போது ஏதோ செய்து கொண்டிருந்தீர்கள். இவ்வாறு நீங்கள் எப்போதும் செய்வதில்லையே!” என்று கேட்டோம். அதற்கு, “ஓர் ஆச்சரியமான செய்தி(யினால் நான் அவ்வாறு செய்து கொண்டிருந்தேன்). என் சமுதாயத்தாரில் சிலர், கஅபாவில் தஞ்சம் புகுந்துள்ள குறைஷியரில் ஒருவ(ரை எதிர்த்து) கஅபாவை நோக்கி (படையெடுத்து) வருவார்கள். அவர்கள் (“பைதா” எனும்) சமவெளியில் இருக்கும்போது பூமிக்குள் புதைந்து போவார்கள்” என்று கூறினார்கள்.

நாங்கள், “அல்லாஹ்வின் தூதரே! சாலையில் பல்வேறு மக்களும் திரண்டிருப்பார்களே (அவர்கள் அனைவரும் புதைந்து போவார்களே)!?” என்று கேட்டோம். அதற்கு அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், “ஆம்” அவர்களில் பார்வையாளர்கள், நிர்ப்பந்தமாக அழைத்து வரப்பட்டவர்கள், வழிப்போக்கர்கள் ஆகியோரும் இருப்பார்கள். அவர்கள் அனைவரும் ஒட்டுமொத்தமாக அழிந்துபோவார்கள். பிறகு (மறுமை நாளில்) அவர்களின் எண்ணங்களுக்கேற்ப பல்வேறு நிலைகளில் அவர்களை அல்லாஹ் எழுப்புவான்” என்று கூறினார்கள்.[1]

## 123. மக்கள் ‘ஹஜ்’ செய்வதை விட்டுவிடுதல்

குழப்பங்கள் அதிகரித்து, இஸ்லாம் ஆதரவற்று, கஅபாவில் ஹஜ், உம்ரா செய்யப்படாமல் கஅபா கைவிடப்படும் நிலை உருவாகுவது மறுமைநாள் மிக நெருங்கிவிட்டது என்பதற்கான அடையாளங்களாகும்.

“கஅபாவில் ஹஜ் செய்யப்படாத நிலை உண்டாவதற்கிடையில் மறுமை நாள் ஏற்படாது” என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் குறிப்பிட்டார்கள்.[2]

யஃஜூஜ், மஃஜூஜ் கூட்டத்தினர் வந்ததன் பின்னரும் ஹஜ்கடமை நிறைவேற்றப்பட்டுக் கொண்டிருக்கும் என சில அறிவிப்புக்களில் கூறப்பட்டுள்ளது. எனவே மேற்படி ஹஜ் கடமை கைவிடப்படும் நிலை யுக முடிவின் இறுதிக் கட்டத்திலேயே இடம்பெறுகின்ற அத்தாட்சியாகும் என்பதை யூகிக்க முடிகின்றது.

“யஃஜூஜ், மஃஜூஜ் வருகைக்குப் பின்னரும் ஹஜ் உம்ரா கடமைகள் தொடர்ந்து நடைபெறும்” என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் குறிப்பிட்டார்கள்.[3]

---

1. அறிவிப்பாளர் : ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா, நூல் : ஸஹீஹ் முஸ்லிம்.
2. அறிவிப்பாளர் : அபூஸயீத் அல் குத்ரி ரழியல்லாஹு அன்ஹு, நூல் : ஸஹீஹ் இப்னு ஹிப்பான்
3. அறிவிப்பாளர் : அபூஸயீத் அல் குத்ரி ரழியல்லாஹு அன்ஹு, நூல் : ஸஹீஹுல் புகாரி

## 124. சில அரபு கோத்திரங்கள் சிலைகளை வணங்குதல்

ஆரம்பத்தில் அரேபிய தீபகற்பம் ஷிர்க்கிலும், சிலை வணக்கத்திலும் மூழ்கியிருந்தது. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், அல்லாஹ்வின் உதவியோடு அங்கிருந்த சிலைகளை உடைத்து, தவ்ஹீதையும் நிலை நாட்டினார்கள்.

மறுமை நெருங்கும் போது மக்கள் மார்க்கத்தை விட்டும் தூரமாவார்கள், அறிவை அடகு வைக்கின்ற சில அரபுக் கோத்திரங்கள் சிலை வணக்கத்தின்பால் சென்று விடுவார்கள்.

‟தவ்ஸ் குலப்பெண்கள் ‘துல்கலஸா’ சிலையைச் சுற்றி முண்டியடிக்காத வரை மறுமை நாள் வராது. ‘துல்கலஸா’ என்பது அறியாமைக் காலத்தில் தவ்ஸ் குலத்தார் வழிபட்டு வந்த ஒரு சிலையாகும்” என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் குறிப்பிட்டார்கள்.[1]

எனவே, மறுமை நாள் நெருங்கும் போது, தவ்ஸ் கோத்திரப் பெண்கள் “துல்கலஸா‟ எனும் சிலையைச் சுற்றி முண்டியடித்துக் கொண்டு தவாப் செய்வார்கள், அல்லாஹ்வை நிராகரித்துவிட்டு சிலை வணக்கத்தின் பக்கம் செல்வார்கள் என்பதைப் புரிந்துகொள்ளலாம்.

தவ்ஸ் கோத்திரத்தின் பூர்வீக வசிப்பிடம், அரேபிய தீபகற்பத்தின் தென்மேற்கு திசையில், அல்பாஹா பிரதேசத்தில் அமைந்துள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

## 125. குறைஷிக் கோத்திரம் அழிந்துவிடுதல்

அரேபியர்களின் முக்கிய கோத்திரங்களில் குறைஷிக் கோத்திரமும் ஒன்றாகும். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும் குறைஷிக் கோத்திரத்தைச் சேர்ந்தவர்களாவார்கள்.

குறைஷிகள் பல கிளைகளாகப் பிரிகின்றனர். அவர்களில் பனு ஹாரித் இப்னு பஹ்ர், பனூ ஜுதைமா, பனூ ஆயிதா, பனூ லுஐ இப்னு காலிப், பனுலீ ஆமிர் இப்னு லுஐ, பனூ அதி இப்னு கஅப் இப்னு லுஐ, பனூ

---

1. அறிவிப்பாளர் : அபூஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு, நூல் : ஸஹீஹுல் புகாரி, ஸஹீஹ் முஸ்லிம்.

மஃகஸூம், பனூ தமீம் இப்னு முர்ரா, பனூ ஸஹ்ரா இப்னு கிலாப் இப்னு அஸத் இப்னு அப்துல் உஸ்ஸா, பனூ அப்துத் தார், பனூ நவ்ஃபல், பனூ அப்துல் முத்தலீப், பனூ உமைய்யா, பனூ ஹாஷிம் போன்றவர்கள் குறிப்பிடத்தக்கவர்களாவர்.

குறைஷியர்கள் இஸ்லாம் வந்ததற்குப் பின்னர் "பக்ரிய்(யீன்)" -அபூபக்கர் ரழியல்லாஹு அன்ஹு அவர்களை சேர்ந்தவர்கள், "உமரிய்(யீன்)" -உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்களை சேர்ந்தவர்கள், "உஸ்மானிய்(யீன்)" -உஸ்மான் ரழியல்லாஹு அன்ஹு அவர்களைச் சேர்ந்தவர்கள், "அலவிய்(யீன்)" -அலி ரழியல்லாஹு அன்ஹு அவர்களை சேர்ந்தவர்கள் என பல்வேறு கிளைகளாக பிரிந்து காணப்பட்டனர்.

அரேபிய தீபகற்பமே அவர்களது பூர்வீக வசிப்பிடமாக இருந்தாலும் பிற்காலங்களில் அவர்கள் பல்வேறு பகுதிகளிலும் குடியேறத் தொடங்கியதும் குறைஷிக் கோத்திரத்தினரின் பரம்பரை குறையத் தொடங்கியது.

மறுமை நாள் நெருங்கும் போது குறைஷிக் கோத்திரத்தினர் குறைந்து, அக்கோத்திரமே இல்லாது ஒழிந்துவிடும் என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

''ஒரு பெண் ஒரு செருப்பைக் கடந்து செல்லும்போது இது குறைஷிக் கோத்திரத்தின் செருப்பைப் போன்று இருக்கிறதே, எனக் கூறிவிட்டுச் செல்லுமளவிற்கு குறைஷிக் கோத்திரம் மிக விரைவில் அழிந்து போய்விடும்'' என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.[1]

''ஆயிஷாவே உனது கோத்திரத்தினரே மிக விரைவில் (மரணித்து) என்னோடு வந்து சேருவார்கள்'' என்ற நபிகளாரின் கூற்றும் இவ்விஷயத்தை உறுதிப்படுத்துகிறது.

## 126. ஹபஷா (அபீசீனிய) நாட்டைச் சேர்ந்த ஒருவனால் கஅபா இடிக்கப்படுதல்

அபீசீனிய கறுப்பினத்தைச் சேர்ந்த ஒருவன் இறுதிக்காலத்தில்,

1. அறிவிப்பாளர் : அபூஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு, நூல் : அஹ்மத்

முஸ்லிம்களின் கிப்லாவாகிய கஅபாவை இடிப்பான். அவனது இரு முன்னங்கால்களும் கழுத்தும் சிறியதாக இருப்பதால் அவன் "முன்னங்கால் அறுந்தவன்" என அழைக்கப்படுவான். அவன் கஅபாவின் சீலையை அகற்றி, ஆபரணங்களைப் பிடுங்கி, கஅபாவை ஒவ்வொரு கல்லாக உடைப்பான்.

"ஹபஷிகள் (உங்களிடம் போர் செய்யாமல்) உங்களை விட்டுவிடுகின்ற வரை நீங்களும் அவர்களை விட்டு விடுங்கள். கஅபாவின் பொக்கிஷங்கள் ஹபஷாவைச் சேர்ந்த மெலிந்த கால்களையுடைய ஒருவனாலேயே வெளியேற்றப்படும்" என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.[1]

"அபீசீனியாவைச் சேர்ந்த, மெலிந்த கால்களுடைய மனிதர்கள் கஅபாவை இடித்துப் பாழ்படுத்துவார்கள்" என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.[2]

"வளைந்த கால்களையுடைய கறுப்பு நிறத்தவர்கள் ஒவ்வொரு கல்லாகப் பிடுங்கி கஅபாவை உடைப்பதை நான் பார்ப்பது போன்றிருக்கிறது" என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் குறிப்பிட்டார்கள்.[3]

"ஹபஷாவைச் சேர்ந்த மெலிந்த கால்களையுடைய ஒருவன் கஅபாவை அழிப்பான். கஅபாவின் ஆபரணங்களைப் பிடுங்குவான், கஅபாவின் திரையை அகற்றுவான். (வெளிப் பக்கமாக) வளைந்த கால்களையுடைய அவன் சம்மட்டிகளாலும், மண்வெட்டிகளாலும் கஅபாவின் மீது அடிப்பதை நான் காண்கிறேன்" என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக அப்துல்லாஹ் இப்னு அம்ர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கின்றார்கள்.[4]

**(இந்த மக்காவை) அபயமளிக்கும் புனித இடமாக நாம் ஆக்கி இருப்பதை அவர்கள் பார்க்கவில்லையா? (அல்குர்ஆன் 29 : 67)**

---

1. அறிவிப்பாளர் : அப்துல்லா இப்னு அம்ர் இப்னுல் ஆஸ் ரழியல்லாஹு அன்ஹு, நூல் : அபூதாவூத்.
2. அறிவிப்பாளர்: அபூஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு, நூல் : ஸஹீஹுல் புகாரி, ஸஹீஹ் முஸ்லிம்
3. அறிவிப்பாளர் : அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் ரழியல்லாஹு அன்ஹு, நூல் : ஸஹீஹுல் புகாரி.
4. நூல் : அஹ்மத்

அபயமளிக்கும் மிக்க கண்ணியமான இடத்தில் (இவர்கள் வசித்திருக்க) இவர்களுக்கு நாம் வசதியளிக்கவில்லையா?

(அல்குர்ஆன் 28 : 57)

எவராவது அதில் (மஸ்ஜிதுல் ஹராமில்) மார்க்கத்திற்கு விரோதமாக அநியாயம் செய்ய விரும்பினால், அவர்களை, துன்புறுத்தும் வேதனையைச் சுவைக்க வைப்போம். (அல்குர்ஆன் 22 : 25)

**சந்தேகம்**

மேலுள்ள வசனங்களின்படி அல்லாஹ் மக்காவைப் பாதுகாப்பான பிரதேசமாக ஆக்கியிருக்கும்போது, எப்படி அவன் கஅபாவை இடிக்கமுடியும்?

**தெளிவு :**

**ஒன்று** : மேலுள்ள வசனங்களில், கஅபா பாதுகாக்கப்படும் எனக் குறிப்பிடப்பட்டிருந்தாலும். “மறுமை நாள் வரையும்” எனக் குறிப்பிடப்படவில்லை.

எனவே இவ்விடங்களில், மறுமைநாள் நெருங்கும் வரையும் கஅபா பாதுகாப்பாகவும் அபயமளிக்கக்கூடியதாகவும் இருக்கும் எனப் புரிந்து கொண்டால் பிரச்சினை ஏற்படாது.

**இரண்டு** : கஅபாவை அதன் சொந்தக்காரர்கள் ஆட்சி செய்வார்கள் என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஏற்கெனவே முன்னறிவிப்புச் செய்துள்ளார்கள்.

“ருக்னுல் யமானிக்கும் மகாமு இப்றாஹீமுக்கும் இடையில் ஒருவருக்கு பைஅத் செய்யப்படும். (அவர்தான் மஹ்தி என்று கூறப்படுகிறது) பின்னர் கஅபாவை அதன் உரிமையாளர்களான (அரபிகள்) கைப்பற்றுவார்கள். அதை அவர்கள் கைப்பற்றி விட்டால் அரேபியரின் அழிவைப் பற்றி கேட்கத் தேவையில்லை. பின்னர் ஹபஷிகள் கஅபாவை நாசப்படுத்துவார்கள், அதற்குப்பின் அது பராமரிக்கப்படாது. அவர்களே கஅபாவின் பொக்கிஷங்களையும் வெளியேற்றுவார்கள்” என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் குறிப்பிட்டார்கள்.[1]

1. அறிவிப்பாளர் : அபூஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு, நூல் : அஹ்மத்

யானைப் படையினர் கஅபாவை அழிக்க வந்தபோது குறைஷிகள் காஃபிர்களாகக் காணப்பட்டனர், கஅபா அவர்களது கட்டுப்பாட்டிற்குள் இருக்கவில்லை. எனினும், அவர்கள் கஅபாவை கண்ணியமாகப் பார்த்தார்கள். அதனால், அல்லாஹ் யானைப் படையினரிடமிருந்து கஅபாவை பாதுகாத்துக் கொடுத்தான்.

ஆனால், மக்கள், கஅபாவின் கண்ணியத்தையும், பெருமையையும், அதன் நிர்வாகத்தையும் இரண்டாம் கட்டமாகக் கருதி வாழ்கின்ற ஒரு காலகட்டத்தில்தான் ஹபஷாவைச் சேர்ந்த ஒருவனால் கஅபா உடைக்கப்படும்.

## 127. முஃமின்களுடைய உயிர்களைக் கைப்பற்றும் இதமான காற்று

மறுமை நாளுக்குரிய அடையாளங்கள் ஒவ்வொன்றாக நடந்து முடிந்து, அதற்குப்பின் தஜ்ஜாலின் வருகை, ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்களது வருகை போன்ற பெரிய அடையாளங்களும் நிகழ்ந்துவிட்டால், மறுமை நாள் மிக நெருக்கமாகிவிடும். அப்போது மறுமை நிகழ்வின்போது ஏற்படவிருக்கின்ற அமளிகளில் இருந்து முஃமின்களைப் பாதுகாப்பதற்காக அல்லாஹ் ஒரு இதமான காற்றை அனுப்புவான். அக்காற்றின் மூலம் முஃமின்கள் அனைவரும் மரணித்து, தீயவர்கள் மட்டுமே எஞ்சியிருப்பார்கள் அப்போதே மறுமை ஏற்படும்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஒருமுறை தஜ்ஜாலைப் பற்றி சொல்லிக் கொண்டிருந்தார்கள். அதன் தொடரில் "...இந்நிலையில், அல்லாஹ் தூய காற்று ஒன்றை அனுப்புவான். அது அவர்களின் அக்குள்களுக்குக் கீழே நுழைந்து அவர்களைப் பிடித்துக்கொள்ளும். இறைநம்பிக்கை கொண்ட ஒவ்வொரு முஸ்லிமின் உயிரையும் அது கைப்பற்றும். அதையடுத்து மக்களில் தீயவர்கள் (மட்டுமே பூமியில்) எஞ்சியிருப்பார்கள். அவர்கள் கழுதைகளைப் போன்று (வெட்ட வெளியில் வைத்துப் பகிரங்கமாக) உடலுறவு கொள்வார்கள். அவர்கள் மீதுதான் உலக முடிவு நாள் ஏற்படும்." என்றார்கள்.[1]

---

1. அறிவிப்பாளர் : நவ்வாஸ் இப்னு ஸம்ஆன் ரழியல்லாஹு அன்ஹு, நூல் : ஸஹீஹுல் புகாரி, ஸஹீஹ் முஸ்லிம்

“தஜ்ஜால் வெளிப்படுவான். (ஷாம் பகுதியிலிருந்து வீசும் அந்தக் குளிர்ந்த காற்று) தமது உள்ளத்தில் கடுகளவு இறைநம்பிக்கை (ஈமான்) உள்ள எந்த மனித(ரின் உயி)ரையும் கைப்பற்றாமல் விடாது” என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் குறிப்பிட்டார்கள்.[1]

இக்காற்று தஜ்ஜால் வருவது மற்றும் ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்கள் வானத்திலிருந்து இறங்குவது போன்ற அடையாளங்களக்குப் பின்னர் இடம்பெறும்.

## 128. மக்காவிலுள்ள கட்டிடங்கள் உயர்த்தப்படுதல்

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது காலத்தில், மக்காவில் குறிப்பிட்ட சில எண்ணிக்கையினரே வசித்து வந்தனர். கட்டிடங்கள்கூட எண்ணிக்கையிலும், உயரத்திலும் மிகக் குறைவாகவே காணப்பட்டன. எனினும், மறுமை நாள் நெருங்கும்போது அக்கட்டிடங்கள், அங்குள்ள மலைகளைவிட உயரமாகக் காணப்படும் என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் முன்னறிவிப்புச் செய்துள்ளார்கள்.

“நான் அப்துல்லாஹ் இப்னு அம்ரு ரழியல்லாஹு அன்ஹு அவர்களது வாகனத்தின் மூக்கணாங் கயிற்றைப் பிடித்துக் கொண்டிருந்தேன். அப்போது அவர் “ஒரு கல்கூட மீதமில்லாதபடி கஅபா உடைக்கப்படுவது எப்படி இருக்கும்?” எனக் கேட்டார்கள். அதற்கு அங்கிருந்தவர்கள், “நாங்கள் இஸ்லாமில் இருக்கும்போதே இப்படி நடக்குமா?” எனக் கேட்டார்கள். அதற்கு (அப்துல்லாஹ் இப்னு அம்ரு ரழியல்லாஹு அன்ஹு அவர்கள்) “ஆம்” என்றார்கள். மீண்டும் அங்கிருந்தவர்கள், “பின்னர் என்ன நடக்கும்?” எனக் கேட்டனர். அதற்கு அப்துல்லாஹ் இப்னு அம்ரு ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் “பின்னர் அதைவிடச் சிறப்பாக மீண்டும் கட்டப்படும். மக்கா நகரின் கட்டிடங்கள் மலைகளை விடவும் உயர்ந்து விடும். அப்படிக் கண்டால் மறுமை நெருங்கி விட்டதைப் புரிந்து கொள்ளுங்கள்” என பதிலளித்தார்கள்.[2]

---

1. அறிவிப்பாளர் : அப்துல்லாஹ் இப்னு அம்ர் ரழியல்லாஹு அன்ஹு, நூல் : ஸஹீஹ் முஸ்லிம்
2. பார்க்க : முஸன்னப் இப்னு அபீஷைபா.

## 129. இந்த உம்மத்தின் பிந்தியவர்கள் முந்தியவர்களை சபித்தல்

இவ்வுலகின் இறுதிக் காலத்தில் அனாச்சாரங்கள் அதிகரித்திருக்கும். அக்காலத்தில் வாழ்பவர்கள் முற்காலத்தில் வாழ்ந்த ஸஹாபாக்கள் மற்றும் உலமாக்களின் சிறப்புக்கள் பற்றி அறிந்திருக்க மாட்டார்கள்; நபித்தோழர்களை புகழ்ந்து உயர்வாக அல்லாஹ் பேசியிருப்பதை கவனிக்க மாட்டார்கள். அதனால் அவர்களுக்கு துஆச் செய்யவேண்டும் என்றோ அவர்களின் சிறப்புக்களை எடுத்துச் சொல்ல வேண்டுமென்றோ சிந்திக்காமல், அவர்களை ஏசிப்பேசி அவர்களது கண்ணியத்தை குறைத்து மதிப்பிடுவார்கள்.

"பிற்காலத்தில் வாழ்பவர்கள் முன்வாழ்ந்தவர்களை லஃனத் -சாபம் செய்யும் நிலை உருவாவதற்கு முன்னர் மறுமை நாள் ஏற்படாது" என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.[1]

## 130. நவீன போக்குவரத்து சாதனங்களின் தோற்றம்

புதிய கண்டுபிடிப்புகள் மற்றும் நவீன வாகனங்களின் தோற்றம் என்பன மறுமை நாளின் அடையாளங்கள் என்று நபிமொழிகளில் நேரடியாகவும் மறைமுகமாகவும் குறிப்பிடப்பட்டுள்ளன.

இந்த வகையில் இன்று நமது காலத்தில் காணப்படுகின்ற, கார் போன்ற நவீன ரக வாகனங்களும் மறுமை நாளின் அடையாளங்களாகும். என இமாம் அல்பானி ரஹ்மதுல்லாஹி அலைஹி போன்ற உலமாக்கள், அதுபற்றி வந்துள்ள சில ஹதீஸ்களை வைத்துக் கூறுகின்றனர்.

"எனது உம்மத்தின் இறுதிக் காலகட்டத்தில் சிலர் தங்களது வாகனங்களில் பெரிய சேணைகளைப் போன்ற இருக்கைளில் அமர்ந்தவாறு பயணிப்பார்கள். அவர்கள் மஸ்ஜிதுடைய வாசல்களுக்கு அருகில் வந்து இறங்குவார்கள். அவர்களது பெண்கள் (மனைவிமார்கள்) ஆடையணிந்தும் நிர்வாணமாகக் காட்சியளிப்பார்கள்" என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.[2]

---

1. நூல் : திர்மிதி
2. அறிவிப்பாளர் : இப்னு உமர் ரழியல்லாஹு அன்ஹு, நூல் : ஸஹீஹ் இப்னு ஹிப்பான்.

(மிக சொகுசான இருக்கைகள் கொண்ட கார்களில் வந்து அவற்றை பள்ளிவாசலுக்குள் நிறுத்துவதை இந்த ஹதீஸ் குறிப்பதாக அறிஞர்கள் பலர் விளக்கமளிக்கிறார்கள்.)

## 131. மஹ்தி அவர்களின் வருகை

யுக முடிவுக் காலத்தில் பிரச்சினைகள் அதிகரித்து, அநீதி மேலோங்கி, பலசாலிகள் பலவீனர்களின் உரிமைகளைப் பறித்து, தீயவர்கள் அதிகாரம் செலுத்தக்கூடிய ஒரு கால சூழ்நிலையிலேயே, முஹம்மது இப்னு அப்துல்லாஹ் அல் மஹ்தி அவர்களை அல்லாஹ் வெளிப்படுத்துவான். அப்போதுதான், முஃமின்களுக்கு விடிவு காலம் பிறந்து, பூமியை ஆட்கொண்டிருந்த குழப்பம் எனும் இருள் நீங்க ஆரம்பிக்கும்.

மஹ்தி எனும் பெயரைக் கேட்டதும்,

- மஹ்தி என்றால் யார்?
- அவர் ஏன் வரவேண்டும்?
- எங்கே வருவார்?
- தற்போது அவர் உயிரோடு உள்ளாரா?
- அவர் வந்து என்ன செய்யப்போகிறார்?
- அவரைப் பின்பற்றுபவர்கள் யார்?

இதுபோன்ற பல கேள்விகள் நமது சிந்தனைக்கு வரலாம். எனவே, அவற்றுக்கான தெளிவான பதில்களை இங்கே பார்ப்பது பொருத்தமாகும்.

**பெயரும் பரம்பரையும்**

முஹம்மத் இப்னு அப்துல்லாஹ் அல்ஹஸனி அல் அலவி எனும் பெயர் கொண்ட இவர், பாத்திமா ரழியல்லாஹு அன்ஹா அவர்களின் மகனான ஹஸன் ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் பரம்பரையைச் சேர்ந்தவராவார்.

“இந்த உலகம் அழிவதற்கு ஒரு நாள் (மட்டுமே) இருந்தாலும், அந்த

நாளை நீண்டதொரு நாளாக மாற்றி, அந்நாளில் எனது பெயரைப் போன்ற பெயரையும், எனது தந்தையின் பெயரை ஒத்த தந்தையின் பெயரையும் கொண்ட, எனது குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர் இவ்வுலகிற்கு அனுப்பப்படாமல் இவ்வுலகம் அழியாது" என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.[1]

**அவர் ஏன் வர வேண்டும்?**

குழப்பங்கள் கொந்தளித்து, பாவங்கள் அதிகரித்து, நீதி அற்றுப்போய் இருக்கும் காலத்தில் ஒரு ஸாலிஹான மனிதர் தோன்றுவார். அம்மனிதரின் மூலம் அல்லாஹ் இந்த சமூகத்தின் குழப்ப நிலையைச் சீர்செய்து வைப்பான். இம்மனிதரையே அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஅத்தினர் மஹ்தி எனக் குறிப்பிடுகின்றனர்.

அவர் ஒரு சீர்திருத்தவாதியாக வருவார், அவருக்குப் பின்னால் முஃமின்கள் ஒன்று சேர்வார்கள். அவர் முஃமின்களுக்குரிய தார்மீகத் தளபதியாக நின்று பல போர்களைச் சந்திப்பார். அவரது வருகைக்குப் பின்னால் இப்பூமியில் பல சீர்திருத்தங்கள் இடம்பெறும்.

**மஹ்தி அலைஹிஸ் ஸலாம் அவர்களின் பண்புகள்**

"மஹ்தி என்பவர் என்னைச் சார்ந்தவரும், என்னுடைய பரம்பரையைச் சார்ந்தவரும் ஆவார்" எனக் கூறிய நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், அவரது தோற்றத்தைப் பற்றிக் குறிப்பிடும்போது "அவர் விரிந்த நெற்றியும், எடுப்பான மூக்கும் உடையவராகக் காணப்படுவார். அநீதியாலும், குழப்பத்தாலும் நிறைந்திருக்கின்ற பூமியை நீதியாலும் நியாயத்தாலும் நிறைத்து, ஏழு வருடங்கள் ஆட்சி செய்வார்" எனக் கூறினார்கள்.[2]

**மஹ்தி அவர்கள் ஏன் ஹஸன் ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் பரம்பரையில் தோன்ற வேண்டும்?**

அலி ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் ஷஹீதாக்கப்பட்டதன் பின்னர், ஹஸன் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றார்கள். அதேநேரம், ஷாம் மற்றும் அதைச் சூழவுள்ள

---

1. அறிவிப்பாளர் : இப்னு மஸ்ஊத் ரழியல்லாஹு அன்ஹு, நூல் : திர்மிதி
2. நூல் : அபூதாவூத்.

பிரதேசங்களுக்கு முஆவியா இப்னு அபீ சுஃப்யான் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் பொறுப்பாளராக காணப்பட்டார்கள். இந்த வகையில் ஒரே காலப்பகுதியில் முரண்பட்ட ஆட்சியமைப்புக் காணப்பட்டது எனலாம்.

ஹஸன் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் ஆறு மாதங்கள் ஆட்சி செய்ததன் பின்னர், எந்தவொரு உலகாதாயத்தையும் எதிர்பார்க்காமல், அல்லாஹ்வின் திருப்தியை மாத்திரமே நோக்கமாகக் கொண்டும் ஒரே ஆட்சியின் கீழ் முஸ்லிம்கள் ஒன்றுபட வேண்டும் என்பதற்காகவும், உயிர்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதற்காகவும் ஆட்சியை முஆவியா ரழியல்லாஹு அன்ஹு அவர்களுக்கு விட்டுக் கொடுத்தார்கள். எனவே, இந்த சேவைக்காக அல்லாஹ் அவருக்கு பிரதி உபகாரம் செய்தான்.

யார் அல்லாஹ்விற்காக ஒரு விஷயத்தில் விட்டுக் கொடுக்கின்றாரோ, அவருக்கு அல்லது அவரது சந்ததிக்கு அதைவிட அதிகமாக வழங்குகின்றான்.[1]

இந்த வகையிலேயே ஹஸன் ரழியல்லாஹு அன்ஹு அவர்களது பரம்பரையில் இறுதியாக இப்படி ஒரு கலீஃபாவை அல்லாஹ் அனுப்பி வைக்கின்றான் என்று அறிஞர்கள் விளக்கம் கூறுகிறார்கள்.

### ஆட்சிக் காலம்

மஹ்தி அலைஹிஸ் ஸலாம் அவர்கள் ஏழு வருடங்கள் ஆட்சி செய்வார்கள். அநீதியும், குழப்பமும் நிறைந்திருந்த பூமியை அதற்கு மாற்றமாக நீதியால் நிலைநிறுத்துவார்கள்.

இவர்களது காலத்தில் சமுதாயம் நிறைய அருட்கொடைகளைப் பெற்றுக் கொள்ளும். பூமி அதனுடைய தாவரப் பொக்கிஷங்களை வெளிப்படுத்தும், வானம் மழையைப் பொழியும், மக்கள் கணக்கின்றி செல்வம் கொடுக்கப்படுவார்கள்.

### அவர் எங்கிருந்து வருவார்?

மஹ்தி அலைஹிஸ் ஸலாம் அவர்கள் கிழக்குப் பகுதியிலிருந்து

1. பார்க்க : அல்மனாருல் முனீஃப் - இப்னுல் கைய்யும் ரஹ்மதுல்லாஹி அலைஹி

வெளிப்படுவார்கள். அல்லாஹ் அவரை வெளிப்படுத்தும்போது, கிழக்குப் பிரதேச மக்களைத் துணையாகக் கொடுத்து அவரை நிலைப்படுத்துவான். அவர்களனைவரும் மஹ்தியுடன் இணைந்து மார்க்கத்திற்காகப் போராடுவார்கள்.

**வெளிப்படும் காலம்**

யுக முடிவுக் காலத்தில், மக்கள் நிலைகுலைந்து காணப்படுவார்கள். அப்போது கலீஃபாக்களின் மூன்று பிள்ளைகள், கஅபாவின் பொக்கிஷங்களைக் கைப்பற்றுவதற்காக போட்டியிடுவார்கள். ஒவ்வொருவரும் மற்றவரை மிகைத்துவிட வேண்டும் எனச் செயல்படுவார்கள். எனினும், அவர்களில் யாருமே அப்பொக்கிஷங்களைப் பெறமாட்டார்கள்.

இத்தருணத்தில் மஹ்தி அவர்கள் மக்காவில் வெளிப்படுவார்கள். அச்செய்தி மக்கள் மத்தியில் பரவ ஆரம்பிக்கும். பின்னர் மக்கள் அனைவரும் கஅபாவில் வைத்து “மஹ்தி அவர்களுக்கு பைஅத் -சத்திய வாக்கு பிரமாணம்” செய்வார்கள்.

⏩ உங்கள் பொக்கிஷம் என்பது கஅபாவின் கீழ்ப்பகுதியில் இருப்பதாகக் கூறப்படும் தங்கங்களையும் மற்ற செல்வங்களையும் குறிக்கின்றது என்று சிலர் கூறுகின்றார்கள்.

வேறு சிலர், அரசாட்சியையும் அதிகாரத்தையும் குறிக்கிறது எனவும் கூறுகிறார்கள். வேறு சிலர் யூப்ரடீஸ் நதியில் வெளிப்படும் தங்கமலையைக் குறிக்கிறது எனவும் கூறுகிறார்கள்.

“எனது உம்மத்தின் இறுதிக் காலத்தில் மஹ்தி அவர்கள் வருவார்கள், அப்போது மழை பொழியும், பூமி செழிப்படைந்து (புற்பூண்டுகளையும்) விளைச்சல்களையும் வெளிப்படுத்தும், செல்வம் கொழிக்கும், கால்நடைகள் அதிகரிக்கும், மக்கள் சிறப்படைவார்கள். இதே நிலையில் ஏழு அல்லது எட்டு வருடங்கள் மஹ்தி அவர்கள் (இப்பூமியில்) வாழ்வார்கள்.”[1]

”மஹ்தியின் வருகை பற்றி வந்துள்ள ஹதீஸ் கிரந்தங்கள், அறிவிப்பாளர்கள், வசன நடைகள் ஆகியவற்றைப் பார்க்கின்றபோது

1. அறிவிப்பாளர் : அபூஸயீத் அல் குத்ரி ரழியல்லாஹு அன்ஹு, நூல் : ஹாகிம்

அவை முதவாதிர் எனும் மறுக்க முடியாத ஹதீஸ்களின் தரத்திற்குச் சென்று விடுகின்றன. எனவே, மறுமை நாள் ஏற்படுவதற்கு முன்னர், மஹ்தி அவர்கள் வந்து மக்களிடம் காணப்படுகின்ற அநியாயங்களையும், பாவங்களையும் ஒழித்து நீதியையும். நியாயத்தையும் நிலை நாட்டி, மக்களை நேர்வழியின் பக்கம் நடத்துவார் என்பது உண்மையாகும்'' என இமாம் இப்னு பாஸ் ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

**மஹ்தி பற்றி வந்துள்ள ஹதீஸ்கள்**

மஹ்தி பற்றி வந்துள்ள ஹதீஸ்களை இருவகையாகப் பிரிக்கலாம்

1. நேரடியாக மஹ்தி பற்றி வந்துள்ள ஹதீஸ்கள்
2. மஹ்தி அவர்களின் அடையாளங்களைக் குறிப்பிட்டு வந்துள்ள ஹதீஸ்கள்.

மஹ்தி பற்றி, ஸஹீஹ் (**صحيح**), ஹஸன் (**حسن**) மற்றும் ழஈஃப் (**ضعيف**) எனும் தரத்தில் அமைந்த மொத்தம் 50 ஹதீஸ்களும் 28 அஸர்களும் (**أثر**) காணப்படுகின்றன. இவற்றில் மறுமை நாளின் அடையாளங்களோடு சம்மந்தப்பட்ட முக்கியமான சில ஹதீஸ்களை இங்கே குறிப்பிடலாம் என எண்ணுகின்றேன்.

அறிஞர்கள் ஸஃபாரீனி, சித்தீக் ஹஸன் கான், ஆபரி ஆகியோர் கூறுவதாவது: மஹ்தி அவர்கள் பற்றி வந்துள்ள ஹதீஸ்கள் "முதவாதிர்" -அதிகமான அறிவிப்பாளர்கள் அறிவிக்கின்ற அறிவிப்பு- என்ற தரத்தை சேர்ந்தவையாகும்.

1. "எனது உம்மத்தின் இறுதிக் காலத்தில் மஹ்தி வெளியாகுவார். அவரது காலத்தில் அல்லாஹ் மழையைப் பொழிவிப்பான், பூமி விளைச்சல்களை வெளிப்படுத்தும், செல்வம் சமமாகப் பங்கிடப்படும், கால்நடைகள் அதிகரிக்கும், மக்கள் கண்ணியமாக வாழ்வார்கள். இவ்வாறு, அவர் ஏழு அல்லது எட்டு வருடங்கள் உயிர் வாழ்வார்" என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் குறிப்பிட்டார்கள்.[1]

2. ''மஹ்தியின் வருகையைக் கொண்டு உங்களுக்கு நன்மாராயம் கூறுகின்றேன். மனிதர்கள் பிளவுபட்டு, பூகம்பங்கள் நிறைந்த காலத்தில்

1. அறிவிப்பாளர் : அபூஸயீத் அல் குத்ரி ரழியல்லாஹு அன்ஹு, நூல் : ஹாகிம்.

அவர் அனுப்பப்படுவார், அநியாயங்களாலும், பாவங்களாலும் நிறைந்துள்ள இவ்வுலகத்தை நீதியாலும், நியாயத்தாலும் நிரப்பிவிடுவார். பூமியில் உள்ளவர்களும் வானத்தில் உள்ளவர்களும் அவரைப் பொருந்திக் கொள்வார்கள். செல்வம் நியாயமாகப் பங்கீடு செய்யப்படும்.

முஹம்மதுடைய உம்மத்தின் இதயங்கள் நீதியால் நிரம்பிக் காணப்படும். மஹ்தி அவர்கள், யாருக்காவது பணம் வேண்டுமா? எனக் கேட்குமாறு ஒருவரிடம் சொல்வார்கள். (அப்போது அவர் மக்களிடம் வந்து) யாருக்காவது பணத் தேவையுள்ளதா? எனக் கேட்பார். யாருமே தேவையென்று சொல்லமாட்டார்கள். ஒருவர் (மட்டும் எனக்கு) வேண்டும் என்பார். கஜானாவின் பொறுப்பாளரிடம் (சென்று தேவையான பணத்தை வாங்கிக் கொள்ளுமாறு அம்மனிதரிடம்) சொல்லப்படும். (அவர் கஜானாவிற்குச் சென்றதும்) கையை விரித்து அள்ளிக்கொள்ளுமாறு கூறப்படும். (சென்றவர்) தாராளமாக பணத்தை அள்ளி எடுத்துக்கொள்வார். பின்னர் (தான் செய்ததை எண்ணி அதற்காகக்) கவலைப்பட்டு "முஹம்மதின் உம்மத்தில் மிகவும் பேராசை உடையவனாக இருந்து விட்டேனே! மற்றவர்களுக்கு (அவர்கள் பணம் கேட்காமல் இருக்க) முடிந்தது (போல்) என்னால் (இருக்க) முடியாமல் போய்விட்டதே எனக் கூறி பெற்ற பணத்தை மீண்டும் ஒப்படைக்கச் செல்வார். எனினும் திருப்பி எடுக்கப்பட மாட்டாது. "நாங்கள் கொடுத்ததை திருப்பி எடுக்க மாட்டோம் எனக் கூறப்படும்." இவ்வாறு செல்வச் செழிப்போடு ஏழு அல்லது ஒன்பது வருடங்கள் மஹ்தி அவர்கள் இவ்வுலகினை ஆட்சி செய்வார்கள். (இவர்களது ஆட்சிக் காலத்திற்குப்) பின் உலக வாழ்வில் எந்த நலவும் இருக்காது" என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் குறிப்பிட்டார்கள்.[1]

3. "மஹ்தி என்பவர் எங்களது அஹ்லுல் பைத்தைச் சேர்ந்தவராவார். ஓர் இரவிலேயே அல்லாஹ் அவரை ஆட்சி செய்வதற்குத் தகுதியானவராக ஆக்கிவிடுவான்" என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் குறிப்பிட்டார்கள்.[2]

மஹ்தி அவர்களை மக்கள் நிர்ப்பந்தப்படுத்தி, அவர் அதை

1. அறிவிப்பாளர் : அல் ஸயீத் அல் குத்ரி ரழியல்லாஹு அன்ஹு, நூல் : அஹ்மத்
2. நூல் : அஹ்மத்

விரும்பாமல் இருக்க அவருக்கு பைஅத் செய்து கொடுப்பார்கள் என்று ஹதீஸ்களில் கூறப்பட்டதிலிருந்து நாம் அறியவேண்டிய விஷயங்கள்:

அ. தான் மஹ்தி என்பதை அவர் உறுதியாக முன்கூட்டியே அறிந்திருக்க மாட்டார்.

ஆ. தான்தான் ஆட்சிக்குத் தகுதியானவர் என்றோ, கிலாஃபத் எனக்குரியது என்றோ அவர் வாதிட மாட்டார்.

இ. ஆட்சிப் பொறுப்பை வெறுப்பவராக இருப்பார்.

ஈ. மக்கள் தாமாக முன்வந்து அவரிடம் பைஅத் செய்வார்கள்.

உ. ஆட்சி செய்வதற்கு தகுதியானவராக அவரை அல்லாஹ் ஒரே ஓர் இரவிலேயே ஆக்குவான்.

அதாவது அவரிடம் ஆளுமை, இஸ்லாமிய அறிவு, ஞானம், நீதம் காணப்படும். அப்படிப்பட்ட அவரை ஆட்சிப் பொறுப்பை ஏற்பதற்குரிய மன வலிமையையும் வீரத்தையும் துணிவையும் அல்லாஹ் அவருக்கு வழங்குவான். அவர் ஆட்சிப் பொறுப்பை ஏற்று மக்களை வழி நடத்துவார். அதனைக் கொண்டே மார்க்கத் தீர்ப்பளித்து, மக்களுக்கு மத்தியில் ஏற்படுகின்ற பிரச்சினைகளையும் தீர்த்து வைப்பார்.

4. “மஹ்தி என்பவர் பாத்திமா ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் பிள்ளைகளில் உள்ளவரும் எனது குடும்பத்தைச் சேர்ந்தவருமாவார்” என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் குறிப்பிட்டார்கள்.[1]

5. “ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்கள் இறங்கும்போது (முஃமின்களின்) தலைவரான மஹ்தி அவர்கள் (ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்களிடம்) எங்களுக்குத் தொழுகையை நடத்துங்கள் எனக் கூறுவார். அதற்கு அவர்கள் மறுத்துவிட்டு, இல்லை, சிலர் சிலருக்கு தலைவராக இருப்பது அல்லாஹ் இந்த உம்மத்திற்கு செய்த கண்ணியமாகும்” எனக் கூறி விலகிக் கொள்வார்கள்.[2]

அதாவது, மஹ்தி அவர்களின் காலத்திலேயே தஜ்ஜால் வருவான். அதன் பின்னர் ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்களும் அக்காலப் பகுதியிலேயே வருவார்கள் எனினும் ஈஸா அலைஹிஸ் ஸலாம்,

---

1. அறிவிப்பாளர் : உம்முஸலமா ரழியல்லாஹு அன்ஹா, நூல் : அபூதாவூத்.

2. நூல் : முஸ்னத் இப்னு அபீ உஸாமா

மற்றும் ஏனைய முஃமின்கள் அனைவரும் மஹ்தி அவர்களைப் பின்பற்றியே தொழுவார்கள் என்பதை மேலுள்ள ஹதீஸின் மூலம் அறிந்து கொள்ளலாம்.[1]

6. ''எனக்குப் பின்னால் எனது பெயரை ஒத்த எனது குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர் வரும்வரை இவ்வுலகம் அழியாது'' என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் குறிப்பிட்டார்கள்.[2]

மேலே சொல்லப்பட்ட ஹதீஸ்கள் அனைத்தும் மஹ்தி அவர்களைப் பற்றி நேரடியாகவே பேசுகின்ற ஹதீஸ்களாகும்.

**மஹ்தி அவர்களது பண்புகளைப் பற்றி மறைமுகமாகக் குறிப்பிடுகின்ற ஹதீஸ்கள்.**

7. நாங்கள் ஜாபிர் இப்னு அப்துல்லாஹ் ரழியல்லாஹு அன்ஹு அவர்களுடன் இருந்தோம். அப்போது அவர்கள், ''ஈராக் வாசிகளிடம் கஃபீஸ் (**قفيز** – படி, மரக்காளைப் போன்று அந்நாட்டின் ஓர் அளவு) இன்னும் வெள்ளிக் காசு எதுவும் கொண்டு வரப்படாத நாள் விரைவில் வரப்போகிறது” என்று கூறினார்கள். நாங்கள், “எங்கிருந்து கொண்டு வரப்படாது?” என்று கேட்டோம்.” அரபியல்லாதவர்கள் அவற்றைத் தரமறுப்பார்கள்” என்று கூறினார்கள்.

பிறகு, “ஷாம் (சிரியா) வாசிகளிடம் “தீனார்”, “முதிய்”[3] கொண்டு வரப்படாத நாள் விரைவில் வரப்போகிறது” என்று கூறினார்கள். நாங்கள், “எங்கிருந்து கொண்டு வரப்படாது?” என்று கேட்டோம். அதற்கு “ரோம (பைஸாந்திய)ர்களிடமிருந்து கொண்டு வரப்படாது” என்று கூறினார்கள்.

பின்னர் சிறிது நேரம் அமைதியாக இருந்தார்கள். பிறகு அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், “என் இறுதிச் சமுதாயத்தில் ஓர் ஆட்சியாளர் (கலீஃபா) இருப்பார். அவர் எண்ணிப் பார்க்காமல் வாரி வாரி வழங்குவார்'' என்று கூறினார்கள்.”

இதன் அறிவிப்பாளரான ஜுரைரீ ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள்: நான், அபூநள்ரா மற்றும் அபுல் அலா ரஹ்மதுல்லாஹி அலைஹி ஆகியோரிடம், “அந்த ஆட்சியாளர் உமர் இப்னு அப்துல்

1. பார்க்க : அல் மனாறுல் முனீர் பக் : (147 -148), இப்னுல் கையும் (ரஹ்)
2. அறிவிப்பாளர் : ஸுர் இப்னு அப்துல்லாஹ், நூல் : அஹ்மத்
3. கஃபீஸ், முதிய் என்பவை அளவையைக் குறிக்கப் பயன்படும் சொற்களாகும்.

அஜீஸ் அவர்கள்தான் என நீங்கள் இருவரும் கருதுகிறீர்களா?" என்று கேட்டேன். அதற்கு அவர்கள் இருவரும் "இல்லை" என பதிலளித்தார்கள்.[1]

மஹ்தி அவர்களது காலத்தில் வெற்றிகள் அதிகரித்து, கனீமத் பொருட்கள் பெருகி, செல்வசெழிப்பும் அதிகரித்துக் காணப்படும் என்பதை முன்னர் மஹ்தி பற்றிய நேரடியான ஹதீஸ்களில் பார்த்தோம். தற்போது நாம் குறிப்பிட்ட ஹதீஸ்களில் அடையாளப்படுத்தப்படுகின்ற கலீஃபாவும் மக்களுக்கு கணக்கின்றி அள்ளிக் கொடுப்பார் எனக் குறிப்பிடப்படுவதன் மூலம் அது மஹ்தி அவர்களைப் பற்றியே குறிப்பிடுகின்றது என்பதைப் புரிந்துகொள்ள முடிகின்றது.

8. (ஒரு நாள்) அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் புரண்டு புரண்டு படுத்துக் கொண்டிருந்தார்கள். நாங்கள், "அல்லாஹ்வின் தூதரே! தாங்கள் உறங்கும்போது ஏதோ செய்துகொண்டிருந்தீர்கள். இவ்வாறு நீங்கள் எப்போதும் செய்ததில்லையே!" என்று கேட்டோம். அதற்கு, "ஓர் ஆச்சரியமான செய்தி(யினால் நான் அவ்வாறு செய்து கொண்டிருந்தேன்). என் சமுதாயத்தாரில் சிலர், இறையில்லம் கஅபாவில் தஞ்சம் புகுந்துள்ள குறைஷியரில் ஒருவருக்காக இறையில்லத்தை நோக்கி (படையெடுத்து) வருவார்கள். அவர்கள் ('பைதா' எனும்) சமவெளியில் இருக்கும்போது பூமிக்குள் புதைந்து போவார்கள்" என்று கூறினார்கள்.

நாங்கள், "அல்லாஹ்வின் தூதரே! சாலையில் பல்வேறு மக்களும் திரண்டிருப்பார்களே (அவர்கள் அனைவரும் புதைந்து போவார்களே)?" என்று கேட்டோம். அதற்கு அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், "ஆம் அவர்களில் பார்வையாளர்கள், நிர்ப்பந்தமாக அழைத்து வரப்பட்டவர்கள், வழிப்போக்கர்கள் ஆகியோரும் இருப்பார்கள். அவர்கள் அனைவரும் ஒட்டுமொத்தமாக அழிந்துபோவார்கள். பிறகு பல்வேறு நிலைப்பாடு கொண்டவர்களாய் அவர்கள் எழுப்பப்படுவார்கள். அவர்களின் எண்ணங்களுக்கேற்ப அவர்களை அல்லாஹ் (மறுமை நாளில்) எழுப்புவான்" என்று கூறினார்கள்.[2]

---

1. நூல் : ஸஹீஹ் முஸ்லிம்
2. அறிவிப்பாளர்: ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா, நூல் : ஸஹீஹுல் புகாரி, ஸஹீஹ் முஸ்லிம்.

9. “ருக்னு(ல் யமானி)க்கும் மகாமு (இப்றாஹீமி)ற்கும் இடையில் வைத்து ஒருவருக்கு பைஅத் செய்யப்படும்” என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் குறிப்பிட்டார்கள்.[1]

10. “உங்களைச் சேர்ந்த ஒருவரே உங்களுக்கு(த் தொழுகை நடத்தும்) இமாமாக இருக்க, மர்யமின் மகன் (ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்கள்) உங்களிடையே இறங்குவாரேயானால் அப்போது உங்களுக்கு எப்படியிருக்கும்?!” என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கேட்டார்கள்.[2]

**குறிப்பு**

ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்கள் மஹ்தி அவர்களின் பின்னால் நின்று தொழுவார் என்பதை வைத்து மஹ்தி அவர்கள் ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்களை விட உயர்வானவர் என்று எண்ணிக்கொள்ளக் கூடாது.

ஏனெனில், நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூட தனது மரணத் தருவாயில் ஏற்பட்ட காய்ச்சலின்போது அபூபக்கர் ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் பின்னாலும் அதேபோன்று அப்துர் ரஹ்மான் இப்னு அவ்ஃப் ரழியல்லாஹு அன்ஹு போன்றோர் பின்னாலும் நின்று தொழுது இருக்கின்றார்கள்.

எனவே, ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்கள், தானும் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் ஷரீஅத்தையே பின்பற்றுகின்றேன் என்பதைக் காட்டுவதற்காகவே நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் உம்மத்தில் ஒருவரான மஹ்தி அவர்களின் பின்னால் நின்று தொழுது காட்டுவார்கள். அதேநேரம், இந்த சம்பவத்திற்குப் பின்னர் மஹ்தி அவர்கள் ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்களது படையில் ஒருவராக இருந்துகொண்டு அவர்களையே பின்பற்றிச் செல்வார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

---

1. அறிவிப்பாளர் : அபூஹுரைரா ரழியல்லாஹு அன்ஹா, நூல் அஹ்மத்.
2. அறிவிப்பாளர் : அபூஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு நூல் : ஸஹீஹுல் புகாரி, ஸஹீஹ் முஸ்லிம்.

மேலுள்ள ஹதீஸ் தொகுப்புக்களின் அடிப்படையில் பார்க்கின்றபோது மஹ்தி பற்றி கிட்டத்தட்ட 30 ஸஹாபாக்கள் அறிவித்துள்ள ஹதீஸ்கள் சந்தேகத்திற்கிடமற்ற முறையில் பதிவு செய்யப்பட்டுள்ளது. அவ்வாறே மஹ்தி பற்றிய நம்பிக்கை என்பது அஹ்லுஸ் ஸுன்னாக்களின் முக்கியமான, ஏகோபித்த அகீதா சார்ந்த ஓர் அம்சமாகவும் கொள்ளப்படுகின்றது.

**தன்னை மஹ்தி என வாதிடுபவர்கள் பற்றி...**

வரலாறுகளைப் புரட்டிப் பார்க்கின்றபோது, முஸ்லிம்கள் அரசியல் வாதிகளாலும், தனிமனிதர்களாலும் பல பிரச்சினைகளையும் குழப்பங்களையும் எதிர் கொண்டுள்ளார்கள். இந்த வகையில் அவ்வப்போது சிலர் தோன்றி, தான் மஹ்தி என்று வாதிட்டதையும், மக்களும் அவர்களை நம்பி ஏமாந்துபோனதையும் கண்டுள்ளோம்.

1. ராபிழாக்கள் தங்களுக்கெனத் தனியான ஒரு மஹ்தி இருப்பதாகவும், அவர் தங்களது பன்னிரெண்டு இமாம்களில் இறுதியானவர் எனவும், ஹுஸைன் ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் வழித்தோன்றல் எனவும், அவரது பெயர் முஹம்மத் இப்னு அல்ஹஸன் அல்அஸ்கரி எனவும் நம்புகின்றனர்.

**ஷியாக்கள் கூறும் பனிரெண்டாவது இமாம் பற்றிய இவர்களது கொள்கைகளில் சில...**

- ஹிஜ்ரி 260ல், அதாவது 1100 வருடங்களுக்கு முன்னர் இவர் ஸாமுர்ராவில் உள்ள குகைக்குள் நுழைந்தார்.
- தனது ஐந்தாவது வயதில் குகைக்குள் நுழைந்துவிட்ட அவர், இன்னும் மரணிக்கவும் இல்லை, வெளியே வரவும் இல்லை. யுகமுடிவின்போது வெளியே வருவார்.
- அவர் குகையில் மறைந்திருந்தாலும் உலகில் நடக்கின்ற அனைத்தையும் பார்த்துக்கொண்டு, வெளியே இருப்பது போன்றே உள்ளே இருக்கின்றார்.

மேற்கூறப்பட்டவை ராபிழாக்களின் மஹ்தி (12வது இமாம்) பற்றிய நம்பிக்கைகளில் சிலவாகும்.

இவர்களது இந்த நம்பிக்கை சுன்னாவிற்கு முரணான, ஆதாரமற்ற நம்பிக்கையாகும். மனிதர்களிலேயே மிக அந்தஸ்தும் சிறப்பும் கொண்ட நபிமார்களையே அல்லாஹ் மரணிக்கச் செய்திருக்கும்போது மஹ்தியை மட்டும் இவ்வளவு காலத்திற்கு உயிர்வாழச் செய்திருக்கின்றானா?

அப்படித்தான் உயிரோடு இருந்தால் கூட, ஏன்? என்ன நோக்கத்திற்காக இவ்வளவு காலமும் வெளியே வராமல் மறைந்திருக்க வேண்டும்? இன்றைய காலத்தில் நன்மையை ஏவி தீமையைத் தடுக்கக்கூடிய ஒருவரின் தேவை அத்தியாவசியமானதாக இருக்கும் போதுகூட அவர் வெளியே வராமல் இருப்பதற்கான நியாயம்தான் என்ன?

நபிமொழிகளில் கூறப்பட்டிருக்கின்ற முஹம்மத் இப்னு அப்துல்லாஹ் எனும் மஹ்தி அவர்களைப் பற்றி இமாம் இப்னு கஸீர் ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் கூறும்போது ''குர்ஆன், சுன்னா ஆதாரங்களோ, அறிவாராய்ச்சிகளோ அற்ற, ஷைத்தானிய பித்தலாட்ட சிந்தனைகளில் உருவான, இந்த ராபிழாக்களின் மஹ்திக் கோட்பாடு, வெறும் ஏமாற்றுக் கொள்கையாகும். அஹ்லுஸ் ஸுன்னாக்கள் குறிப்பிடுகின்ற மஹ்தி என்பவர் கிழக்குப் பகுதியிலிருந்து வருவார் என்பதே உண்மையாகும்'' எனக் குறிப்பிடுகின்றார்கள்.[1]

2. யூத இனத்தைச் சேர்ந்த “அப்துல்லாஹ் இப்னு ஸபா” என்பவன் அலி ரழியல்லாஹு அன்ஹு அவர்கள்தான் எதிர்பார்க்கப்பட்ட மஹ்தி எனவும், அவர்கள் மீண்டும் உலகத்திற்கு வருவார்கள்’ எனவும் வாதிட்டான்.

3. ஹிஜ்ரி 81ல் மரணித்த, அலி ரழியல்லாஹு அன்ஹு அவர்களது மகனாராகிய முஹம்மத் இப்னு அலி அவர்கள்தான் எதிர்பார்க்கப்பட்ட மஹ்தி என முக்தார் இப்னு உபைத் அஸ்ஸகஃபி என்பவன் வாதிட்டான்.

4. அதேபோன்று “கைஸானிய்யா'' என ஒரு கூட்டம் தோன்றியது. கைஸான் என்பவரைப் பின்பற்றுகின்ற இவர்கள் ஷியாக்களின் ஒரு பிரிவினர்களாவர். இவர்கள் இவர்களது இமாமான முஹம்மத் அல் ஹனஃபிய்யா என்பவரை எல்லா அறிவும், ஞானமும் பெற்றவர் எனவும்,

1. பார்க்க : அந்நிஹாயா ஃபில் ஃபிதன் வல் மலாஹிம்

தனிமனித வழிபாடே மார்க்கம் எனவும் நம்புகின்றனர். இதனால், இஸ்லாத்தின் தூண்களென நாம் குறிப்பிடுகின்ற அனைத்திற்கும், தங்களது இமாம்களின் பெயர்களைச் சூட்டி (அர்கானுல் இஸ்லாம் என்றால் அது தங்களது இமாம்களையே குறிக்கின்றது) எனக் கூறுகின்றனர்.

இவர்கள் அலி ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் வழித்தோன்றலில் வந்த அப்துல்லாஹ் இப்னு முஆவியா என்பவரே மஹ்தி என வாதிட்டனர்.

5. முஹம்மத் இப்னு அப்துல்லாஹ் (மரணம் ஹிஜ்ரி 145) என்று அழைக்கப்படும், அலி ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் வழித்தோன்றல்களில் ஒருவரான இவர், ஒரு வணக்கசாலியாகக் காணப்பட்டார். இவரது உலகப் பற்றற்ற தன்மையையும், அநீதிக்கெதிராகப் போராடும் வேகத்தையும் பார்த்த மக்கள், இவரின் பின்னால் அணிதிரண்டு இவரை மஹ்தி என அழைக்க ஆரம்பித்தனர்.

6. யூதர்கள் மற்றும் கிறிஸ்தவர்களை விட கொடூரமானவனும், முஸ்லிம்களைக் கொன்று குவித்து, கஅபாவில் உள்ள ஹஜருல் அஸ்வதை திருடிச்சென்ற கராமிதாக்களின் தலைவர்களில் ஒருவனுமான உபைதுல்லாஹ் இப்னு மைமூன் அல் கத்தாஹ் (மரணம் ஹிஜ்ரி 325) என்பவனும் தன்னை மஹ்தி என வாதிட்டவர்களில் ஒருவனாவான். இவனது பாட்டன் யூத இனத்தைச் சேர்ந்தவன் ஆவான்.

கராமிதாக்கள் (**قرامطة**) என்போர் தங்களை வெளிப்படையில் முஸ்லிம்கள் எனக் காட்டிக் கொண்டாலும், உண்மையில் அவர்கள் இஸ்லாமை விட்டும்; வெளியேறியவர்களாவர். அவர்களுக்கென தனிக் கொள்கை கிடையாது. அவர்களது கொள்கை நெருப்பை வணங்குகின்ற மஜூஸிகள், மற்றும் நட்சத்திரங்களை வணங்குகின்ற ஸாபியாக்களுடைய கொள்கையிலிருந்து எடுக்கப்பட்ட ஒரு கலவையாகும்.

இவர்கள் அக்காலத்தில் நீதித் துறையில் இருந்த ஷாஃபி மத்ஹபின் சட்டங்களை நீக்கினார்கள்; கப்ருகளையும், கல்லறைகளையும், கட்டி

எழுப்பினார்கள்; முஸ்லிம்களுக்கு மத்தியில் பெரிய கொள்கை குழப்பங்களை ஏற்படுத்தினர்.

இவனது மரணத்திற்குப் பின்னர் இவனது பிள்ளைகள் ஹிஜாஸ்,[1] ஷாம்[2] பிரதேசங்களை ஆக்கிரமித்து ஆட்சி செய்தனர். தாங்களே அஹ்லுல் பைத் எனப் பல பொய்களைக் கட்டவிழ்த்து விட்டனர். நாங்கள் ஃபாத்திமா ரழியல்லாஹு அன்ஹா அவர்களின் வாரிசுகள் எனக் கூறி தங்களைப் ஃபாத்திமிகள் எனவும் அழைத்துக் கொண்டனர்.

இமாம் இப்னு கஸீர் ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் இவர்களைப் பற்றிக் கூறும்போது "ஃபாத்திமிகள் 280 வருடங்கள் ஆட்சி செய்தார்கள். அவர்களில் உபைதுல்லாஹ் அல்கத்தாஹ் என்பவன் தன்னை மஹ்தி என வாதிட்டு, "மதீனத்துல் மஹ்தி" -மஹ்தியின் நகரம் எனும் நகரத்தையும் உருவாக்கினான்'' எனக் குறிப்பிடுகின்றார்கள்.[3]

7. ஹிஜ்ரி 514ல் தன்னை மஹ்தி என வாதிட்டவர்களில், இப்னு தவ்மர்த் என மக்கள் மத்தியில் பிரபல்யமான 'முஹம்மத் இப்னு அப்துல்லாஹ் அல்பர்பரி' என்பவனும் ஒருவனாவான். இவன் தன்னை அலி ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் பரம்பரையில் உள்ளவன் எனக் கூறி, ஹஸன் ரழியல்லாஹு அன்ஹு அவர்களுக்கும் தனக்கும் இடையில் போலியான வமிச உறவையும் உருவாக்கி, தன்னை மஹ்தி என வாதிட்டான்.

அதிகாரத்தின் மூலம் ஆட்சியைக் கைப்பற்றிக்கொண்ட இவன், சிலரைக் கப்ருகளில் மறைத்து வைப்பான். பின்னர் அவ்விடத்தில் மக்களை அழைத்துச் சென்று கப்ருவாசிகளே நான் யாரென்று இம்மக்களுக்குச் சொல்லுங்கள் எனக் கூறுவான். அவர்களும் "நீங்கள்தான் முன்பின் பாவங்கள் மன்னிக்கப்பட்ட மஹ்தி'' என பதிலளிப்பார்கள். பின்னர் தனது தந்திரம் வெளியாகிவிடக் கூடாது என்பதற்காக அந்தக் கப்ருகளையே அவர்களது நிரந்தர கப்ருகளாகவும் மாற்றிவிடுவான். இப்படி மக்களை ஏமாற்றுவதற்காகப் பல தந்திரங்களை மேற்கொண்டுவிட்டு இவையெல்லாம் எனது கராமத் -அதிசயங்கள் எனக் கூறுவான்.

1. இன்றைய மக்கா, மதினாவை சேர்ந்த பகுதிகளை ஹிஜாஸ் என்று சொல்லப்படும்.
2. இன்றைய பாலஸ்தீனம், சிரியா ஆகிய நாடுகளுக்கு சொல்லப்படும்.
3. பார்க்க : அல்பிதாயா வந்நிஹாயா 12/331

8. தன்னை மஹ்தி என வாதிட்டவர்களில், சூடானைச் சேர்ந்த 'முஹம்மத் அஹ்மத் இப்னு அப்துல்லாஹ்' (மரணம் கி.பி.1885 - ஹிஜ்ரி 1302) என்பவர் முக்கியமானவராவார். 38 வயதான இவர், உலகப் பற்றற்ற வாழ்வில் அதிக ஆர்வம் காட்டியதால் தலைவர்களும், கோத்திர முக்கியஸ்தர்களும் இவரைத் தேடிச் சென்றனர். இவர், "தான் மஹ்தி என்பதில் யாரெல்லாம் சந்தேகம் கொள்கின்றாரோ அவர் காஃபிராகிவிட்டார்" என்றும் இன்னும் பல வழிகெட்ட கொள்கைகளையும் பரப்பினார்.

இவர் ஆங்கிலேய கிறிஸ்தவர்களுக்கெதிராக பல பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்தாலும், இவரது மஹ்தி பற்றிய கொள்கைகள் அனைத்தும் வெறும் கற்பனை ரீதியான வார்த்தைகளே அன்றி அவற்றுக்கும் ஹதீஸில் வந்துள்ள மஹ்தி என்பவருக்கும் எந்தவிதமான தொடர்புகளும் இல்லை.

9. தன்னைத்தானே மஹ்தி என வாதிட்டவர்களில், சவூதி அரேபியாவின், ரியாத் பிரதேசத்தைச் சேர்ந்த 'முஹம்மத் இப்னு அப்துல்லாஹ் அல்கஹ்தானி' என்பவரும் ஒருவராவார்.

தான் ஒரு கனவு கண்டதாகவும், அதில், தானே மஹ்தி என அவருக்குச் சொல்லப்பட்டதாகவும் கூறிக்கொண்ட அவர், 1970ம் ஆண்டு தன்னைச் சார்ந்த ஒரு மக்கள் கூட்டத்தையும் அழைத்துக் கொண்டு, கஅபாவிற்கு வந்து, அங்கேயே அமர்ந்து கொண்டார். பின்னர் இவர் கொலை செய்யப்படும் வரையும் கஅபாவில் ஒரு குழப்பமான நிலையே காணப்பட்டது. இவர் கஅபாவில் ஏற்படுத்திய குழப்பங்கள் இன்றுவரை "ஃபித்னதுல் ஹரம்" என பிரபல்யம் பெற்றுள்ளது.

**தன்னை மஹ்தி என வாதிடுபவர்களோடு எவ்வாறு நடந்து கொள்வது?**

தன்னை மஹ்தி என வாதிடுபவர்களை ஆதாரத்துடன் நாம் மறுக்கின்ற போது, அது மஹ்தி பற்றி வந்துள்ள ஹதீஸ்களை நிராகரிப்பதாக ஆகாது.

தன்னை மஹ்தி என வாதிடுபவரை நிராகரிப்பதற்கும், மஹ்தி பற்றி வந்துள்ள ஸஹீஹான ஹதீஸ்களை நிராகரிப்பதற்கும் இடையில் பெரிய வேறுபாடுகளைக் காணலாம்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மஹ்தி என ஒருவர் வருவார் எனப் பொதுவாக சொல்லவில்லை. மாறாக அவரது பண்புகள், அடையாளங்கள் அனைத்தையும் தெளிவுபடுத்தியுள்ளார்கள். தன்னை மஹ்தி என வாதிடுபவர்களிடம் குறிப்பிட்ட அந்த அடையாளங்கள் இல்லாதபோது அவர்களை நாம் மறுத்து விடுகின்றோம்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மஹ்தி பற்றி குறிப்பிட்டிருக்கின்ற ஹதீஸ்களை வைத்து, பின்வரும் விஷயங்களை மஹ்தியின் பண்புகளாகவும், அடையாளங்களாகவும் கொள்ளமுடிகிறது.

1. உண்மையான மஹ்தி என்பவர் தன்னைத்தானே மஹ்தி எனவும், எனக்கு பைஅத் செய்யுங்கள் எனவும் மக்களை அழைக்க மாட்டார், மக்களே அவரை அழைத்து, பலவந்தமாக பைஅத் செய்வார்கள்.

2. மஹ்தி அவர்களது பெயர் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது பெயரை ஒத்ததாக முஹம்மத் இப்னு அப்துல்லாஹ் என்றிருக்கும்.

3. அவரது பரம்பரை ஹஸன் ரழியல்லாஹு அன்ஹு அவர்களோடு தொடர்புடையதாக இருக்கும்.

4. ஹதீஸ்களில் சொல்லப்பட்டது போன்று, அவர் விரிந்த நெற்றியும் எடுப்பான மூக்கும் உடையவராகக் காணப்படுவார்.

அவரோடு சம்பந்தப்பட்ட, சில செயல் சார்ந்த நிகழ்வுகள்

- கலீஃபா ஒருவரின் மரணத்திற்குப் பின்னால் ஏற்படவேண்டிய பிரச்சினைகள்.[1]
- அவர் வருவதற்கு முன்னால் உலகத்தில் அநீதியும், அட்டூழியமும் தலைவிரித்தாடும்
- கலீஃபாவின் மூன்று பிள்ளைகளுக்கிடையில் சண்டை ஏற்படும்.
- அவர் மிக்க நல்லவராகவும் அல்லாஹ்வைப் பயந்தவராகவும் இருப்பதோடு அவரிடம் மார்க்க அறிவும் காணப்படும்.

1. இது பற்றி வந்துள்ள ஹதீஸின் அறிவிப்பாளர் விஷயத்தில் கருத்து வேறுபாடுகள் உண்டு.

- அவர் மக்காவில் அடையாளப்படுத்தப்பட்டு, கஅபாவின் இரு மூலைகளாகிய ருக்னுல் யமானிக்கும் மகாமு இப்றாஹீமுக்கும் இடையே வைத்து மக்கள் அவருக்கு பைஅத் செய்வார்கள்.

| | |
|---|---|
| | **சிலர் தன்னையோ அல்லது பிறரையோ மஹ்தி என்பதற்கான காரணம் என்ன?** |
| **தெளிவு** | தன்னை மஹ்தி என வாதிட்டவர்களின் வரலாறுகளையும், சுயசரிதைகளையும் ஆராய்ந்து பார்க்கின்றபோது பின்வரும் விஷயங்கள் தெளிவாகின்றன.<br><br>• சிலர் மஹ்தியிடத்தில் காணப்படவேண்டிய எந்தவித அடையாளமோ, அறிகுறிகளோ இல்லாமல் வெறுமனே மக்களிடத்தில் பிரபல்யம் அடைந்து ஆட்சியைப் பிடிக்கும் நோக்கில் வேண்டுமென்றே பொய்யாகத் தன்னை மஹ்தியென வாதிட்டனர். இதற்கு உபைதுல்லாஹ் அல்கத்தாஹ், இப்னு தவ்மர்த் என்போர் தெளிவான சான்றுகளாவர்.<br><br>• இன்னும் சிலரை அவர்களின் பற்றற்ற தன்மைகளாலும், இறையச்சத்தினாலும் மக்களே மஹ்தி என எண்ணிப் பின்னால் சென்றனர். எனினும், பின்னர் அவர் மஹ்தி அல்ல என்பது தெளிவாகிவிட்டது.<br><br>• இன்னும் ஒரு சிலர் பிரபலமடைந்தனர். அவர்களைப் பற்றிய கனவுகளும் அதிகமாகின. மக்களும் அவரை மஹ்தி என எண்ணினார்கள். உதாரணமாக முஹம்மது இப்னு அப்துல்லாஹ் அல்கஹ்தானி. |

**முக்கியமான ஒரு அடிப்படை:**

ஒருவரிடம் மஹ்தியின் எந்த அடையாளமுமின்றி, அக்காலத்தில் தஜ்ஜாலும் வராமல், அவர் தன்னை மஹ்தி என வாதிட்டால் அவர் அப்பட்டமான பொய் சொல்கின்றார் என்பது அர்த்தமாகும்.

அவ்வாறே தஜ்ஜாலின் வருகைக்கு முன்னால் யாராவது தன்னை

ஈஸா அலைஹிஸ் ஸலாம் என வாதிட்டால் அவனும் அப்பட்டமான பொய்யனாவான்.

மஹ்தி அவர்களை முஸ்லிம்களின் இமாம்களில் ஒருவராகத்தான் அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஅத்தினர் பார்க்கின்றார்கள். அவர் மஃஸூம் (-பாவம் செய்வதில் இருந்து பாதுகாக்கப்பட்டவர்) என்றோ அல்லது வேறு ஆதாரமற்ற சிந்தனைகளையோ ஏற்றுக்கொள்ளவில்லை. இதுவே நீதியான, நடுநிலையான கொள்கையாகும்.

சிலர் மஹ்தி என்ற ஓர் அம்சமே இஸ்லாமில் இல்லை என முற்றாகவே மறுத்து விடுகின்றனர்.

இவர்களில் சிலர்...

- **இப்னு கல்தூன்.**

இவர் மஹ்தி பற்றி வருகின்ற ஹதீஸ்களை மறுத்தார். பின்னர், தன்னைப் பற்றி பின்வருமாறு கூறுகிறார். "என்னைப் பொறுத்தவரையும் விரல்விட்டு எண்ணக்கூடிய ஒரு சிலரே மஹ்தி விஷயத்தில் உளத்தூய்மையுடன் நடந்துகொள்கின்றனர் என நினைக்கின்றேன்."[1]

- **முஹம்மத் ரஷீத் ரிழா**

இவர் தனது நிலைப்பாட்டை இவ்வாறு விவரிக்கிறார்: "மஹ்தி பற்றி வந்துள்ள ஹதீஸ்கள், ஒன்றிணைத்து விளங்கிக் கொள்ள முடியாத அளவு முரண்பட்டுக் காணப்படுகின்றன. மஹ்தி பற்றிய ஹதீஸ்களில் பல சந்தேகங்கள் இருப்பதனால்தான், பெரும்பாலானவர்கள் மஹ்தி பற்றிய கோட்பாட்டை மறுக்கின்றனர். இதனால்தான் இமாம் புகாரி, முஸ்லிம் ரஹிமஹுல்லாஹ் போன்ற இஸ்லாமிய அறிஞர்கள் மேற்படி ஹதீஸ்களை அறிவிப்பதைவிட்டும் தவிர்ந்து கொண்டார்கள். அதேவேளை இன்னும் பல அறிஞர்களும் மஹ்தி பற்றிய அனைத்து ஹதீஸ்களும் ஆதாரமற்றவை எனக் குறிப்பிட்டுள்ளனர்"[2]

- **அஹ்மத் அமீன்**

"மஹ்தி பற்றி வந்துள்ள ஹதீஸ்கள் அனைத்தும் மூடத்தனமான,

1. பார்க்க : முகத்திமது தாரீஹ்க் இப்னு கல்தூன் 1/574.
2. பார்க்க: தஃப்ஸீருல் மனார்

முஸ்லிம்களின் வாழ்வில் பல அபாயகரமான விளைவுகளை ஏற்படுத்தக் கூடியவைகளுமாகும்.'' (முஹா அல் - இஸ்லாம்)

- **அப்துல்லாஹ் இப்னு ஸைத் ஆலு மஹ்மூத்**

''மஹ்தி பற்றிய கோட்பாடு அடிமுதல் நுனிவரை பொய்களும், புரட்டுக்களும், செவிவழியே தவழ்ந்து வந்த வெறும் கதைகளும், மக்களைப் பயமுறுத்திப் பயங்கரப்படுத்துவதற்கான கட்டவிழ்த்து விடப்பட்ட ஹதீஸ்களுமேயாகும்.''

- **முஹம்மத் ஃபரீத் வஜ்தீ**

"மஹ்தி பற்றிய ஹதீஸ்களை கவனித்துப் பார்க்கின்ற அறிஞர்கள் இப்படிப்பட்ட ஹதீஸ்களை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சொல்லியிருக்க மாட்டார்கள் என்பதில் சந்தேகப்பட மாட்டார்கள். மேற்படி ஹதீஸ்களில் பெரும்பாலானவற்றில் மிகைப்படுத்தலும், வரலாற்றுத் திரிபுகளும், அறியாமையும், காணப்படுவதோடு. அந்த ஹதீஸ்களைப் பார்த்த நொடியிலேயே அவை உலக நியதிகளுக்கு அப்பாற்பட்டது என்பதையும், அரபு மற்றும் மேற்குலகில் கிலாஃபத் கனவு காண்கின்ற சில தஃவா அமைப்புக்களினால் வேண்டுமென்றே உருவாக்கப்பட்டவை என்பதையும் கண்டு கொள்ளலாம்.''

**இவர்களது ஆதாரங்கள் :**

1. மஹ்தி பற்றிய செய்திகள் உண்மையாக இருக்குமானால், அதுபற்றி நிச்சயம் அல்குர்ஆனில் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும். அல்குர்ஆனில் மஹ்தி பற்றிக் குறிப்பிடப்படாமையால் அப்படி மஹ்தி என்ற ஒருவரே இல்லை என்பதுதான் உண்மை.

இவர்கள் சொல்வது போன்று சிந்தித்தால், மறுமை நாளின் அடையாளங்களான தஜ்ஜால், பூகம்பங்கள் போன்ற பல அடையாளங்கள் பற்றி அல்குர்ஆனில் குறிப்பிடப்படவில்லை, அவை பற்றி ஹதீஸ்களில் மாத்திரமே குறிப்பிடப்பட்டுள்ளது, அல்குர்ஆனில் குறிப்பிடப்படவில்லை என்பதற்காக அவற்றை யாரும் மறுப்பது கிடையாது.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் எதைக் கூறினாலும் அது வஹியின் அடிப்படையில் அமைந்த செய்தியாகவே காணப்படும் என்பதை பின்வரும் வசனங்கள் தெளிவுபடுத்துகின்றன.

**"அவர் தம் இச்சைப்படி (எதையும்) பேசுவதில்லை"**

**(அல்குர்ஆன் 53 : 03)**

2. மஹ்தி பற்றிய ஹதீஸ்கள் ஸஹீஹுல் புகாரி, முஸ்லிம் போன்ற நம்பகமான கிரந்தங்களில் பதியப்படாமை

ஸஹீஹுல் புகாரி மற்றும் முஸ்லிம் என்ற இரு கிரந்தங்களிலும் எல்லா ஹதீஸ்களுமே உள்ளடக்கப்படவில்லை. புகாரி முஸ்லிம் அல்லாத ஏனைய இமாம்களும் நம்பிக்கைக்குரிய இமாம்களே! ஒரு ஹதீஸ் ஸஹீஹானதா? அல்லது பலவீனமானதா? என்பதை ஹதீஸ் கிரந்தத்தை வைத்து மட்டும் பார்ப்பது கிடையாது. மாறாக அவற்றைத் தரம் பிரிப்பதற்குரிய வழிமுறைகளின்படிதான் தரம் பிரிக்கவேண்டும். அந்த வழிமுறைகளின்படி ஒரு ஹதீஸ் ஸஹீஹானதென நிரூபணமாகி விட்டால் அது எந்தக் கிரந்தத்தில் இருந்தாலும் அதை சரிகாண வேண்டியது அவசியமாகும். அதுமட்டுமன்றி, நாம் ஏற்கெனவே பார்த்தது போன்று ஸஹீஹுல் புகாரி, முஸ்லிம் போன்ற கிரந்தங்களில் உள்ள பல ஹதீஸ்களின் கருத்துகள் மஹ்தியின் வருகையை உறுதிபடுத்துகின்றன.

3. மஹ்தி பற்றிய ஹதீஸை ஏற்றுக் கொள்வதால், மஹ்தி வேடம் போடுபவர்களுக்கு அது ஏதுவாக அமைந்து விடுகிறது.

எந்த ஹதீஸையும் சரியான முறையில் புரிந்து கொண்டால் எந்தப் பிரச்சினையும் ஏற்படப் போவதில்லை. மஹ்தி பற்றிய ஹதீஸ்களில், அவரது பண்புகள், அடையாளங்கள், அவர் வெளியாகும் காலம், இடம் என அனைத்தும் தெளிவாகக் கூறப்பட்டிருக்கின்றன. யாராவது தன்னை மஹ்தி என வாதிடும்போது மேலுள்ள தகவல்களை வைத்து அவர் போலியானவரா அல்லது உண்மையானவரா என்பதை இலகுவாகக் கண்டுகொள்ள முடியும்.

இறுதியாக...

நன்மைக்கும் தீமைக்கும் இடையிலான போட்டி உருவாகி, குழப்பங்கள் பகிரங்கமாகி, தஅவா பணி தொய்வுற்று, முஸ்லிம்களின் உள்ளங்கள் நிராசைகளால் நிரப்பப்பட்டு, மஹ்தி வரமாட்டாரா? அவர் மூலமாவது முஸ்லிம்களுக்கு மோட்சம் கிடைக்காதா? என மக்கள் எதிர்பார்க்க ஆரம்பித்து விட்டார்கள்.

இஸ்லாமைப் பொறுத்தவரை...

- மஹ்தியின் வருகை மற்றும் இஸ்லாம் மேலோங்குவது.
- யூதர்களுடன் போர் செய்து அவர்களை வெற்றி கொள்வது
- கிறிஸ்தவர்களுடன் போர் செய்து அவர்களை வெற்றி கொள்வது

போன்ற முஸ்லிம்களுக்கு வாக்களிக்கப்பட்டுள்ள வெற்றிகள் விஷயத்தில் நாம் சில முக்கியமான விஷயங்களைக் கவனத்தில் கொள்ள வேண்டியது அவசியமாகும்.

மறுமை நாளின் அடையாளங்களாகப் பார்க்கப்படுகின்ற இந்த வெற்றிகளை வைத்து, மார்க்கம் எப்படியும் பாதுகாக்கப்படும்தானே என்ற எண்ணத்தில் எது நடந்தாலும் பொறுமையாகவும் மௌனமாகவும் இருந்து விடலாம் என்று எண்ணிவிடக் கூடாது.

நமக்கும் இஸ்லாமிற்கும் வெற்றி கிடைக்கும் என்பது உண்மைதான். எனினும், அதை நினைத்து வீட்டில் முடங்கிக் கிடக்காமல் மார்க்கத்திற்காக உழைத்தல், முஸ்லிம்களின் நாடுகளில் ஏற்படுகின்ற பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்தல், அல்லாஹ்வின் பாதையில் போராடுதல், போன்ற மார்க்கக் கடமைகளில் கவனம் செலுத்தவேண்டியது ஒரு முஸ்லிமின் கடமையாகும். எந்தவித முயற்சியுமின்றி வானத்திலிருந்தோ பூமியிலிருந்தோ வெற்றிகள் நம்மைத் தேடிவரும் என்று எண்ணிக் கொண்டிருப்பது தவறு.

எனவே, யூதர்களோடு போராடுவதற்காகவும், முஸ்லிம்களிடமிருந்து ஆக்கிரமிக்கப்பட்ட முஸ்லிம்களின் பூமியிலிருந்து கிறிஸ்தவர்களை வெளியேற்றுவதற்காகவும், நம்மாலான முயற்சிகளை மேற்கொள்வது நமது கட்டாயக் கடமையாகும்.

சக்தியற்று, சிறுமைப்படுத்தப்பட்டவர்களாகவும், நலிவடைந்தவர் களாகவும் ஓரத்தில் நின்றுகொண்டு மஹ்தியின் வருகையை எதிர்பார்த்துக் கொண்டிராமல், நாம் ஒன்றுபடுவதும், நமது தீனுக்காகப் போராடுவதும், இக்காலத்தின் இன்றியமையாத தேவைகளாகும். அதே நேரத்தில், மஹ்தி அவர்களும் வந்துவிட்டால் அது வெற்றிக்குமேல் வெற்றியாக அமைந்துவிடும்.

.....................................

# மறுமை நாளின்
# பெரிய அடையாளங்கள்

1. தஜ்ஜால்
2. ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்களின் வருகை
3. ‘யஃஜூஜ் மஃஜூஜ்’ன் வருகை

4, 5, 6. மிகப்பெரும் மூன்று பூகம்பங்கள்

7. புகைமூட்டம்
8. இராட்சத பிராணியின் வெளிப்பாடு
9. சூரியன் மேற்கில் உதித்தல்
10. மஹ்ஷரின் பக்கம் மக்களை ஒன்று திரட்டுகின்ற நெருப்பு



## 1. தஜ்ஜால்

அல்லாஹ் தான் நாடியவாறு மறுமை நாளின் அடையாளங்களை வெளிப்படுத்தி, மறுமை நாள் நெருங்கிவிட்டது என்பதை மனிதர்களுக்கு உணர்த்துகின்றான்.

அந்த வகையில் மறுமை நாளின் பெரிய அடையாளங்களில் தஜ்ஜாலின் வருகையும் ஒன்றாகும். எனவே இதுபற்றி பின்வரும் தலைப்புகளில் பார்க்கலாம்.

மஸீஹுத் தஜ்ஜால் என்பவன் யார்?

தற்போதும் அவன் உயிரோடுதான் இருக்கின்றானா?

அவனுடைய பண்புகள் என்ன?

அவன் வெளிப்படுவதற்கான காரணங்கள் யாது ?

அவன் நிகழ்த்தவிருக்கும் அதிசயங்கள் என்ன?

தஜ்ஜால் பற்றிய தவறான நம்பிக்கைகள் என்ன?

**தஜ்ஜால் என்பவன் யார்?**

தஜ்ஜால் என்பவன் மனித இனத்தைச் சேர்ந்த ஒருவன்தான். மனிதர்களின் ஈமானைச் சோதித்துப் பார்ப்பதற்காக அல்லாஹ் அவனுக்கு, மனிதர்களில் யாருக்குமில்லாத பல வல்லமைகளைக் கொடுத்திருக்கின்றான். ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், அவனுடைய வழிகேடுகளைப் பின்பற்றுவதை விட்டும் நமக்குக் கடுமையாக எச்சரித்துள்ளார்கள். மேலும், அவனது தோற்றம் மற்றும் குணாதிசயங்களைப் பற்றியும் தெளிவாக எடுத்துக் கூறியுள்ளார்கள்.

தஜ்ஜால் என்பவன் மிகப்பெரிய குழப்பவாதியாவான். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இவன் விஷயத்தில் தமது உம்மத்தினரைக் கடுமையாகப் பயந்துள்ளார்கள்.

அவனால் ஏற்படவிருக்கின்ற குழப்பங்கள் மற்றும் பிரச்சினைகள் விஷயத்தில் மிகக் கடுமையாக எச்சரிக்கை செய்துள்ளார்கள். தானே "ரப்புல் ஆலமீன்" -அகிலத்தார்களின் இறைவன் என்று கூட வாதாடுவான் என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியுள்ளார்கள்.

தஜ்ஜாலின் பண்புகளையும் அவனிடமிருந்து பாதுகாப்புப் பெறுவதற்கான வழிகளையும் அறிந்துகொண்டால், நிச்சயமாக அல்லாஹ்வின் உதவியால் அவனது தீங்கிலிருந்து பாதுகாப்புப் பெற்றுக்கொள்ளலாம். எனவே தஜ்ஜாலைப் பற்றி அறிந்து அவனிடமிருந்து பாதுகாப்புப் பெற வேண்டுமெனில் நிச்சயமாக அவனைப் பற்றி படித்தறிந்தாக வேண்டும்.

**மஸீஹுத் தஜ்ஜால் என பெயர் வரக் காரணம்...**

இவனது இடது கண் பாதிக்கப்பட்டு ஒற்றைக் கண்ணாக இருப்பதால் இவன் மஸீ ஹுத் தஜ்ஜால் என அழைக்கப்படுகின்றான்.

அவன் பூமியைத் (மஸ்ஹ்) தொட்டுத் தடவி பூமி முழுவதும் பயணிப்பான். அதனாலேயே இவன் மஸீஹுத் தஜ்ஜால் என அழைக்கப்படுகின்றான் என்ற மற்றுமொரு கருத்தும் உள்ளது.

தனது முகத்தில் ஒரு கண்ணும், கண் புருவமும் இல்லாத காரணத்தால் இவன் மஸீஹுத் தஜ்ஜால் என அழைக்கப்படுகின்றான் என்றதொரு கருத்தும் காணப்படுகிறது.

அவன் மிகப்பெரும் பொய்யனாகவும், மக்கள் மத்தியில் சந்தேகங்களை உண்டுபண்ணுவதன் மூலம் அவர்களை வழிகெடுப்பவனாகவும், குழப்பம் செய்யக்கூடியவனாகவும் இருப்பதால் தஜ்ஜால் என அழைக்கப்படுகின்றான் என்ற கருத்தும் உள்ளது.

## தஜ்ஜாலின் வாதம்

"இவ்வுலகைப் படைத்தவனும், வணக்கத்திற்குத் தகுதியானவனும் நானே" என்பதே தஜ்ஜாலின் முக்கியமான வாதமாகக் காணப்படும். இதன் பக்கமே அவன் மக்களை அழைப்பான். எனினும் இவன் வணக்கத்திற்குத் தகுதியானவன் அல்ல என்பதை நபி ஸல்லல்லாஹு

அலைஹி வஸல்லம் அவர்கள் நமக்குப் பின்வருமாறு விவரித்துக் கூறியுள்ளார்கள். "நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஒருமுறை மக்களின் நடுவே அமர்ந்தபடி 'தஜ்ஜால்' என்னும் மஸீஹை நினைவு கூர்ந்தார்கள். அப்போது, 'அல்லாஹ் ஒற்றைக் கண்ணன் அல்ல. ஆனால், 'தஜ்ஜால்' என்னும் மஸீஹ், வலது கண் குருடானவன். அவனுடைய கண், (ஒரே குலையில்) துருத்திக் கொண்டிருக்கும் திராட்சையைப் போன்றிருக்கும் (எனவே, அவனைப் பார்த்து அல்லாஹ் என்று நம்பி விடாதீர்கள்)" என்று கூறினார்கள்.[1]

**'இப்னு ஸய்யாத்' யார்?**

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது காலத்தில் மதீனாவில் இப்னு ஸய்யாத் எனும் பெயரில் ஒரு சிறுவன் இருந்தான். அச்சிறுவன் தஜ்ஜாலாக இருப்பானோ என்ற சந்தேகம் நபியவர்களுக்கு ஏற்பட்டபோது, நபியவர்களுக்கும் அச்சிறுவனுக்கும் இடையில் ஒரு சந்திப்பு இடம்பெற்றது. அந்நிகழ்வை அப்துல்லாஹ் இப்னு உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் பின்வருமாறு விவரிக்கின்றார்கள்.

"(என் தந்தை) உமர் இப்னு அல்கத்தாப் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடனும், (அவர்களின் தோழர்களில்) ஒரு குழுவினருடனும் இப்னு ஸய்யாதை நோக்கிச் சென்றார்கள். அவன் "பனூ மகாலா" கோத்திரத்தினரின் மாளிகைக்கு அருகே சிறுவர்களுடன் (சிறுவனாக) விளையாடிக் கொண்டிருப்பதைக் கண்டார்கள். அப்போது இப்னு ஸய்யாத் பருவ வயதை நெருங்கியிருந்தான். அல்லாஹ்வின் தூதர் அவர்கள் தமது கரத்தால் அவனது முதுகில் அடிக்கும் வரையில் அவன் எதையுமே உணரவில்லை.

பிறகு அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், "நான் இறைவனின் தூதர்தான் என்று நீ சாட்சியம் அளிக்கிறாயா?" என்று இப்னு ஸய்யாதிடம் கேட்டார்கள். இப்னு ஸய்யாத் அல்லாஹ்வின் தூதர் அவர்களைக் கூர்ந்து பார்த்துவிட்டு, "நீங்கள் (எழுதப்படிக்கத் தெரியாத மக்களான) "உம்மி"களின் தூதர் என்று நான் சாட்சியம் அளிக்கிறேன்" என்று பதிலளித்தான். மேலும்

1. அறிவிப்பாளர் : அப்துல்லாஹ் இப்னு உமர் (ரலி), நூல் : ஸஹீஹுல் புகாரி

அவன், அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம், “நான் இறைவனின் தூதர்தான் என்று நீங்கள் சாட்சியம் அளிக்கிறீர்களா?” என்றும் கேட்டான்.

அப்போது அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், (இஸ்லாமைப் பற்றி அவனிடம் எதுவும் கேட்காமல்) அவனை விட்டுவிட்டு, “நான் அல்லாஹ்வின் மீதும் அவனுடைய தூதர்களின் மீதும் நம்பிக்கை கொண்டுள்ளேன்” என்று கூறினார்கள்.

பிறகு அவனிடம், “(உன்னைப் பற்றி) நீ என்ன நினைக்கிறாய்?” என்று கேட்டார்கள். அதற்கு இப்னு ஸய்யாத், “எனக்கு மெய்யான செய்திகளும் பொய்யான செய்திகளும் உதிக்கின்றன” என்று கூறினான். அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் “உனக்கு (உண்மையும் பொய்யும் கலந்து) குழப்பம் ஏற்பட்டுள்ளது” என்று கூறிவிட்டு, “நான் (உன்னைச் சோதிப்பதற்காக எனது) மனதில் ஒன்றை மறைத்து வைத்துள்ளேன். (அது என்னவென்று சொல்)” என்று கூறினார்கள். - நபியவர்கள் “துகான்” (**دخان**) எனும் சொல்லை நினைத்திருந்தார்கள். - இப்னு ஸய்யாத், “துக்” (**دخ**) என்று பதிலளித்தான்.

உடனே அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், “தூர விலகிப்போ. நீ (உனக்குக் கொடுக்கப்பட்டிருக்கும்) எல்லையைத் தாண்டிவிட முடியாது” என்று கூறினார்கள்.

அப்போது உமர் இப்னு அல்கத்தாப் (ரலி) அவர்கள், “அல்லாஹ்வின் தூதரே! என்னை விடுங்கள். இவனது கழுத்தை நான் வெட்டி விடுகிறேன்” என்று கேட்டார்கள். அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், “இவன் அவனாக (-தஜ்ஜாலாக) இருந்தால் இவனைக் கொல்லும் பொறுப்பு உமக்குக் கொடுக்கப்படவில்லை; இவன் அவனாக (-தஜ்ஜாலாக) இல்லையென்றால், இவனைக் கொல்வதால் உமக்கு நன்மையேதும் இல்லை” என்று கூறினார்கள்.

அதன் பின்னர் அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும் உபை இப்னு கஅப் (ரலி) அவர்களும் இப்னு ஸய்யாத் தங்கியிருந்த பேரீச்சந் தோட்டத்தை நோக்கி நடக்கலாயினர். பேரீச்சந் தோட்டத்திற்குள் நுழைந்தவுடன் அல்லாஹ்வின் தூதர்

ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், இப்னு ஸய்யாத் தம்மைப் பார்த்துவிடும் முன்பே அவனிடமிருந்து அவனது பேச்சில் எதையாவது கேட்டுவிட வேண்டுமென்று திட்டமிட்டபடி பேரீச்ச மரங்களுக்கிடையில் தம்மை மறைத்துக் கொண்டு நடந்தார்கள். அப்போது இப்னு ஸய்யாத் தனது படுக்கையில், ஒரு பூம்பட்டுப் போர்வைக்குள் எதையோ முணுமுணுத்தபடி படுத்திருந்தான்.

இப்னு ஸய்யாதுடைய தாய், அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பேரீச்ச மரங்களுக்கிடையே தம்மை மறைத்துக்கொண்டு வருவதைக் கண்டு, இப்னு ஸய்யாதை, ஓ "ஸாஃபி!" (இது இப்னு ஸய்யாதின் பெயர்) இதோ முஹம்மத் (வருகிறார்)!" என்றாள். உடனே இப்னு ஸய்யாத் குதித்தெழுந்து உட்கார்ந்து கொண்டான். (அதனால் அவனது பேச்சு எதையும் கேட்க முடியவில்லை.) அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், "அவள் அவனை அப்படியே விட்டுவிட்டிருந்தால் அவன் (யார் என்ற உண்மை நிலையை) வெளிப்படுத்தியிருப்பான்" என்று கூறினார்கள்.

பிறகு அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மக்களிடையே எழுந்து நின்று, அல்லாஹ்வை அவனது தகுதிக்கேற்ப போற்றிப் புகழ்ந்துவிட்டு, தஜ்ஜாலைப் பற்றிப் பின்வருமாறு கூறினார்கள்:

"அவனைக் குறித்து உங்களை நான் எச்சரிக்கிறேன். எந்த இறைத்தூதரும் அவனைக் குறித்துத் தம் சமுதாயத்தாரை எச்சரிக்காமல் இருந்ததில்லை. நூஹ் அலைஹிஸ் ஸலாம் அவர்கள் தம் சமுதாயத்தாரை அவனைக் குறித்து எச்சரித்தார்கள். ஆயினும், நான் அவனைப் பற்றி வேறெந்த இறைத் தூதரும் தம் சமுதாயத்தாருக்குச் சொல்லாத ஒரு விவரத்தை உங்களுக்குச் சொல்கிறேன். அவன் ஒற்றைக் கண்ணன் ஆவான். வளமும் உயர்வும் மிக்க அல்லாஹ் ஒற்றைக் கண்ணன் அல்ல என்பதை அறிந்து கொள்ளுங்கள்."[1]

"அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும் அபூபக்கர் மற்றும் உமர் ரழியல்லாஹு அன்ஹு ஆகியோரும் மதீனாவின் வீதியொன்றில் (இப்னு ஸய்யாதை) சந்தித்தார்கள்.

1. நூல் : ஸஹீஹ் முஸ்லிம்

அவனிடம் அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், "நான் இறைவனின் தூதர் என நீ சாட்சியம் அளிக்கிறாயா?" என்று கேட்டார்கள். அதற்கு அவன், "நான் இறைவனின் தூதர் என நீர் சாட்சியம் அளிக்கிறீரா?" என்று (திருப்பிக்) கேட்டான். அதற்கு அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், "நான் அல்லாஹ்வையும் அவனுடைய வானவர்களையும் அவனுடைய வேதங்களையும் நம்பிக்கை கொண்டுள்ளேன். (எனக் கூறிவிட்டு)

"நீ என்ன காண்கிறாய்?" என்று கேட்டார்கள். அதற்கு இப்னு ஸய்யாத், "தண்ணீரின் மீது சிம்மாசனம் ஒன்றைக் காண்கிறேன்" என்று கூறினான்.

அதற்கு அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், "நீ கடல்மீதுள்ள இப்லீஸின் சிம்மாசனத்தையே காண்கிறாய்" என்று கூறிவிட்டு, "இன்னும் என்ன காண்கிறாய்?" என்று கேட்டார்கள். அதற்கு அவன், "(அல்லாஹ்விடமிருந்து செய்திகளைக் கொண்டுவரும்) இரு உண்மையாளர்களையும் ஒரு பொய்யரையும், அல்லது இரு பொய்யர்களையும் ஓர் உண்மையாளரையும் நான் காண்கிறேன்" என்று கூறினான். அப்போது அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், "இவனுக்குக் குழப்பம் ஏற்பட்டுள்ளது. அவனை விட்டுவிடுங்கள்" என்று கூறினார்கள்.[1]

"(ஒருமுறை) நாங்கள் ஹஜ்ஜுக்கு, அல்லது உம்ராவுக்குச் சென்றோம். எங்களுடன் இப்னு ஸாயிதும் (-இப்னு ஸய்யாத்) இருந்தான். (வழியில்) நாங்கள் ஓரிடத்தில் தங்கினோம். (ஓய்வெடுப்பதற்காக) மக்கள் கலைந்து சென்றபின் நானும் இப்னு ஸாயிதும் மட்டுமே எஞ்சியிருந்தோம். அவனைப் பற்றிச் சொல்லப்படுகிற விஷயங்களால் அவனருகில் இருப்பதை நான் மிகவும் வெறுத்தேன். அவன் தனது பயணப் பொருட்களைக் கொண்டு வந்து எனது பயணப் பொருட்களுடன் வைத்தான்.

அப்போது நான், "வெயில் கடுமையாக உள்ளது. அந்த மரத்திற்குக் கீழே நீ உன் பொருட்களை வைத்தால் நன்றாயிருக்குமே" என்றேன்.

1. அறிவிப்பாளர் : அபூஸயீத் அல்குத்ரீ ரழியல்லாஹு அன்ஹு, நூல் : ஸஹீஹ் முஸ்லிம்

அவ்வாறே அவன் செய்தான். அப்போது (அவ்விடத்திற்கு) ஒரு ஆடு வந்தது. உடனே அவன் சென்று, ஒரு பெரிய கோப்பை (நிறைய பால்) கொண்டு வந்து அபூ ஸயீதே! பருகுவீராக" என்றான். அவனது கையால் எதையும் அருந்துவதை வெறுத்துவிட்ட நான், "வெயிலும் கடுமையாக உள்ளது. பாலும் சூடாக உள்ளது என்று கூறி (மறுத்து) விட்டேன்.

அபூ ஸயீதே! மக்கள் என்னைப் பற்றி கூறுவதைக் கேட்கும்போது ஒரு கயிற்றைத் தொங்கவிட்டுத் தூக்கிலிட்டுக் கொள்ளலாம் என நினைக்கிறேன் எனக் கூறினான்.

அபூ ஸயீதே! யாருக்கு அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறிய ஹதீஸ் தெரியாவிட்டாலும், அன்சாரிகளாக இருக்கின்ற உங்களுக்குத் தெரியாமல் போகாது.

(அபூ ஸயீதே!) நீங்கள் அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் ஹதீஸ்களை நன்கறிந்தவர்களில் ஒருவரல்லவா? அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், "(தஜ்ஜால்) இறைமறுப்பாளன்" என்று சொல்லவில்லையா? நானோ ஒரு முஸ்லிமாக இருக்கிறேன். அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், "(தஜ்ஜால்) குழந்தை பாக்கியமற்ற மலடன்" என்று கூறவில்லையா? நானோ என் குழந்தையை மதீனாவில் விட்டு வந்துள்ளேன். அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், "(தஜ்ஜால்) மதீனாவுக்குள்ளும் மக்காவுக்குள்ளும் நுழைய முடியாது" என்று கூறவில்லையா? நானோ, மதீனாவிலிருந்து மக்காவை நாடி வந்து கொண்டிருக்கிறேன்" என்று கூறினான்.

இதையெல்லாம் கேட்டதும், அவனை மன்னிக்கும் அளவுக்கு நான் போய் விட்டேன். பிறகு அவன், "அறிந்துகொள்! அல்லாஹ்வின் மீதாணையாக! தஜ்ஜாலை நான் அறிவேன். அவனது பிறப்பையும், இப்போது அவன் எங்கே இருக்கிறான் என்பதையும் நான் அறிவேன்" என்றான். அப்போது நான் "காலமெல்லாம் உனக்கு நாசமுண்டாகட்டும்" என்று கூறி (சபித்து)விட்டேன்.[1]

1. அறிவிப்பாளர்: அபூஸயீத் அல்குத்ரி ரழியல்லாஹு அன்ஹு, நூல் : ஸஹீஹ் முஸ்லிம்

**இப்னு ஸய்யாத் பற்றி அறிஞர்களின் கூற்றுக்களில் மிகச் சரியானது**

இப்னு ஸய்யாத் என்பவன் உண்மையான தஜ்ஜால் அல்ல. ஆனால், அவனும் தஜ்ஜாலைப் போன்று ஏமாற்றக்கூடிய தந்திரம் செய்யக்கூடிய மனிதர்களில் ஒருவன் ஆவான். அவனிடம் குறி சொல்லும் ஆற்றல் இருக்கிறது. ஷைத்தான்கள் அவனுக்குச் சில செய்திகளை அறிவித்துக் கொடுத்திருக்கின்றார்கள்.

அபூ ஸயீத் அல்குத்ரி ரழியல்லாஹு அன்ஹு மற்றும் சில நபித் தோழர்களுடன் நிகழ்ந்த பல நிகழ்வுகளில் இப்னு ஸய்யாத் பற்றிய அதிகமான செய்திகளைக் காணமுடிகிறது. அவற்றையெல்லாம் வைத்துப் பார்க்கும்போது, அவன் தனது இறுதி காலத்தில் பாவமன்னிப்புத் தேடி திருந்திவிட்டான். அவனுடைய நிலைப்பாடுகளும் சீராக இருந்ததாகவே தெரிகிறது. அல்லாஹ் மிக அறிந்தவன்.

**தஜ்ஜால் பற்றி குர்ஆனில் ஏன் குறிப்பிடப்படவில்லை !?**

தஜ்ஜால் என்பவன் மிகப் பெரிய குழப்பக்காரன் என்பதால் அனைத்து நபிமார்களும் அவரவர் சமூகத்தவர்களுக்கு அவனைப் பற்றி எச்சரிக்கை செய்துள்ளார்கள். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும் அனைத்துத் தொழுகையின் இறுதியிலும் தஜ்ஜாலின் குழப்பங்களில் இருந்து பாதுகாப்புத் தேடுமாறு தனது உம்மத்திற்கு வழிகாட்டியுள்ளார்கள்.

சந்திரன் பிளத்தல், யஃஜூஜ், மஃஜூஜ் வெளியாகுதல் போன்ற மறுமை நாளின் பெரிய மற்றும் சிறிய அடையாளங்களை அல்லாஹ் அல்குர்ஆனில் நேரடியாகவே குறிப்பிட்டிருந்தாலும், தஜ்ஜாலைப் பற்றி நேரடியாகக் குறிப்பிடாமல் இருப்பதற்கு உலமாக்கள் பல காரணங்களை முன்வைக்கின்றனர்.

01 “வானவர்கள் அவர்களிடம் (நேரில்) வருவதையோ அல்லது உமது இறைவனே (அவர்களிடம்) வருவதையோ அல்லது உமது இறைவனின் பெரியதோர் அத்தாட்சி வருவதையோ தவிர, (வேறெதனையும்) அவர்கள் எதிர்பார்க்கின்றனரா? உங்கள் இறைவனின் பெரியதோர் அத்தாட்சி(யாகிய இறுதி நாள்) வருவதற்கு முன்னர் நம்பிக்கை கொள்ளாதிருந்து அல்லது நம்பிக்கை கொண்டிருந்தும் ஒரு

**நற்செயலும் செய்யாதிருந்துவிட்டு அந்நாளில் அவர்கள் கொள்ளும் நம்பிக்கை ஒரு பலனையும் அளிக்காது.'' (அல்குர்ஆன் 6 : 158)**

“தஜ்ஜால், இராட்சத பிராணி, சூரியன் மேற்கில் உதித்தல் போன்ற மறுமை நாளின் அடையாளங்கள் வெளிப்பட்டுவிட்டால், அதுவரைக்கும் நம்பிக்கை கொள்ளாமல் இருந்து விட்டு, அந்நாளில் அவர்கள் கொள்ளும் நம்பிக்கை எவ்வித பலனையும் அவர்களுக்கு அளிக்காது'' என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் குறிப்பிட்டார்கள்.[1]

மேலுள்ள அல்குர்ஆன் வசனத்தில் ‘அத்தாட்சிகள்’ எனப் பொதுவாகக் குறிப்பிடப்பட்டிருந்தாலும். அதற்கு விளக்கமாக வந்திருக்கும் நபிமொழியில் அத்தாட்சிகள் என்பதன் மூலம் தஜ்ஜால், இராட்சத பிராணி, சூரியன் மேற்கில் உதித்தல் ஆகியவைதான் நோக்கம் என நன்கு உணரமுடிகிறது.

எனவே மேற்படி அல்குர்ஆன் வசனத்தில் அத்தாட்சிகள் எனக் குறிப்பிடப்பட்டிருப்பது தஜ்ஜாலையும் சேர்த்துத்தான் என்பது தெளிவாகின்றது.

2. ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்கள் யுக முடிவு காலத்தில் வானிலிருந்து இறங்குவார்கள் என அல்குர்ஆன் கூறுகின்றது.

**“வேதத்தையுடையவர்களில் ஒவ்வொருவரும் அவர் இறப்பதற்கு முன்னதாக அவரை நம்பிக்கை கொள்ளாமல் இருப்பதில்லை.'' (அல்குர்ஆன் 4 : 159)**

ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்கள்தான் தஜ்ஜாலைக் கொலை செய்வார்கள் என்பது யாவரும் அறிந்த உண்மையாகும். எனவே ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்களது வருகை பற்றிப் பேசுவது தஜ்ஜாலைப் பற்றிய செய்திகளையும் உள்ளடக்கியதாகவே கருதவேண்டும்.

**தஜ்ஜால் வெளிப்படுவது மறுமை நாளின் அடையாளம் என்பதற்கான ஆதாரங்கள்**

“நீங்கள் (பெரிய) பத்து அடையாளங்களைக் காணாத வரை யுகமுடிவு

1. அறிவிப்பாளர் : அபூஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு, நூல் : திர்மிதி

நாள் ஏற்படவே செய்யாது” எனக் கூறிய நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், அந்த அடையாளங்களைப் பற்றிக் கூறும் போது:

1. புகைமூட்டம்
2. தஜ்ஜால்,
3. (பேசும்) பிராணி
4. மேற்கிலிருந்து சூரியன் உதிப்பது
5. மர்யமின் புதல்வர் ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்கள் இறங்குதல்
6. யஃஜூஜ், மஃஜூஜ்
7. 8. 9. கிழக்கிலும், மேற்கிலும், அரபு தீபகற்பத்திலும் என மூன்று பூகம்பங்கள்
10. இறுதியாக யமன் நாட்டிலிருந்து ஒரு நெருப்பு கிளம்பி மக்களை விரட்டிக்கொண்டு வந்து ஓரிடத்தில் ஒன்றுகூட்டும். எனக் கூறினார்கள். [1]

“சூரியன் மேற்கில் உதித்தல், தஜ்ஜால், இராட்சத பிராணி, போன்ற மறுமை நாளின் அடையாளங்கள் வெளிப்பட்டுவிட்டால், அதுவரைக்கும் நம்பிக்கை கொள்ளாமல் இருந்து விட்டு, அந்நாளில் அவர்கள் நம்பிக்கைகொள்வது எவ்வித பலனையும் அவர்களுக்கு அளிக்காது” என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் குறிப்பிட்டார்கள்.[2]

**உலகில் தோன்றும் குழப்பங்களில் தஜ்ஜாலின் குழப்பமே மிகப்பெரிய குழப்பமாகும்**

அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்,

---

1. அறிவிப்பாளர் : ஹுதைஃபா அல் கிபாரி ரழியல்லாஹு அன்ஹு, நூல் : ஸஹீஹ் முஸ்லிம்
2. அறிவிப்பாளர் : அபூஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு, நூல் : ஸஹீஹ் முஸ்லிம்

“(முதல் மனிதர்) ஆதம் அலைஹிஸ் ஸலாம் அவர்களைப் படைத்தது முதல் யுக முடிவு நாள் ஏற்படும்வரை தஜ்ஜாலைவிட (குழப்பத்தை ஏற்படுத்துகின்ற) மிகப் பெரிய படைப்பேதும் இல்லை” என்று கூறியதை நான் கேட்டுள்ளேன் என ஹிஷாம் இப்னு ஆமிர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் குறிப்பிட்டார்கள்.[1]

“இறைத் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மக்களிடையே எழுந்து நின்று அல்லாஹ்வை அவனுக்குத் தகுதியுள்ள பண்புகளைக் கொண்டு புகழ்ந்த பிறகு தஜ்ஜாலைப் பற்றிப் பின்வருமாறு கூறினார்கள். ‘நான் உங்களை அவனைக் குறித்து எச்சரிக்கிறேன். எந்த இறைத் தூதரும் அவனைக் குறித்து தம் சமூகத்தாரை எச்சரிக்காமல் விட்டதில்லை. நூஹ் அவர்கள் தம் சமூகத்தாருக்கு (அவனைக் குறித்து) எச்சரித்திருக்கிறார்கள். ஆனால், நான் அவனைப் பற்றி (இதுவரை) எந்த இறைத் தூதரும் தன் சமூகத்தாருக்குக் கூறாத ஓர் அடையாளத்தை உங்களுக்குச் சொல்கிறேன். அவன் ஒற்றைக் கண்ணனாவான். அறிந்து கொள்ளுங்கள், அல்லாஹ் ஒற்றைக் கண்ணன் அல்ல.’”[2]

“...நான் உங்களிடையே (உயிருடன்) இருக்கும்போது (தஜ்ஜால்) தோன்றினால் உங்களைத் தவிர்த்து நானே அவனிடத்தில் சண்டை செய்வேன். நான் உங்களிடையே இல்லாதபோது அவன் வெளிப்பட்டால், ஒவ்வொரு முஸ்லிமும் தமக்காக அவனிடம் சண்டை செய்பவனாக இருப்பான். அல்லாஹ் ஒவ்வொரு முஸ்லிமுக்கும் எனது சார்பில் பொறுப்பாளனாக இருப்பான்...” என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் குறிப்பிட்டார்கள்.[3]

### தஜ்ஜாலின் உடலமைப்பு

- தஜ்ஜால் குட்டையாகவும், கால்கள் சற்று வளைந்து, அகன்ற நிலையிலும் காணப்படுவான். (கால்கள் அகன்றிருப்பதால் நடை வித்தியாசமாக இருக்கும்.)

---

1. அறிவிப்பாளர் : அபூ கதாதா ரழியல்லாஹு அன்ஹு, நூல் : ஸஹீஹ் முஸ்லிம்
2. அறிவிப்பாளர் : அப்துல்லாஹ் இப்னு உமர் ரழியல்லாஹு அன்ஹு, நூல் : ஸஹீஹுல் புகாரி (3337)
3. அறிவிப்பாளர் : நவ்வாஸ் இப்னு ஸம்ஆன் ரழியல்லாஹு அன்ஹு, நூல் : ஸஹீஹ் முஸ்லிம்

- கரடுமுரடான, அடர்த்தியான முடிவுடையவனாக இருப்பான்.
- அவனுடைய இடது கண் குருடாகவும், சுருங்கிய திராட்சைப் பழம் போன்றும் இருக்கும்.
- வெண்நிறமாக இருப்பான்.
- அவனது நெற்றி விசாலமாக இருக்கும்.
- இரு கண்களுக்கும் மத்தியில் அனைவரும் வாசிக்கத்தக்க முறையில் காஃபிர் என எழுதப்பட்டிருக்கும்.
- அவன் மலடனாவான்.

**தஜ்ஜால் வெளியாகும் இடம்**

“தஜ்ஜால் கிழக்குப் பிரதேசத்திலுள்ள குராஸான்[1] (**خراسان**) எனும் இடத்திலேயே வெளியாகுவான். கொழுத்த, வட்டமான கேடயம் போன்ற முகங்களைக் கொண்ட மக்கள் அவனைப் பின் தொடர்வார்கள்” என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் குறிப்பிட்டார்கள்.[2]

சிரியாவிற்கும், ஈராக்கிற்கும் இடையிலுள்ள ஒரு பிரதேசத்தில் முதன்முதலில் தஜ்ஜால் பிரபல்யமடைவான்.

“(தஜ்ஜாலாகிய) அவன் சிரியாவுக்கும் ஈராக்குக்கும் இடையே உள்ள ஒரு பகுதியிலிருந்து புறப்பட்டு வந்து, வலப்பக்கத்திலும் இடப்பக்கத்திலும் அக்கிரமங்களைக் கட்டவிழ்த்து விடுவான்” என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.[3]

**ஜஸ்ஸாஸா எனும் பிராணி மற்றும் தஜ்ஜால் பற்றிய செய்திகள்**

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடமிருந்து நீங்கள் நேரடியாகக் கேட்ட செய்தி ஒன்றைச் சொல்லித் தாருங்கள் என ஃபாத்திமா பின்த் கைஸ் ரழியல்லாஹு அன்ஹு அவர்களிடம்

---

1. குராஸான் என்பது தற்போது ஈராக்கிலுள்ள ஒரு பிரதேசமாகும்.
2. அறிவிப்பாளர் : அபூபக்கர் ரழியல்லாஹு அன்ஹு, நூல் : அஹ்மத்
3. அறிவிப்பாளர் : நவ்வாஸ் இப்னு ஸம்ஆன் ரழியல்லாஹு அன்ஹு, நூல் : ஸஹீஹ் முஸ்லிம்

நான் கேட்டேன். அப்போது ஃபாத்திமா பின்த் கைஸ் ரழியல்லாஹு அன்ஹா அவர்கள், நீங்கள் விரும்பினால் சொல்கிறேன் எனக் கூறியதும், ஆம் சொல்லுங்கள் என்றேன். அப்போது அவர்கள் (பின்வருமாறு) கூறினார்கள்.

என் “இத்தா” காலம் முடிந்திருந்த வேளை, அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் பொது அறிவிப்பாளர்களில் ஒருவர், “மஸ்ஜிதிற்கு தொழுகைக்கு வாருங்கள்” என்று அறிவிப்புச் செய்வதை நான் செவியுற்றதும் பள்ளிவாசலுக்குச் சென்றேன். பின்னர் அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடன் தொழுகையை நிறைவேற்றினேன்.

அப்போது நான் ஆண்களின் தொழுகை வரிசைக்குப் பின்னால், பெண்களின் தொழுகை வரிசையில் இருந்தேன்.

அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தொழுகையை முடித்துவிட்டு, மிம்பர் மீது சிரித்தபடியே அமர்ந்துகொண்டு, “ஒவ்வொருவரும் தாம் தொழுத இடத்தில் அப்படியே இருங்கள்” என்று கூறினார்கள். பிறகு, ”நான் உங்களை ஏன் ஒன்று கூட்டினேன் என்று உங்களுக்குத் தெரியுமா?” என்று கேட்டார்கள். மக்கள், “அல்லாஹ்வும் அவனுடைய தூதருமே (அதுபற்றி) நன்கறிந்தவர்கள்” என்று பதிலளித்தார்கள்.

அப்போது அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பின்வருமாறு கூறினார்கள்: “அல்லாஹ்வின் மீது ஆணையாக! உங்களுக்கு ஆர்வமூட்டுவதற்கோ, அச்சுறுத்துவதற்கோ நான் உங்களை ஒன்று கூட்டவில்லை. மாறாக, (வேறொரு தகவலைச் சொல்வதற்காகவே) உங்களை ஒன்று கூட்டினேன்.

கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்த தமீமுத் தாரீ எனும் ஒரு மனிதர் (என்னிடம்) வந்து பைஅத் செய்து இஸ்லாமை ஏற்றுக்கொண்டார். அவர் என்னிடம் ஒரு செய்தியைக் கூறினார். அது (பெருங்குழப்பவாதியான) மஸீஹுத் தஜ்ஜால் குறித்து நான் உங்களிடம் தெரிவித்திருந்த செய்தியை ஒத்திருந்தது. அவர் என்னிடம் பின்வருமாறு கூறினார்:

நான் “லக்ம்”, “ஜுதாம்” ஆகிய குலங்களைச் சேர்ந்த முப்பது பேருடன்

ஒரு கப்பலில் கடல் பயணம் மேற்கொண்டேன். அப்போது கடல் அலை ஒரு மாதகாலம் எங்களைக் கடலில் அலைக்கழித்து விட்டது. பிறகு நாங்கள் கடலில் சூரியன் அஸ்தமிக்கும் (மேற்குத்) திசையில் ஒரு தீவில் ஒதுங்கினோம். பிறகு நாங்கள் சிறிய மரக்கலம் ஒன்றில் அமர்ந்துகொண்டு அங்கிருந்த தீவுக்குள் சென்றோம். அங்கு (உடல் முழுவதும் அடர்ந்த) முடிகள் நிறைந்த ஒரு பிராணி எங்களைச் சந்தித்தது. அதன் (உடல் முழுவதும்) முடிகள் நிறைந்திருந்ததனால் அதன் முன்பகுதி எது, பின்பகுதி எது என்றே எங்களால் அறிய முடியவில்லை.

அப்போது நாங்கள், "உனக்குக் கேடு உண்டாகட்டும். நீ யார்?" என்று கேட்டோம். அதற்கு அந்தப் பிராணி "நான்தான் ஜஸ்ஸாஸா" என்று கூறியது. "ஜஸ்ஸாஸா என்றால் என்ன?" என்று நாங்கள் கேட்டோம். அதற்கு அந்தப் பிராணி, "கூட்டத்தாரே! இந்த மண்டபத்திற்கு உள்ளே இருக்கும் மனிதரை நோக்கிச் செல்லுங்கள். அவர் உங்களைப் பற்றிய செய்திகளை அறிய ஆவலாக உள்ளார்" என்று கூறியது.

அந்தப் பிராணி, ஒரு மனிதனைப் பற்றிக் குறிப்பிட்டதைக் கேட்டு அது ஷைத்தானாக இருக்குமோ என்று நாங்கள் பயந்து விட்டோம். உடனே நாங்கள் அந்த மனிதனை நோக்கி விரைந்து நடந்தோம். நாங்கள் அந்த மண்டபத்தைச் சென்றடைந்ததும், அங்கு மாபெரும் உருவமுடைய மனிதன் ஒருவன் இருந்தான். அவனைப் போன்ற ஒரு படைப்பை நாங்கள் ஒருபோதும் கண்டதில்லை. அவன் சங்கிலியால் பிணைக்கப்பட்டிருந்தான். அவனுடைய கைகள் அவனது தோளோடு சேர்த்து வைத்து இறுகக் கட்டப்பட்டிருந்தன. அவனுடைய முழங்கால்கள் கணுக்கால்களோடு சேர்த்துச் சங்கிலியால் பிணைக்கப்பட்டிருந்தன.

அவனிடம் நாங்கள், "உனக்குக் கேடு உண்டாகட்டும். நீ யார்?" என்று கேட்டோம். "என்னைப் பற்றிய தகவலை நிச்சயம் நீங்கள் அறிந்து கொள்வீர்கள். (முதலில்) நீங்கள் யார் என்று கூறுங்கள்?" என்று கேட்டான். "நாங்கள் அரபு மக்கள். நாங்கள் கப்பலொன்றில் கடல் பயணம் மேற்கொண்டோம். கடல் கொந்தளிப்பு ஏற்பட்டு ஒரு மாதகாலமாகக் கடல் அலை எங்களை அலைக்கழித்து விட்டது. பிறகு

நீயிருக்கும் இந்தத் தீவில் நாங்கள் கரை ஒதுங்கினோம். பிறகு நாங்கள் சிறிய மரக்கலம் ஒன்றில் அமர்ந்து இந்தத் தீவுக்குள் நுழைந்தோம்.

அப்போது உடல் முழுவதும் அடர்ந்த முடிகளைக் கொண்ட பிராணி ஒன்று எங்களைச் சந்தித்தது. உடல் முழுவதும் முடிகள் நிறைந்திருந்த காரணத்தால் அதன் முன்பகுதி எது, பின்பகுதி எது என்று அறிய முடியவில்லை. நாங்கள் "உனக்குக் கேடுதான் நீ யார்?" என்று கேட்டோம். அது "நான்தான் ஜஸ்ஸாஸா" என்று கூறியது. "ஜஸ்ஸாஸா என்றால் என்ன?" என்று கேட்டோம். அதற்கு அது, "இந்த மண்டபத்திலுள்ள இந்த மனிதரை நோக்கிச் செல்லுங்கள். அவர் உங்களைப் பற்றிய செய்திகளை அறிய பெரும் ஆவலுடன் இருக்கிறார்" என்று கூறியது. ஆகவேதான், நாங்கள் உன்னை நோக்கி விரைந்து வந்தோம். அது ஷைத்தானாக இருக்கலாம் என்பதால் எங்களால் அச்சம் கொள்ளாமல் இருக்க முடியவில்லை" என்று கூறினோம்.

அப்போது அவன், "பைசான் (ஜோர்டானின் ஒரு பசுமைப் பிரதேசம்) பேரீச்சந் தோட்டத்தைப் பற்றி எனக்குச் சொல்லுங்கள்" என்றான். "அந்தத் தோட்டத்தில் நீ எதைப் பற்றிக் கேட்கிறாய்?" என்று கேட்டோம்.

அதற்கு அவன், "அந்தப் பேரீச்சந் தோட்டத்தின் மரங்கள் கனிகள் தருகின்றனவா என்பதைப் பற்றியே நான் கேட்கிறேன்" என்றான். நாங்கள் "ஆம்" என்று பதிலளித்தோம். அவன், "அறிந்து கொள்ளுங்கள். அது கனியே தராத காலம் நெருங்கிக் கொண்டிருக்கிறது" என்று கூறினான்.

பிறகு "தபரிய்யா நீர்நிலை[1] பற்றி எனக்குச் சொல்லுங்கள்" என்று கேட்டான். "அதில் எதைப் பற்றி நீ கேட்கிறாய்?" என்று நாங்கள் கேட்டோம். அதற்கு அவன், "அதில் தண்ணீர் இருக்கிறதா?" என்று கேட்டான். நாங்கள், "அதில் தண்ணீர் அதிகமாக இருக்கிறது" என்று பதிலளித்தோம். அவன், "அறிந்து கொள்ளுங்கள்: அதிலுள்ள நீர் வற்றும் காலம் நெருங்கி விட்டது" என்று கூறினான்.[2]

---

1. தபரிய்யா நீரோடை என்பது பலஸ்தீனத்திற்கும் ஜோர்டானுக்கும் இடையில் உள்ளது.
2. அதன் நீர் மட்டம் 1/4 பகுதியளவு குறைந்து விட்டதாகச் சொல்லப்படுகின்றது.

பிறகு, "(ஷாம் நாட்டிலுள்ள) ஸுகர்[1] நீரூற்றைப் பற்றி எனக்குச் சொல்லுங்கள்" என்று கேட்டான். நாங்கள், "அதில் எதைப் பற்றி நீ கேட்கிறாய்?" என்றோம். அதற்கு அவன், "அந்த ஊற்றில் தண்ணீர் உள்ளதா? அந்த ஊற்றுத் தண்ணீரால் மக்கள் பயிர் செய்கிறார்களா?" என்று கேட்டான். நாங்கள் "ஆம், அதில் தண்ணீர் அதிகமாக உள்ளது. அங்குள்ளவர்கள் அந்தத் தண்ணீரால் விவசாயம் செய்கிறார்கள்" என்று கூறினோம்.

பிறகு அவன், "எழுத்தறிவற்ற மக்களின் இறைத்தூதர் பற்றி எனக்குச் சொல்லுங்கள். அவர் (இப்போது) என்ன செய்கிறார்?" என்று கேட்டான். நாங்கள், "அவர் மக்காவிலிருந்து புறப்பட்டுச் சென்று மதீனாவில் தங்கியிருக்கிறார்" என்று பதிலளித்தோம். அவன், "அவருக்கும் அரபியருக்குமிடையே போர் நடந்ததா?" என்று கேட்டான். நாங்கள், "ஆம்" என்றோம். அவன், "அவர்களை அவர் என்ன செய்தார்?" என்று கேட்டான். நாங்கள், "அவர், தம் அருகிலுள்ள அரபியரை வெற்றி கொண்டுவிட்டார். அரபியர் அவருக்குக் கட்டுப்பட்டு விட்டனர்" என்று கூறினோம். அதற்கு அவன், "அப்படித்தான் நடந்ததா?" என்று கேட்டான். நாங்கள் "ஆம்" என்றோம்.

அவன், "அறிந்து கொள்ளுங்கள். அவருக்குக் கட்டுப்பட்டு நடப்பதே அவர்களுக்கு நல்லதாகும்.

(இனி) நான் என்னைப் பற்றி உங்களுக்குச் சொல்கிறேன்: நான்தான் மஸீஹ் (தஜ்ஜால்) ஆவேன். நான் (இங்கிருந்து) புறப்பட அனுமதிக்கப்படும் நாள் நெருங்கிக் கொண்டிருக்கிறது. நான் புறப்பட்டு வந்து, நாற்பது நாட்களில் பூமியில் மக்காவையும் தைபாவையும் தவிர! எந்த ஓர் ஊரையும் விட்டுவைக்காமல் பூமியெங்கும் பயணம் செய்வேன், அவ்விரண்டிற்குள்ளேயும் நுழைவது எனக்குத் தடை செய்யப்பட்டுள்ளது. அவ்விரு நகரங்களில் ஏதேனும் ஒன்றில் நுழைய நான் நாடும்போதெல்லாம் என்னை நோக்கி வானவர் ஒருவர் வருவார். அவரது கையில் உருவிய வாள் இருக்கும். (அதை வைத்து) அதற்குள் நுழைய விடாமல் அவர் என்னைத் தடுத்துவிடுவார். அதன் ஒவ்வொரு நுழைவாயிலிலும் வானவர் ஒருவர் இருந்து, அதைக் காவல் காத்துக் கொண்டிருப்பார்" என்று கூறினான்.

---

1. ஸுகர் என்பது சிரியாவிலுள்ள ஒரு கிராமம்.

இதைக் கூறியபின் அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், தம்மிடமிருந்த கைத்தடியால் சொற்பொழிவு மேடைமீது குத்தியவாறு, "இது -அதாவது மதீனா நகரம்தான் தைபா, இதுதான் தைபா, இதுதான் தைபா" என்று கூறிவிட்டு, "இதைப்பற்றி நான் உங்களுக்கு (முன்பே) அறிவித்துள்ளேன் அல்லவா?" என்று கேட்டார்கள். மக்கள், "ஆம் (அறிவித்தீர்கள்)" என்று பதிலளித்தனர். "தமீமுத் தாரீ கூறிய இந்தச் செய்தி, தஜ்ஜாலைப் பற்றியும் மதீனா மற்றும் மக்கா பற்றியும் நான் ஏற்கெனவே உங்களிடம் கூறியிருந்த செய்திக்கு ஒப்பாகவே அமைந்திருக்கிறது" என்று கூறினார்கள்.

பிறகு அறிந்து கொள்ளுங்கள்: அ(ந்தத் தீவான)து, ஷாம் நாட்டுக் கடலில், அல்லது யமன் நாட்டுக் கடலில் உள்ளது. இல்லை அது கிழக்குப் பகுதியைச் சேர்ந்த கடலில் உள்ளது. அது கிழக்குப் பகுதிக் கடலில் உள்ளது. அது கிழக்குப் பகுதி கடலில் உள்ளது" என்று (உறுதியாகக்) கூறினார்கள்.

அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இதைக் கூறும்போது கிழக்குத் திசையை நோக்கி தமது கரத்தால் சைகை செய்தார்கள். எனக்கூறிய ஃபாத்திமா பின்த் கைஸ் (ரலி) அவர்கள், இதை நான் அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடமிருந்தே மனனமிட்டேன் எனவும் கூறினார்கள்.[1]

**தஜ்ஜால் வரப்போகின்றான் என்பதற்கான அடையாளங்கள்.**

அரேபியர்கள் குறைவடைதல்

"மனிதர்கள் தஜ்ஜாலைப் பயந்து மலைகளை நோக்கி விரண்டோடுவார்கள்'' என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதை நான் கேட்டேன். அப்போது நான் ''அல்லாஹ்வின் தூதரே! அப்போது அரேபியர்கள் எங்கிருப்பார்கள்'' எனக் கேட்டேன். அதற்கு நபியவர்கள், (அப்போது அவர்கள்) குறைவாகவே இருப்பார்கள் எனக் கூறினார்கள்.[2]

---

1. நூல் : ஸஹீஹ் முஸ்லிம்
2. அறிவிப்பாளர் : உம்மு ஷுரைக் ரழியல்லாஹு அன்ஹா, நூல் : ஸஹீஹ் முஸ்லிம்

## பெரிய போர்களும் கான்ஸ்டண்டினோபில் வெற்றியும்

“பைத்துல் முகத்தஸ் நிர்மானம் செய்யப்பட்டால், யத்ரிப் (மதீனா) பாழடைந்து விடும். யத்ரிப் பாழடைந்துவிட்டால் (அறிவிக்கப்பட்ட) போர்க் களங்கள் இடம்பெறும். போர்கள் இடம்பெற்றால் கான்ஸ்டண்டினோபில் வெற்றி கொள்ளப்படும். கான்ஸ்டண்டினோபில் வெற்றிகொள்ளப்பட்டால், தஜ்ஜால் வெளியாகி விடுவான்” என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.[1]

## வெற்றிகள்

“நாங்கள் ஒரு யுத்தத்தின்போது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களோடு இருந்தோம். அப்போது மொரோக்கோவில் இருந்து கம்பளி ஆடை அணிந்த ஒரு கூட்டம் நபியவர்களை (சந்திக்க வந்தது). அக்கூட்டம் ஓர் உயரமான இடத்தில் வைத்து (நபியவர்களைச்) சந்தித்தது. நபியவர்கள் அவ்விடத்தில் அமர்ந்துகொண்டார்கள். வந்தவர்கள் அனைவரும் நின்றுகொண்டிருந்தனர். அக்கூட்டம் நபியவர்களுக்கு சதி செய்துவிடக் கூடாது என்பதற்காக, நபியவர்களுக்கும் அக்கூட்டத்திற்கும் இடையில் சென்று நிற்க வேண்டும் என எனக்கு ஓர் எண்ணம் தோன்றியது. எனினும் நபியவர்கள் சிலவேளை ரகசியமாகவும் பேசக்கூடும் என நினைத்தேன். இருப்பினும் நபிக்கும் அம்மக்களுக்கும் இடையில் சென்று (சற்று விலகி) நின்றுகொண்டேன்.

(நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அவ்விடத்தில்) நீங்கள் அரேபிய தீபகற்பத்தில் போரிடுவீர்கள், அல்லாஹ் உங்களுக்கு வெற்றியைத் தருவான். பின்னர் பாரசீகர்களோடு போரிடுவீர்கள், அல்லாஹ் அதிலும் உங்களுக்கு வெற்றியைத் தருவான். பின்னர் ரோமர்களோடு போரிடுவீர்கள், அதிலும் அல்லாஹ் உங்களுக்கு வெற்றியைத் தருவான். பின்னர் தஜ்ஜாலோடு போரிடுவீர்கள் அல்லாஹ் அதிலும் வெற்றியைத் தருவான். என நான்கு வெற்றிகளைக் கூறினார்கள். அந்த நான்கு விஷயங்களையும் என் கைகளால் (எண்ணிக்) கணக்கிட்டு மனனமாக்கிக் கொண்டேன்.[2]

---

1. அறிவிப்பாளர் : முஆத் இப்னு ஜபல் ரழியல்லாஹு அன்ஹு, நூல் : அபூதாவூத்
2. அறிவிப்பாளர் : நாபிஃ இப்னு உத்பா ரழியல்லாஹு அன்ஹு, நூல் : ஸஹீஹ் முஸ்லிம்

**மழையும், புற்பூண்டுகளும் தடைபட்டுப்போகுதல்**

“தஜ்ஜால் வருவதற்கு முன்னர் மூன்று வருடங்கள் மிக கஷ்டமான வருடங்களாகக் காணப்படும். மக்கள் அவ்வருடங்களில் மிகக்கடுமையான பசிக்கு ஆளாவார்கள்.

முதலாவது வருடத்தின்போது வானத்தின் மூன்றிலொரு பகுதி மழையை இறங்கவிடாமல் பிடித்துக் கொள்ளுமாறு அல்லாஹ் வானத்திற்கு கட்டளையிடுவான். அவ்வாறே பூமிக்கும் தனது விளைச்சலில் மூன்றில் ஒரு பகுதியை பிடித்துக் கொள்ளுமாறு கட்டளையிடுவான். பின்னர் இரண்டாம் வருடத்தில் வானத்திற்கு தனது மழையில் மூன்றில் இரண்டு பகுதியைப் பிடித்துக் கொள்ளுமாறும் பின்னர் மூன்றாம் வருடத்தில் வானத்திற்கு அதன் முழு மழையையும் பூமிக்கு அதன் முழு விளைச்சலையும் பிடித்துக் கொள்ளுமாறும் கட்டளையிடுவான்.

அப்போது அவ்வாண்டில் ஒரு துளி மழையோ, ஒரு புற்பூண்டோ முளைக்காது. அல்லாஹ் நாடியதைத் தவிர எந்தவொரு நிழல் தரும் மரமும் இல்லாமல், அனைத்துமே செத்துவிடும் என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். அப்போது அல்லாஹ்வின் தூதரே! அக்காலத்தில் மக்கள் எப்படி வாழ்வார்கள்? என கேட்கப்பட்டது. அதற்கு நபியவர்கள் “அப்போது அம்மக்கள் உண்பதற்கு பதிலாக லாயிலாஹ இல்லல்லாஹ், அல்லாஹு அக்பர், அல்ஹம்து லில்லாஹ் எனக் கூறிக்கொள்வார்கள்” என பதிலளித்தார்கள்.[1]

**குழப்பங்கள் அதிகரித்தல்**

“...அதன் பின்னால், துஹைமா எனும் மிகக் கடுமையான ஒரு குழப்பம் நிறைந்த காலம் உருவாகும். இந்த உம்மத்தின் ஒவ்வொரு நபரையும் அது பாதிக்கும். ஒரு கட்டத்தில் குழப்பங்கள் குறைவதைப்போன்று தோன்றும். அப்போது குழப்பங்கள் குறைகின்றன என மக்கள் பேசிக் கொண்டிருக்கும் போதே மீண்டும் கிளர்ந்தெழும். அக்காலத்தில் காலையில் முஃமினாக இருப்பவர்கள் மாலையடையும் போது காஃபிராயிருப்பார்கள்.

---

1. அறிவிப்பாளர் : அபூ உமாமா அல் பாஹிலி ரழியல்லாஹு அன்ஹு, நூல் : இப்னு மாஜா. அறிவிப்பாளர் வரிசையில் கருத்துவேறுபாடு உண்டு

அக்காலத்தில் மக்கள் ஒன்றில் 'நிஃபாக்' (-நயவஞ்சகம்) இல்லாத முஃமின்கள், அல்லது ஈமான் அறவே இல்லாத முனாஃபிக்குகள் என இரு வகையினராகக் காணப்படுவார்கள். உங்களது காலத்தில் இந்நிலை காணப்பட்டால் அன்றோ அல்லது மறுநாளோ தஜ்ஜாலை எதிர்பாருங்கள் என (நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.[1]

## முப்பது பொய்யர்கள் தோன்றுதல்

"அல்லாஹ் மீது ஆணையாக முப்பது பொய்யர்கள் தோன்றி, அதன் பின்னர் இறுதியாக இடது கண் சுருங்கிய, ஒற்றைக் கண் தஜ்ஜால் (எனும் பொய்யனும்) தோன்றும் வரை மறுமை நாள் ஏற்படாது" என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் குறிப்பிட்டார்கள்.[2]

### மிகப்பெரும் யுத்தம்

"நீங்கள் ரோமர்களோடு ஒரு அமைதி ஒப்பந்தம் செய்து, பின்னர் இரு தரப்பாரும் சேர்ந்து பொதுவான ஒரு எதிரியை எதிர்த்துப் போராடி வெற்றி பெறுவீர்கள். பின்னர் மர்ஜ்[3] எனும் இடத்திற்கு வருவீர்கள். அப்போது கிறிஸ்தவர்களில் ஒருவன் சிலுவையை உயர்த்தி நாங்கள்தான் வெற்றியை ஈட்டித் தந்தோம் எனக் கூறுவான். இதைக்கேட்டு கோபமடைந்த ஒரு முஸ்லிம் அவனை இடித்துவிடுவான். இச்செயலை மையமாக வைத்து ரோமர்கள் மாபெரும் யுத்தத்திற்குத் தயாராவார்கள்" என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

இந்த ஹதீஸை அறிவிக்கின்ற வேறுசில அறிவிப்பாளர்கள் "அப்போது கோபமடைந்த முஸ்லிம்கள் அவ்விடத்தில் போராடி அங்கேயே ஷஹீதாகுவார்கள்" எனவும் குறிப்பிடுகின்றார்கள்.[4]

"ரோம பைஸாந்தியர், அஃமாக் மற்றும் தாபிக் ஆகிய இடங்களில் நிலைக் கொள்ளாத வரை யுக முடிவு நாள் ஏற்படாது. அவர்களை

---

1. அறிவிப்பாளர் : அப்துல்லாஹ் இப்னு உமர் ரழியல்லாஹு அன்ஹு, நூல் : அபூதாவூத்
2. அறிவிப்பாளர் : ஸமுரா இப்னு ஜுன்துப் ரழியல்லாஹு அன்ஹு, நூல் : அஹ்மத்
3. இவ்விடம் எதுவென குறிப்பாக இதுவரைக்கும் அடையாளப்படுத்தப்படவில்லை
4. நூல் : அபூதாவூத்

நோக்கி மதீனாவிலிருந்து ஒரு படை புறப்படும். அன்றைய நாளில் பூமியில் வசிப்போரில் அவர்களே சிறந்தவர்களாயிருப்பர். அவர்கள் அணி வகுத்து நிற்கும்போது ரோமர்கள், எங்களுக்கும் எங்களில் சிறைக் கைதிகளாகப் பிடிக்கப்பட்டோருக்குமிடையே நாங்கள் போர் செய்ய எங்களை விட்டு விடுங்கள் என்று கூறுவார்கள்.

அப்போது முஸ்லிம்கள், இல்லை, அல்லாஹ்வின் மீது சத்தியமாக! எங்கள் சகோதரர்கள் மீது போர் தொடுக்க உங்களை நாங்கள் அனுமதிக்க மாட்டோம் என்று கூறுவார்கள்.

ஆகவே, ரோமர்கள் முஸ்லிம்கள் மீது போர் தொடுப்பார்கள். அப்போது முஸ்லிம்களில் மூன்றிலொரு பகுதியினர் தோற்று வெருண்டோடுவார்கள். அவர்களை அல்லாஹ் ஒருபோதும் மன்னிக்கவே மாட்டான். அவர்களில் மூன்றிலொரு பகுதியினர் கொல்லப்படுவார்கள். அவர்கள் அல்லாஹ்விடம் மிகச் சிறந்த ஷஹீத் -உயிர்த்தியாகிகள் ஆவார்கள். மூன்றிலொரு பகுதியினர் (ரோமர்களை) வெற்றிகொள்வார்கள். அவர்கள் (அதன் பின்னர்) ஒருபோதும் சோதனைக்கு உள்ளாக்கப்பட மாட்டார்கள். தொடர்ந்து அவர்கள் கான்ஸ்டண்டினோபிலை வெற்றி கொள்வார்கள்.

அவர்கள் தம் வாட்களை ஆலிவ் மரங்களில் தொங்கவிட்டு, கனீமத்களை பங்கிட்டுக் கொண்டிருக்கும்போது, நீங்கள் புறப்பட்டு வந்த பின் உங்கள் குடும்பத்தாரிடையே மஸீஹ் (தஜ்ஜால்) வந்துவிட்டான்" என ஷைத்தான் குரலெழுப்புவான். உடனே அவர்கள் தம் குடும்பத்தாரை நோக்கிப் புறப்பட்டுச் செல்வார்கள். ஆனால், அது பொய்யான செய்தியாயிருக்கும். அவர்கள் ஷாமுக்கு (சிரியா) வரும்போதுதான் "மஸீஹ்" (தஜ்ஜால்) புறப்படுவான்.

இந்நிலையில் அவர்கள் போருக்காகத் தயாராகி அணிகளை சீர் செய்து கொண்டிருக்கும்போது, தொழுகைக்காக இகாமத் சொல்லப்படும். அப்போது மர்யமின் மகன் ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்கள் (வானிலிருந்து) இறங்கி வந்து அவர்களுக்குத் தலைமையேற்பார்கள்.

அவரை அல்லாஹ்வின் எதிரி (தஜ்ஜால்) காணும்போது, தண்ணீரில் உப்பு கரைவதைப் போன்று கரைந்துபோவான். அவனை ஒன்றும்

செய்யாமல் விட்டுவிட்டால்கூட அவன் தானாகக் கரைந்து அழிந்து விடுவான். ஆயினும், ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்களின் கரத்தாலேயே அவனை அல்லாஹ் அழிப்பான். அப்போது ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்கள் தமது ஈட்டி முனையில் படிந்துள்ள அவனது இரத்தத்தை மக்களுக்குக் காட்டுவார்கள்" என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் குறிப்பிட்டார்கள்.[1]

### மனிதர்கள் தஜ்ஜாலைப் பற்றிப் பேசுவதை மறந்துவிடுதல்.

"இஸ்தஹர் (பாரசீகர்களின் ஒரு முக்கிய நகர்) வெற்றிகொள்ளப்பட்ட போது தஜ்ஜால் வெளியாகிவிட்டதாக சிலர் கூறிக்கொண்டனர். அவர்களைச் சந்தித்த ஸஃப் இப்னு ஜுதாமா ரழியல்லாஹு அன்ஹு நீங்கள் சொல்வது போன்று தஜ்ஜால் வெளியாகியிருக்க மாட்டான். ஏனெனில், "மனிதர்கள் தஜ்ஜாலைப் பற்றிய செய்திகளை மறந்து, மார்க்க அறிஞர்களும் மிம்பர்களில்[2] தஜ்ஜாலைப் பற்றிப் பேசாமல் இருக்கின்ற காலம் வருவதற்கிடையில் தஜ்ஜால் வரமாட்டான்" என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதை நான் கேட்டேன் என்றார்கள்.[3]

### தஜ்ஜால் வெளியாகும் விதம்

தஜ்ஜால், தீவு ஒன்றில் தடுத்துவைக்கப்பட்டுள்ளான் என்பதையும், நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் காலத்தில் அவன் உயிரோடு இருந்துள்ளான் என்பதையும், அவன் ஒரு பிரம்மாண்டமான படைப்பு என்பதையும் தமீமுத்தாரி ரழியல்லாஹு அன்ஹு அவர்களும் அவரோடிருந்த முப்பது பேரும் அவனை சங்கிலியால் கட்டப்பட்ட நிலையில் கண்டுள்ளார்கள் என்பதையும், அவர்கள் அவனோடு பேசியுள்ளார்கள் என்பதையும், அவனே தன்னை தஜ்ஜால் என அறிமுகப்படுத்தியதையும், ஒரு கட்டத்தில் ஏற்படுகின்ற கோபத்தால் அவன் சங்கிலியை உடைத்துக்கொண்டு வெளியே வருவான் என்பதையும் ஜஸ்ஸாஸுடைய சம்பவத்தின் மூலம் அறிந்து கொள்ள முடிகிறது.

---

1. அறிவிப்பாளர் : அபூஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு, நூல் : ஸஹீஹ் முஸ்லிம்
2. மஸ்ஜித்களில் உரை நிகழ்த்துவதற்காக அமைக்கப்படும் மேடை.
3. அறிவிப்பாளர் : ராஷித் இப்னு ஸஃத், நூல் : முஸ்னத் அப்துல்லாஹ் இப்னு அஹ்மத்

**தஜ்ஜால் வெளியாவதற்கான காரணம்**

"... இப்னு உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகிறார்கள்: மதீனாவின் தெருக்களில் ஒரு தெருவில் இப்னு ஸாயித் (இப்னு ஸய்யாத்) ஐ சந்தித்தேன். நான் அவனிடம் பேசிய பேச்சு அவனுக்கு கோபத்தை ஊட்டியது. கோபத்தால் உடைத்து அவன் அந்த தெருவையே நிரப்பும் அளவுக்கு ஆகிவிட்டான். இதற்குப் பிறகு இப்னு உமர் அவர்கள் தமது சகோதரி ஹப்ஸா பின்த் உமர் ரழியல்லாஹு அன்ஹா அவர்களிடம் சென்றார். இப்னு ஸாயிதை இப்னு உமர் கோபப்படுத்திய செய்தி அவர்களுக்கு கிடைத்திருந்தது. ஆகவே, ஹப்ஸா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் கூறினார்கள்: "(சகோதரரே!) அல்லாஹ் உமக்கு அருள் புரியட்டும். இப்னு ஸயீதிடம் உங்களுக்கு என்ன வேலை? (தஜ்ஜால்) தனக்கு ஏற்படும் கடும் கோபத்தினால்தான் வெளிப்படுவான் என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதை நீர் அறியமாட்டீரா?[1]

**அவனது வேகம்**

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் "தஜ்ஜால் இவ்வுலகில் எந்தளவு வேகமாக சுற்றித் திரிவான்' எனக் கேட்கப்பட்டது. அதற்கு நபியவர்கள் "அவன் காற்றையும் மழையையும் போன்று (வேகமாக சுற்றித் திரிவான்) என்றார்கள்.[2]

"மார்க்க அறிவு குறைந்துள்ள ஒரு கால கட்டத்தில் தஜ்ஜால் தோன்றுவான். அவன் நாற்பது நாட்கள் (இவ்வுலகில்) சுற்றித் திரிவான். அப்போது ஒரு நாள் ஒரு வருடம் போன்றும், இன்னொருநாள் ஒரு மாதம் போன்றும், இன்னொருநாள் ஒரு வாரம் போன்றும், ஏனைய நாட்கள் உங்களது சாதாரண நாட்களைப் போன்றும் காணப்படும். அவனிடத்தில் ஒரு கழுதையிருக்கும், அதன் இரு காதுகளுக்கும் இடையே நாற்பது முழ தூரம் இருக்கும். அவன் மக்களிடத்தில் வந்து 'நானே உங்களது இரட்சகன்' என்பான். ஆனால் உங்கள் இரட்சகன் ஒற்றைக் கண் குருடனல்ல. அவனது இரு கண்களுக்கும் இடையில் "காஃபிர்" என எழுதப்பட்டிருக்கும், எழுதத் தெரிந்தவர்களும்

1. அறிவிப்பாளர் : நாபிஃ ரஹ்மதுல்லாஹி அலைஹி, நூல் : ஸஹீஹ் முஸ்லிம்
2. நூல் : ஸஹீஹ் முஸ்லிம்

தெரியாதவர்களும் அதனை வாசிப்பார்கள், மக்காவையும் மதீனாவையும் அல்லாஹ் அவனுக்கு ஹராமாக்கி உள்ளதால் அவை இரண்டையும் தவிர ஏனைய எல்லாப் பகுதிகளுக்கும் செல்வான். மக்கா மதீனாவிற்குள் செல்ல முடியாதவாறு அவனைத் தடுப்பதற்காக வானவர்கள் அதன் வாயில்களில் காவல் காத்துக் கொண்டிருப்பார்கள்."[1]

**தஜ்ஜால் செல்லக்கூடிய இடங்கள்**

"மக்காவையும் மதீனாவையும் தவிர தஜ்ஜாலின் கால்படாத எந்த ஊரும் இருக்காது. மதீனாவின் ஒவ்வொரு நுழைவாயிலிலும் வானவர்கள் அணிவகுத்து நின்று மதீனாவைப் பாதுகாப்பார்கள். ஆகவே, தஜ்ஜால் (மதீனாவுக்கு வெளியிலுள்ள) உவர் நிலத்தில் இறங்கித் தங்குவான். அப்போது மதீனா மூன்று முறை குலுங்கும். உடனே மதீனாவிலிருந்து ஒவ்வொரு இறைமறுப்பாளனும், நயவஞ்சகனும் அவனை நோக்கிப் புறப்பட்டு வருவார்கள்." என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் குறிப்பிட்டார்கள்.[2]

இன்னொரு அறிவிப்பில் "(இறுதி நாள் நெருங்கும்போது) மஸீஹுத் தஜ்ஜால் கிழக்குத் திசையிலிருந்து மதீனாவைக் குறிவைத்து வந்து, "உஹுத்" மலைக்குப் பின்னால் இறங்குவான். பின்னர் வானவர்கள் அவனது முகத்தை ஷாம் திசை (வடக்கு) நோக்கித் திருப்பி விடுவார்கள். அங்குதான் அவன் அழிந்து போவான்" என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.[3]

மிஹ்ஜன் இப்னு அல் அத்ரஃ ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கக்கூடிய இன்னொரு அறிவிப்பில், நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஒருமுறை மக்களுக்கு உபதேசம் செய்து கொண்டிருக்கும் போது "முடிவு நாள் என்றால் என்னவென்று தெரியுமா? என மூன்று முறை கேட்டார்கள். .....(பின்னர்) நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் "தஜ்ஜால் உஹுத் மலையில் (நின்றுகொண்டு) மதீனாவைப் பார்த்து அவனது

1. அறிவிப்பாளர் : ஜாபிர் ரழியல்லாஹு அன்ஹு, நூல் : அஹ்மத்
2. அறிவிப்பாளர் : அனஸ் ரழியல்லாஹு அன்ஹு, நூல் : ஸஹீஹுல் புகாரி, ஸஹீஹ் முஸ்லிம்
3. அறிவிப்பாளர் : அபூஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு, நூல் : ஸஹீஹ் முஸ்லிம்

தோழர்களிடத்தில் அந்த வெள்ளைக் கோட்டை உங்களுக்குத் தெரிகிறதா? அதுவே அஹ்மதுடைய பள்ளிவாசல்'' எனக் கூறிவிட்டு மதீனாவிற்குள் நுழைய முற்படுவான். ஆனால், (மதீனாவின்) ஒவ்வொரு வாயிலிலும் மலக்குகள், உருவிய வாள்களுடன் நின்று கொண்டிருப்பார்கள். பின்னர் (தஜ்ஜால்) ஷாம் பக்கமாகவுள்ள 'சப்ஹதுல் ஜுர்ப்' எனும் இடத்திற்கு வருவான். அங்கேயே தனக்கு ஒரு தங்குமிடத்தையும் அமைத்துக் கொள்வான். பின்னர் மதீனாவில் மூன்று அதிர்வுகள் ஏற்படும். அத்தோடு மதீனாவிலிருக்கும் அனைத்து ஆண், பெண் நயவஞ்சகர்களும், பாவிகளும் மதீனாவை விட்டும் வெளியேறி விடுவார்கள்'' எனக் கூறினார்கள்.[1]

''மக்கா மதீனாவைத் தவிர மற்ற எல்லாப் பகுதிகளுக்கும் தஜ்ஜால் செல்வான். மதீனாவின் அனைத்து வழிகளிலும் வானவர்கள் காவல் காத்துக் கொண்டிருப்பார்கள். பின்னர் 'சுப்ஹா' எனும் இடத்திற்கு வந்து அங்கே தனது கூடாரத்தை அமைத்துக் கொள்வான்''

ஸுப்ஹதுல் ஜுர்ப் என்பது மதீனாவிலிருந்து மூன்று மைல் தூரத்தில் அமைந்துள்ள ஓர் இடமாகும். (வேறு கருத்துக்களும் உண்டு)

**தஜ்ஜாலின் குழப்பங்கள்**

சொர்க்கமும் நரகமும்

''அவனிடம் சொர்க்கமும் நரகமும் இருக்கும் (எனினும் உண்மையில்) அவனது நரகம் சொர்க்கமும் சொர்க்கம் நரகமுமாகும்'' என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் குறிப்பிட்டார்கள்.[2]

''அவனிடம் நீரும் நெருப்பும் இருக்கும் (ஆனாலும் உண்மையில்) அவனது நெருப்பு குளிர்ந்த நீராகும். அவனது நீர் நெருப்புமாகும்.'' என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் குறிப்பிட்டார்கள்.[3]

''தஜ்ஜாலுடன் என்ன இருக்கும் என்பதை அவனைவிட நான் நன்கறிவேன். ஓடுகின்ற இரு நதிகள் அவனிடம் இருக்கும். அவற்றில் ஒன்று வெளிப்பார்வைக்கு வெண்மையான நீராகக் காட்சி

---

1. நூல் : அஹ்மத்
2. அறிவிப்பாளர் : ஹுதைஃபா இப்னு யமானி ரழியல்லாஹு அன்ஹு, நூல் : ஸஹீஹ் முஸ்லிம்
3. நூல் : ஸஹீஹுல் புகாரி, ஸஹீஹ் முஸ்லிம்

தரும். மற்றொன்று வெளிப்பார்வைக்கு கொழுந்துவிட்டெரியும் நெருப்பாகக் காட்சி தரும். அந்த இடத்தை அடைபவர் நெருப்பாகக் காட்சியளிக்கும் நதிக்குச்சென்று, கண்ணை மூடிக்கொண்டு, தலையைத் தாழ்த்தி அதிலிருந்து சிறிது அருந்தட்டும். ஏனெனில், அது குளிர்ந்த நீராகும்." என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் குறிப்பிட்டார்கள்.[1]

இன்னொரு அறிவிப்பில் "அவனுடன் நீரும் நெருப்பும் இருக்கும். அவனிடம் உள்ள நெருப்பானது (உண்மையில்) குளிர்ந்த நீராகும். அவனிடமுள்ள நீர் (உண்மையில்) நெருப்பாகும். ஆகவே, (அவனிடமுள்ள தண்ணீரை நம்பி) அழிந்து விடாதீர்கள்" என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.[2]

**மிருகங்கள் மற்றும் ஜடப்பொருட்கள் மீது ஆதிக்கம் செலுத்துவான்**

"...தஜ்ஜால் ஒரு சமுதாயத்தாரிடம் வந்து (தன்னை இறைவன் என்று ஏற்றுக் கொள்ளுமாறு) அழைப்பு விடுப்பான். அவர்களும் அவன்மீது நம்பிக்கை கொண்டு அவனது அழைப்புக்குப் பதிலளிப்பார்கள். உடனே வானத்திற்கு (மழை பொழியுமாறு) அவன் கட்டளையிட, மழை பொழியும். பூமிக்கு(த் தாவரங்களை முளைக்கச் செய்யுமாறு) கட்டளையிட, அது முளைக்க வைக்கும். அவர்களின் கால்நடைகள் (அவற்றை மேய்ந்து) ஏற்கெனவே இருந்ததைவிட நீண்ட திமில்களைக் கொண்டவையாகவும், மடி கனத்தவையாகவும் வயிறு நிரம்பியவையாகவும் மாலையில் (வீடு) திரும்பும்.

பின்னர், அவன் மற்றொரு சமுதாயத்தாரிடம் வந்து, (தன்னை இறைவன் என்று ஏற்றுக் கொள்ளுமாறு) அழைப்பு விடுப்பான். ஆனால், அவனது அழைப்பை அவர்கள் நிராகரித்து விடுவார்கள். அவர்களிடமிருந்து அவன் திரும்பிச் சென்றுவிடுவான். அதனால், அவர்கள் காலைப் பொழுதை அடையும்போது, பஞ்சத்தாலும் வறட்சியாலும் பாதிக்கப்பட்டிருப்பார்கள். அவர்களின் கைகளில் எந்தச் செல்வமும் (எஞ்சி) இருக்காது.

---

1. அறிவிப்பாளர் : ஹுதைஃபா இப்னு யமானி ரழியல்லாஹு அன்ஹு, நூல் : ஸஹீஹ் முஸ்லிம்

2, நூல் : ஸஹீஹ் முஸ்லிம்.

அவன் பாழடைந்த இடமொன்றைக் கடந்து செல்வான். அதைப் பார்த்து, "உன்னிடம் இருக்கின்ற புதையல்களை வெளிப்படுத்து" என்று கூறுவான். அப்போது (வெளிப்படுகின்ற) அந்தப் புதையல்கள், ராணித் தேனீக்களை (பின்பற்றிச் செல்லும் சாதாரண தேனீக்களை)ப் போன்று அவனைப் பின்தொடர்ந்து செல்லும்." என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் குறிப்பிட்டார்கள்.[1]

### மரணித்தவர்களை கப்ருகளிலிருந்து[2] எழுப்புவான்

"தஜ்ஜால், ஒரு நாட்டுப்புற வாசியிடம் "உனது தாயையும் தந்தையையும் மரணித்தது போன்றே (உயிருடன்) எழுப்பினால் என்னை நம்புவாயா?" எனக் கேட்பான். அதற்கு அந்த நாட்டுப்புற மனிதன் "ஆம்" என பதிலளிப்பான். அப்போது இரண்டு ஷைத்தான்கள் அம்மனிதரின் தாய், தந்தையுடைய தோற்றத்தில் தோன்றி "எனது அருமை மகனே!, இவர்தான் உனது இறைவன் இவரைப் பின்பற்றிச் செல் எனக் கூறுவார்கள்" என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் குறிப்பிட்டார்கள்.[3]

### இளைஞன் ஒருவனை இருவேறாகப் பிளந்து மீண்டும் உயிர்ப்பிப்பான்

"...பின்னர், தஜ்ஜால், வாட்டசாட்டமான இளைஞன் ஒருவனை அழைத்து, அவரை வாளால் வெட்டி இரு துண்டுகளாக்கி, அம்பெய்யும் தூரத்திற்கு இடைவெளிவிட்டு (அவ்விரண்டு துண்டுகளையும்) போடுவான். பின்னர் அந்தச் சடலத்தை அழைப்பான். உடனே அந்த இளைஞர் முகம் ஒளிர சிரித்துக்கொண்டே எழுந்து வருவார். தானே (அவ்விளைஞனை) உயிர்ப்பித்தது போன்று அவ்விளைஞனிடம், "உனது இறைவன் யார்?" என்று கேட்பான். அவ்விளைஞன் "எனது இரட்சகன் அல்லாஹ்வே!" என்று பதிலளிப்பான்" என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் குறிப்பிட்டார்கள்.[4]

### தஜ்ஜாலை பின்பற்றுபவர்கள் யார்?

அல்லாஹ் தனக்குக் கொடுத்துள்ள ஆற்றல்களைப் பயன்படுத்தி

---

1. அறிவிப்பாளர் : நவ்வாஸ் இப்னு ஸம்ஆன் ரழியல்லாஹு அன்ஹு, நூல் : ஸஹீஹ் முஸ்லிம்
2. இறந்தவர்களை மண்ணில் அடக்கம் செய்யப்படுகின்ற புதைகுழி.
3. அறிவிப்பாளர் : அபூ உமாமா ரழியல்லாஹு அன்ஹு, நூல் : இப்னு மாஜா
4. நூல் : ஸஹீஹ் முஸ்லிம்

மக்களை தன்பால் ஈர்த்து, வழிகேட்டின்பால் அழைத்துச் சென்று, தானே இறைவன் என மக்களை நம்பவைப்பதற்காக தனது முழு முயற்சியையும் பயன்படுத்துவான் தஜ்ஜால். மக்களில் சிலர் அவனது சோதனைகளை தாங்க முடியாமலும், இன்னும் சிலர் நலவுகள் போன்று தெரியக்கூடிய அவனது மாயைகளில் மயங்கியவர்களாகவும், இன்னும் பலர் இஸ்லாத்தின் மீது கொண்ட வெறுப்பின் காரணமாகவும், அவனோடு இணைந்து கொள்வார்கள். இப்படி அவனோடு இணைந்து கொள்ளக்கூடியவர்களில் பின்வருவோர் குறிப்பிடத்தக்கவர்களாவர்.

### யூதர்கள்

“அஸ்பஹான்” (ஈரான்) நாட்டைச் சேர்ந்த யூதர்களில் எழுபதாயிரம் பேர் தஜ்ஜாலைப் பின்தொடர்ந்து வருவார்கள். அப்போது அவர்கள் “தயாலிசா” எனும் (கோடு போட்ட கெட்டியான) ஒரு வகை ஆடை அணிந்திருப்பார்களே.” என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் குறிப்பிட்டார்கள்.[1]

### ஏன் அதிகமான யூதர்கள் தஜ்ஜாலைப் பின்பற்றவேண்டும்?

தஜ்ஜால் என்பவனே யூதர்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் மஹ்தியாவான், அவன் யுக முடிவின்போது இவ்வுலகை ஆட்சி செய்வான் என்பதும், அப்போது யூதர்களின் சாம்ராஜ்யம் உருவாகும் என்பதும் அவர்களது கொள்கைகளில் உள்ள விஷயங்களாகும். அதேபோன்று தஜ்ஜாலை வெளிப்படுமாறு வேண்டி அழைக்கப்படும் பிரார்த்தனை நிகழ்வுகளை, யூதர்கள் பெருநாட்களாகவே கொண்டாடுகின்றார்கள். எனவே, யூதர்களே தஜ்ஜாலின் வருகையை எதிர்பார்த்துக் கொண்டிருப்பதால் தஜ்ஜால் வந்தவுடன் அவர்களே அதிகமாக அவனைப் பின்தொடர்வார்கள்

### காஃபிர்களும் முனாஃபிக்களும்

“மக்காவையும் மதீனாவையும் தவிர தஜ்ஜாலின் கால்படாத எந்த ஊரும் இருக்காது. மதீனாவின் ஒவ்வொரு நுழைவாயிலிலும் வானவர்கள் அணிவகுத்து நின்று மதீனாவைப் பாதுகாப்பார்கள். ஆகவே, தஜ்ஜால்

1. அறிவிப்பாளர் : அனஸ் இப்னு மாலிக் ரழியல்லாஹு அன்ஹு, நூல் : ஸஹீஹ் முஸ்லிம்

(மதீனாவுக்கு வெளியிலுள்ள) உவர் நிலத்தில் இறங்கித் தங்குவான். அப்போது மதீனா மூன்று முறை குலுங்கும். உடனே மதீனாவிலிருந்து ஒவ்வொரு இறைமறுப்பாளனும் நயவஞ்சகனும் அவனை நோக்கிப் புறப்பட்டு வருவார்கள்" என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் குறிப்பிட்டார்கள்.[1]

**மார்க்க அறிவற்ற நாட்டுப்புற அரபிகள்**

"தஜ்ஜால், ஒரு நாட்டுப்புறவாசியிடம் ''உனது தாயையும் தந்தையையும் மரணித்தது போன்றே (உயிருடன்) எழுப்பினால் என்னை நம்புவாயா?'' எனக் கேட்பான். அதற்கு அந்த நாட்டுப்புற மனிதன் "ஆம்'' எனப் பதிலளிப்பான். அப்போது இரண்டு ஷைத்தான்கள் அம்மனிதரின் தாய், தந்தையுடைய தோற்றத்தில் எழுந்து வந்து ''எனது அருமை மகனே!, இவர்தான் உனது இறைவன் இவரைப் பின்பற்றிச் செல் எனக் கூறுவார்கள்'' என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் குறிப்பிட்டார்கள்.[2]

**கேடயம் போன்ற வட்டமான முகம் கொண்டவர்கள்**

"தஜ்ஜால், கிழக்குப் பகுதியில் உள்ள குராஸான் பிரதேசத்தில் வெளிப்படுவான். பார்ப்பதற்கு வட்டமான, போர் கவசம் போன்ற முகங்களைக் கொண்ட ஒரு கூட்டம் அவனைப் பின்தொடரும்" என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் குறிப்பிட்டார்கள்.[3]

**பெண்கள்**

"தஜ்ஜால் ஸுப்ஹா எனும் பகுதியில் வந்திறங்குவான். தனது குடும்பப் பெண்கள் தஜ்ஜாலுக்குப் பின்னால் சென்று விடுவார்களோ என்ற பயத்தின் காரணமாக தங்களின் மனைவி, மகள், மாமி போன்றோரை (வீட்டிலேயே) கட்டிப் போட்டு விடுவார்கள்'' அந்தளவிற்கு பெண்கள் அதிகமாக தஜ்ஜாலைப் பின்பற்றுவார்கள்" என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் குறிப்பிட்டார்கள்.[4]

1. அறிவிப்பாளர் : அனஸ் இப்னு மாலிக் ரழியல்லாஹு அன்ஹு, நூல் : ஸஹீஹுல் புகாரி, ஸஹீஹ் முஸ்லிம்
2. அறிவிப்பாளர் : அபூ உமாமா ரழியல்லாஹு அன்ஹு, நூல் : இப்னு மாஜா
3. அறிவிப்பாளர் : அபூபக்கர் ரழியல்லாஹு அன்ஹு, நூல் : அஹ்மத், திர்மிதி
4. அறிவிப்பாளர் : இப்னு உமர் ரழியல்லாஹு அன்ஹு, நூல் : அஹ்மத்

## தஜ்ஜால் வசிக்கும் காலம்

நாங்கள், "அல்லாஹ்வின் தூதரே! அவன் பூமியில் எத்தனை நாட்கள் தங்கியிருப்பான்?" என்று கேட்டோம். அதற்கு, "நாற்பது நாட்கள்" என்று பதிலளித்த நபியவர்கள், "அன்றைய ஒரு நாள் ஓர் ஆண்டைப் போன்றும், மறுநாள் ஒரு மாதத்தைப் போன்றும், அதற்கு அடுத்த நாள் ஒரு வாரத்தைப் போன்றும், மற்ற நாட்கள் உங்களின் (சாதாரண) நாட்களைப் போன்றும் இருக்கும்" என்று குறிப்பிட்டார்கள்.

நாங்கள், "அல்லாஹ்வின் தூதரே! ஓர் ஆண்டிற்குச் சமமாக இருக்கும் அந்த ஒரு நாளில், வழக்கமாகத் தொழும் (ஐவேளைத்) தொழுகைகளைத் தொழுதால் போதுமா?" என்று கேட்டோம். அதற்கு நபியவர்கள், "இல்லை (போதாது) அந்த (நீண்ட) நாளை, அதற்கேற்ப மதிப்பிட்டு(த் தொழுது) கொள்ளுங்கள்" என்று பதிலளித்தார்கள்.[1]

## தஜ்ஜாலின் குழப்பங்களிலிருந்து பாதுகாப்புப் பெறுவது எப்படி?

தஜ்ஜாலை விட்டும் தூரமாகுதல்

"யார் தஜ்ஜால் (வந்துவிட்டதைப்) பற்றிக் கேள்விப்படுகின்றாரோ அவர், அவனை விட்டும் தூரமாகட்டும். அல்லாஹ்வின் மீது ஆணையாக ஒருவர் தான் முஃமின்தான் என்றெண்ணி அவனிடத்தில் செல்வார். எனினும், (மரணித்தவனை உயிர்ப்பித்தல் போன்ற) தஜ்ஜால் உண்டாக்குகின்ற சந்தேகப் புரளிகளில் சிக்குண்டு அவர் அவனையே பின்தொடர்ந்து செல்லக்கூடியவராக (மாறிவிடுவார்)" என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் குறிப்பிட்டார்கள்.[2]

மேலுள்ள ஹதீஸ் மூலம், தன்னை ஈமானிய பலமுள்ளவன் என நம்புகின்றவர் கூட அவனது மாயைகளில் மயங்கி, அவனை ஈமான் கொள்கின்ற நிலைக்குச் சென்றுவிடுவார் என்பதைப் புரிய முடிகிறது.

"மனிதர்கள் தஜ்ஜாலைப் பயந்து மலைகளில் ஒளிந்து கொள்வார்கள்" என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக உம்மு ஷுரைக் ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் அறிவிக்கின்றார்கள்.[3]

---

1. அறிவிப்பாளர்: நவ்வாஸ் இப்னு ஸம்ஆன் ரழியல்லாஹு அன்ஹு, நூல் : ஸஹீஹுல் புகாரி, ஸஹீஹ் முஸ்லிம்
2. அறிவிப்பாளர்: இம்ரான் இப்னு ஹுஸைன் ரழியல்லாஹு அன்ஹு, நூல் : அஹ்மத்
3. நூல் : ஸஹீஹ் முஸ்லிம்

### அல்லாஹ்விடம் அடைக்கலம் தேடுதல்

"(தஜ்ஜாலுடைய) நெருப்பின் மூலம் யார் சோதனைக்கு உள்ளாக்கப் படுகின்றாரோ அவர் அல்லாஹ்விடம் அடைக்கலம் தேடட்டும்" என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

அறிவிப்பாளர் : அபூ உமாமா ரழியல்லாஹு அன்ஹு, நூல் : இப்னு மாஜா (அறிவிப்பாளர் வரிசையில் கருத்துவேறுபாடு உண்டு)

### அல்லாஹ்வின் பெயர், பண்புகளை சரியான முறையில் அறிந்திருத்தல்

**"அவனைப் போன்று எப்பொருளும் இல்லை, அவன்தான் (யாவற்றையும்) செவியேற்பவன், பார்ப்பவன்"** எனும் அஷ்ஷூறா அத்தியாயத்தின் 11ம் வசனத்தின் படி கேட்டல், பார்த்தல் என்பன அல்லாஹ்வின் பண்புகள் என்பதை அறிந்து கொள்ளமுடிகின்றது. இப்பண்புகளைச் சரியான முறையில் அறிந்து, புரிந்துகொள்கின்ற ஒருவர், தஜ்ஜாலை ஒற்றைக்கண் குருடனாகக் காண்கின்றபோது அவன் அல்லாஹ் அல்ல என்பதை தெளிவாகப் புரிந்து கொள்வார்.

### ஸூரத்துல் கஹ்ஃபின் முதல் பத்து வசனங்களை மனனம் செய்தல்

"அல்கஹ்ஃப்" எனும் (18ஆவது) அத்தியாயத்தின் ஆரம்பப் பத்து வசனங்களை மனனம் செய்திருப்பவர் (பெரும் குழப்பவாதியான) தஜ்ஜாலிடமிருந்து பாதுகாக்கப்படுவார்" என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் குறிப்பிட்டார்கள்.[1]

ஷுஃவுபா ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்களது அறிவிப்பில், "அல்கஹ்ஃப் அத்தியாயத்தின் இறுதிப் பத்து வசனங்களை மனனம் செய்திருப்பவர்" என்று இடம் பெற்றுள்ளது."

### ஸூரத்துல் கஹ்ஃபை முறையாக ஓதுதல்

"யார் ஸூரத்துல் கஹ்ஃபை அது இறக்கப்பட்ட முறைப்படியே ஓதி அதன்பின் தஜ்ஜாலையும் சந்திக்கின்றாரோ அவரை தஜ்ஜால் ஆக்கிரமிக்கவோ, வசப்படுத்தவோ முடியாது."[2]

---

1. அறிவிப்பாளர் : அபுத்தர்தா ரழியல்லாஹு அன்ஹு, நூல் : ஸஹீஹ் முஸ்லிம்
2. அறிவிப்பாளர் : அபூ ஸயீத் அல் குத்ரி ரழியல்லாஹு அன்ஹு, நூல் : ஹாகிம்

**ஸூரத்துல் கஹ்ஃபை ஓதவேண்டியதற்கான சில காரணங்கள்**

குறிப்பிட்ட சில இளைஞர்கள், அக்காலத்தில் காணப்பட்ட அநியாயக்கார ஆட்சியாளரிடமிருந்து பாதுகாக்கப்பட்ட விஷயம் பற்றியும், குகை வாசிகளை அல்லாஹ் ஆச்சரியமான, வியக்கத்தக்க முறையில் பாதுகாத்து வெற்றிபெறச் செய்த விஷயம் பற்றியும் ஸூரத்துல் கஹ்ஃபின் ஆரம்பப் பகுதி கூறுகின்றது.

எனவே தஜ்ஜாலிடமிருந்து தம்மைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டும் என எதிர்பார்க்கின்ற ஒவ்வொருவரும், இவ்வசனங்களின் மூலமாக அவ்விளைஞர்களையும், குகை வாசிகளையும் ஞாபகப்படுத்திக் கொண்டு தன்னையும் பலப்படுத்திக் கொள்ளலாம் என்பதனாலேயே ஸூரத்துல் கஹ்ஃபின் முதல் பத்து வசனங்களையும் ஓதுமாறு பணிக்கப்பட்டிருக்கலாம் என பல உலமாக்கள் குறிப்பிடுகின்றனர்.

**மக்கா மதீனா போன்ற புனிதப் பிரதேசங்களுக்குச் சென்று அங்கேயே தங்கிவிடுதல்**

மக்கா, மதீனா போன்ற பிரதேசங்களுக்கு தஜ்ஜாலினால் செல்லமுடியாது என்பதனால், இதுவும் தஜ்ஜாலிடமிருந்து பாதுகாப்புப் பெறுவதற்கான ஒரு வழியாகக் கருதப்படுகின்றது.

**தொழுகையின் இறுதியில் தஜ்ஜாலின் குழப்பங்களில் இருந்து பாதுகாப்புத் தேடுதல்**

தொழுகையின் இறுதி அத்தஹிய்யாத்தில், ஸலாம் கொடுப்பதற்கு முன்னால் "இறைவா! கப்ருடைய வேதனையை விட்டும் உன்னிடம் பாதுகாப்புத் தேடுகிறேன். தஜ்ஜாலின் குழப்பத்தை விட்டும் உன்னிடம் பாதுகாப்புத் தேடுகிறேன். வாழும் போதும் மரணிக்கும் போதும் ஏற்படும் குழப்பத்தை விட்டும் உன்னிடம் பாதுகாப்புத் தேடுகிறேன். பாவங்களை விட்டும் கடனை விட்டும் உன்னிடம் பாதுகாப்புத் தேடுகிறேன்' என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தொழுகையில் துஆச் செய்வார்கள்." எனவே இந்த துஆவை ஓதுவதன் மூலம் தஜ்ஜாலின் குழப்பங்களை விட்டும் பாதுகாப்புப் பெறலாம்.[1]

1. அறிவிப்பாளர் : ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா, நூல் : ஸஹீஹுல் புகாரி

## தஜ்ஜாலைப் பற்றி மக்கள் மத்தியில் விழிப்புணர்வூட்டல்

“மக்கள் தஜ்ஜால் விஷயத்தில் பொடுபோக்காக இருக்கின்ற நிலையில் தஜ்ஜால் வெளிப்படுவான்” என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் குறிப்பிட்டார்கள்.[1]

மக்கள் தஜ்ஜாலைப் பற்றிப் பேசுகின்ற நிலை குறைந்து, தஜ்ஜாலை மறந்து போயிருக்கின்ற ஒரு நிலையிலேயே தஜ்ஜால் வெளிப்படுவான். எனவே, அவ்வப்போது தஜ்ஜாலைப் பற்றி மக்களுக்கு ஞாபகமூட்டுவதன் மூலம், தஜ்ஜால் விஷயத்தில் மக்கள் விழிப்புடன் இருப்பதற்கு வாய்ப்பாக இருக்கும்.

## மார்க்கத்தைக் கற்று அதனையே ஆயுதமாகப் பயன்படுத்துதல்

தஜ்ஜாலிடமிருந்து நம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்கு மிகச் சிறந்த ஆயுதம் இஸ்லாமிய அறிவாகும். மதீனாவைச் சேர்ந்த வாட்டசாட்டமான, இஸ்லாமிய அறிவுள்ள ஓர் இளைஞன், தஜ்ஜாலை எதிர்த்துப் பேசுவான் என ஹதீஸ்களில் குறிப்பிடப்பட்டிருக்கின்ற விஷயமும் கூட, தஜ்ஜால் பற்றிய இஸ்லாமிய அறிவின் தேவையையும், அவசியத்தையும் உணர்த்துகின்றது.

“தஜ்ஜால் புறப்பட்டு வரும்போது இறை நம்பிக்கையாளர்களில் ஒருவர் அவனை நோக்கிச் செல்வார். அப்போது அவரை ஆயுதமேந்திய தஜ்ஜாலின் பாதுகாப்புப் படையினர் எதிர்க்கொண்டு, “எங்கே செல்கிறாய்?” என்று கேட்பார்கள். அந்த மனிதர், “(இப்போது) புறப்பட்டிருக்கும் இந்த மனிதனை நோக்கிச் செல்கிறேன்” என்று பதிலளிப்பார். அதற்கு அவர்கள், “நமது இறைவனை (தஜ்ஜாலை) நீ நம்பவில்லையா?” என்று கேட்பார்கள். அந்த மனிதர், “நம் இறைவன் யார் என்பது (எனக்குத்) தெரியாத (விஷயம்) அல்ல” என்று கூறுவார். அதற்கு அவர்கள், “இவனைக் கொல்லுங்கள்” என்று கூறுவார்கள்.

அப்போது அவர்களில் சிலர் சிலரிடம், “உங்கள் இறைவன் (தஜ்ஜால்), தான் இல்லாத இடத்தில் யாரையும் கொல்லக்கூடாதென உங்களுக்குத் தடை விதிக்கவில்லையா?” என்று கூறுவார்கள். எனவே, அவர்கள்

---

1. அறிவிப்பாளர் : ஸஃப் இப்னு ஜுதாமா ரழியல்லாஹு அன்ஹு, நூல் : மஜ்மஉஸ் ஸவாஇத்

அந்த மனிதரை தஜ்ஜாலிடம் கொண்டு செல்வார்கள். அந்த இறை நம்பிக்கையாளர் தஜ்ஜாலைக் காணும்போது, “மக்களே! இவன்தான் அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் குறிப்பிட்ட தஜ்ஜால் ஆவான்” என்று சொல்வார்.

உடனே தஜ்ஜாலின் உத்தரவின்பேரில், அவர் பிடித்துக் கொண்டு வரப்பட்டு (தூண்களுக்கிடையே) நிறுத்தப்படுவார். “இவனைப் பிடித்து இவனது தலையைப் பிளந்து விடுங்கள்” என்று அவன் கட்டளையிடுவான். அப்போது அவர், முதுகும் வயிறும் வீங்கும் அளவுக்கு அடிக்கப்படுவார்.

பிறகு தஜ்ஜால், “(இப்போதும்) என்மீது நீ நம்பிக்கை கொள்ள வில்லையா?” என்று கேட்பான். அதற்கு அந்த மனிதர், “நீ பெரும் பொய்யன் ‘மஸீஹ்’ ஆவாய்” என்று கூறுவார். பிறகு அவரது உச்சந் தலையில் வாளை வைத்து அறுத்து அவருடைய இரு கால்கள்வரை தனித்தனியே பிளக்கும்படி கட்டளையிடப்படும். அவ்வாறே செய்து (அவரது உடலை இரு துண்டுகளாக்கியதும்) அவ்விரு துண்டுகளுக்கிடையில் தஜ்ஜால் நடந்து வருவான்.

பிறகு அந்த உடலைப் பார்த்து, “எழுந்துவா” என்பான். உடனே அந்த மனிதர் (உயிர்பெற்று) நேராக எழுந்து நிற்பார். பிறகு அவரிடம், “(இப்போது) என்மீது நம்பிக்கை கொள்கிறாயா?” என்று தஜ்ஜால் கேட்பான். அதற்கு அந்த மனிதர், “உன்னைப் பற்றி இன்னும் கூடுதலாகவே நான் அறிந்து கொண்டேன்” என்று சொல்வார். பிறகு அந்த மனிதர், “மக்களே! (இவன் இவ்வாறெல்லாம் செய்வதால் இவனை இறைவன் என நம்பி விடாதீர்கள்.) இவன் எனக்குப் பிறகு மக்களில் வேறெவரையும் எதுவும் செய்யமுடியாது” என்று கூறுவார்.

உடனே தஜ்ஜால் அவரை அறுப்பதற்காகப் பிடிப்பான். ஆனால், அப்போது அவரது பிடரியிலிருந்து காறை எலும்புவரையுள்ள பகுதி செம்பாக மாறிவிடும். ஆகவே, அவனால் அவரை ஒன்றும் செய்யமுடியாது. பிறகு தஜ்ஜால் அந்த மனிதரின் கைகளையும் கால்களையும் பிடித்துத் தூக்கியெறிவான். அந்த மனிதரை தஜ்ஜால் நெருப்பில் தூக்கி எறிந்து விட்டான் என மக்கள் எண்ணிக் கொள்வார்கள். ஆனால், அவர் சொர்க்கத்தில்தான் வீசப்பட்டிருப்பார்.

"இந்த மனிதர்தான் அகிலத்தின் அதிபதியான அல்லாஹ்விடம், மக்களிலேயே மகத்தான உயிர்த் தியாகம் செய்தவர் ஆவார்" என்றும் அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.[1]

ஒரு மனிதன் தனது எதிரியைப் பற்றி சரியாக அறிந்துகொள்ளும் போது இலகுவாக அவனிடமிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்ள முடிகிறது, அவ்வாறே தஜ்ஜாலைப் பற்றி இஸ்லாம் கூறக்கூடிய விஷயங்களை அறிந்து கொள்வதால், ஒரு மனிதன் தஜ்ஜாலிடமிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்ள முடிகிறது.

**தஜ்ஜாலுக்கு எதிரான போராட்டம்**

"...அவர்கள் ஷாமுக்கு (சிரியா) வரும்போது "மஸீஹ்" (தஜ்ஜால்) புறப்படுவான். இந்நிலையில் அவர்கள் போருக்காக ஆயத்தமாகி அணிகளைச் சீர் செய்து கொண்டிருக்கும்போது, தொழுகைக்காக இகாமத் சொல்லப்படும். அப்போது மர்யமின் புதல்வர் ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்கள் (வானிலிருந்து) இறங்கி வந்து அவர்களுக்குத் தலைமையேற்பார்கள்..." என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் குறிப்பிட்டார்கள்.[2]

அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், தஜ்ஜாலின் வெளிப்பாடு, மற்றும் அவனுக்கெதிரான மஹ்தி அவர்களின் போராட்டம் பற்றிய செய்திகளைச் சொல்லும்போது பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்கள்.

"தஜ்ஜால் வெளிப்பட்டு மதீனாவிற்கு வெளியே (தனது குழப்பங்களைப் பரப்புவான்). மதீனாவிற்குள் (நுழைய முடியாதவாறு) தடைசெய்யப் பட்டிருப்பதால் ஈலியா மலை (பைத்துல் முகத்தஸ்) அருகே வருவான். அங்கே முஃமின்களை சுற்றி வளைத்து, அவர்களைக் கடுமையாக வேதனை செய்வான். அப்போது அவர்களில் சிலர், ஏன் பார்த்துக் கொண்டிருக்க வேண்டும், ஒன்று போராடி வெற்றி பெறுவோம் அல்லது மரணிப்போம் எனக் கூறுவர். பின்னர், காலையில் போராடுவதாக

1. அறிவிப்பாளர் : அபூஸயீத் அல்குத்ரீ ரழியல்லாஹு அன்ஹு, நூல் : ஸஹீஹ் முஸ்லிம்
2. அறிவிப்பாளர் : அபூஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு, நூல் : ஸஹீஹ் முஸ்லிம்

முடிவெடுத்துவிட்டுக் காலையடையும்போது ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்களும் வந்திருப்பார்கள்'' என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் குறிப்பிட்டார்கள்.[1]

### தஜ்ஜாலை சந்திக்கும்போது ஒரு முஸ்லிம் என்ன செய்யவேண்டும்?

"தஜ்ஜாலுடைய நெற்றியில், எல்லா முஃமின்களும் வாசிக்கக்கூடிய அளவிற்கு காஃபிர் என எழுதப்பட்டிருக்கும். உங்களில் யார் அவனைச் சந்திக்கின்றாரோ அவர் அவனது முகத்தில் துப்பிவிட்டு, கஹ்ஃப் அத்தியாயத்தின் ஆரம்ப வசனங்களை ஓதிக்கொள்ளட்டும். அவன் ஆதமுடைய மக்களில் ஓர் உயிரை (மாத்திரமே) கொலை செய்துவிட்டு மீண்டும் உயிர்ப்பிக்க சக்திபெற்றிருப்பான்.'' என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் குறிப்பிட்டார்கள்.[2]

மதீனாவில் ஒரு மனிதரைச் சுற்றி பலர் கூடிக்கொண்டிருந்தார்கள். நானும் போய் (அவர்களோடு) சேர்ந்துகொண்டேன். அவர், தான் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் இருந்து கேட்டதாக பல செய்திகளைக் கூறிக் கொண்டிருந்தார். அப்போதுதான் அவர் ஒரு நபித்தோழர் என்பதை அறிந்து கொண்டேன். அவர் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சொல்லக் கேட்டதாக பின்வரும் செய்தியையும் கூறினார்: "உங்களுக்குப் பின்னால் ஒரு பொய்யனான, வழிகேடன் வருவான். அவனது தலைமுடி சிக்கு நிறைந்து காணப்படும். நானே உங்கள் இறைவன் எனக் கூறுவான். அப்போது யார் அவனை நோக்கி "நீ பொய்யன், நீ எங்களது இரட்சகன் கிடையாது. அல்லாஹ்வே எங்களது இரட்சகன். நாங்கள் அவன் மீதே தவக்குல் வைக்கின்றோம். அவன்பாலே மீளுகின்றோம். உன்னை விட்டும் அல்லாஹ்விடம் பாதுகாப்புத் தேடுகின்றோம்'' எனக் கூறுகின்றாரோ அவரை அவனால் ஒன்றும் செய்யமுடியாது.[3]

### தஜ்ஜாலின் அழிவு

தஜ்ஜால் ஷாம் தேசத்திலேயே அழிந்து போவான் "(இறுதி நாள்

---

1. அறிவிப்பாளர் : ஹுதைஃபா இப்னு உஸைத் ரழியல்லாஹு அன்ஹு, நூல் : ஹாகிம்
2. அறிவிப்பாளர் : அபூ உமாமா அல்பாஹிலி ரழியல்லாஹு அன்ஹு, நூல் : ஹாகிம்
3. அறிவிப்பாளர் : அபூகிலாபா ரஹ்மதுல்லாஹி அலைஹி, நூல் : அஹ்மத்

நெருங்கும் போது) மஸீஹுத் தஜ்ஜால் கிழக்குத் திசையிலிருந்து மதீனாவைக் குறிவைத்து வந்து, "உஹுத்" மலைக்குப் பின்னால் இறங்குவான். பின்னர் வானவர்கள் அவனது முகத்தை ஷாம் தேசம் (வடக்கு) நோக்கித் திருப்பி விடுவார்கள். அங்குதான் அவன் அழிந்து போவான்" என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் குறிப்பிட்டார்கள்.[1]

## ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்களே தஜ்ஜாலைக் கொலை செய்வார்கள்

"மர்யமின் மகன் ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்கள் பாபுலுத்[2] எனும் இடத்தில் வைத்து தஜ்ஜாலைக் கொலை செய்வார்கள்." என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் குறிப்பிட்டார்கள்.[3]

"(முஸ்லிம்கள்) போருக்காக அணிவகுத்துக் கொண்டிருக்கும்போது தொழுகைக்காக இகாமத் சொல்லப்படும். அப்போது ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்களும் இறங்கி வருவார்கள்" என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

சில அறிவிப்புகளில் "அவர் (சிரியாவின் தலைநகர்) "திமஷ்க்" (டமஸ்கஸ்) நகரின் கிழக்குப் பகுதியிலுள்ள வெள்ளைக் கோபுரத்திற்கு அருகில், இரு வானவர்களின் இறக்கைகள் மீது தம் கைகளை வைத்தவாறு இறங்குவார்.

அப்போது அவர் குங்குமப்பூ நிறத்தில் இரு ஆடைகளை அணிந்திருப்பார். அவர் தமது தலையைத் தாழ்த்தினால் நீர்த்துளி சொட்டும், தலையை உயர்த்தினாலோ வெண்முத்தைப் போன்று நீர்த்துளி வழியும். அவரது மூச்சுக் காற்றைச் சுவாசிக்கும் (அதாவது அவரை நெருங்கும்) எந்த ஒரு இறைமறுப்பாளனும் சாகாமல் இருக்கமாட்டான். அவர் விடும் மூச்சுக் காற்று, அவரது பார்வை எட்டும் தூரம்வரை செல்லும் (அதுவரைக்கும் உள்ள அனைத்துக் காஃபிர்களும் மரணித்துப் போவார்கள்).

---

1. அறிவிப்பாளர் : அபூஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு, நூல் : ஸஹீஹ் முஸ்லிம்
2. பாபுலுத் என்பது பலஸ்தீனிலுள்ள பைத்துல் முகத்தஸை அண்மித்த ஒரு கிராமம். தற்போது யூதர்கள் அங்கேதான் தங்களது இராணுவத் தளத்தை அமைத்துள்ளனர்.
3. அறிவிப்பாளர் : மஜ்மஃ இப்னு ஜாரியா ரழியல்லாஹு அன்ஹு, நூல் : திர்மிதி

பின்னர் ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்கள் தஜ்ஜாலைத் தேடிச் செல்வார்கள். இறுதியில், (பலஸ்தீனத்திலுள்ள) "லுத்" எனும் நகரத்தின் தலைவாயிலருகே அவனைக் கண்டு, அவனைக் கொன்றொழிப்பார்கள் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

வேறுசில அறிவிப்புகளில் "ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்களின் வருகையின் போது, மக்கள் மஹ்தி அவர்களின் தலைமையில் சுபுஹ் தொழுகைக்காகத் தயாராகிக் கொண்டிருப்பார்கள். ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்கள் இறங்கி வந்ததும் மஹ்தி அவர்கள், ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்களை மக்களுக்குத் தொழுகை நடத்துமாறு கூறி (இமாமத் செய்யும்) இடத்திலிருந்து பின்வாங்குவார்கள். அப்போது ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்கள் மஹ்தி அவர்களின் தோளில் தட்டிவிட்டு "நீங்கள் தொழுவிப்பதற்காகத்தான் இகாமத் சொல்லப்பட்டது, எனவே நீங்களே தொழுகை நடத்துங்கள்" எனக் கூறுவார்கள்.

ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்கள் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய உம்மத்தைச் சேர்ந்த ஒருவரின் பின்னால் நின்று தொழுவது, அல்லாஹ் இந்த உம்மத்திற்குக் கொடுத்த கண்ணியங்களில் ஒன்று எனக் கூறலாம்.

பின்னர் தொழுகை முடிந்ததும் "கதவைத் திறங்கள்" என ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்கள் கூறுவார்கள். கதவு திறக்கப்பட்டதும் அங்கே, தலையில் "தயாலிஸா" எனும் சால்வை போன்ற ஒரு ஆடையணிந்த, கைகளில் வாளேந்திய எழுபதாயிரம் யூதர்களோடு தஜ்ஜால் நின்று கொண்டிருப்பான்.

தஜ்ஜால், ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்களைக் கண்டதும், நீரில் உப்பு கரைவது போன்று கரைய ஆரம்பிப்பான், பயத்தில் விரண்டோடுவான், ஆனாலும் ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்கள் அவனை விரட்டிச்சென்று "பாபு லுத்" எனும் இடத்தில் வைத்து தனது ஈட்டியால் குத்திக் கொன்று விடுவார்கள். அவர்களது ஈட்டியில் அவனது இரத்தம் தோய்ந்து காணப்படும்.

பின்னர் யூதர்கள் அனைவரும் பின்வாங்கி ஓடுவார்கள்,

பல இடங்களிலும் ஒளிந்து கொள்வார்கள். அந்த நேரத்தில் "கர்கத்" எனும் யூத மரத்தைத் தவிர, அவர்கள் ஒளிந்திருக்கும் அனைத்துப் பொருட்களும் பேச ஆரம்பிக்கும், தனக்குப் பின்னால் ஒளிந்திருப்பவர்களை முஸ்லிம்களுக்குக் காட்டிக் கொடுக்கும்.

பின்னர் தஜ்ஜாலிடமிருந்து தப்பிய ஒரு கூட்டம் ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்களிடம் வருவார்கள். ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்கள் வந்தவர்களின் முகங்களை(ப் பரிவோடு) தடவிவிட்டு சொர்க்கத்தில் அவர்களது படித்தரங்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருப்பார்கள். அப்போது ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்களுக்கு அல்லாஹ், "நான் என் அடியார்கள் சிலரை (யஃஜூஜ், மஃஜூஜ் கூட்டத்தை) வெளி வரச் செய்துள்ளேன். அவர்களுடன் போரிட யாருக்கும் ஆற்றல் கிடையாது. எனவே, (முஸ்லிமான) என் அடியார்களை (சினாயிலுள்ள) "தூர்" மலைக்கு அழைத்துச் சென்று பாதுகாப்பாக வையுங்கள்" என்று (வஹீ) அறிவிப்பான்." என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக பதிவு செய்யப்பட்டுள்ளது.[1]

**தஜ்ஜாலின் எதிரிகள்**

"இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பனூ தமீம் குலத்தார் பற்றிக் கூறிய மூன்று விஷயங்களைக் கேட்டதிலிருந்து நான் அவர்களை எப்போதும் நேசிக்கலானேன். (ஒரு முறை) நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், 'என் உம்மத்தினரில் (பனூ தமீம் கோத்திரத்தினரே) மிகக் கடுமையாக தஜ்ஜாலை எதிர்த்துப் போராடுவார்கள்' என்று கூறினார்கள். (ஒரு முறை) பனூ தமீம் குலத்தாரின் ஸதகாப் பொருட்கள் வந்தபோது 'இவை எங்களது இனத்தாரின் ஸதகாப் பொருட்கள்' என்று கூறினார்கள். (ஒரு முறை) ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா அவர்களிடம் பனூதமீம் குலத்தாரின் பெண் போர்க் கைதி ஒருவர் இருந்தார். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா அவர்களிடம், 'நீ இந்தப் பெண்ணை விடுதலை செய்துவிடு. ஏனெனில், இவள் இஸ்மாயீல் அலைஹிஸ் ஸலாம் அவர்களின் சந்ததிகளில் ஒருத்தியாவாள்' என்று கூறினார்கள்.[2]

1. பார்க்க : ஸஹீஹ் முஸ்லிம்
2. அறிவிப்பாளர் : அபூஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு, நூல் : ஸஹீஹுல் புகாரி

பனூ தமீம் கோத்திரத்தைச் சேர்ந்த ஒருவர் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு முன்னால் குறை கூறப்பட்டார். அப்போது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் “பனூ தமீம்களைப் பற்றி நல்லதைப் பேசுங்கள், அவர்களே தஜ்ஜாலை எதிர்த்து கடுமையாகப் போராடக்கூடியவர்களாக இருப்பார்கள்” எனக் கூறினார்கள்.[1]

## தஜ்ஜாலின் வருகையை மறுப்பவர்கள்

ஆரம்ப காலங்களில் முஃதஸிலாக்கள், ஜஹ்மிய்யாக்கள் போன்ற வழி கெட்ட பிரிவைச் சேர்ந்தவர்கள் தஜ்ஜாலின் வருகையை மறுத்துள்ளார்கள்.

பிற்காலங்களிலும் பலர் தஜ்ஜாலின் வருகையை மறுத்தனர். இவர்களில் பின்வருவோர் குறிப்பிடத்தக்கவர்களாவர்.

## அஷ்ஷெய்க் முஹம்மத் அப்துஹ்

“தஜ்ஜால் என்பது (நீங்கள் நினைக்கும் தஜ்ஜால் அல்ல,) மூடநம்பிக்கைகள், பொய்கள், ஏமாற்றுக்கள் என்பவற்றுக்காகப் பயன்படுத்தப்படும் ஒரு சிலேடை வார்த்தைதான் (தஜ்ஜால் என்ற வார்த்தையாகும்).”[2]

## முஹம்மத் ஃபஹீம் அபூ அய்பா

“தஜ்ஜால் என்பது குழப்பங்களும், தீமைகளும் பரவுவதையே குறிக்கின்றது”[3]

சிலர் தஜ்ஜாலை ஏற்றுக் கொண்டாலும், அவனிடம் இருக்கின்ற சொர்க்கம், நெருப்பு போன்ற விஷயங்களை மறுக்கின்றனர். இவர்களில் அறிஞர் முஹம்மது ரஷீத் ரிழா முக்கியமானவராவார். இவர் ஒரு சிறந்த அறிஞராகக் கருதப்பட்டாலும், மறுமை நாளின் அடையாளங்களில் சிலதை மறுப்பது மிகப்பெரிய தவறாகும். அந்த வகையில் அறிஞர்

---

1. நூல் : அஹ்மத்
2. பார்க்க : தப்ஸீருல் மனார் - 3/317
3. அந் நிஹாயா பில் பிதன் வல் மலாஹிம் எனும் நூலிற்கு குறிப்பெழுதும் போது இதைக் குறிப்பிடுகின்றார் - 1/118-119

முஹம்மது ரஷீத் ரிழா அவர்கள் இந்த விஷயத்தில் தவறிழைத்து விட்டார்கள் என்றே கூற வேண்டும்.

உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் ஒருமுறை குத்பா நிகழ்த்தும்போது அல்லாஹ்வைப் புகழ்ந்துவிட்டு "உங்களுக்குப் பின்னால், விபச்சாரம் செய்தவர்கள் கல்லால் எறிந்து கொல்லப்படவேண்டும் என்பதையும், தஜ்ஜாலையும், மறுமையில் ஷஃபாஅத் உண்டென்பதையும், கப்ருடைய வேதனையையும், நரகத்தில் நுழைந்த சிலர் (-முஃமின்கள்) மீண்டும் சொர்க்கத்திற்கு வருவார்கள் என்பதையும் மறுக்கக்கூடிய ஒரு சமுதாயம் தோன்றும்" எனக் கூறினார்கள்.[1]

இறுதியாக...

**தஜ்ஜாலோடு சம்பந்தப்பட்ட ஐந்து அம்சங்கள்**

1. (நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஒருமுறை ஸஹாபாக்களைப் பார்த்து) "உங்களிடத்தில் தஜ்ஜாலைவிட நான் அதிகமாகப் பயப்படுகின்ற ஒன்றைக் கூறட்டுமா?" (எனக் கேட்டுவிட்டு) "மறைவான ஷிர்காகும்" அதாவது, ஒரு மனிதர் தொழுகைக்காக எழுவார். பிறர் பார்க்கின்ற காரணத்தால் தனது தொழுகையை அழகுபடுத்துவார் எனக் கூறினார்கள்.[2]

முகஸ்துதி என்பது (தஜ்ஜாலைவிட) மிகவும் அபாயகரமானதும், நமது அமல்களை அழித்துவிடக் கூடியதுமாகும். மறுமையில் இத்தகைய முகஸ்துதிக்காரர்களிடம், "நீங்கள் யாருக்காக இபாதத் செய்தீர்களோ அவர்களிடமே சென்று உங்களுக்குரிய கூலி கிடைக்கிறதா எனப் பாருங்கள்" என்று கூறப்படும் என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் குறிப்பிட்டார்கள்.[3]

2. "எனது உம்மத்தில் தஜ்ஜாலைத் தவிர்த்து நான் அதிகம் பயப்படுவது வழிகெட்ட தலைவர்களைத்தான்" என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் குறிப்பிட்டார்கள்.[4]

---

1. அறிவிப்பாளர் வரிசையில் கருத்து வேறுபாடுகள் உண்டு. அறிவிப்பாளர் : இப்னு அப்பாஸ் ரழியல்லாஹு அன்ஹு, நூல்; : அஹ்மத்
2. அறிவிப்பாளர் : அபூஸயீத் அல்குத்ரி ரழியல்லாஹு அன்ஹு, ஆதாரம் : அஹ்மத்
3. நூல் : அஹ்மத்
4. அறிவிப்பாளர் : அபூதர் ரழியல்லாஹு அன்ஹு, நூல் : அஹ்மத்

வழிகெட்ட தலைவர்கள் இந்த உம்மத்திற்குக் கிடைத்த சாபக்கேடாகும். இந்த உம்மத்தை வழி நடத்தக்கூடியவர்கள், அரசியல் தலைவர்களாக இருந்தாலும் சரி, ஆன்மீகத் தலைவர்களாக இருந்தாலும் சரி, அவர்கள் வழி கெட்டுப்போகும்போது அவர்களுக்குக் கீழுள்ளவர்களும் வழி கெட்டுப்போவது தவிர்க்க முடியாத ஒரு விஷயமாகிப் போய்விடுகிறது.

3. “இறுதியாக தஜ்ஜாலைக் கொலை செய்யும்வரை எனது உம்மத்தில் ஒரு கூட்டம் (உண்மைக்காகப்) போராடி அதில் வெற்றி பெற்றுக் கொண்டிருப்பார்கள்” என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் குறிப்பிட்டார்கள்.[1]

முஸ்லிம்கள் இறுதியாக தஜ்ஜாலோடு போராடும் வரையிலும், ஜிஹாதியப் போராட்டம் இந்த உம்மத்தில் தொடர்ந்து கொண்டிருக்கும்.

4. குழப்பங்களின்போது நாமும் அந்த குழப்பங்களில் அகப்பட்டு, அடிபட்டுச் சென்றுவிடாமல், நமது கொள்கையில் உறுதியுடன் நிலைத்திருக்க வேண்டும். இது நமது மார்க்கத்தின் மிக முக்கிய அடிப்படைகளில் ஒன்றாகும்.

அந்த வகையில் தஜ்ஜாலின் குழப்பங்களின்போதும், நாம் நமது கொள்கையில் உறுதியாக இருக்கவேண்டியது அவசியமாகும். அதனால் தான் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தஜ்ஜாலின் குழப்பங்கள் பற்றிப்பேசும்போது” அல்லாஹ்வின் அடியார்களே (அந்த நேரத்தில்) நீங்கள் (ஈமானில்) உறுதியாக இருங்கள்” எனக் குறிப்பிட்டார்கள்.[2]

5. மேற்படி, தஜ்ஜால் பற்றிய ஹதீஸ்களைப் பார்க்கும்போது, (தஜ்ஜாலோடு) ஏற்படவிருக்கின்ற போர்கள் அனைத்தும் வாள், அம்பு மற்றும் குதிரைகள் போன்றவற்றைப் பயன்படுத்தியே இடம்பெறும் என்பதைப் புரியமுடிகிறது.

.....................................

1. அறிவிப்பாளர்: இம்ரான் இப்னு ஹுஸைன் ரழியல்லாஹு அன்ஹு, நூல் : அஹ்மத்
2. அறிவிப்பாளர்: நவ்வாஸ் இப்னு ஸம்ஆன் ரழியல்லாஹு அன்ஹு, நூல் : ஸஹீஹ் முஸ்லிம்

# ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்களின் வருகை!



## நுழைவாயில்

நபி ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்கள், அல்லாஹ்விடத்தில் மிக நெருக்கத்திற்குரிய, உலுல் அஸ்ம் எனப்படும் குறிப்பிட்ட ஐந்து நபிமார்களில் ஒருவராவார்கள். தந்தையின்றிப் பிறந்தது அவர்களின் மற்றுமொரு சிறப்பம்சமாகும். இவர்களது தாய் மர்யம் அலைஹிஸ் ஸலாம் அவர்கள் ஓர் உத்தம பத்தினியாவார்கள். அவர்கள் மிஹ்ராபில் அல்லாஹ்வை வணங்கிக் கொண்டிருக்க அல்லாஹ் அவர் களுக்கு உணவளித்துக்கொண்டிருந்தான். அந்த அளவிற்கு அவர்கள் அல்லாஹ்விடத்தில் நெருக்கத்திற்குரியவராகக் காணப்பட்டார்கள்.

ஸகரிய்யா அலைஹிஸ் ஸலாம் அவர்கள், மர்யம் அலைஹிஸ் ஸலாம் அவர்களது வணக்க வழிபாடுகளுக்கென, வேறு யாரும் செல்ல முடியாதவாறு, பள்ளிவாசலுக்குள் ஒரு தனியான இடத்தை அமைத்துக் கொடுத்திருந்தார்கள். ஸகரிய்யா அலைஹிஸ் ஸலாம் அவர்கள், மர்யம் அலைஹிஸ் ஸலாம் அவர்கள் வணங்கிக் கொண்டிருக்கும் இடத்திற்குப் போகும்போதெல்லாம் அங்கே மாரிகாலத்தில் கோடைகாலப் பழங்களும், கோடைகாலத்தில் மாரிகாலப் பழங்களும் இருப்பதைக் கண்டு ஆச்சரியப்பட்டு "மர்யமே! இதெல்லாம் உனக்கு எப்படிக் கிடைக்கிறது?" என்று கேட்பார்கள். அதற்கு மர்யம் அலைஹிஸ் ஸலாம் அவர்கள் "இதுவெல்லாம் அல்லாஹ்விடமிருந்து வந்ததாகும். அல்லாஹ், தான் நாடியோருக்கு கணக்கின்றிக் கொடுப்பான்" எனக் கூறுவார்கள்.

**ஆகவே, அவருடைய இறைவன் அதை (அக்குழந்தையை) அன்பாய் அங்கீகரித்து பரிசுத்தமாகவும், அழகாகவும் அதை வளரச் செய்து அதை (வளர்க்க) ஜகரிய்யா பொறுப்பேற்றுக் கொள்ளுமாறும் செய்தான். அப்பிள்ளை இருந்த மாடத்திற்குள் ஜகரிய்யா நுழையும் போதெல்லாம், அதனிடத்தில் (ஏதேனும்) உணவுப் பொருள் இருப்பதைக் கண்டு "மர்யமே! இது உனக்கு ஏது? (எங்கிருந்து வந்தது?)" என்று கேட்பார். அதற்கவள் "இது அல்லாஹ்விடம் இருந்துதான் (வருகிறது). ஏனென்றால், நிச்சயமாக அல்லாஹ்,**

தான் விரும்பியவர்களுக்கு அளவின்றியே உணவளிக்கிறான்'' என்று கூறுவாள். (அல்குர்ஆன் 3 : 37)

**வானவர்களின் நன்மாராயம்**

அல்லாஹ், தன்னைப் பெண்களில் சிறந்தவளாகத் தேர்ந்தெடுத்திருப்ப தாகவும், தனக்குத் தந்தையில்லாமல் ஒரு குழந்தை பிறக்கப் போவதாகவும், அது தனது குழந்தைப் பருவத்திலும் முதுமைப் பருவத்திலும் மக்களை அல்லாஹ் ஒருவனை வணங்குவதின் பக்கம் அழைக்கக் கூடியதாகக் காணப்படும் எனவும் மர்யம் அலைஹிஸ் ஸலாம் அவர்களிடத்தில் மலக்குகள் நன்மாராயம் கூறினார்கள்.

(நபியே! மர்யமை நோக்கி) வானவர்கள் கூறிய சமயத்தில் ''மர்யமே! நிச்சயமாக அல்லாஹ் உம்மை தேர்ந்தெடுத்து இருக்கிறான். உம்மை பரிசுத்தமாகவும் ஆக்கியிருக்கிறான். உலகத்திலுள்ள பெண்கள் அனைவரையும்விட உம்மை மேன்மையாக்கியும் வைத்திருக்கிறான், (ஆகவே,) மர்யமே! நீர் உமது இறைவனுக்கு வழிப்பட்டு குனிந்து (சிரம் பணிந்து) வணங்குபவர்களுடன் நீரும் குனிந்து (சிரம் பணிந்து) வணங்குவீராக!'' (என்று கூறினார்கள்).
(அல்குர்ஆன் 3 : 42, 43)

''அவர் (ஈஸா) தொட்டிலில் (குழந்தையாக) இருக்கும் பொழுது (தன் தாயின் பரிசுத்தத் தன்மையைப் பற்றியு)ம், (தன் நபித்துவத்தைப் பற்றி) வாலிபத்திலும் மனிதர்களுடன் பேசுவார். தவிர, நல்லொழுக்க முடையவர்களில் ஒருவராகவும் இருப்பார்'' (என்றும் கூறினார்கள்).
(அல்குர்ஆன் 3 : 46)

மேலுள்ள வசனம், ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்கள் தனது இறுதி வயது வரை உயிர் வாழ்வார்கள் என்பதையும், அல்லாஹ் ஒருவனை வணங்குவதின் பக்கம் அழைப்பார்கள் என்பதையும் சுட்டிக் காட்டுகின்றது. அவ்வாறே அவர்கள் மர்யம் அலைஹிஸ் ஸலாம் அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட ஓர் இறை அருட்கொடையாக இறை அத்தாட்சியாக இருக்கின்றார் என்பதையும் சுட்டிக் காட்டுகின்றார். ஆகவே, அதற்கு நன்றி செலுத்தும் பொருட்டு மர்யம் அலைஹிஸ் ஸலாம் அவர்கள் அதிகமதிகம் வணக்க வழிபாடுகள் செய்யுமாறும்

நின்று, குனிந்து, சிரம் தாழ்த்தி வணங்குமாறும் அல்லாஹ் அவர்களுக்கு கட்டளையிட்டான். ஆகையால், மர்யம் அலைஹிஸ் ஸலாம் அவர்கள் தனது கால்கள் வீங்கும் அளவிற்கு நின்று வணங்கியுள்ளார்கள். மர்யம் அலைஹிஸ் ஸலாம் அவர்களுக்கும் அவர்களது தந்தைக்கும், அவர்களது மகனான ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்களுக்கும் அல்லாஹ் அருள் பாலிப்பானாக!

“உலகில் உள்ள அனைத்துப் பெண்களுக்கும் ஈடாக, இம்ரானுடைய மகள் மர்யம், ஃபிர்அவ்னின் மனைவி ஆசியா, குவைலிதின் மகள் கதீஜா, முஹம்மதின் மகள் ஃபாத்திமா எனும் நால்வருமே போதுமானவர்களாவார்கள்” என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.[1]

**நபி ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்கள், தாயின் வயிற்றில் கருவாக...**

பொதுவாக மர்யம் அலைஹிஸ் ஸலாம் அவர்கள், நீர் அல்லது உணவு போன்ற அவசியத் தேவைகளுக்காக அன்றி வெளியே செல்ல மாட்டார்கள்.

ஒருமுறை தனது முக்கிய தேவையொன்றின் நிமித்தம், மஸ்ஜிதுல் அக்ஸாவின் கிழக்குப் பக்கம் செல்லவேண்டிய அவசியமேற்பட்டது. அவ்வேளை, அல்லாஹ் “ரூஹுல் அமீன்” (-ஜிப்ரீல்) எனும் மலக்கை, மர்யம் அலைஹிஸ் ஸலாம் அவர்களிடம் அனுப்பி வைத்தான். அவர் மனித உருவில் மர்யம் அலைஹிஸ் ஸலாம் அவர்களிடத்தில் வந்தார். அவரைக் கண்டு பயந்துபோன மர்யம் அலைஹிஸ் ஸலாம் அவர்கள் ‘நிச்சயமாக நான் உம்மை விட்டும் ரஹ்மானிடம் பாதுகாவல் தேடுகிறேன். நீர் பயபக்தியுடையவராக இருந்தால் (என்னை நெருங்காதீர்!)” எனக் கூறினார்கள். அப்போது ஜிப்ரீல் அலைஹிஸ் ஸலாம் அவர்கள், மர்யம் அலைஹிஸ் ஸலாம் அவர்களை நோக்கி “நிச்சயமாக நான் உம்முடைய இறைவனின் தூதராவேன். பரிசுத்தமான (ஒரு) புதல்வனை உமக்கு பரிசளிக்க (வந்துள்ளேன்)” என்று கூறினார். இதனைக் கேட்ட மர்யம் அலைஹிஸ் ஸலாம் அவர்கள் “எந்த ஆணும் என்னைத் தீண்டாமலும், நான் நடத்தை தவறாமலும்

1. அறிவிப்பாளர் : அனஸ் ரழியல்லாஹு அன்ஹு, நூல் : திர்மிதி

இருக்கும்போது, எனக்கு எவ்வாறு புதல்வன் உண்டாக முடியும்?" என (ஆச்சரியத்தோடும் பதட்டத்தோடும்) கேட்டார்கள்.

அதற்கு ஜிப்ரீல் அலைஹிஸ் ஸலாம் அவர்கள் "(அது) அப்படித்தான். இது எனக்கு மிகவும் சுலபமானதே! மனிதர்களுக்கு ஓர் அத்தாட்சியாகவும், நம்மிடமிருந்து ஒரு ரஹ்மத்தாகவும் நாம் அவரை ஆக்குவோம், இது விதிக்கப்பட்ட விஷயமாகும்" என்று உம் இறைவன் கூறுகிறான்" என பதிலளித்தார்கள்.

இதனைக்கேட்ட மர்யம் அலைஹிஸ் ஸலாம் அவர்கள், அது ஒரு சோதனை என்பதை அறிந்துகொண்டு, அல்லாஹ்வின் கட்டளைக்குப் பணிந்தவராகத் சுதாரித்துக் கொண்டார்கள், எனினும் இவ்விஷயத்தை மேலோட்டமாகவும், மரபு ரீதியாகவும் நோக்கிய மக்கள், மர்யம் அலைஹிஸ் ஸலாம் அவர்களின் மீது அவதூறு பேச ஆரம்பித்தார்களே தவிர அதனுள் மறைந்திருக்கும் இறை வல்லமையை கவனிக்கத் தவறிவிட்டனர்.

அல்லாஹ், ஆணோ, பெண்ணோ இல்லாமல் ஆதம் அலைஹிஸ் ஸலாம் அவர்களைப் படைத்தான். ஹவ்வா அவர்களை ஒரு ஆணிலிருந்து மட்டும் படைத்தான். ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்களை ஆண் துணையின்றி பெண்ணிலிருந்து மட்டும் படைத்தான். ஏனைய படைப்பினங்களை ஆண் பெண்ணிலிருந்து படைத்தான். இவையெல்லாம் அல்லாஹ்வின் பூரண படைப்பாற்றலின் சான்றுகளாகும்.

இந்த வரிசையில், ஜிப்ரீல் அலைஹிஸ் ஸலாம் அவர்கள், மர்யம் அலைஹிஸ் ஸலாம் அவர்களின் சட்டையில் ஊதியதும், மர்யம் அலைஹிஸ் ஸலாம் அவர்கள் கர்ப்பிணியானார்கள். பின்னர் கர்ப்பத்தின் அடையாளம் தெரிய ஆரம்பித்ததும், மக்கள் தன்னைப் பற்றி அவதூறு பேசுவார்களே என்று பயந்ததால், தூரமான ஓரிடத்தில் தனிமையில் இருக்க நாடினார்கள்.[1]

**ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்களின் பிறப்பு**

மர்யம் அலைஹிஸ் ஸலாம் அவர்கள், தனது மகன் ஈஸா அலைஹிஸ்

1, பார்க்க : அல்குர்ஆன் 19 : 16-22

ஸலாம் அவர்களைப் பிரசவிக்கும் போது ஒருபக்கம் பிரசவவேதனை தாங்க முடியாமலிருந்தது, இன்னொரு பக்கம் குழந்தை பிறந்தால், சமூகத்தில் மரியாதைக்கும், கண்ணியத்திற்கும், மார்க்கப்பற்றுக்கும் பெயர்போன ஒரு குடும்பப் பெண் தவறாக நடந்துவிட்டாள் என என்மீது அபாண்டம் சுமத்துவார்களே! இதற்கு நான் எப்படிப் பதிலளிப்பேன்! என்ற வேதனையும் மனக்குழப்பமும் அவர்களை வாட்டியது. இருபக்க வேதனைகளின் வலியைத் தாங்கிக்கொள்ள முடியாமல் பத்லஹேமில் உள்ள ஒரு ஈச்சை மரத்தின் அடியை இறுகப் பிடித்தவர்களாக 'இதற்கு முன்பே நான் இறந்து, முற்றிலும் மறக்கப்பட்டவளாகி இருக்கக் கூடாதா" என்று கூறி, தனது வேதனையை வெளிப்படுத்திக் கொண்டார்கள்.

அப்போது ஜிப்ரீல் அலைஹிஸ் ஸலாம் அவர்கள், '(மர்யமே!) கவலைப்படாதீர்! உம்முடைய இறைவன் நிச்சயமாக உமக்கு கீழே ஒரு சின்ன ஆற்றை உண்டாக்கியிருக்கின்றான்" எனவும் 'இந்த பேரிச்ச மரத்தின் கிளையைப் பிடித்து இழுத்துக் குலுக்கும், (அப்போது) அது கனிந்த பழங்களை உம்மீது உதிர்க்கும். '(அவற்றை) உண்டு, (ஆற்று நீரைப்) பருகி, கண் குளிர்ந்து இருப்பீராக! எனவும், (பின்னர் குழந்தையைப் பிரசவித்ததும், குழந்தையைத் தூக்கிக்கொண்டு ஊருக்குச் செல்லுமாறும், யாராவது இடைநிறுத்திக் கேள்விகேட்டால் 'மெய்யாகவே அர்ரஹ்மானுக்காக[1] நான் நோன்பிருப்பதாக நேர்ந்திருக்கின்றேன், ஆதலால் இன்றைய தினம் எந்த மனிதருடனும் (நான்) பேச மாட்டேன்" எனவும் கூறுமாறு வஹியறிவித்தார்கள்.

பின்னர், (குழந்தையைப் பிரசவித்த) மர்யம் அலைஹிஸ் ஸலாம் அவர்கள், அக்குழந்தையைச் சுமந்துகொண்டு தன் சமூகத்தாரிடம் வந்தார்கள். அவர்களைக் குழந்தையோடு கண்ட ஊர் மக்கள், 'மர்யமே! நிச்சயமாக நீர் ஒரு விபரீதமான பொருளைக் கொண்டு வந்திருக்கிறீர்! உம் தந்தையும் கெட்ட மனிதராக இருக்கவில்லை, உம் தாயாரும் நடத்தை மோசமானவராக இருக்கவில்லை" (அப்படி இருக்கும்போது நீ ஏன் இப்படியான ஒரு வேலையைச் செய்தாய் என பழித்துக் கூறினார்கள்).[2]

---

1. நிகரற்ற இறைவனாகிய அல்லாஹ்வின் திருப்பெயர்களில் ஒன்றாகும்.
2. பார்க்க : அல்குர்ஆன் 19 : 23-28

## மடியில் பேசிய மழலை ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்கள்

மர்யம் அலைஹிஸ் ஸலாம் அவர்களது, இந்த நெருக்கடியான சூழ்நிலையில், அவர்களது சமூகத்தவரின் துர்வார்த்தைகளும் அதிகரித்தபோது "(தனது உண்மை நிலையைப் பற்றி தனது குழந்தையிடமே கேட்கும்படி) அதன் பக்கம் சுட்டிக் காட்டினார்கள்."

அதற்கு அம்மக்கள் "மடியில் குழந்தையாக இருப்பவரிடம் நாங்கள் எப்படிப் பேசுவது? மடியில் தவழும் மழலையிடம் நாங்கள் எதைக் கேட்பது!? என கேட்டபோது, மடியில் இருந்த குழந்தை ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்களை அல்லாஹ் பேச வைத்தான், 'நிச்சயமாக நான் அல்லாஹ்வுடைய அடியானாக இருக்கின்றேன். அவன் எனக்கு வேதத்தைக் கொடுத்து, என்னை நபியாகவும் ஆக்கியிருக்கின்றான்.

நான் எங்கிருந்தாலும், அவன் என்னை நற்பாக்கியமுடையவனாக ஆக்கியிருக்கின்றான். நான் உயிருடன் இருக்கும் காலமெல்லாம் தொழுகையையும், ஸகாத்தையும் (நிறைவேற்ற வேண்டும் என) எனக்கு வஸீயத் செய்திருக்கின்றான். என் தாயாருக்கு நன்றி செய்பவனாகவும் (ஆக்கியிருக்கின்றான்) நற்பேறு கெட்ட பெருமைக்காரனாக என்னை அவன் ஆக்கவில்லை. இன்னும், நான் பிறந்த நாளிலும், நான் இறக்கும் நாளிலும் (மறுமையில்) நான் உயிர்பெற்று எழும் நாளிலும் என் மீது சாந்தி நிலைத்திருக்கும்" என்று (அக்குழந்தை) கூறியது.[1]

ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்கள் முதன்முறையாக வாய்திறக்கும்போதே "நான் அல்லாஹ்வின் அடிமை" எனக் கூறியுள்ளார்கள். இதன் மூலம், கிறிஸ்தவர்கள் கூறுவதுபோன்று ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்கள் அல்லாஹ்வின் மகன் அல்ல என்பதையும், அல்லாஹ் தனித்தவன், அவனுக்கு மனைவியோ, பிள்ளைகளோ கிடையாது என்பதையும் நிரூபித்திருக்கின்றார்கள். படைப்பினங்களைப் படைத்து செவ்வைப்படுத்தி, நேர்வழி காட்டிய அல்லாஹ் மிகத் தூய்மையானவன்.

"இவரே மர்யமுடைய மகன் ஈஸா அலைஹிஸ் ஸலாம் ஆவார். எதைக் குறித்து அவர்கள் சந்தேகம் கொண்டிருக்கிறார்களோ அது

1. பார்க்க : அல்குர்ஆன் 19 : 29-33

பற்றிய உண்மையான சொல் (இதுவே ஆகும்). அல்லாஹ்வுக்கு எந்த ஒரு புதல்வனையும் ஏற்படுத்திக் கொள்ள வேண்டிய அவசியம் இல்லை, அவன் தூயவன்; அவன் ஒரு காரியத்தைத் தீர்மானித்தால், 'ஆகுக!" என்று தான் கூறுவான்; (உடனே) அது ஆகிவிடும்.[1]

**ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்களுக்கு வழங்கப்பட்ட அருட்கொடைகள்**

"...மர்யமுடைய மகன் ஈஸாவே! உம்மீதும் உம் தாய் மீதும் நான் புரிந்துள்ள எனது அருட்கொடையை நினைவு கூறுவீராக! பரிசுத்த ஆன்மாவைக் கொண்டு உம்மைப் பலப்படுத்தி, உம்மை தொட்டிலிலும், முதிர்ச்சியடைந்த வயதிலும் மனிதர்களுடன் பேசச் செய்ததையும் (நினைவு கூருவீராக!), மேலும், வேதத்தையும் ஞானத்தையும், தவ்ராத்தையும் இன்ஜீலையும் உமக்கு கற்றுக் கொடுத்ததையும் (நினைவு கூருவீராக!), இன்னும் எனது அனுமதியுடன் களி மண்ணால் பறவையின் உருவத்தைப்போல் செய்து, அதில் ஊதிய சமயத்தில் அது என் உத்தரவைக் கொண்டு பறவையானதையும், பிறவிக் குருடரையும், வெண்குஷ்ட நோயாளியையும் என் உத்தரவைக்கொண்டு சுகப்படுத்தியதையும். எனது உத்தரவைக்கொண்டு இறந்தோரை கல்லறையில் இருந்து வெளியேற்றியதையும் (நினைவு கூருவீராக!).

**இஸ்ராயீலின் சந்ததிகளிடம் நீர் தெளிவான அத்தாட்சிகளைக் கொண்டு வந்தபோது, "அவர்களில் நிராகரித்தவர்கள் நிச்சயமாக இது சந்தேகமற்ற சூனியத்தைத் தவிர வேறல்ல என்று கூறிய(துடன் உமக்குத் தீங்கிழைக்க முயற்சித்த) சமயத்தில் அவர்(களுடைய தீங்கு)களிலிருந்து நான் உம்மை தடுத்துக் கொண்டதையும் நினைத்துப் பார்ப்பீராக!" (அல்குர்ஆன் 5 : 110)**

**ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்களிடம், முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பற்றிய முன்னறிவிப்பு**

"மேலும், மர்யமின் மகன் ஈஸா (இஸ்ரவேலர்களை நோக்கி) 'இஸ்ராயீல் மக்களே! எனக்கு முன்னுள்ள தவ்ராத்தை மெய்ப்பித்து, எனக்குப் பின்னர் வரவிருக்கும் 'அஹ்மது" என்னும் பெயருடைய தூதரைப்

1. பார்க்க : அல்குர்ஆன் 19 : 34-35

பற்றி நன்மாராயம் கூறக்கூடிய, அல்லாஹ்வின் தூதனாக உங்களிடம் வந்துள்ளேன்" எனக் கூறினார். எனினும், அவர்களிடம் தெளிவான அத்தாட்சிகளை (முஹம்மதாகிய) அவர் கொண்டு வந்தபோது, அவர்கள் 'இது தெளிவான சூனியமாகும்'" என்று கூறினார்கள். (அல்குர்ஆன் 61 : 6)

**ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்கள் இஸ்ரவேலர்களின் கடைசி நபியாவார்கள்**

பனூ இஸ்ரவேலர்கள், முஹம்மது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை காணும்போது அவர்களை ஈமான் கொள்ள வேண்டும் என்பதற்காகவும், மறுக்கும் பட்சத்தில் (நபியவர்களே பனூ இஸ்ரவேலர்களுக்கு) எதிரான சாட்சியாளராக இருக்கவேண்டும் என்பதற்காகவும், ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்கள், தனது சமூகமான இஸ்ரவேலர்களுக்கு இறுதி நபி முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைப் பற்றி முன்னறிவிப்புச் செய்து, அவர்களைப் பற்றிய பெயர், பண்புகள் கொண்ட முழு விபரங்களையும் அடையாளப்படுத்தியுள்ளார்கள்.

''அவர்கள் எத்தகையோரென்றால், தங்களிடமுள்ள தவ்றாத்திலும் இன்ஜீலிலும் குறிப்பிடப்பட்டிருக்கும் (எழுத்தாற்றல் அற்ற) உம்மி நபியான, நன்மையான காரியங்களை செய்யுமாறு ஏவி, பாவமான காரியங்களில் இருந்து அவர்களை விலக்கிவிடக்கூடிய, (உண்பதற்கு) நல்லவைகளையே அவர்களுக்கு ஆகுமாக்கி, கெட்டவற்றை அவர்களை விட்டும் தடுத்துவிடக்கூடிய, அவர்களுடைய (மார்க்க சட்ட) பளுவையும், அவர்கள் மீதிருந்த விலங்குகளையும் (கடினமான சட்டங்களையும் இரட்சகனின் அனுமதியைக் கொண்டு) நீக்கிவிடுகின்ற இத்தூதரை பின்பற்றுகின்றார்கள். எனவே அவரை (உண்மையாகவே) விசுவாசித்து, கண்ணியம் செய்து, உதவி புரிந்து அவருடன் இறக்கி வைக்கப்பட்ட ஒளிமிக்க (இவ்வேதத்தை)யும் பின்பற்றுகின்றவர்கள்தான் அத்தகையோர்கள் தாம் வெற்றியாளர்கள்.'' (அல்குர்ஆன் 7 : 157)

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய தோழர்கள் ஒரு முறை "அல்லாஹ்வின் தூதரே உங்களைப் பற்றி

எங்களுக்குச் சொல்லித் தாருங்கள்' எனக் கூறினார்கள். அதற்கு நபியவர்கள் "நான் எனது தந்தை இப்றாஹீம் அலைஹிஸ் ஸலாம் அவர்களின் துஆவாகவும் ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்களின் நன்மாராயமாகவும் இருக்கிறேன். மேலும், என்னுடைய தாய் என்னை கர்ப்பத்தில் சுமந்தபோது, ஷாம் தேசத்து, பஸறாக் கோட்டைகள் இலங்கும் அளவிற்கு ஓர் ஒளி எனது தாயிடமிருந்து வெளியாகியதைப் போன்றிருந்தது" என்றார்கள்.[1]

**ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்கள் வானிற்கு உயர்த்தப்படுதல்**

"(ஈஸாவை நிராகரித்த) அவர்கள் (அவரைக் கொலை செய்ய) சதி செய்தார்கள். (எனினும், அல்லாஹ் அவரைக் காப்பாற்றி தங்களில் ஒருவனையே அவர்கள் கொலை செய்து விடும்படி) அல்லாஹ் (அவர்களுக்குச்) சதி செய்து விட்டான். அல்லாஹ், சதி செய்பவர்களில் மிக மேலான (சதி செய்ப)வன்."

(அல்குர்ஆன் 3 : 54)

இந்த சதி செயல் பற்றி அல்லாஹ் பின்வருமாறு கூறுகின்றான்.

"ஈஸாவே நிச்சயமாக நான் உமக்கு (உமது) ஆயுளை முழுமைப் படுத்துவேன். உம்மை நம்மளவில் உயர்த்திக்கொள்வேன். நிராகரிப்பவர்களி(ன் அவதூறி)லிருந்து உங்களைப் பரிசுத்தமாக்கி வைப்பேன்." (அல்குர்ஆன் 3 : 55)

"அல்லாஹ்வுடைய தூதர், மர்யமுடைய மகன் ஈஸா மஸீஹை நிச்சயமாக நாம் (சிலுவையில் அறைந்து) கொலை செய்து விட்டோம்" என்று அவர்கள் கூறியதனாலும் (அவர்களைச் சபித்தோம்). அவரை அவர்கள் கொலை செய்யவும் இல்லை. அவரை அவர்கள் சிலுவையில் அறையவும் இல்லை. (அவரைப்போல் ஒருவன் ஆக்கப்பட்டு அவனையே அவர்கள் சிலுவையில் அறைந்தனர். இதனால்) அவர்கள் சந்தேகத்திற் குள்ளாக்கப்பட்டு விட்டனர். ஆகவே, எவர்கள் இதற்கு மாறான அபிப்பிராயம் கொண்டிருக்கிறார்களோ அவர்கள் வீண் சந்தேகத்திலேயே ஆழ்ந்து விட்டனர். வீண் சந்தேகத்தைப் பின்பற்றுவதைத் தவிர அதில் அவர்களுக்கு உண்மையான

---

1. நூல் : அஹ்மத்

**ஞான (ஆதார)ம் கிடையாது. நிச்சயமாக அவர்கள் அவரைக் கொலை செய்யவே இல்லை. எனினும், அல்லாஹ் அவரைத் தன் அளவில் உயர்த்திக் கொண்டான். அல்லாஹ் (அனைவரையும்) மிகைத்தவனாக, ஞானமுடையவனாக இருக்கிறான்.**

**வேதத்தையுடையவர்களில் ஒவ்வொருவரும் அவர் இறப்பதற்கு முன்னதாக அவரை நம்பிக்கை கொள்ளாமல் இருப்பதில்லை. எனினும், மறுமை நாளில் இவர்களுக்கு எதிராகவே அவர் சாட்சியம் கூறுவார். (அல்குர்ஆன் 4 : 157-159)**

மேலுள்ள வசனங்களைப் கவனிக்கின்றபோது, ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்களை யூதர்கள் கொலை செய்வதற்குத் திட்டம் தீட்டியிருந்தாலும், அல்லாஹ் அவர்களைத் தன்பக்கம் உயர்த்திக் கொண்டான் என்பதை அறியமுடிகிறது.

யூதர்கள், தொடக்க காலத்திலிருந்தே ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்களை ஆட்சியாளர்களிடம் போட்டுக் கொடுத்துக் கொலை செய்வதற்கான பல சதி முயற்சிகளை மேற்கொண்டார்கள். அதன்படி, அக்காலத்தில் காணப்பட்ட அரசன், ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்களைக் கைது செய்து, சிலுவையில் அறையுமாறு கட்டளையிட்டான். அக்கட்டளைக்கேற்ப அரச அடியாட்கள் ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்களைக் கைது செய்வதற்காக பைத்துல் முகத்தஸில் இருந்த அவர்களது வீட்டைச் சுற்றி முற்றுகையிட்டார்கள்.

ஆனாலும், அவர்கள் உள்ளே நுழைவதற்கு முன்னரே, ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்களது உருவ அமைப்பு, அவர்களின் தோழர்களில் ஒருவருக்கு மாற்றப்பட்டது. பின்னர் அங்கிருந்தவர்கள் பார்த்துக் கொண்டிருக்கும் போதே, ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்களை அல்லாஹ், அங்கிருந்த ஒரு துளை வழியாக மேலே உயர்த்திக் கொண்டான்.

வீட்டுக்குள் நுழைந்த யூதர்கள், ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்களது தோற்றத்தில் காணப்பட்ட அந்த இளைஞனைக் கைது செய்து, சிலுவையில் அறைந்து விட்டு. (ஈஸா அலைஹிஸ் ஸலாம்) அவர்களை மேலும் கேவலப்படுத்த வேண்டும் என்பதற்காக அவரது தலையில் முட்களையும் வைத்துவிட்டுச் சென்றார்கள்.

இருந்தாலும், இந்த சம்பவத்தின் உண்மைத் தன்மையை அறிந்திராத அப்பாவிக் கிறிஸ்தவர்கள், யூதர்களுக்கு முன்னால் முற்றாகச் சரணடைந்து, வழிகெட்டு, தங்களது மார்க்கத்தையே யூதர்களிடம் அடகு வைத்து விட்டனர்.

ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்கள், உலக அழிவு நெருங்கும்போது மீண்டும் இப்பூமிக்கு இறங்கி, சிலுவைகளை உடைப்பார்கள், பன்றிகளைக் கொன்று குவிப்பார்கள், (இஸ்லாமை ஏற்காத மக்கள் மீது) வரி விதிப்பார்கள், இஸ்லாத்தைத் தவிர வேறு எந்த மார்க்கத்தையும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். அந்த நேரத்தில் இருக்கின்ற அனைத்துக் கிறிஸ்தவர்களும், ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்களை ஏற்றுக் கொள்வார்கள்.

இதனை அல்குர்ஆன் பின்வருமாறு கூறுகின்றது

**“வேதமுடையவர்களில் எவரும், அவர் இறப்பதற்கு முன் அவரை ஈமான் கொள்ளாமல் இருப்பதில்லை. ஆனால் மறுமை நாளில் அவர் அவர்களுக்கு எதிராக சாட்சி சொல்பவராக இருப்பார்’’**

**(அல்குர்ஆன் 4 : 159)**

ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்களை மஸீஹ் (தடவக் கூடியவர்) எனவும் அழைக்கப்படும்

**ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்கள் மஸீஹ் என அழைக்கப்படுவதற்குப் பின்வரும் காரணங்கள் முன்வைக்கப்படுகின்றன.**

* நோயாளிகளைத் தடவிக்கொடுப்பதன் மூலம் (அல்லாஹ்வின் உதவியால்) நோய் குணமாகிவிடக்கூடிய ஓர் அற்புதத் தன்மை அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்ததனால், மஸீஹ் (தடவிக் கொடுப்பவர்) என அழைக்கப்படுகின்றார்கள். இதுவே உண்மைக்கு மிக நெருக்கமான கருத்தாகும்.

* ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்கள், தனது தாய் வயிற்றிலிருந்து வெளியாகும் போது, எண்ணெய் தடவப்பட்டவராக வெளியாகினார்கள், அதனால் மஸீஹ் (தடவப்பட்டவர்) என அழைக்கப்படுகின்றார்கள்.

* ஸகரிய்யா அலைஹிஸ் ஸலாம் அவர்கள், ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்களைத் தடவிக் கொடுத்ததால் மஸீஹ் என அழைக்கப்படுகின்றார்கள்.

* ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்கள், பூமி முழுவதும் சுற்றி வந்துள்ளதால் பூமியைத் தடவியவர் (மஸீஹ்) என அழைக்கப்படுகின்றார்கள்.

* ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்களது கால் பாதம் (நமக்கிருப்பதைப் போன்று மேடு பள்ளமாக இல்லாமல்) நேரானதாக இருந்தது. அதனால் நடக்கும் போது பாதத்தின் அனைத்துப் பகுதியும் பூமியைத் தொட்டுத் தடவும் என்பதால் மஸீஹ் என அழைக்கப்படுகின்றார்கள்.

* மஸீஹ் என்பது உண்மையாளன் என்ற கருத்தில் பயன்படுத்தப்படுகின்றது.

என்பன போன்ற பல காரணங்கள் முன்வைக்கப்படுகின்றன. எனினும் நாம் ஏற்கெனவே குறிப்பிட்டதைப் போன்று முதலாவது கருத்தே உண்மைக்கு மிக நெருக்கமானதாகும்.

**ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்களை யூதர்கள் கொல்லவே இல்லை**

ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்கள் கொல்லப்படவில்லை என்பதும், அவர்கள் அல்லாஹ்வின் பால் உயர்த்தப்பட்டார்கள் என்பதுமே உண்மையாகும். எனினும், அல்குர்ஆனின் பின்வரக்கூடிய சில வசனங்களை மேலோட்டமாகப் பார்க்கின்ற சிலர் அவர்கள் கொல்லப்பட்டிருக்கலாம் எனச் சந்தேகிக்கின்றனர்.

1. “ஈஸாவே நிச்சயமாக நான் உம்மை வஃபாத்தாக்குவேன். இன்னும் உம்மை என்னளவில் உயர்த்திக் கொள்வேன். நிராகரித்துக் கொண்டிருப்போருடைய (பொய்களில் இருந்தும்) உம்மைத் தூய்மைப்படுத்துவேன்.”

மேலுள்ள வசனத்தில் “வஃபாத்” எனும் சொல் இடம்பெற்றாலும், இவ்விடத்தில் மரணம் எனும் அர்த்தத்தில் அன்றி, வேறு இரு அர்த்தங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

**ஒன்று: ‘‘தூக்கம்’’ எனும் அர்த்தம்.**

வஃபாத் எனும் சொல்லை அல்லாஹ் தூக்கம் எனும் அர்த்தத்திலும் பயன்படுத்தியுள்ளான்.

**“மனிதர்கள் இறக்கும்பொழுதும், இறக்காமல் நித்திரையில் இருக்கும் பொழுதும் அல்லாஹ்வே அவர்களுடைய உயிரைக் கைப்பற்றுகிறான். பின்னர், எவர்கள் மீது மரணம் விதிக்கப் பட்டதோ அவர்களுடைய உயிரை(த் தன்னிடமே) நிறுத்திக் கொள்கிறான்.” (அல்குர்ஆன் 39 : 42)**

**“(மனிதர்களே!) இரவில் (நீங்கள் நித்திரை செய்யும் பொழுது) அவன்தான் உங்களை இறந்தவர்களுக்குச் சமமாக்குகிறான்.” (அல்குர்ஆன் 6 : 60)**

போன்ற வசனங்களை வைத்துப் பார்க்கின்றபோது வஃபாத் எனும் சொல் தூக்கம் எனும் அர்த்தத்திலும் பயன்படுத்தப்பட்டிருப்பதைக் காணலாம்.

**இரண்டு: எடுத்துக்கொள்ளல், பிடித்துக்கொள்ளல் எனும் அர்த்தம்**

“நான் உம்மை வஃபாத்தாக்கிக் கொண்டேன்” எனும் வசனம் “நான் உன்னை என்பால் எடுத்துக் கொண்டேன் எனும் அர்த்தத்தில் பயன்படுத்தப்படுகின்றது.

இதில் எந்த அர்த்தத்தில் பயன்படுத்தப்பட்டாலும் ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்கள் மரணிக்கவில்லை என்பதையே சுட்டிக்காட்டுகின்றது.

**“வேதத்தையுடையவர்களில் ஒவ்வொருவரும் அவர் இறப்பதற்கு முன்னதாக அவரை நம்பிக்கை கொள்ளாமல் இருப்பதில்லை. எனினும், மறுமை நாளில் இவர்களுக்கு எதிராகவே அவர் சாட்சியம் கூறுவார்.” (அல்குர்ஆன் 4 : 159)**

மறுமை நாள் நெருங்கும்போது ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்கள் பூமிக்கு வந்து, இஸ்லாமை முழுமையாக நடைமுறைப்படுத்தி விட்டு, பின்னர் சாதாரணமாக மரணித்து விடுவார்கள். எனினும் அவர்கள் மரணிப்பதற்கு முன்னால் அக்காலத்தில் வாழுகின்ற அனைத்து

வேதம் கொடுக்கப்பட்டவர்களும், ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்களை ஈமான் கொள்வார்கள் என்பதையே மேலுள்ள வசனம் சுட்டிக் காட்டுகின்றது.

| | |
|---|---|
| **ஐயம்** | "நபிமார்கள் தங்களது கப்ருகளுக்குள் உயிரோடு இருக்கின்றார்கள்" என்றால் நபிமார்களின் ஹயாத்திற்கும் ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்களின் ஹயாத்திற்கும் இடையிலான வேறுபாடுகள் என்ன? |
| **தெளிவு** | ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்கள் நம்மைப் போன்றே உடல், உயிருடன் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். ஆனால் ஏனைய நபிமார்களைப் பொறுத்தவரை, அவர்கள் மரணித்துவிட்டதால் அவர்கள் பர்ஸக் (برزخ) எனும் வித்தியாசமான வாழ்க்கை முறையில் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.<br><br>ஏனைய நபிமார்கள் அனைவரும் ஸகராத் எனும் கட்டத்தை அடைந்து, அதன் பின்னர் அவர்களது உடலை விட்டும் உயிர் பிரிந்தது. ஆனால், ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்கள் இன்னும் மரணிக்கவுமில்லை ஸகராத் எனும் நிலைக்குச் செல்லவுமில்லை. |

**ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்கள் இறங்குவார்கள் என்பதற்கான ஆதாரங்கள்.**

ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்களை யூதர்கள் கொலை செய்ய முயன்றபோது அல்லாஹ் அவர்களை அவன் பக்கம் உயர்த்திக்கொண்டான் என்பதற்கான ஆதாரங்களைப் பார்த்தோம். அவ்வாறே ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்கள் யுகமுடிவு காலத்தில் மீண்டும் இப்பூமிக்கு இறங்குவார்கள் என்பதற்கும், அவர்கள் இறங்குவது இறுதி நாளின் அடையாளங்களில் ஒன்றென்பதற்கும் தெளிவான பல ஆதாரங்களைக் காணமுடியும்.

குர்ஆனிலிருந்து...

**"நிச்சயமாக (வரவிருக்கும்) மறுமைக்குரிய அத்தாட்சிகளில் அவரும்**

**(ஈஸா) ஓர் அத்தாட்சியாவார். ஆகவே, நிச்சயமாக நீங்கள் இதில் சந்தேகிக்க வேண்டாம். என்னையே பின்பற்றி நடங்கள். இதுவே நேரான வழி.'' (அல்குர்ஆன் 43 : 61)**

**“வேதத்தையுடையவர்களில் ஒவ்வொருவரும் அவர் இறப்பதற்கு முன்னதாக அவரை நம்பிக்கை கொள்ளாமல் இருப்பதில்லை. எனினும், மறுமை நாளில் இவர்களுக்கு எதிராகவே அவர் சாட்சியம் கூறுவார்.'' (அல்குர்ஆன் 4 : 159)**

சுன்னாவிலிருந்து...

“(ஒருமுறை) நாங்கள் (நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது அறைக்கு அருகே) பேசிக் கொண்டிருந்தோம். அப்போது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் எங்களை எட்டிப் பார்த்து, “எதைப் பற்றி பேசுகிறீர்கள்?” என்று கேட்டார்கள். மக்கள், “யுகமுடிவு நாளைப் பற்றி (பேசிக் கொண்டிருக்கிறோம்)” என்று கூறினார்கள். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், “நீங்கள் (பெரிய) பத்து அடையாளங்களைக் காணாத வரை யுக முடிவு நாள் ஏற்படவே செய்யாது” என்று கூறிவிட்டு, ... மர்யமின் மகன் ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்கள் இறங்குதல்...'' என, அந்த அடையாளங்களைப் பற்றிக் கூறினார்கள்.[1]

‘என் உயிரைத் தன் கையில் வைத்திருப்பவன் மீது சத்தியமாக! விரைவில் (உலக அழிவுக்கு முன்) மர்யமின் மகன் உங்களிடையே நேர்மையாகத் தீர்ப்பளிக்கும் நீதிபதியாக இறங்கவிருக்கிறார். அவர் சிலுவைகளை உடைப்பார், பன்றியைக் கொல்வார், ஜிஸ்யா (எனும் காப்பு) வரியை அகற்றி விடுவார், காஃபிரிடமிருந்து அதை ஏற்றுக்கொள்ள மாட்டார். (இஸ்லாம் ஒன்றையே மக்களிடமிருந்து ஏற்பார்.) வாங்கிக் கொள்ள யாரும் இல்லாத அளவிற்கு செல்வம் வழிந்தோடும். அந்த நேரத்தில், ஒரு முறை சஜ்தா செய்வது இந்த உலகம் இன்னும் அதிலுள்ளவற்றைவிடச் மிகச் சிறந்தது'' என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.[2]

ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்கள், யுக முடிவின்போது

1. அறிவிப்பாளர் : ஹுதைஃபா இப்னு அஸீத் ரழியல்லாஹு அன்ஹு, நூல் : ஸஹீஹ் முஸ்லிம்
2. அறிவிப்பாளர் : அபூஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு, நூல் : ஸஹீஹுல் புகாரி.

வானத்திலிருந்து இறங்குவார்கள் எனும் செய்தி யாராலும் மறுக்க முடியாத அளவிற்கு, பலதரப்பட்ட ஹதீஸ்களிலும், அல்குர்ஆனிலும் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

| ஐயம் | **ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்கள் பூமிக்கு வந்தால் முஹம்மது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைப் பின்பற்றுவார்களா? அல்லது தனக்கென வேறு புதிய மார்க்கத்தைக் கொண்டு வருவார்களா?** |
|---|---|

இக்கேள்விக்கு, இமாம்கள் அளித்த பதில்கள் இங்கே தொகுத்துத் தரப்படுகிறது.

## இமாம் அஸ்ஸஃபாரினி ரஹ்மதுல்லாஹி அலைஹி :

“ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்கள் யுக முடிவின்போது வானத்திலிருந்து இறங்குவார்கள். எனினும் எந்த புதிய மார்க்கத்தையும் கொண்டுவர மாட்டார்கள். முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் மார்க்கத்தையே தானும் பின்பற்றி, அதையே நடைமுறைப்படுத்துவார்கள். கிரேக்க தத்துவம் பேசக்கூடியவர்கள் மற்றும் நாத்திக சிந்தனையாளர்களைத் தவிர வேறு எந்த இஸ்லாமிய அறிஞர்களும் ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்களின் வருகையை மறுக்கவில்லை. எனவே இவர்களின் கருத்தைப் பொருட்படுத்த வேண்டிய அவசியமில்லை.”[1]

## அறிஞர் ஸித்தீக் ஹஸன் கான் ரஹ்மதுல்லாஹி அலைஹி:

“(ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்களோடு தொடர்புபட்ட) ஹதீஸ்கள், ஸஹாபாக்களுடைய கூற்றுக்கள் என, கிட்டத்தட்ட 29 ஹதீஸ்களை இமாம் ஷவ்கானி ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் குறிப்பிடுகின்றார்கள். இவற்றில் ஸஹீஹ் (صحيح), ஹஸன் (حسن), ழஈஃப் (ضعيف)[2] என பல தரங்களை உடைய ஹதீஸ்களும் உண்டு. எனவே பலதரப்பட்ட வழிகளில், ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்கள் இறங்குவது பற்றிய மிகத்தெளிவான செய்திகள் வந்திருப்பதால், அதுபற்றி மேலதிக இஜ்திஹாத் செய்வது தேவையற்ற விஷயமாகும்.

1. பார்க்க : லவாமிஉல் அன்வரில் பஹிய்யா 1/94-95
2. ஸஹீஹ்-சரியானது, ஹஸன்-ஏற்றமானது, ழஈஃப்-பலவீனமானது.

ஹதீஸ்கலை அறிவுள்ள ஒருவர், மேற்படி செய்திகளின் நம்பகத் தன்மையை இலகுவாக இனங்கண்டு கொள்வார்.[1]

### அஷ்ஷெய்க் அஹ்மத் ஷாகிர் :

“ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்கள் இறங்குவது பற்றிய ஸஹீஹான நபிமொழிகள், அதிகமாகக் காணப்படுவதால், இவ்விஷயத்தில் முஸ்லிம்களுக்கு மத்தியில் எந்தக் கருத்து முரண்பாடுகளும் இல்லை. ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்கள் இறுதி காலத்தில் இறங்குவார்கள் என்பது முஸ்லிம்கள் அறிந்திருக்க வேண்டிய அடிப்படை அம்சங்களில் ஒன்றாகும். எனவே யார் அதை மறுக்கின்றாரோ அவர் முஃமினாக இருக்கமுடியாது.”[2]

### அஷ்ஷைக் அல் அல்பானி ரஹ்மதுல்லாஹி அலைஹி :

“தஜ்ஜாலின் வருகை, மற்றும் ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்கள் பூமிக்கு இறங்கி வருதல் ஆகிய செய்திகள் மறுக்கமுடியாத, ஆதாரப்பூர்வமான செய்திகள் என ஹாபிழ் இப்னு ஹஜர் போன்ற ஹதீஸ்கலை மேதைகள் குறிப்பிடுகின்றனர். ஹதீஸ்கலை அறிவும், ஆய்வுத் திறனும் அற்றவர்கள் மேற்படி ஹதீஸ்களை சாதாரணமாக மறுத்து விடுவது நகைப்பிற்குரிய விஷயமாகும்.

கொள்கை (அகீதா) சார்ந்த விஷயங்களில்கூட தனக்குத் தெரியாதவற்றில் எல்லாம் மூக்கை நுழைத்து, அவசரப்பட்டுக் (கருத்துக்களை வெளியிடுவதுதான்) வேதனைக்குரிய விஷயமாகும்.”[3]

| | |
|---|---|
| ஐயம் | **ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்களை, முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் உம்மத்தில் ஒருவராகக் கருத முடியுமா?** |
| தெளிவு | ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்கள், அல்லாஹ்விடத்தில் உயர்ந்த அந்தஸ்த்தைப் பெற்ற ‘உலுல் அஸ்ம்’களில் ஒருவராவார். அவர்கள், நபி ஸல்லல்லாஹு அலைஹி |

1. பார்க்க : அல் இதாஆ, பக் 160
2. பார்க்க : தஃலீக் தப்ஸீர் அத்தபரி 6/460
3. ஷரஹ் அல் அகீததுத் தஹாவியா பக்: 565.

வஸல்லம் அவர்களை மிஃராஜின் போது உயிரோடு கண்டு, நபியென ஈமான் கொண்டுள்ளார்கள், மீண்டும் உலகிற்கு வந்து, அந்த ஈமானுடனேயே அவர்கள் மரணிக்க இருப்பதால், ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்கள், நபிகளாரின் உம்மத்தில் ஒருவர், என்பது மட்டுமன்றி அவர்களின் தோழர்களில் ஒருவர் என்ற பட்டியலிலும் உள்ளடங்குகின்றார்கள்.

### ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்கள் இறங்கும் விஷயத்தில் கிறிஸ்தவர்களின் நம்பிக்கை

கிறிஸ்தவர்களைப் பொறுத்தவரை, ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்களை அல்லாஹ்வுடைய மகன் என்றும், அவர் கொலை செய்யப்பட்டு சிலுவையில் அறையப்பட்டார் என்றும், அதிலிருந்து மூன்று நாட்களின் பின்னர், வானத்தின் பக்கம் உயர்த்தப்பட்டு தனது தந்தையாகிய பிதாவினருகில் அமர்ந்து கொண்டார் எனவும், மீண்டும் அவர் யுகமுடிவின்போது பூமிக்கு வருவார் என்றும் நம்புகின்றனர். (இவர்களின் கொள்கைகளை விட்டும் அல்லாஹ் தூய்மையானவன்.)

### ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்கள் விஷயத்தில் முஸ்லிம்களும் கிறிஸ்தவர்களும் பின்வரும் விஷயங்களில் வேறுபடுகின்றனர்

1. கிறிஸ்தவர்கள் ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்களை அல்லாஹ்வின் மகன் என நம்புகின்றனர். இது தவறான நம்பிக்கையாகும். முஸ்லிம்கள் ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்களை அல்லாஹ்வின் அடியார் எனவும் தூதர் எனவும் நம்புகின்றனர்.

2. ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்கள் கொலை செய்யப்பட்டு, சிலுவையில் அறையப்பட்டார்கள் என கிறிஸ்தவர்கள் நம்புகின்றனர். இதுவும் தவறான நம்பிக்கையாகும்.

   அவர்கள் கொல்லப்படவில்லை, சிலுவையில் அறையப்படவில்லை என்பது முஸ்லிம்களின் கொள்கையாகும்.

3. ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்கள் சிலுவையில் அறையப்பட்டு, மூன்றாவது நாள் வானத்தின் பக்கம் உயர்த்தப்பட்டார்கள் என்பதும் கிறிஸ்தவர்களின் நம்பிக்கைகளில் ஒன்றாகும்.

ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்கள் கொல்லப்படாமலும் சிலுவையில் அறையப்படாமலும் உயிரோடு வானத்திற்கு உயர்த்தப்பட்டார்கள் என்பது முஸ்லிம்களின் கொள்கையாகும்.

**ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்கள் இறங்கும் தருணம்...**

முஸ்லிம்கள், கிறிஸ்தவர்களோடு மிகப் பிரமாண்டமான போரொன்றில் வெற்றிபெற்று, கான்ஸ்டண்டினோபில் நகரத்தை தக்பீர் முழக்கத்தோடு மீட்டெடுப்பார்கள் என்பதை ஏற்கனவே பார்த்து விட்டோம். அவ்வெற்றியைத் தொடர்ந்து தஜ்ஜால் வெளிவந்து விட்டதாக ஷைத்தான் சப்தமிடுவான். உடனே முஸ்லிம்கள் கான்ஸ்டண்டினோபிலை விட்டும் வெளியேறி தங்களது புகலிடமான (ஷாம்) டமஸ்கஸை நோக்கி விரைவார்கள். அப்போதுதான் தஜ்ஜாலும் வெளியாகி, பெரும் குழப்பங்களோடு பூமியெங்கும் சுற்றி வருவான்.

தஜ்ஜால் பற்றிய ஒரு செய்தியில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பின்வருமாறு கூறினார்கள். "(தஜ்ஜால்) மதீனாவிற்கு வெளியில் ஒரு வரண்ட பகுதிக்கு வந்தடைவான். அவன் மதீனாவிற்குள் நுழைய முடியாதவாறு தடுக்கப்படுவான். அதன் பின்னர் மதீனாவில் ஒன்று அல்லது இரண்டு சாதாரண நில நடுக்கங்கள் ஏற்படும், (அந்த நிலநடுக்கங்களோடு) மதீனாவில் இருக்கும் அனைத்து ஆண் பெண் நயவஞ்சகர்களும் மதீனாவை விட்டும் வெளியேறி விடுவார்கள்.

(மதீனாவில் நுழைய முடியாத) தஜ்ஜால் பின்னர் அங்கிருந்து சிரியாவை நோக்கிச் செல்வான். அங்கிருக்கின்ற அனைத்து முஸ்லிம்களையும் ஒரு மலைப்பகுதியில் வைத்து முற்றுகையிடுவான். அம்மலை அடிவாரத்தில் இருந்துகொண்டு அங்குள்ள முஸ்லிம்களுக்குத் துன்பம் விளைவித்துக் கொண்டிருப்பான்.

அப்போது அங்கிருக்கின்ற முஸ்லிம்களில் ஒருவர் "முஸ்லிம்களே! அல்லாஹ்வின் எதிரியான தஜ்ஜால் உங்களது பிரதேசத்தை முற்றுகையிட்டிருக்கும் இந்த நிலையில் எவ்வளவு காலத்திற்குத்தான் (பொறுமையோடு) இருக்கப்போகின்றீர்கள். (தஜ்ஜாலுக்கு எதிராகப் போரிட்டு) ஒன்று ஷஹீத் -வீரமரணம் அடைவோம் அல்லது

அவனை வெற்றிகொள்வோம். இதில் எது நடந்தாலும் நன்மைதான். இதைத் தவிர வேறு வழியில்லை" என்று கூறுவார். இதனைக் கேட்ட அம்மக்கள், (தஜ்ஜாலுக்கு எதிராகப் போராடுவதாக) பைஅத் -ஒப்பந்தம் செய்து கொள்வார்கள்.

பின்னர் அவர்களது உள்ளங்கைகளை அவர்களே கண்டுகொள்ள முடியாத அளவு ஒரு இருள் சூழ்ந்து கொள்ளும். (அந்த இருளிடையே) ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்கள் வருவதைக் கண்ட அம்மக்கள். "நீங்கள் யார்?" எனக் கேட்பார்கள். அதற்கவர் "நான்தான் அல்லாஹ்வின் வார்த்தையும், ரூஹும், தூதரும், அடிமையுமான மர்யமுடைய மகன் ஈஸா என பதிலளிப்பார்கள். பின்னர் அம்மக்களை நோக்கி

* தஜ்ஜாலையும் அவனது படையையும் அழிக்கின்ற வேதனை இறங்குதல்.

* அல்லது அவர்களை பூமி விழுங்குதல்

* அல்லது ஆயுதத்தால் அவர்களைக் கட்டுப்படுத்துதல் எனும் மூன்றில் ஒன்றைத் தேர்ந்தெடுங்கள் எனக் கூறுவார்கள்.

அவர்கள் மூன்றாவதைத் தேர்ந்தெடுத்துவிட்டு, இதுவே எங்களது உள்ளங்களுக்கும் ஆத்மாக்களுக்கும் திருப்தியான தீர்வு எனக் கூறுவார்கள்.

பின்னர் (முஸ்லிம்களின் ஆயுத பலத்தைக் காணும்) யூதர்கள், தங்களது வாள்களைக் கூட தூக்கிக் கொள்ள சக்தியற்றுப் போவார்கள்.

அதன்பின்னர், முஸ்லிம்கள் யூதர்களை ஆக்கிரமிப்பார்கள். தஜ்ஜாலும் ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்களைக் கண்டவுடன் ஈயம் (நெருப்பில்) உருகுவதைப் போன்று கரைந்துபோவான். அதன் பின்னர் ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்கள் அவனைக் கொலை செய்வார்கள்.

**ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்கள் எங்கே, எப்படி இறங்குவார்கள்?**

ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்கள் குங்குமம் மற்றும் மரவண்ணச்

சாயம் பூசப்பட்ட இரு ஆடைகளை அணிந்துகொண்டு, தனது இரு கைகளையும் இரு மலக்குகளின் இறக்கைகளில் வைத்தவர்களாக, டமஸ்கஸின் கிழக்குப் பகுதியில் உள்ள வெள்ளைக் கோபுரத்தில் இறங்குவார்கள்.

இது பற்றி இமாம் இப்னு ஹஜர் ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்கள், "(ஒரு தொழுகைக்காக) இகாமத் கூறப்பட்ட நேரத்தில் ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்கள், டமாஸ்கஸின் கிழக்குப் பகுதியில் உள்ள வெள்ளைக் கோபுரத்தில் இறங்குவார்கள். அப்பொழுது பள்ளியில் இருக்கும் முஸ்லிம்களின் இமாமவர்கள் (ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்களை நோக்கி) "ரூஹுல்லாஹ் அவர்களே! நீங்களே முன்னின்று தொழுகையை நடத்துங்கள் என்று கூறுவார். அப்போது ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்கள் (இல்லை), நீங்கள் தொழுகை நடத்துவதற்காகவே இகாமத் சொல்லப்பட்டது. எனவே நீங்களே தொழுகை நடத்துங்கள் எனக் கூறுவார்கள்."

"இந்த வெள்ளைக் கோபுரம் கிறிஸ்தவர்களால் எரிக்கப்பட்டதன் பின்னர், நமது காலத்தில் (ஹி. 741) மீண்டும் கிறிஸ்தவர்களின் நிதியிலேயே வெண்கற்களால் புதுப்பிக்கப்பட்டது. சிலவேளை இக்கோபுரத்தில் இறங்க இருப்பவர்கள் ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்கள் என்பதாலோ என்னவோ இது கிறிஸ்தவர்களின் பொருளாதாரத்தைக் கொண்டே புணர்நிர்மானம் செய்யப் பட்டுள்ளது. அப்படி இருந்தால் அது நபித்துவத்தின் அடையாளமாகக் கூட இருக்கலாம்."[1]

நான் 1993ம் ஆண்டு டமஸ்கஸ் சென்றபோது, டமஸ்கஸின் கிழக்குப் பகுதியில், ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்கள் இறங்க இருப்பதாகக் கூறப்படும் இந்த வெள்ளைக் கோபுரத்தைப் பார்த்தேன். அதனைச் சுற்றி பெரும்பாலும் கிறிஸ்தவர்களே வாழ்கின்றனர். ஆனால் உண்மையில் ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்கள் குறிப்பிட்ட அக்கோபுரத்தில்தான் இறங்குவார்களா? அல்லது அங்கே காணப்படுகின்ற பல (வெள்ளைக்) கோபுரங்களில் ஏதேனும் ஒன்றில் இறங்குவார்களா என்பது பற்றி எனக்குத் தெரியாது.

1. பார்க்க : அந்நிஹாயா ஃபில் ஃபிதன் - இமாம் இப்னு கதீர் ரஹ்மதுல்லாஹி அலைஹி

டமாஸ்கஸின், ஜாமிஉல் உமவி எனப்படும் பள்ளிவாசலில் காணப்படுகின்ற கோபுரங்களில் ஏதாவது ஒன்றில் இறங்குவார்கள் என்ற கருத்தும் காணப்படுகின்றது.

**ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்களது அங்க அமைப்பு**

ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்கள் எங்கே? எப்படி? எப்போது? இறங்குவார்கள் என்பதையும், அவர்கள் எப்படி இருப்பார்கள் என்பதையும் இலகுவாகப் புரிந்து கொள்ளக்கூடியவாறு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நமக்குத் தெளிவு படுத்தியிருக்கின்றார்கள்.

ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்கள் அளவான உயரமும், வெள்ளைக்கும் கருப்பிற்கும் இடையில் சிவந்த நிறமும், விரிந்த நெஞ்சும், நீரில் நனைந்ததைப் போன்று தண்ணீர் சொட்டுகின்ற முடியுடன் வருவார்கள். மக்களில் அவருக்கு ஒப்பான தோற்றமுடையவர் உர்வா இப்னு மஸ்ஊத் தகஃபி ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் ஆவார்கள்.

“நான் மிஃராஜ் -வானுலகப் பயணத்திற்கு அழைத்துச் செல்லப்பட்ட இரவில்... ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்களைச் சந்தித்தேன்” என்று கூறிவிட்டு, அவர்(களின் அங்க அடையாளங்)களை வர்ணித்தார்கள். சிவப்பு நிறமுடையவர்களாக, நடுத்தர உயரம் கொண்டவர்களாக, (அப்போதுதான்) குளியலறையிலிருந்து வெளியே வந்தவரைப் போன்று அவர்கள் இருந்தார்கள்.”[1]

“நான் மிஃராஜ் -வானுலகப் பயணத்திற்கு அழைத்துச் செல்லப்பட்ட இரவில்... ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்களை நடுத்தர உயரமும் சிவப்பும் வெண்மையும் சார்ந்த மிதமான சரும அமைப்பு கொண்டவர்களாகவும், (சுருள் சுருளாக இல்லாமல்) படிந்த, தொங்கலான தலைமுடியுடையவர்களாகவும் கண்டேன்.[2]

அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

---

1. அறிவிப்பாளர் : அபூஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு, நூல் : ஸஹீஹுல் புகாரி, ஸஹீஹ் முஸ்லிம்
2. அறிவிப்பாளர் : இப்னு அப்பாஸ் ரழியல்லாஹு அன்ஹு, நூல் : ஸஹீஹுல் புகாரி

"...(மிஃராஜ் பயணத்தின் போது) அங்கு மர்யமின் மகன் ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்களும் நின்று தொழுதுகொண்டிருந்தார்கள். மனிதர்களிலேயே (என் தோழர்) உர்வா இப்னு மஸ்ஊத் அஸ்ஸகஃபீ ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்களுக்கு மிக நெருக்கமான சாயலுடையவராக இருக்கின்றார்."[1]

அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், இப்னு உமர் அவர்களிடம் பின்வருமாறு கூறினார்கள்:

"ஓர் இரவு (கனவில்), கஅபாவின் அருகே நான் என்னைக் கண்டேன், அப்போது அங்கே, மாநிறத்தில், நீ பார்த்த மனிதர்களிலேயே அழகான ஒரு மனிதரைக் கண்டேன், மிக அழகான முடி அவருக்கு இருந்தது. அதை அவர் வாரிவிட்டிருந்தார். அதிலிருந்து தண்ணீர் சொட்டிக் கொண்டிருந்தது. அவர் "இரு மனிதர்களின் மீது சாய்ந்தபடி' அல்லது "இரு மனிதர்களின் தோள்கள் மீது சாய்ந்தபடி" இறையில்லத்தைச் சுற்றி (தவாஃப்) செய்துகொண்டிருந்தார். நான், "இவர் யார்?" என்று கேட்டேன். "இவர்தான் மர்யமின் மகன் மஸீஹ் (ஈஸா)" என்று (வானவர்கள்) பதிலளித்தார்கள். ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்களுக்குப் பின்னால் சுருட்டை முடியுடைய ஒருவர் இரண்டு மனிதர்களுடைய புஜங்களின் மீது தனது இரு கரங்களை வைத்தவராக தவாஃப் செய்ததை நான் பார்த்தேன். இவர் யார் என்று நான் கேட்டேன்? இவன்தான் மஸீஹுத் தஜ்ஜால் என்று வானவர்கள் கூறினார்கள்.[2]

| ஐயமும் தெளிவும் | |
|---|---|
| ஐயம் | ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்களைக் கண்டதும் தஜ்ஜால் உப்பைப் போன்று கரைந்து விடுவான் என்றிருக்கும் போதும் தஜ்ஜால் மக்காவிற்குள் வரமுடியாது என்றிருக்கும் போதும் தஜ்ஜாலும் ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்களும் எப்படி ஒரே இடத்தில் சந்திக்க முடியும்? எனும் சந்தேகம் ஏற்படலாம். |
| தெளிவு | மேலே ஹதீஸில் குறிப்பிடப்பட்டிருப்பது கனவில் கண்ட விஷயமே தவிர வெளிப்படையாக நடந்த விஷயம் அல்ல. |

1. அறிவிப்பாளர் : அபூஹுரைரா (ரலி), நூல் : ஸஹீஹ் முஸ்லிம்
2. அறிவிப்பாளர் : அப்துல்லாஹ் இப்னு உமர் ரழியல்லாஹு அன்ஹு, நூல்: ஸஹீஹுல் புகாரி, ஸஹீஹ் முஸ்லிம்

**ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்களின் பணிகளும் அவர்களது காலத்தில் நிகழ இருக்கின்ற செயல்களும்**

ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்கள், தஜ்ஜாலை கொலை செய்ததன் பின்னர் முஃமின்களுக்கு ஒரு பொற்காலம் பிறக்கும், அதன் பின்னர் இவ்வுலகில் பல செயல் திட்டங்களை நிறைவேற்றுவார்கள். அவற்றில் பின்வருபவை முக்கியமானவைகளாகும்.

⏩ இஸ்லாமிய மார்க்கத்தை கொண்டு மட்டுமே தீர்ப்பளிப்பார்கள்.

“என் உயிர் எவன் கையிலுள்ளதோ அ(ந்த இறை)வன் மீது சத்தியமாக! விரைவில் மர்யமின் மகன் (ஈஸா அலைஹிஸ் ஸலாம்) உங்களிடையே நேர்மையாகத் தீர்ப்பளிக்கும் நீதிபதியாக இறங்கவிருக்கிறார். அவர் சிலுவையை உடைப்பார், பன்றியைக் கொல்வார், ஜிஸ்யா (எனும் காப்பு) வரியை வாங்க மறுப்பார், (இஸ்லாம் ஒன்றையே மக்களிடமிருந்து ஏற்பார்.) அப்போது செல்வம் (பெருகி) வழிந்தோடும். ஆனால் அதை வாங்கிக்கொள்ள எவரும் இருக்கமாட்டார்” என அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்:[1]

- யூதர்கள் மற்றும் கிறிஸ்தவர்களின் கோரிக்கைகள் மறுக்கப்பட்டு, இஸ்லாமிற்கு மட்டும் கட்டுப்பட வேண்டிய கட்டாய நிலையை ஏற்படுத்துவார்கள். அதன்மூலம் லாஇலாஹ இல்லல்லாஹ் என்ற கலிமாவே இவ்வுலகில் மேலோங்கி இருக்கும்.
- தஜ்ஜாலைக் கொல்வார்கள்.
- நீதியாகவும் நேர்மையாகவும் ஆட்சி நடத்துவார்கள்.

“....பின்னர் (ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்களின் காலத்தில்), பூமியில் நிம்மதி நிறைந்து காணப்படும், சிங்கம் ஒட்டகங்களோடும், புலிகள் மாடுகளோடும், ஓநாய்கள் ஆடுகளோடும், ஒன்றாக மேயும். சிறுவர்கள் பாம்புகளோடு (சாதாரணமாக) விளையாடுவார்கள். இவ்வாறு நாற்பது வருடங்கள் ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்கள் இவ்வுலகில் (ஆட்சி செய்து) மரணித்ததன் பின்னர், முஸ்லிம்கள் அவர்களுக்கு ஜனாஸா தொழுகை நடத்துவார்கள்.”[2]

---

1. அறிவிப்பாளர் : அபூஹுரைரா (ரலி), நூல் : ஸஹீஹுல் புகாரி, ஸஹீஹ் முஸ்லிம்
2. அறிவிப்பாளர் : அபூஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு, நூல் : அஹ்மத்

- பாதுகாப்பும் செழிப்பும் நிறைந்து காணப்படும்
- குறைஷிகளின் ஆட்சியுரிமை மாற்றப்படும்

“...குறைஷிகளின் அதிகாரம் பறிக்கப்படும்... (பூமி செழிப்படைந்து) ஒரு திராட்சைக் கொளையும், ஒரு மாதுளையும், பலரது வயிற்றை நிரப்பக் கூடியதாக இருக்கும்” என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் குறிப்பிட்டார்கள்.[1]

- உள்ளங்களிலிருந்து பொறாமையும், வஞ்சகமும் அகற்றப்படும்.

”ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்களது காலத்தில் வாழ்பவர்கள் கொடுத்து வைத்தவர்கள்தான். (அவர்களது காலத்தில்) சண்டையோ, பொறாமையோ, ஒருவருக்கொருவர் கோபப்படுகின்ற நிலையோ இருக்காது” என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். அறிவிப்பாளர் : அபூஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு[2]

- யுத்தங்கள் நிறுத்தப்படும்

“ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்கள் நீதியும் நேர்மையும் நிறைந்த ஆட்சியாளராக விளங்குவார்கள்; சிலுவைகளை உடைப்பார்கள்; பன்றிகளைக் கொல்லுவார்கள். அவர்களது காலத்தில், வாள்கள் (போர்கள் இல்லாத காரணத்தால்) சாதாரண கத்திகளாகப் பயன்படுத்தப்படும்” என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் குறிப்பிட்டார்கள்.[3]

### ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்களோடு இருப்பவர்களின் நிலை

“எனது உம்மத்தில் இரண்டு கூட்டத்தினரை, அல்லாஹ் நரக நெருப்பை விட்டும் தூரமாக்குவான். அவர்களில் ஒரு கூட்டம் (இறுதி காலத்தில்) இந்தியாவை வெற்றி கொள்பவர்கள், அடுத்த கூட்டம் ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்களோடு இருப்பவர்கள்” என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.[4]

---

1. இந்த ஹதீஸின் தரத்தில் கருத்துவேறுபாடு உண்டு. அறிவிப்பாளர் : அபூ உமாமா அல்பாஹிலி ரழியல்லாஹு அன்ஹு, நூல் : இப்னு மாஜா
2. இந்த ஹதீஸை இமாம் அல்பானி ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் ஸஹீஹானது எனக் குறிப்பிடுகின்றார்கள்
3. அறிவிப்பாளர் : அபூஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு, நூல் : அஹ்மத்.
4. அறிவிப்பாளர் : தவ்பான் ரழியல்லாஹு அன்ஹு, நூல் : நஸாயீ

**மற்ற நபிமார்கள் அன்றி ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்கள் இவ்வுலகிற்கு இறங்குவதில் உள்ள தத்துவம்**

ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்கள் இறங்குவதற்கு என்ன காரணம் என்பதற்கு மார்க்க அறிஞர்கள் சில விஷயங்களைக் குறிப்பிடுகின்றனர்.

1. யூதர்கள் ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்களைக் கொலை செய்து விட்டதாக எண்ணுகின்றனர். இவர்களது நம்பிக்கை பொய்யானது என்பதை நிரூபிப்பதற்காகவும், ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்களே, யூதர்களையும் அவர்களது தலைவனான தஜ்ஜாலையும் கொலை செய்வார்கள், என்பதை மக்களுக்குக் காட்டவேண்டும் என்பதற்காகவும் இவ்வுலகிற்கு வருவார்கள்.

இக்கருத்தையே இமாம் இப்னு ஹஜர் ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்களும் மிகச் சரியான கருத்தெனக் குறிப்பிடுகின்றார்கள்.

2. **“இன்ஜீலில் அவர்களுக்குள்ள உதாரணமாவது: ஒரு பயிரை ஒத்திருக்கிறது. அப்பயிர் (பசுமையாகி, வளர்ந்து) உறுதிப்படுகிறது. பின்னர், அது தடித்துக் கனமாகிறது. பின்னர், விவசாயிகளுக்கு ஆச்சரியம் கொடுக்கும் விதத்தில் (வளர்ந்து,) அது தன் தண்டின் மீது நிமிர்ந்து நிற்கிறது.” (அல்குர்ஆன் 48 : 29)**

ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்கள், தனக்கு அருளப்பட்ட வேதத்தின் மூலம் முஹம்மத் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது உம்மத்தின் சிறப்பை அறிந்திருந்தார்கள். அதனால், முஹம்மத் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் உம்மத்தில் தானும் இருக்க வேண்டும் எனப் பிரார்த்தித்திருக்கிறார்கள். எனவே, அல்லாஹ் அவர்களது துஆவை ஏற்றுக்கொண்டு, இறுதிக்காலத்தில் முஹம்மத் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது உம்மத்தில் தோன்றி, இஸ்லாமை நிலைநிறுத்துவார்கள். இந்த தத்துவங்களின் அடிப்படையிலேயே ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்கள் இறுதிக் காலத்தில் இறங்குவார்கள்.

3. மண்ணில் பிறந்தவர்கள் மண்ணிலேயே மரணித்து மண்ணிலேயே அடக்கம் செய்யப்பட வேண்டும் என்பது இறை நியதியாகும். மண்ணில் பிறந்த ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்கள் இதுவரை

மரணிக்கவில்லை. எனவே, யுக முடிவின்போது இம்மண்ணில் மரணிக்க வேண்டும் என்பதற்காகவே இவ்வுலகிற்கு வருவார்கள். அவ்வேளை தஜ்ஜாலும் வெளியாகி இருப்பதனால் அவனையும் கொன்றுவிட்டு மரணமடைவார்கள்.

4. ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்கள் அல்லாஹ்வின் மகன் எனவும், அவர்கள் மரணித்து, பின்னர் மீண்டும் உயிர்த்தெழுந்ததாகவும் கிறிஸ்தவர்கள் நம்புகின்றனர். இந்த நம்பிக்கை தவறானது எனவும், (தான் அல்லாஹ்வின் மகன் அல்ல, அல்லாஹ்வின் தூதரே எனவும் நிரூபிக்க வேண்டிய தேவை இருப்பதனால்) அவர்கள் பூமிக்கு மீண்டும் வருவார்கள்.

5. “ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்களுக்கு நானே மிக நெருக்கமானவன், எனக்கும் அவருக்கும் இடையில் எந்த நபியும் வரவில்லை” எனும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் கூற்றுக்கு ஏற்ப, ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்களுக்கும் முஹம்மத் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கும் இடையில் மிக நெருக்கமான தொடர்புகள் இருந்துள்ளதைப் பார்க்க முடிகிறது.

அவ்வாறே, ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்களுக்குப் பின்னால் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களே தூதராக வந்துள்ளார்கள், முஹம்மத் நபியின் வருகையைப் பற்றி ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்கள் தனது மக்களிடம் முன்னறிவிப்புச் செய்து, அப்படி ஒரு தூதர் வருவார் என நம்பிக்கை கொள்ளுமாறும் கட்டளையிட்டுள்ளார்கள். எனவே, இவ்வாறான நெருக்கமான உறவின் வெளிப்பாடே அவர்கள் மீண்டும் இவ்வுலகிற்கு வருவதாகும்.

ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்களுக்கு தனது ஸலாமை எடுத்துக் கூறுமாறு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார்கள்.

“...(எனது கொள்கையும் ஈஸாவாகிய அவரது) கொள்கையும் ஒன்றாகும். அல்லாஹ்வின் தூதரா(கிய எனது) ஸலாமை அவருக்குத் தெரிவித்து விடுங்கள்...” என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் குறிப்பிட்டார்கள்.[1]

---

1. அறிவிப்பாளர் : அபூஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு, நூல் : அஹ்மத்

அபூஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு அவர்களும், தாம் மரணிக்கும்போது, ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்களுக்குச் சலாம் கூறும்படி கூறியதாக சில அறிவிப்புகளில் கூறப்பட்டுள்ளது.

“எனது ஆயுள் நீட்டப்படுமானால், நான் ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்களைச் சந்திக்க விரும்புகின்றேன். (அப்படி நீட்டப்படாமல்) நான் மரணித்து விட்டால் அவருக்கு எனது ஸலாமை எடுத்தியம்புங்கள்” என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.[1]

**இப்பூமியில் ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்களின் ஆயுள்காலம்**

முஸ்னது அஹ்மதில் வருகின்ற ஒரு நபிமொழியின்படி “.... ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்கள் 40 வருடங்கள் (இப்பூமியில் உயிர்) வாழ்ந்ததன் பின்னர் மரணித்து விடுவார்கள். முஸ்லிம்கள் அவர்களுக்குத் தொழுகை நடத்துவார்கள்” என அறியமுடிகிறது. இதிலிருந்து ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்கள் இவ்வுலகில் நாற்பது வருடங்கள் உயிர்வாழ்ந்து நீதியாகவும் நேர்மையாகவும் ஆட்சி செய்வார்கள் என்பதை அறியலாம்.

**ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்களின் ஹஜ்**

“என் உயிர் யார் கையில் இருக்கின்றதோ அவன் மீது சத்தியமாக மர்யம் அலைஹிஸ் ஸலாம் அவர்களது மகன் ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்கள் ஹஜ்ஜுக்காக, அல்லது உம்ராவிற்காக, அல்லது இரண்டுக்கும் சேர்த்து ‘ரவ்ஹா’ எனும் இடத்தில் வைத்து தல்பியா சொல்வார்கள்.” என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.[2]

......................................

1. அறிவிப்பாளர் : அபூஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு, நூல் : அஹ்மத்
2. அறிவிப்பாளர் : அபூஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு, நூல் : ஸஹீஹ் முஸ்லிம்

# யஃஜூஜ், மஃஜூஜ்

## முன்னுரை

யஃஜூஜ், மஃஜூஜ் கூட்டம் எனக் குறிப்பிடப்படுபவர்கள், ஆதம் அலைஹிஸ் ஸலாம் அவர்களது பரம்பரையைச் சேர்ந்த இரண்டு கோத்திரத்தினர் அல்லது வர்க்கத்தினர் ஆவார்கள்.

யஃஜூஜ், மஃஜூஜ் கூட்டத்தினர் பற்றிப் பேசுகின்ற சிலர், அவர்களைக் குள்ளர்களென்றும், நெட்டையர்களென்றும், பெரிய உருவங்களென்றும், (சுளகு போன்ற) பெரும் காதுச் சோனைகளைக் கொண்டவர்களென்றும் வர்ணிப்பதைக் காணலாம். இவை அனைத்தும் அடிப்படையற்ற செய்திகளாகும்.

யஃஜூஜ், மஃஜூஜ் கூட்டத்தினர் நம்மைப் போன்று மனித இனத்தைச் சேர்ந்தவர்களே! இவர்கள் துல்கர்ணைன் அவர்களது காலத்தில் மக்கள் மத்தியில் கடுமையாகக் குழப்பம் செய்துகொண்டிருந்தனர். அதனால் இவர்களிடமிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காக இவர்களுக்கும் தங்களுக்குமிடையில் ஒரு தடுப்புச் சுவரை ஏற்படுத்தித் தருமாறு அக்கால மக்கள் துல்கர்னைன் அவர்களிடம் வேண்டிக் கொண்டனர். அவ்வேண்டுதலுக்கு ஏற்ப இரு சாராருக்குமிடையில் ஒரு மிகப்பெரும் தடுப்புச்சுவர் ஏற்படுத்தப்பட்டு யஃஜூஜ், மஃஜூஜ் கூட்டத்தினர் வெளிவர முடியாமல் அங்கேயே தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

யுக முடிவின்போது, ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்கள் இறங்கியதற்குப் பின்னர் இவர்கள் தங்களது தடுப்புச் சுவரை உடைத்துக் கொண்டு வெளியே வருவார்கள். மக்கள் மத்தியில் பரவிச் சென்று அவர்களைக் குழப்பத்தில் ஆழ்த்துவார்கள். ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்களையும் முஃமின்களையும் பைத்துல் முகத்தஸின் ஒரு மலைப் பிரதேசத்தில் தடுத்து வைத்துத் தொந்தரவு செய்வார்கள்.

அந்நேரத்தில் அல்லாஹ், அவர்களது கழுத்துக்களை அரித்துவிடக் கூடிய ஒரு வகைப் புழுக்களை அனுப்புவான், மறுநாள் விடியும்போது

யஃஜூஜ், மஃஜூஜ் கூட்டத்தினர் அனைவருமே அப்புழுக்கள் மூலம் இறந்து கிடப்பார்கள்.

**யஃஜூஜ், மஃஜூஜ் என்ற பதத்தின் விளக்கம்**

1. யஃஜூஜ், மஃஜூஜ் என்பது அரபு அல்லாத வேற்றுமொழிப் பெயர்களாகும்.
2. இவர்கள் நெருப்பைப் போன்று, அழிவுகளை ஏற்படுத்துகின்ற காரணத்தினால், யஃஜூஜ், மஃஜூஜ் எனும் சொல் "அஜ்ஜ" (தீப்பிழம்பை ஏற்படுத்தினான்) எனும் சொல்லிலிருந்து பிறந்திருக்கலாம் எனவும் கூறப்படுகின்றது.

## யஃஜூஜ், மஃஜூஜ் கூட்டத்தினரின் தடுப்புச் சுவர்

துல்கர்னைன் எனும் நல்லடியார் பற்றி அல்லாஹ் பின்வருமாறு கூறுகின்றான்.

பின்னர் அவர் (வேறு) ஒரு வழியைப் பின்பற்றிச் சென்றார். (அங்கிருந்த) இரு மலைகளின் இடைவெளியை அவர் சென்றடைந்த போது அவற்றிற்கு முன்னால் மக்கள் சிலரைக் கண்டார். அவர்கள் பேச்சை (எளிதில்) புரியக்கூடியவர்களாக இருக்கவில்லை.

அவர்கள் (இவரை நோக்கி ஜாடையாக) "துல்கர்னைனே! நிச்சயமாக யஃஜூஜ், மஃஜூஜ் (என்னும் மக்கள்) எங்கள் ஊரில் (வந்து) பெரும் விஷமம் செய்கிறார்கள். எங்களுக்கும் அவர்களுக்கும் இடையில் நீர் ஒரு தடையை ஏற்படுத்தும் பொருட்டு ஒரு தொகையை நாங்கள் உமக்கு சேகரம் செய்யலாமா?'' என்று கேட்டார்கள்.

அதற்கவர், "என் இறைவன் எனக்குக் கொடுத்திருப்பதே (போதுமானது,) மிக்க மேலானது. (உங்கள் பொருள் தேவையில்லை. எனினும், உங்கள்) உழைப்பைக் கொண்டு எனக்கு உதவி செய்யுங்கள். உங்களுக்கும் அவர்களுக்கும் இடையில் உறுதியான ஒரு தடுப்பை (சுவரை) எழுப்பி விடுகிறேன்'' என்றும்,

"நீங்கள் (அதற்குத் தேவையான) இரும்புப் பாலங்களை என்னிடம் கொண்டு வாருங்கள்'' என்றும் கூறி, "(அவற்றைக் கொண்டு

வந்து இரு மலைகளுக்கிடையில் இருந்த பள்ளத்தை நிறைத்து) இரு மலைகளின் உச்சிக்கு அவை சமமாக உயர்ந்த பின்னர், நெருப்பாக பழுக்கும் வரை அதை ஊதுங்கள்" என்றார். (அதன் பின்னர்) "செம்பையும் என்னிடம் கொண்டு வாருங்கள். நான் அதை உருக்கி அதன் மீது ஊற்றுவேன்" என்றார்.

"பின்னர், அதைக் கடந்து வர (யஃஜூஜ், மஃஜூஜ்களால்) முடியாது. அதைத் துளைத்துத் துவாரமிடவும் அவர்களால் முடியாது" (என்று கூறினார்). (அல்குர்ஆன் 18 : 92-97)

## 1. துல்கர்னைன் என்பவர் யார்?

பெரும்பாலான அறிஞர்களின் கருத்துப்படி, துல்கர்னைன் என்பவர் ஒரு முஃமினான அரசனாவார். இவர் ஷைத்தானின் இரு கொம்பு (கர்ன்)களும் உதித்து மறைகின்ற கிழக்கு மேற்கெல்லாம் சென்று வந்ததால் இவருக்கு துல்கர்னைன் (இரு கொம்புள்ளவர்) எனச் சொல்லப்படுகின்றது.

அல் இஸ்கந்தர் அல் மக்தூமி என்பவருக்கே துல்கர்னைன் என குறிப்பிடப்படுவதாக ஒரு கருத்து காணப்படுகிறது. ஆனால் அது தவறாகும். ஏனெனில் துல்கர்னைன் முஸ்லிமாகவும், மக்தூமி என்பவர் காஃபிராகவும் காணப்பட்டவர்கள். அதேபோன்று மக்தூமி என்பவர் துல்கர்னைனை விட கிட்டத்தட்ட இரண்டாயிரம் ஆண்டுகள் பின்னால் வாழ்ந்தவராவார்.

இவர் பூமியைச் சுற்றி வந்த விஷயம், யஃஜூஜ், மஃஜூஜ் கூட்டத்தினரோடு சம்மந்தப்பட்ட பல விஷயங்கள் "கஹ்ஃப்" எனும் அத்தியாயத்தில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

(கிழக்கிற்கும் மேற்கிற்கும் சென்ற இவர்) பின்னர் மூன்றாவது திசையாக வடக்கு நோக்கிச் சென்று, ஆர்மேனியா, அதர்பைஜான் பிரதேசங்களை அடுத்து துருக்கியில், இரு மலைகளைக் கொண்ட, மலைப்பாங்கான ஒரு பிரதேசத்தை வந்தடைந்தார்.

இரு அணைக்கட்டுகள் போன்று காணப்பட்ட அம்மலைகளுக்கிடையே பொந்துகள்போன்ற பெரிய இடைவெளிகள் காணப்பட்டன. யஃஜூஜ்,

மஃஜூஜ் கூட்டத்தினர் அப்பொந்துகளின் ஊடாகவே துருக்கி நாட்டிற்குள் நுழைந்து, குழப்பங்கள் விளைவிப்பதோடு, தோட்டம் துறவுகளையும் அழித்தொழிப்பார்கள்.

துல்கர்னைனிடம் அபார ஆற்றலையும், பலத்தையும், சீர்திருத்தத்தையும் கண்ட துருக்கியர்கள், யஃஜூஜ் மஃஜூஜிடம் இருந்து தங்களைக் காப்பாற்றிக் கொள்வதற்காக மேற்படி இடைவெளிகளை அடைத்து, ஒரு தடுப்பை ஏற்படுத்தித் தருமாறும், அதற்காக தாங்கள் செலவு செய்வதற்குத் தயாராக இருப்பதாகவும் கேட்டுக் கொண்டார்கள்.

எப்பொழுதும் சீர்திருத்தத்தை மட்டுமே விரும்பக்கூடிய துல்கர்னைன் அவர்களும், தான் எவ்வித பிரதியுபகாரமும் இன்றி, அல்லாஹ்விற்காக யஃஜூஜ் மஃஜூஜ் கூட்டத்தினரின் போக்குவரத்துப் பாதையை மறித்து ஒரு பெரும் தடுப்பு அணையைக் கட்டித் தருவதாகவும், அதற்காகத் தன்னோடு சேர்ந்து உதவிக்கு வந்தால் மட்டும் போதும் எனவும் வேண்டிக் கொண்டார்.

**அதற்கவர்: “என் இறைவன் எனக்குக் கொடுத்திருப்பதே (போதுமானது,) மிக்க மேலானது. (உங்கள் பொருள் தேவை இல்லை. எனினும், உங்கள்) உழைப்பைக் கொண்டு எனக்கு உதவி செய்யுங்கள். உங்களுக்கும் அவர்களுக்கும் இடையில் உறுதியான ஒரு தடுப்பை (சுவரை) எழுப்பி விடுகிறேன்” என்று கூறினார்.**

**(அல்குர்ஆன் 18 : 95)**

அதன் பின்னர் அவ்விரு மலைகளுக்கும் இடையே, மலையளவு பெரும் பெரும் இரும்புப் பாலங்களை உயரமாக அடுக்கடுக்காக வைத்துவிட்டு, அவைகளை துருத்தியால் ஊதுங்கள் எனக் கட்டளையிட்டார். அவர்களும் கட்டளைக்குப் பணிந்து இரும்புப் பாலைகள் சிவந்து ஒன்றிணைந்த இரும்புக் கட்டியாக மாறும் வரை ஊதினார்கள். பின்னர் அதற்குமேல் உலோகங்களைக் கரைத்து ஊற்றி பெரும் மலையைப் போன்றே ஆக்கிவிட்டார்.

உடைத்துக்கொண்டோ, தோண்டிக்கொண்டோ, மேலாக ஏறிக் கொண்டோ அல்லது பாய்ந்து கொண்டோ வரமுடியாத அளவு, அந்தத் தடுப்பு, பிரமாண்டமானதாகவும் கரடு முரடானதாகவும் அமைக்கப்பட்டிருக்கின்றது.

**“நீங்கள் (அதற்குத் தேவையான) இரும்புப் பாலங்களை என்னிடம் கொண்டு வாருங்கள்’’ என்றும் கூறி, “(அவற்றைக் கொண்டு வந்து இரு மலைகளுக்கிடையில் இருந்த பள்ளத்தை நிறைத்து) இரு மலைகளின் உச்சிக்கு அவை சமமாக உயர்ந்த பின்னர், நெருப்பாக பழுக்கும் வரை அதை ஊதுங்கள்’’ என்றார். (அதன் பின்னர்) “செம்பையும் என்னிடம் கொண்டு வாருங்கள். நான் அதை உருக்கி அதன் மீது ஊற்றுவேன்’’ என்றார்.**

**“பின்னர், அதைக் கடந்து வர (யஃஜூஜ், மஃஜூஜ்களால்) முடியாது. அதைத் துளைத்துத் துவாரமிடவும் அவர்களால் முடியாது’’ (என்று கூறினார்). (அல்குர்ஆன் 18 : 96-97)**

### யஃஜூஜ், மஃஜூஜ் கூட்டத்தினரின் எண்ணிக்கை

“யஃஜூஜ், மஃஜூஜ் கூட்டத்தினர் ஆதம் அலைஹிஸ் ஸலாம் அவர்களின் சந்ததிகளாவர். அவர்கள் வெளிப்பட்டுவிட்டால் மக்களின் வாழ்க்கையைப் பாழாக்கி விடுவார்கள். அவர்களில் ஒவ்வொருவரும் மரணிக்கும்போது ஆயிரம் அல்லது அதற்கு மேலான வாரிசுகளை உருவாக்காமல் மரணிப்பதில்லை. அவர்களுக்குப் பின்னர் தாவுல், தாரீஸ், மிஸ்க் என மூன்று சமுதாயம் உருவாகும்’’ என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் குறிப்பிட்டார்கள்.[1]

### அவர்களது அங்க அமைப்பு

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு தேள் கொட்டியதால், தனது தலையை இறுக்க கட்டிக் கொண்டவர்களாக ஓர் உரையாற்றினார்கள். அவ்வுரையில் “உங்களுக்கு எதிரிகளே இல்லை என நீங்கள் எண்ணிக் கொண்டீர்கள், முகங்கள் பெருத்த, கண்கள் சிறுத்த, செம்பட்டையான முடிகளை உடைய யஃஜூஜ், மஃஜூஜ் கூட்டத்தினர் வரும் வரை நீங்கள் (எதிரிகளுடன்) போராடிக்கொண்டே இருப்பீர்கள். (பின்னர் யஃஜூஜ், மஃஜூஜ் கூட்டத்தினர்) ஒவ்வொரு மேட்டிலிருந்தும் இறங்கி வருவார்கள். அவர்களது முகங்கள், பெருத்த, கனத்த, கரடுமுரடான கேடயங்கள் போன்றிருக்கும் எனக் கூறினார்கள்.’’

---

1. அறிவிப்பாளர் : அப்துல்லாஹ் இப்னு அம்ர் ரழியல்லாஹு அன்ஹு, நூல் : தபரானி

இச்செய்தியை காலித் இப்னு அப்துல்லாஹ் அவர்கள் தனது தாயின் சகோதரியிடம் இருந்து கேட்டதாக அறிவிக்கின்றார்கள். நூல் : அஹ்மத்

**தடைச்சுவர் உடைக்கப்படும் விதம்?**

யஃஜூஜ், மஃஜூஜ் என்பவர்கள் இரு கோத்திரங்களைச் சேர்ந்த குழப்பவாதிகள் என்பதால், அவர்கள், மக்கள் இருக்கும் பிரதேசத்திற்கு வந்துவிடாமல் துல்கர்னைன் என்பவர் மிகப்பெரும் தடுப்புச் சுவர் ஒன்றை எழுப்பினார் என்பதை ஏற்கனவே பார்த்தோம். அவர்கள் தற்போது அச்சுவர்களுக்கு உள்ளேயே வாழுகின்றனர். அவர்களுக்கான உணவு, நீர் அனைத்தும் அதனுள்ளேயே இருக்கின்றன. அவர்கள் அதற்குள்ளேயே தனியான ஒரு வாழ்க்கை வாழ்ந்துகொண்டு, தடுப்பு அணையை உடைத்துவிட்டு வெளியே வருவதற்காக அந்த அணையைத் தோண்டிக் கொண்டிருக்கின்றனர்.

“... அதற்குப் பின்னர் (யஃஜூஜ், மஃஜூஜ்) கூட்டத்தினர் ஒவ்வொரு நாளும் (அந்த அணையை உடைப்பதற்காக அதனைத்) தோண்டிக் கொண்டிருக்கிறார்கள். அணை உடைந்து விடுகின்ற தருணம் வரும்போது “(அவர்களில் ஒருவர்)” நாளை வந்து தோண்டலாமே!” என்பார். அப்போது அனைவரும் திரும்பிச் சென்று விடுவார்கள். மீண்டும் மறுநாள் வருவதற்குள் அவ்வணை) ஏற்கனவே, இருந்ததைவிட பலமானதாக மாறிவிடும். மறுநாள் மீண்டும் தோண்டுவார்கள். (இவ்வாறு ஒவ்வொரு நாளும் தோண்டிக் கொண்டிருக்கும்போது). அவர்கள் வெளியேற வேண்டிய காலம் வந்துவிடும். அப்போது ஒருவர் “இன் ஷா அல்லாஹ் நாளை வந்து தோண்டலாமே” எனக் கூறுவார், மறுநாள் வந்து பார்ப்பார்கள். நேற்றுப்போகும்போது எப்படி தோண்டப்பட்டிருந்ததோ அவ்வாறே காணப்படும். பிறகு, மீதமுள்ள பகுதியை தொடர்ந்து தோண்டி (அணையை) உடைத்து வெளியேறுவார்கள். நீர் நிலைகளில் காணப்படும் நீர் அனைத்தையும் குடித்து முடிப்பார்கள். தங்களது அம்புகளை வானைநோக்கி எய்வார்கள் அது இரத்தம் படிந்து கீழே வரும்” என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் குறிப்பிட்டார்கள்.[1]

---

1. அறிவிப்பாளர் : அபூஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு, நூல் : அஹ்மத், திர்மிதி

இந்த ஹதீஸில் மூன்று விஷயங்கள் பொதிந்திருப்பதைக் காணலாம்.

1. அவர்கள் அணையை உடைப்பதற்காக, தொடர்ந்து இரவு பகலாக முயற்சி செய்வதை அல்லாஹ் தடுத்திருக்கின்றான். அப்படி இரவு பகலாக முயற்சி செய்திருந்தால் சிலவேளை எப்போதோ உடைத்து வெளியாகியிருப்பார்கள்.

2. அணையை உடைப்பதற்காக ஏதாவது ஆயுதங்களை பயன்படுத்துவதை விட்டும், அல்லது ஏணி போன்ற ஒன்றைப் பயன்படுத்தி ஏறி வருவதை விட்டும் அல்லாஹ் அவர்களைத் தடுத்திருப்பதோடு, அதுபற்றிய அறிவையும் சிந்தனையையும் கொடுக்காமல் வைத்திருக்கின்றான். அந்த அணை மிக உயரமும் பலமும் கொண்ட காரணத்தினால், சில வேளை மேற்படி வழிமுறைகளைப் பயன்படுத்திக்கூட அவர்களால் வெளிவர முடியாமல் இருக்கலாம். (அல்லாஹ் மிக அறிந்தவன்)

3. எப்போது அந்த அணை உடைக்கப்பட வேண்டுமோ. அதுவரைக்கும் இன் ஷா அல்லாஹ் என்ற வார்த்தையைப் பயன்படுத்த, அல்லாஹ் அவர்களுக்கு அருள் புரியவில்லை.

இந்த ஹதீஸின் மூலம், அவர்களுக்குள் செயல் திறமை உள்ளவர்களும், ஒரு தலைமைத்துவ அமைப்பும், கட்டுப்பாடும், அல்லாஹ்வின் நாட்டம், அல்லாஹ்வின் வல்லமை போன்ற விஷயங்களை அறிந்தவர்களும் இருக்கின்றார்கள் என்பதையும் அறியமுடிகின்றது.

“அவர்களின் பொறுப்பாளர் ஒருவர் கூறிய “இன் ஷா அல்லாஹ்” என்ற வார்த்தையின் மகிமை சிலநேரம் அவர்களுக்கே தெரியாமல் இருந்திருக்கலாம், அப்படி இருந்தும் அந்த வார்த்தையில் உள்ள பரக்கத்தின் மூலம் அவர்கள் நாடியது நடந்துவிடுகிறது.”[1]

## யஃஜூஜ், மஃஜூஜ் பற்றி வந்துள்ள அல்குர்ஆன் வசனங்கள்

**“(நபியே!) துல்கர்னைனைப் பற்றி (யூதர்களாகிய) அவர்கள் உம்மிடம் கேட்கின்றனர். “அவருடைய சரித்திரத்தில் (இருந்து)உங்களுக்கு (பயனளிக்கும்) அறிவுரையை ஓதிக் காண்பிக்கிறேன்” என்று**

1. பார்க்க : ஃபத்ஹுல் பாரி 13/109

கூறுவீராக. நிச்சயமாக நாம் அவருக்குப் பூமியில் ஆதிக்கத்தைக் கொடுத்து வளமிக்க வசதி வாய்ப்பையும் அளித்திருந்தோம். ஒவ்வொரு பொருளையும் (தமது இஷ்டப்படி) செய்யக்கூடிய வழியையும் நாம் அவருக்கு அளித்திருந்தோம்.

அவர் (பூமியில்) ஒரு வழியைப் பின்பற்றிச் சென்றார். சூரியன் மறையும் (மேற்குத்) திசையை அவர் அடைந்த பொழுது சேற்றுக் கடலில் சூரியன் மறைவதை(ப் போல்) கண்டார். அவ்விடத்தில் ஒருவகை மக்களையும் கண்டார். (நாம் அவரை நோக்கி) “துல்கர்னைனே! நீர் (இவர்களைத் தண்டித்து) வேதனை செய்யவும், அல்லது அவர்களுக்கு நன்மை செய்யவும் (இரண்டுக்கும் முழு சுதந்திரம் உமக்கு அளித்திருக்கிறோம்)” என்று கூறினோம்.

ஆகவே, அவர் (அவர்களை நோக்கி “உங்களில்) எவன் (என் கட்டளையை மீறி) அநியாயம் செய்கின்றானோ, நாம் (தண்டித்து) வேதனை செய்வோம். பின்னர், அவன் தன் இறைவனிடம் கொண்டு போகப்பட்டு அவனும் அவனை மிக்க கடினமாக வேதனை செய்வான்” என்றார்.

“எவன் நம்பிக்கை கொண்டு (நாம் கூறுகிறபடி) நல்லதை செய்கின்றானோ அவனுக்கு (இறைவனிடத்திலும்) அழகான நற்கூலி இருக்கிறது. நாமும் நம் வேலைகளில் சுலபமான வேலைகளையே (செய்யும்படி) அவனுக்குக் கூறுவோம்.

பின்னர், அவர் (மற்ற) ஒரு வழியைப் பின்பற்றி நடந்தார். அவர் சூரியன் உதிக்கும் (கிழக்குத்) திசையை அடைந்த பொழுது சில மக்களைக் கண்டார். அவர்கள் மீது சூரியன் உதயமாகி (அவர்கள் வெயிலில்) இருப்பதையும் கண்டார். அவர்களுக்கும் சூரியனுக்கும் இடையில் நாம் ஒரு தடுப்பையும் ஏற்படுத்தவில்லை. (ஆடையணிந்தோ, வீடு கட்டியோ, சூரிய வெப்பத்தைத் தடுத்துக் கொள்ளக்கூடிய ஞானம் அவர்களிடம் இல்லை.)

(அவர்களுடைய நிலைமை உண்மையில்) இவ்வாறு இருந்தது. அவரிடமிருந்த எல்லா வசதிகளையும் நாம் நன்கறிவோம்.

பின்னர் அவர் (வேறு) ஒரு வழியைப் பின்பற்றிச் சென்றார்.

(அங்கிருந்த) இரு மலைகளின் இடைவெளியை அவர் அடைந்த போது அவற்றிற்கு முன்னால் மக்கள் சிலரைக் கண்டார். அவர்கள் பேச்சை (எளிதில்) புரியக்கூடியவர்களாக இருக்கவில்லை.

அவர்கள் (இவரை நோக்கி ஜாடையாக) ‘‘துல்கர்னைனே! நிச்சயமாக யஃஜூஜ், மஃஜூஜ் (என்னும் மக்கள்) எங்கள் ஊரில் (வந்து) பெரும் விஷமம் செய்கிறார்கள். எங்களுக்கும் அவர்களுக்கும் இடையில் நீர் ஒரு தடையை ஏற்படுத்தும் பொருட்டு ஒரு தொகையை நாங்கள் உமக்கு சேகரம் செய்யலாமா?’’ என்று கேட்டார்கள்.

அதற்கவர், ‘‘என் இறைவன் எனக்குக் கொடுத்திருப்பதே (போதுமானது,) மிக்க மேலானது. (உங்கள் பொருள் தேவையில்லை. எனினும், உங்கள்) உழைப்பைக் கொண்டு எனக்கு உதவி செய்யுங்கள். உங்களுக்கும் அவர்களுக்கும் இடையில் உறுதியான ஒரு தடுப்பை (சுவரை) எழுப்பி விடுகிறேன்’’ என்றும்,

‘‘நீங்கள் (அதற்குத் தேவையான) இரும்புப் பாலங்களை என்னிடம் கொண்டு வாருங்கள்’’ என்றும் கூறி, ‘‘(அவற்றைக் கொண்டு வந்து இரு மலைகளுக்கிடையில் இருந்த பள்ளத்தை நிறைத்து) இரு மலைகளின் உச்சிக்கு அவை சமமாக உயர்ந்த பின்னர், நெருப்பாக பழுக்கும் வரை அதை ஊதுங்கள்’’ என்றார். (அதன் பின்னர்) ‘‘செம்பையும் என்னிடம் கொண்டு வாருங்கள். நான் அதை உருக்கி அதன் மீது ஊற்றுவேன்’’ என்றார்.

‘‘பின்னர், அதைக் கடந்து வர (யஃஜூஜ், மஃஜூஜ்களால்) முடியாது. அதைத் துளைத்துத் துவாரமிடவும் அவர்களால் முடியாது’’ (என்று கூறினார்).

(இவ்வாறு தயாரான தடுப்பைக் கண்ட அவர்) ‘‘இது என் இறைவனுடைய அருள்தான். என் இறைவனின் வாக்குறுதி(யாகிய யுக முடிவு) வரும்போது, இதை(யும்) தூள் தூளாக்கிவிடுவான். என் இறைவனின் வாக்குறுதி உண்மையாக இருக்கிறது!’’ என்று கூறினார்.

அந்நாள் வருவதற்குள் சிலர் சிலருடன் (கடல்) அலைகளைப் போல் மோதும்படி நாம் விட்டுவிடுவோம். (பின்னர்) சூர் (எக்காளம்)

ஊதப்பட்(டு அனைவரும் மடிந்து விட்)டால் பின்னர் (உயிர் கொடுத்து) அவர்கள் அனைவரையும் ஒன்றுசேர்த்து விடுவோம்.

(அல்குர்ஆன் 18 : 83-99)

“யஃஜூஜ், மஃஜூஜ் கூட்டத்திற்கு வழி திறக்கப்பட்டால் அவர்கள் ஒவ்வொரு மேட்டிலிருந்தும் (தண்ணீர் பாய்ந்து ஓடுவதைப் போல்) வழிந்து (உலகின் பல பாகங்களிலும் அதிசீக்கிரத்தில் பரவி) விடுவார்கள்.” (அல்குர்ஆன் 21 : 96)

## யஃஜூஜ், மஃஜூஜ் பற்றி வந்துள்ள ஹதீஸ்கள்

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் மனைவி, ஸைனப் பின்த் ஜஹ்ஷ் ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் பின்வருமாறு கூறுகிறார்கள் : ”நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் (ஒரு முறை) என்னிடம் நடுக்கத்துடன் வந்து, “வணக்கத்துக்குரியவன் அல்லாஹ்வைத்தவிர வேறெவருமில்லை. நெருங்கிவந்துவிட்ட ஒரு தீங்கினால் அரபுகளுக்கு கேடு நேரவிருக்கின்றது. இன்று யஃஜூஜ், மஃஜூஜ் கூட்டத்தாரின் தடைச்சுவர் இவ்வாறு திறக்கப்பட்டுவிட்டது” என்று தனது கட்டை விரலையும் அதற்கு அடுத்துள்ள விரலையும் இணைத்து வளையமிட்டு காட்டியபடி கூறினார்கள். உடனே நான் “அல்லாஹ்வின் தூதரே! நம்மிடையே நல்லவர்கள் இருக்கத்தக்க நாம் அழிந்து விடுவோமா” என்று கேட்டேன். அதற்கு நபியவர்கள் “ஆம் தீமை பெருகிவிட்டால்...” என்று பதிலளித்தார்கள்.[1]

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், “இன்று யஃஜூஜ், மஃஜூஜ் கூட்டத்தாரின் தடுப்புச் சுவரிலிருந்து இந்த அளவுக்குத் திறக்கப்பட்டுள்ளது” என்று கூறினார்கள். இந்த ஹதீஸின் அறிவிப்பாளர்களில் ஒருவரான உஹைப் இப்னு காலித் ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள், (”இந்த அளவுக்கு” என்று கூறியபோது) தம் விரல்களால் (அரபி எண் வடிவில்) 90 என்று மடித்துக் காட்டினார்கள்.[2]

“அல்லாஹ் (மறுமை நாளில்) ஆதம் அலைஹிஸ் ஸலாம் அவர்களை நோக்கி “ஆதமே! என்பான். அதற்கு அவர்கள் “இதோ! வந்துவிட்டேன் கட்டளையிடு! காத்திருக்கிறேன். நலமனைத்தும் உன் கரங்களில்தான்

1, நூல் : ஸஹீஹுல் புகாரி, ஸஹீஹ் முஸ்லிம்

2, அறிவிப்பாளர் : அபூஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு, நூல் : ஸஹீஹ் முஸ்லிம்

இருக்கிறது” எனக் கூறுவார்கள். அப்போது அல்லாஹ் “நீங்கள் நரகத்திற்கு செல்லவிருப்பவர்களை (மற்றவர்களிலிருந்து) தனியாக பிரித்து விடுங்கள் என்று கூறுவான். ஆதம் அலைஹிஸ் ஸலாம் அவர்கள் “எத்தனை நரகவாசிகளை?” என்று கேட்பார்கள். அதற்கு அவன் “ஒவ்வொரு ஆயிரம் பேரிலிருந்தும் தொள்ளாயிரத்து தொண்ணூற்றொன்பது பேரை பிரித்து எடுங்கள்'' எனக் கூறுவான். இப்படி அவன் கூறும்வேளையில் (அங்கு நிலவும் பயங்கர சூழ்நிலையின் காரணத்தால்) சிறுவன்கூட நரைத்து (மூப்படைந்து) விடுவான், கர்ப்பம்கொண்ட பெண் ஒவ்வொருத்தியும் கர்ப்பத்தை (பீதியின் காரணத்தினால் அறைகுறையாகப்) பிரசவித்து விடுவாள், மக்களை (அச்சத்தால்) போதையுற்றவர்களாக நீங்கள் காண்பீர்கள்.

ஆனால் அவர்கள் (உண்மையிலேயே மதுவால்) போதையுற்றிருக்க மாட்டார்கள். ஆனால் அல்லாஹ்வின் வேதனை கடுமையானதாகும்” (இவ்வாறு நபியவர்கள் கூறியதும்) உடனே மக்கள் “அல்லாஹ்வின் தூதரே! (நரகவாசியாக பிரித்தெடுக்கப்படாத அந்த சுவனவாசி எங்களில் யார்?” என்று கேட்பார்கள். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் “நற்செய்தி பெற்று மகிழுங்கள்! உங்களில் ஒருவருக்கு யஃஜூஜ், மஃஜூஜ் கூட்டத்தாரில் ஓராயிரம் பேர் நரகத்திற்காகப் பிரித்து எடுக்கப்படுவார்கள்” என்றார்கள். இது அவர்கள் எண்ணிக்கையில் மிக அதிகமாக இருப்பதைக் காட்டுகிறது. பிறகு, என் உயிரை தன் கையில் வைத்திருப்பவன் மீது சத்தியமாக! நீங்கள் சொர்க்கவாசிகளில் கால் பங்கினராக இருக்கவேண்டும் என்று நான் விரும்புகின்றேன் என்று கூறினார்கள். உடனே நாங்கள் “அல்லாஹு அக்பர் (அல்லாஹ் மிகப்பெரியவன்”) என்று கூறினோம்.

பின்னர் நபியவர்கள்; “சொர்க்கவாசிகளில் நீங்கள் மூன்றில் ஒரு பங்கினராக இருக்க வேண்டும் என்று விரும்புகிறேன்” என்று கூறினார்கள். நாங்கள் “அல்லாஹு அக்பர்” என்று கூறினோம். அவர்கள் “சொர்க்கவாசிகளில் பாதித் தொகையினராக நீங்கள் இருக்க வேண்டும் என நான் விரும்புகின்றேன்”. என்று கூறினார்கள். நாங்கள் “அல்லாஹு அக்பர்” என்று கூறினோம். அப்போது அவர்கள் “நீங்கள் வெண்ணிறக் காளையின் மேனியிலுள்ள கறுப்பு முடியைப் போலத்தான் இருப்பீர்கள். அல்லது கருநிறக்காளையின் மேனியிலுள்ள வெள்ளை

முடியைப் போலதான் (மொத்த மக்களின் குறைந்த எண்ணிக்கையாக) இருப்பீர்கள்" என்று கூறினார்கள்.[1]

"யஃஜூஜ், மஃஜூஜ் கூட்டத்தினரை அல்லாஹ் வெளிப்படுத்துவான். அவர்கள் ஒவ்வொரு மேட்டிலிருந்தும் இறங்கி விரைந்து செல்வார்கள். அவர்களில் முதற்கூட்டத்தினர் தபரிய்யா[2] எனும் குளத்தைக் கண்டு அதன் நீரையெல்லாம் பருகிவிடுவார்கள். அடுத்த கூட்டத்தினர் வரும் போது (தண்ணீர் இல்லாமல் இருப்பதைக்கண்டு) இந்தக் குளத்தில் ஏற்கனவே அதிக தண்ணீர் இருந்ததே! என்று கூறுவார்கள்" என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.[3]

"...பின்னர் பைதுல் முகத்தஸ் பகுதியிலுள்ள "கம்று" மலையை அடைவார்கள். பூமியில் உள்ளவர்களை கொன்றுவிட்டோம். வாருங்கள்! வானில் உள்ளவர்களைக் கொல்வோம் என்று கூறுவார்கள். பின்னர் தங்கள் அம்புகளை வானை நோக்கி எறிவார்கள். அவர்களின் அம்புகளை அல்லாஹ் இரத்தம் தொய்ந்ததாக திருப்பி அனுப்புவான். பிறகு அவர்கள் ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்களையும் அவர்களின் தோழர்களையும் முற்றுகையிடுவார்கள். அவர்கள் முற்றுகையிடும் வேளையில் உங்களுக்கு நூறு தீனார்கள் எப்படி அதிக விலைமதிப்புடையதாக இருக்குமோ அதைவிட அவர்களுக்கு ஒரு மாட்டுத்தலை உணவாகக் கிடைப்பது அதிக விலைமதிப்புடையதாக தெரியுமளவுக்கு கடும் பஞ்சமும் பசியும் ஏற்படும்.

மேலும் ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்களும் அவர்களின் தோழர்களும் (இக் கூட்டத்தினரிடம் இருந்து) அல்லாஹ்விடம் (பாதுகாப்புப்) பிரார்த்தனை செய்வார்கள். அப்போது அல்லாஹ்

---

1, அறிவிப்பாளர் : அபூ ஸயீத் அல்குத்ரி ரழியல்லாஹு அன்ஹு, நூல் : ஸஹீஹுல் புகாரி, ஸஹீஹ் முஸ்லிம்

2. 'தபரிய்யா' என்பது சில வேளை பஹ்ருல் ஜலீல் அல்லது புஹைரதுல் ஜலீல் என்றும் சொல்லப்படும். இது ஒரு சிறிய நீர்க்குட்டையாகும். அது ஆக்கிரமிக்கப்பட்ட பலஸ்தீனின் வடக்குப் பகுதியிலுள்ளது. ஜோர்டான் ஆற்றின் மூலம் நீரைப்பெறும் இக்குளம், ஜோர்டான் வழியாக ஓடிக்கொண்டிருக்கிறது. 23 கி.மீ. நீளமும்; 13 கி.மீ. அகலமும் 44 மீட்டர் ஆழமும் கொண்ட இந் நீர்நிலை கடல் மட்டத்திலிருந்து 210 மீட்டர் தாழ்வில் உள்ளது.

3, அறிவிப்பாளர்: நவ்வாஸ் இப்னு ஸம்ஆன் ரழியல்லாஹு அன்ஹு, நூல் : ஸஹீஹ் முஸ்லிம்

ஒரு வகைப் புழுக்களை அவர்கள் பக்கம் அனுப்புவான். அதன் தாக்கத்தினால், அவர்கள் அனைவரும் ஒரேயடியாகச் செத்து விடுவார்கள். பின்னர் ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்களும் அவர்களின் தோழர்களும் (மலையிலிருந்து) இறங்கித் தரைக்கு வருவார்கள். யஃஜூஜ், மஃஜூஜ் கூட்டத்தினரின் (பிணங்களின்) நாற்றமும், நெருக்கடியும் ஒரு சாண் அளவு இடத்தைக்கூட விடாது பரவி நிற்கும். பின்னர் ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்களும் தோழர்களும் அல்லாஹ்விடம் துஆச் செய்வார்கள். அப்போது அல்லாஹ் ஒட்டகங்களின் கழுத்துக்களின் வடிவில் சில பறவைகளை அனுப்புவான். அப்பறவைகள் அப்பிணங்களைச் சுமந்து சென்று அல்லாஹ் நாடிய இடங்களில் போட்டுவிடும்.

அதன் பின்னர் அல்லாஹ் ஒரு மழையை அனுப்புவான். அம்மழை, பூமி முழுவதையும் கண்ணாடி போன்று கழுவிவிடும். பின்னர் பூமியை நோக்கி உன் கனிகளை முளைக்கச் செய்! உனது பரகத்தையும் மீட்டிக்கொடு என்று கூறப்படும். (அதன் பின்னர் பூமியில் நல்ல விளைச்சல் ஏற்படும்), அந்நாளில் ஒரு மாதுளம் பழத்தை ஒரு கூட்டமே உண்ணக்கூடியதாக இருக்கும். அதன் தோலைக் (குடைபோல் அமைத்து) அதில் (மனிதர்கள்) நிழல் பெறுவார்கள், பாலிலும் பரக்கத் செய்யப்படும், ஒரு ஒட்டகத்தில் கறக்கப்படும் பால், பல பெரும் கூட்டத்திற்கே போதுமானதாக இருக்கும், ஒரு மாட்டில் ஒரு முறை கறக்கப்படும் பால் ஒரு கோத்திரத்தினருக்கே போதுமானதாக இருக்கும். ஓர் ஆட்டில் ஒரு முறை கறக்கப்படும் பால் ஒரு குடும்பத்திற்குப் போதுமானதாயிருக்கும்.

மக்களின் அந்த வளமான வாழ்க்கையின்போது அல்லாஹ் ஒரு சுகமான காற்றை அனுப்புவான். அக்காற்று (மனிதர்களின்) அக்குள் ஊடாகச் சென்று முஃமின்கள், முஸ்லிம்கள் அனைவரது உயிர்களையும் கைப்பற்றும். அதன்பின்னர் கெட்ட மனிதர்கள் மட்டுமே எஞ்சி நிற்பர். அவர்கள் கழுதைகள் விரண்டோடுவதைப்போல் விரண்டோடுவார்கள். அவர்களை வைத்துத்தான் மறுமை நாள் நிகழும்" என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.[1]

இன்னுமொரு அறிவிப்பில் "ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்களும்

1, நூல் : ஸஹீஹ் முஸ்லிம்

அவர்களின் தோழர்களும் அல்லாஹ்விடம் துஆ செய்வார்கள். அல்லாஹ், ஒட்டகங்களின் கழுத்து வடிவில் சில பறவைகளை அனுப்புவான். அப்பறவைகள் (யஃஜூஜ், மஃஜூஜ் கூட்டத்தினரின்) பிணங்களைச் சுமந்து சென்று, அல்லாஹ் நாடிய இடங்களில் போட்டுவிடும்.” (யஃஜூஜ், மஃஜூஜ் கூட்டத்தினரின் அழிவுக்குப்பின்) அவர்கள் (பயன்படுத்திய) அம்புகள், வில்லுகள் போன்றவற்றை முஸ்லிம்கள் ஏழு ஆண்டுகளுக்கு விறகாகப் பயன்படுத்துவார்கள் என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.[1]

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மிஃராஜ் எனும் விண்வெளிப் பயணம் மேற்கொண்டபோது, இப்றாஹீம், மூஸா, ஈஸா அலைஹிஸ் ஸலாம் ஆகியோரைச் சந்தித்து, மறுமை நாளைப் பற்றிப் பேசிக் கொண்டார்கள். பின்னர் ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்களைப் பேசுமாறு கேட்கப்பட்டதும், தஜ்ஜால் கொலை செய்யப்படுவதைப் பற்றிப் (பின்வருமாறு) கூறினார்கள்: “... பின்னர் மக்கள் தங்களது ஊர்களுக்குத் திரும்புவார்கள், அவ்வேளை யஃஜூஜ், மஃஜூஜ் கூட்டத்தினரும் ஒவ்வொரு மேடுகளில் இருந்தும் இறங்கி வருவார்கள். அவர்கள் தாண்டிச் செல்கின்ற அனைத்து நீர் நிலைகளில் உள்ள நீரையும் குடித்து முடிப்பார்கள். போகின்ற இடங்கள் அனைத்தையும் நாசமாக்குவார்கள். பின்னர் மக்கள் என்னிடம் தஞ்சமடைவார்கள். நான் (அவர்களுக்காக) அல்லாஹ்விடம் பிரார்த்தித்ததும், (யஃஜூஜ், மஃஜூஜ் கூட்டத்தினர்) அனைவரையும் அல்லாஹ் மரணிக்கச் செய்துவிடுவான். பின்னர் பூமி முழுவதும் அவர்களின் (பிணங்களிலிருந்து) நாற்றம் வீச ஆரம்பிக்கும். மக்கள் மீண்டும் என்னிடம் வந்து முறையிடுவார்கள். நான் மீண்டும் அல்லாஹ்விடம் பிரார்த்திப்பேன். அல்லாஹ் ஒரு மழையை அனுப்புவான். அம்மழை (பிணங்களை) அடித்துச் சென்று கடலில் தள்ளிவிடும்” எனக் கூறினார்கள்.[2]

யஃஜூஜ், மஃஜூஜ் பற்றிக் கூறிக்கொண்டிருந்த நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், பின்வருமாறு கூறினார்கள். “அவர்கள் வெளியாகியதும் நீர் முழுவதையும் குடிப்பார்கள். மனிதர்கள், அவர்களைக் கண்டதும் ஓட்டமெடுப்பார்கள். அவர்கள்

1. நூல் : திர்மிதி
2. அறிவிப்பாளர் : அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத் ரழியல்லாஹு அன்ஹு, நூல் : ஹாகிம்

தங்களது ஈட்டிகளை வானத்தை நோக்கி எறிவார்கள். அந்த ஈட்டிகள் இரத்தம் தோய்ந்து திரும்பிவரும். அதைப் பார்த்ததும் "நாங்கள் பூமியிலுள்ளவர்களையும் வானத்திலுள்ளவர்களையும் கூட மிகைத்து விட்டோம்" எனப் (பெருமைப்பட்டுக்) கூறுவார்கள். அப்போதுதான் அல்லாஹ் புழுக்கூட்டத்தை அனுப்புவான். அவை அவர்களது பிடரிகளைத் தாக்கி அவர்களை அழித்துவிடும்."

"எனது ஆத்மா எவன் கைவசம் இருக்கின்றதோ, அவன் மீது சத்தியமாக (அவர்கள் அழிக்கப்பட்டதன் பின்புதான்) பூமியில் உள்ள அனைத்து உயிர்களும் கொழுத்துச் (செழிப்படைய) ஆரம்பிக்கும்." என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் குறிப்பிட்டார்கள்.[1]

### யஃஜூஜ், மஃஜூஜ் உடைய அழிவு

யஃஜூஜ், மஃஜூஜ் கூட்டத்தாரின் ஆண்கள், பெண்கள், சிறுவர்கள் என அனைவரும் இவ்வுலகில் பலவகையான குழப்பங்களை உண்டு பண்ணுவார்கள், பூமியிலுள்ளவர்களை மட்டுமன்றி வானத்தில் உள்ளவர்களையும் மிகைக்க வேண்டும் எனும் நோக்கில் வானத்தை நோக்கியும் அம்பெய்வார்கள். அவர்களது கண்களில் பட்ட அனைவரையும் தீண்டுவார்கள். ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்களும், அவர்களோடு இருக்கும் முஃமின்களும் மட்டுமே இக்கூட்டத்தினரின் கண்ணில் படாமல் தப்பித்துக் கொள்வார்கள். அவர்கள்கூட பசியாலும் பட்டினியாலும் கடுமையாக சோதிக்கப்படுவார்கள். மக்கள் ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்களிடம் வந்து தஞ்சமடைவார்கள். அப்போது ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்களது துஆவின் மூலம் அல்லாஹ் ஒரு புழுக்கூட்டத்தை அனுப்பி அவர்களை அழித்து விடுவான். அழிந்துபோன உடம்புகளை அள்ளிச் செல்வதற்காக அல்லாஹ் ஒட்டகைகளின் கழுத்தைப் போன்ற ஒரு பறவைக் கூட்டத்தை அனுப்புவான். அவைகள் அந்த உடல்களை அள்ளிச் சென்றுவிடும்.

அதன் பின்னர் ஒரு மழைபெய்து பூமியைக் கழுவிவிடும். அதன் பின்னர் பூமிக்குத் தனது பொக்கிஷங்களை வெளிப்படுத்துமாறும், அபிவிருத்திகளை அள்ளிக் கொடுக்குமாறும் கூறப்படும்.

1, அறிவிப்பாளர் : அபூஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு, நூல் : திர்மிதி

**யஃஜூஜ், மஃஜூஜ் கூட்டத்தினரின் அழிவிற்குப் பின்னால் வேறு எந்த யுத்தமும் கிடையாது**

யஃஜூஜ், மஃஜூஜ் கூட்டத்தினர் அழிக்கப்பட்டதன் பின்னர் முஃமின்கள் மட்டும் எஞ்சியிருப்பார்கள். அக்காலத்தில் அவர்களது உள்ளங்களுக்கு மத்தியில் எந்த குரோதங்களும் இருக்காது. பூமி பரக்கத் நிறைந்து காணப்படும். யுத்தங்களோ சண்டைகளோ நிகழாது.

"நான் அல்லாஹ்வின் தூதரோடு இருக்கும்போது ஒரு மனிதர் வந்து அல்லாஹ்வின் தூதரே குதிரைகள் (கை)விடப்பட்டு விட்டன. ஆயுதங்கள் (ஒதுக்கி) வைக்கப்பட்டுவிட்டன. இதற்குப் பின்னர் யுத்தமே இல்லை எனவும், யுத்தம் அதன் இறுதி நிலையை அடைந்து விட்டதாகவும் சிலர் எண்ணுகின்றனர்'' எனக் கூறினார். அதற்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், "அவர்கள் பொய் கூறுகின்றார்கள், இப்போதுதான் போர் கடமையாக்கப் பட்டிருக்கின்றது. எனது உம்மத்தில் ஒரு கூட்டம் மறுமை வரைக்கும் போராடிக்கொண்டே இருப்பார்கள். அவர்களை எதிர்ப்பவர்களால் அவர்களுக்கு எந்தப் பாதிப்பையும் ஏற்படுத்த முடியாது. சிலரது உள்ளங்களில் குழப்பத்தை ஏற்படுத்தி அவர்களின் மூலம் அக்கூட்டத்திற்கு அல்லாஹ் உணவளிப்பான். இறுதியாக யஃஜூஜ், மஃஜூஜ் கூட்டத்தினர் (வந்து அவர்களோடு போராடும்) வரைக்கும் யுத்தங்கள் முடிவுறாது" என பதிலளித்தார்கள்.[1]

**யஃஜூஜ், மஃஜூஜ் கூட்டத்தினர் வந்த பின்பும் ஹஜ் கடமை இடம்பெறும்.**

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக அபூ ஸயீத் அல்குத்ரி ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் பின்வருமாறு அறிவிக்கின்றார்கள்:

"யஃஜூஜ், மஃஜூஜ் கூட்டத்தினர் வருகையின் பின்னரும் அல்லாஹ்வுடைய வீடான கஅபாவில் ஹஜ் மற்றும் உம்ரா கடமைகள் இடம்பெறும்."

---

1, அறிவிப்பாளர்: ஸலமா இப்னு நுஃபைல் ரழியல்லாஹு அன்ஹா, நூல் : நஸாயீ

**யஃஜூஜ், மஃஜூஜ் கூட்டத்தினருக்கு எதிராக துல்கர்னைன் கட்டிய தடுப்புச் சுவரை யாராவது பார்த்திருக்கின்றார்களா? அல்லது பார்க்க முடியுமா?**

நபித்தோழர் ஒருவர் அந்தத் தடுப்புச் சுவரைப் பார்த்திருப்பதாக இமாம் புகாரி ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் குறிப்பிட்டிருக்கின்றார்கள். "நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடத்தில் ஒரு மனிதர் வந்து "நான் அந்தத் தடுப்புச்சுவரை பார்த்திருக்கின்றேன். அது பல வண்ணக்கோடுகள் போடப்பட்ட ஒரு துணியைப் போன்று இருந்தது" எனக் கூறினார். அதற்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், "நீங்கள் பார்த்தது உண்மைதான்" எனத் தெரிவித்தார்கள்.

மதீனாவாசி ஒருவர் மூலமாக இப்னு அபீ உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் பின்வரும் ஹதீஸை அறிவிக்கின்றார்கள் "அந்த மதீனாவாசி நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடத்தில் வந்து யஃஜூஜ் மஃஜூஜ் கூட்டத்தாரின் தடுப்புச் சுவரை நான் பார்த்தேன் எனக் கூறினார். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் "அதனை நீ எவ்வாறு கண்டாய்?" எனக் கேட்டார்கள். அதற்கு அவர் "கறுப்பு மற்றும் சிவப்பு நிறங்களில் வண்ணக்கோடுகள் போடப்பட்ட ஒரு துணியைப்போன்று பார்த்தேன்" எனக் கூறினார். அப்போது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், "நீங்கள் பார்த்தது உண்மைதான்" எனக் கூறினார்கள்.[1]

அல் ஹாபிழ் இப்னு கஸீர் ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள், அத்தடுப்புச் சுவர் பற்றியும் அதனைச் சென்றடைவதற்காக மன்னர்கள் மேற்கொண்ட முயற்சிகள் பற்றியும் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்கள்:

"அல்வாஸிக் எனும் ஆட்சியாளர், அவரது ஆட்சிக்காலத்தில் யஃஜூஜ், மஃஜூஜ் கூட்டத்தாரின் தடுப்புச்சுவரைப் பார்ப்பதற்காகவும், அவ்விடத்தை அறிந்துகொள்வதற்காகவும் சில தலைவர்களை, இரகசிய படையொன்றுடன் அனுப்பிவைத்தார். அவர்கள் பல நாடுகளையும் கடந்து அவ்விடத்தைச் சென்றடைந்ததாகவும், அங்கே இரும்பு மற்றும் செம்பாலான அச்சுவரைக் கண்டதாகவும். அத்தோடு பிரமாண்டமான பூட்டுகள் போடப்பட்ட ஒரு பெரிய கதவையும்,

1, பார்க்க : ஃபத்ஹுல் பாரி (10/29) - இமாம் இப்னு ஹஜர் ரஹ்மதுல்லாஹி அலைஹி

கட்டடத்திற்கு பயன்படுத்தப்பட்ட பின்னர் எஞ்சியிருந்த கற்களையும், கோபுரத்தில் செய்யப்பட்டிருந்த வேலைப்பாடுகளையும் கண்டதாகக் கூறினார்கள்.

அத்தோடு, அங்கே மலைகளைவிட உயரமான பாதுகாப்பு வளையங்களையும். திகிலூட்டும் பல அம்சங்களையும் கண்டு, இரண்டு வருடங்களுக்குப் பின்னர் நாட்டிற்கு திரும்பி வந்ததாகவும் கூறினார்கள்.[1]

**இந்தத் தடுப்புச் சுவருக்கும் சீனப் பெருஞ்சுவருக்கும் இடையில் ஏதாவது தொடர்பு உள்ளதா?**

துல்கர்னைனுடைய தடுப்புச் சுவருக்கும் சீனப் பெருஞ் சுவருக்கும் இடையே பல வேறுபாடுகள் உள்ளன.

1) துல்கர்னைனால் கட்டப்பட்ட தடுப்புச் சுவர் யஃஜூஜ், மஃஜூஜ் கூட்டத்தினரின் தாக்குதலை தடுப்பதற்காக கட்டப்பட்டது. ஆனால் சீனப் பெருஞ் சுவர் அவர்களுடைய நாட்டின் எல்லையை பாதுகாப்பதற்காகக் கட்டப்பட்டது.

2) அல்குர்ஆனில் கூறப்பட்ட துல்கர்னைனுடைய தடுப்புச் சுவரின் சேர்மானங்கள் இரும்பும் செம்புமாகும். ஆனால் சீனப்பெருஞ் சுவரின் சேர்மானங்கள் கருங்கற்களும் செங்கற்களுமாகும்.

3) யஃஜூஜ், மஃஜூஜ் கூட்டத்தினரின் தடுப்புச் சுவர் இரண்டு மலைகளுக்கிடையில் உள்ள இடைவெளியை நிறைத்து, அடைத்துக் கட்டப்பட்டுள்ளது. ஆனால் சீனச் சுவரானது மலை உச்சியில் நீளமாகக் கட்டப்பட்டுள்ளது.

4) யஃஜூஜ், மஃஜூஜ் கூட்டத்தினரின் தடுப்புச் சுவரை, அல்லாஹ்வின் நாட்டப்படி மறுமை நாள் நெருங்குவதற்கு முன்னர் யாராலும் உடைக்க முடியாது. ஆனால் சீனப் பெருஞ்சுவரில் மக்கள் நடமாட்டத்தால் சிதைவுகள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன.

---

1. இப்னு கதீர் ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் இச்சம்பவத்திற்குரிய அறிவிப்பாளர் வரிசையையோ அல்லது மேலதிக தகவல்களையோ குறிப்பிடவில்லை. - அல்லாஹு அஃலம் -. பார்க்க : அல்பிதாயா வந்நிஹாயா

**யஃஜூஜ், மஃஜூஜ் கூட்டத்தாரின் தடுப்புச்சுவரை ஏன் சேட்டிலைட்களால் கூட கண்டுபிடிக்க முடியவில்லை?**

இவ்வுலகிலுள்ள படைப்பினங்கள் அனைத்தையும் சூழ்ந்து அறியும் ஆற்றல் அல்லாஹுவைத் தவிர வேறு எவருக்குமில்லை. அவனே எல்லாப் படைப்பினங்களையும் சூழ்ந்து அறிகின்றான்.

யஃஜூஜ், மஃஜூஜ் கூட்டத்தாரின் தடுப்புச்சுவர் உள்ள இடமோ, அல்லது தஜ்ஜால் வெளிப்படும் இடமோ நமது கண்களுக்கு தென்படவில்லை என்பதற்காக அவை ஒன்றுமே இல்லை என்ற முடிவுக்கு வரக்கூடாது.

யஃஜூஜ், மஃஜூஜ் கூட்டத்தாரையும் அவர்களுடைய தடுப்புச் சுவரையும் மனிதர்களின் கண்களுக்குத் தென்படாத முறையில் அல்லாஹ் வைத்திருக்கலாம். அல்லது அவ்விடங்களுக்குச் செல்வதை விட்டும் தடுக்கக்கூடிய பல தடைகளை ஏற்படுத்தியிருக்கலாம்.

இஸ்ரவேலர்களுக்கு, அல்லாஹ் நாற்பது வருடங்கள் அலைந்து திரிய வேண்டும் என்று விதியாக்கினான். அப்போது அவர்கள் பைத்துல் முகத்திஸிற்கு[1] சில மைல் தொலைவில் இருந்தும் கூட நாற்பது ஆண்டுகள் வரை, பைதுல் முகத்தஸுக்குள் நுழைவதற்கு வழி தெரியாமல் அலைந்து திரிந்தார்கள். இவ்வாறே இத்தடுப்புச்சுவர் விஷயத்திலும் அல்லாஹ் ஏதாவதொரு வித்தியாசமான தடையை ஏற்படுத்தியிருக்கலாம் என்பதில் ஐயமில்லை. அல்லாஹ் அனைத்திற்கும் சக்தி பெற்றவன். அவன் அனைத்து விஷயங்களுக்கும் குறிப்பிட்ட தவணையையும் நேரத்தையும் விதித்துள்ளான். அந்த நேரம் வரும்போது மட்டுமே அவை வெளிப்படும்.

**“(நபியே! திரு குர்ஆனாகிய) இது முற்றிலும் உண்மையாயிருந்தும், உமது மக்கள் இதையும் பொய்யாக்குகின்றனர். ஆகவே, (அவர்களை நோக்கி) நீர் கூறுவீராக: “நான் உங்களுக்கு பொறுப்பாளராக இல்லை. ஒவ்வொரு விஷயத்திற்கும் ஒரு குறிப்பிட்ட காலமுண்டு. (நான் சொல்வதன் உண்மையை) பின்னர் (வேதனை வரும்போது) நீங்கள் அறிந்து கொள்வீர்கள். (அல்குர்ஆன் 6 : 66, 67)**

---

1. பலஸ்தீனத்தில் குதுஸ் நகரத்தில் உள்ள மஸ்ஜித் ஆகும்.

முன்னோர்களால் கண்டுபிடிக்க முடியாதவற்றை, பின்வந்தவர்கள் கண்டுபிடித்துள்ளதைப் பார்க்கும் போது, நிச்சயமாக அல்லாஹ் ஒவ்வொரு விஷயத்திற்கும் குறிப்பிட்ட தவணையை வைத்துள்ளான் என்பது தெளிவாகிறது.

காழி இயாழ் ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்கள்:

”யஃஜூஜ், மஃஜூஜ் கூட்டத்தினர் அதிகமானவர்களாக இருப்பதால், அவர்களோடு யாராலும் போராட முடியாது, அவர்கள், ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்களையும் அவர்களோடு இருக்கும் முஃமின்களையும் முற்றுகையிடுவார்கள், பின்னர் ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்கள், அக்கூட்டத்திற்கு எதிராக அல்லாஹ்விடம் பிரார்த்திப்பார்கள், அதன் பின்னர் அல்லாஹ் யஃஜூஜ், மஃஜூஜ் கூட்டத்தினரின் கழுத்துகளைத் தாக்கக்கூடிய புழுக்களைக் கொண்டு அவர்கள் அனைவரையும் அழித்துவிடுவான், பின்னர், அவர்களது பிணங்களின் துர்வாடையினால் பூமியிலுள்ள அனைவரும் துன்புறுவார்கள். அப்போது ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்களும் அவர்களுடைய தோழர்களும் மீண்டும் அல்லாஹ்விடம் பிரார்த்திப்பார்கள். அப்போது அல்லாஹ் பறவைகளை அனுப்புவான். அப்பறவைகள் அல்லாஹ்வின் நாட்டத்திற்கேற்ப அவர்களைத் தூக்கிச் சென்றுவிடும்” என்பன போன்ற செய்திகளை ஹதீஸ்களில் வாயிலாக அறிகின்றோம். இவை அனைத்தும் மறுமை நம்பிக்கையோடு தொடர்புடைய அடையாளங்களாகும். எனவே இதுபற்றி வந்துள்ள செய்திகளில் எதையும் மறுக்காமல் அனைத்தையும் ஈமான் கொள்வது அவசியமாகும்.[1]

இறுதியாக....

**யஃஜூஜ், மஃஜூஜ் கூட்டத்தினரோடு போராடுவது முஸ்லிம்களின் மீது கடமையா?**

“... இதற்கிடையே, ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்களுக்கு அல்லாஹ், ”நான் என் அடியார்கள் சிலரை வெளி வரச் செய்துள்ளேன்.

1, பார்க்க : மிர்காதுல் மஸாபீஹ் - 2/16

அவர்களுடன் போரிட யாருக்கும் ஆற்றல் கிடையாது. எனவே, (முஸ்லிமான) என் அடியார்களை (சினாயிலுள்ள) "தூர்" மலைக்கு அழைத்துச் சென்று பாதுகாப்பாக வையுங்கள்" என்று (வஹீ) அறிவிப்பான் என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் குறிப்பிட்டார்கள்.[1]

மேலே உள்ள ஹதீஸின் அடிப்படையில் பார்க்கின்றபோது யஃஜூஜ், மஃஜூஜ் கூட்டத்தினரோடு போராடுவது முஸ்லிம்கள் மீது அவசியமான ஒரு கடமையாகாது என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

......................................

1. நூல் : ஸஹீஹ் முஸ்லிம்

# மூன்று
# பெரும் பூகம்பங்கள்



## முன்னுரை

மனிதர்களை திடுக்கிடச் செய்து, மிகப் பெரும் தாக்கங்களை ஏற்படுத்தக் கூடிய மூன்று பூகம்பங்கள் ஏற்படுவது, மறுமை நாளின் பெரிய அடையாளங்களில் ஒன்று என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் முன்னறிவிப்புச் செய்திருக்கிறார்கள்.

## மூன்று பூகம்பங்கள் பற்றி வந்துள்ள ஹதீஸ்கள்

(ஒருமுறை) நாங்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது அறைக்கு அருகாமையில் பேசிக் கொண்டிருந்தோம். அப்போது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் எங்களை எட்டிப் பார்த்து, “எதைப் பற்றி பேசிக் கொண்டிருக்கிறீர்கள்?” என்று கேட்டார்கள். மக்கள், “மறுமை நாளைப் பற்றி (பேசிக் கொண்டிருக்கிறோம்)” என்று கூறினார்கள். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், “நீங்கள் (பெரிய) பத்து அடையாளங்களைக் காணாத வரை யுகமுடிவு நாள் ஏற்படவே செய்யாது” என்று கூறிவிட்டு, அந்த அடையாளங்களைப் பற்றிக் கூறினார்கள்:

அதில் “...மூன்று நில நடுக்கங்கள் இடம் பெறும் எனவும். அவற்றில் ஒன்று கிழக்கிலும், மற்றொன்று மேற்கிலும், இன்னொன்று அரேபிய தீபகற்பத்திலும் இடம் பெறும்...” எனவும் குறிப்பிட்டார்கள்.[1]

## பூகம்பங்கள் பற்றி பொதுவாக வந்துள்ள ஹதீஸ்கள்

சில அறிவிப்புக்களில் அரேபிய தீபகற்பத்தில் பூகம்பங்கள் ஏற்பட விருக்கின்ற இடங்கள் மற்றும் காரணங்கள் என்பன குறிப்பிடப்பட்டே வந்துள்ளன.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக உம்மு ஸலமா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் பின்வருமாறு

---

1. அறிவிப்பாளர் : ஹுதைஃபா இப்னு உஸைத் அல்கிபாரி ரழியல்லாஹு அன்ஹு, நூல் : ஸஹீஹ் முஸ்லிம்

அறிவிக்கின்றார்கள். "ஒரு கலீஃபாவின் மரண விஷயத்தில் கருத்து வேறுபாடு இடம்பெறும். (அந்தப் பிரச்சினைகளுக்கு மத்தியில்) குறைஷிக் கோத்திரத்தைச் சேர்ந்த மதீனாவாசி ஒருவர் மக்காவை நோக்கிச் செல்வார். மக்காவாசிகள் (அவரை) ருக்னுல் (யமானிக்கும்) மகாமு (இப்ராஹீமுக்கும்) இடையே வைத்து, அவரது விருப்பமின்றியே அவரிடம் பைஅத் செய்வார்கள். அதன் பின்னர் ஷாம் தேசத்துப் படை ஒன்று அவரை நோக்கி அனுப்பப்படும். அப்படை "பைதா" எனும் இடத்தில் வரும்போது பூமிக்குள் சொருகப்படுவார்கள். அந்தச் (செய்தியை) கேள்விப்படுகின்ற ஷாம் தேசத்து நன்மக்களும், ஈராக் வாசிகளில் சிலரும் அவரிடம் வந்து பைஅத் செய்வார்கள்"[1]

## பாவிகளுக்குத் தண்டனையாக அமைகின்ற ஏனைய பூகம்பங்கள் பற்றிய ஹதீஸ்கள்

"இந்த சமூகத்தில் ஒரு கூட்டத்தினர் உணவிலும், பானத்திலும், வீண் வேடிக்கையிலும் மூழ்கி இருப்பார்கள். அவர்கள் காலைப்பொழுதை அடையும்போது பன்றிகளாக உருமாற்றப்பட்டிருப்பார்கள். சில கோத்திரமும் அவர்களது வீடுகளும் (பூமிக்குள்) சொருகப்பட்டிருக்கும். மக்கள் காலையில் எழுந்ததும் "இரவு இன்ன கோத்திரம் அல்லது இன்னாரது வீட்டை பூமி இழுத்துக் கொண்டது! இவர்கள் மீது கல்மாரி பொழியப்பட்டது! அவர்கள் மீது மலட்டுக்காற்று அனுப்பப்பட்டு, முன்சென்ற (சமுதாயத்தில்) மதுபானம் அருந்தி, வட்டி சாப்பிட்டு, பட்டாடை உடுத்தி, பாட்டுப் படித்து, நடனமாடும் பெண்களை ரசித்து, இரத்த உறவுகளை துண்டித்தும் வாழ்ந்ததால் எவ்வாறு அழிக்கப்பட்டார்களோ அவ்வாறே இவர்களும் அழிக்கப்பட்டுவிட்டனர் எனக் கூறுவார்கள்" என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். இன்னும் சில விஷயங்களையும் கூறினார்கள் ஆனாலும் அவை எனக்கு மறந்து விட்டது.[2]

"எனது சமுதாயத்தில் பூகம்பங்களும், உருமாற்றங்களும், அவதூறுகளும் இடம்பெறும்."[3]

1. ஸஹீஹ் இப்னு ஹிப்பான்
2. அறிவிப்பாளர் : அபூ உமாமா ரழியல்லாஹு அன்ஹு, நூல் : ஹாகிம்
3. அறிவிப்பாளர் : இப்னு உமர் ரழியல்லாஹு அன்ஹு, நூல் : ஹாகிம்

“(முன்சென்ற காலத்தில்) ஒரு மனிதன் தன் கீழங்கியை தற்பெருமையின் காரணத்தால் (கணுக்காலின் கீழ் தொங்கவிட்டு) இழுத்துக் கொண்டே நடந்த பொழுது, (பூமி பிளந்து) அவன் (அதில்) புதையுண்டான். அவன் மறுமை நாள் வரை பூமிக்குள் புதையுண்டுகொண்டே இருப்பான்” என அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.[1]

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தனக்கு கூறியதாக அனஸ் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் பின்வருமாறு அறிவிக்கின்றார்கள் “அனஸே! நிச்சயமாக மனிதர்கள் (பல) நாடுகளாகப் பிரிவார்கள். அதில் ஒரு பிரதேசம் பஸரா அல்லது பஸீரா என அழைக்கப்படும். நீ அங்கே சென்றால் அல்லது அதைக் கடந்து சென்றால் அதன் உப்புத் தரைகளையும், புல் தரைகளையும், சந்தைப் பிரதேசங்களையும், ஆட்சியாளர்களின் வாசல் படிகளையும் விட்டும் உன்னை எச்சரிக்கின்றேன். அங்கேதான் பூகம்பமும், அவதூறுகளும், திகிலூட்டும் பல நிகழ்வுகளும் ஏற்படும். மேலும் அங்கேதான் சிலர் காலையில் எழும்போது குரங்குகளாகவும், பன்றிகளாகவும் மாற்றப்பட்ட நிலையில் எழும்புவார்கள். எனவே (அப்பிரதேசங்களை விட்டும் தூரமாகி) ஊரின் ஓரங்களுக்கு சென்றுவிடு” எனக் கூறினார்கள்.[2]

மேற்கூறிய அழிவுகளில் இருந்து தூரமாகிக் கொள்வதற்காக பஸராவின் ஓரப் பகுதிகளுக்கும், வேறு இடங்களுக்கும் சென்று விடுமாறு அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் வழிகாட்டியுள்ளார்கள்.

நாபிஃ ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் மூலமாக அறிவிக்கப்படக்கூடிய இன்னொரு ஹதீஸில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது: “ஒரு மனிதர், இப்னு உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்களிடம் வந்து, இன்னார் உங்களுக்கு ஸலாம் கூறினார்” என்றார். அதற்கு இப்னு உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் “அவர் ஒரு பித்அத் செய்யக்கூடியவர் அல்லவா!? அவர் உண்மையில் பித்அத் செய்யக்கூடியவராக இருந்தால், அவருக்கு எனது பதில்

1. அறிவிப்பாளர் : இப்னு உமர் ரழியல்லாஹு அன்ஹு, நூல் : ஸஹீஹுல் புகாரி
2. நூல் : அபூதாவூத்

ஸலாத்தை தெரிவிக்க வேண்டாம். நிச்சயமாக எனது சமுதாயத்தில், கதரியாக்களில்தான்[1] உருமாற்றமும், பூகம்பமும், அவதூறு கூறும் நிலையும் ஏற்படும்" என நபியவர்கள் சொல்ல நான் கேட்டிருக்கின்றேன் என்றார்கள்.[2]

குறிப்பு :

விதியை மறுப்பவர்களே "கதரிய்யாக்கள்" என்று அழைக்கப்பட்டனர். ஸஹாபாக்களின் இறுதிக் காலத்தில் மஃபத் அல் ஜுஹனி என்பவனால் இக்கொள்கை உலகில் முதன்முதலில் அறிமுகம் செய்யப்பட்டது.

உலகில் நடைபெறுகின்ற செயல்கள் அனைத்தும் அல்லாஹ்வின் அறிவு மற்றும் ஏற்பாட்டுக்கு அப்பாற்பட்டதாகும்; எல்லாச் செயல்களும் நடைபெற்று முடிந்த பின்னரே அவன் அவற்றை பற்றி அறிகின்றான். மனிதர்களின் செயல்களை அல்லாஹ் படைக்கவில்லை என்பதும் இவர்களது முக்கிய கொள்கைகளாகும்.

மேலே சொல்லப்பட்ட செய்திகளை வைத்துப் பார்க்கும்போது இந்த சமுதாயத்தில் பல்வேறு வகையான பூகம்பங்கள் இடம்பெறும் என்பதை விளங்க முடிகிறது.

எனினும் மறுமை நெருங்கும் போது இடம்பெற இருக்கின்ற மூன்று பெரும் பூகம்பங்களில் ஒரு பூகம்பம் இடம்பெறும் இடமும் அதற்கான காரணமும் முதலாவது ஹதீஸிலே கூறப்பட்டுள்ளது. ஏனைய இரண்டு பூகம்பங்களும் இறுதிக்காலத்தில் இடம்பெறும் என்று கூறப்பட்டுள்ளதே தவிர அவற்றின் இடங்களோ காரணங்களோ கூறப்படவில்லை.

-அல்லாஹ் மிக அறிந்தவன் -

.....................................

1. விதியை மறுப்பவர்கள்

2, நூல் : இப்னுமாஜா, திர்மிதி

# புகை மூட்டம்

## முன்னுரை

மறுமை நாளின் அடையாளங்கள் பலதரப்பட்டவையாகும். அவற்றில் சில பூமியோடும், இன்னும் சில மனிதர்களோடும், இன்னும் சில மனிதர்களின் பண்பாடுகளோடும், இன்னும் சில வானம் மற்றும் கோள்களோடும் சம்பந்தப்படுகின்றன. இவற்றில் வானத்தோடு சம்பந்தப்பட்ட ஓர் அடையாளமே நாம் தற்போது பார்க்கப்போகும் புகை மூட்டமாகும்.

**"ஆகவே வானம் ஒரு தெளிவான புகையைக் கொண்டுவரும் நாளை நீர் எதிர்பார்ப்பீராக! (அப்புகை) மனிதர்களைச் சூழ்ந்து கொள்ளும். இது நோவினை செய்யும் வேதனையாகும்."**

**(அல்குர்ஆன் 44 : 10, 11)**

இந்த அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள "புகை" விஷயத்தில் மார்க்க அறிஞர்கள் இரு வேறுபட்ட கருத்துகளைக் கொண்டுள்ளனர்.

1. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மக்காவில் தனது பிரச்சாரத்தை மேற்கொண்டபோது மக்கா நகர குறைஷிகள் அதை ஏற்றுக் கொள்ளவில்லை. அதனால் நபியவர்கள் குறைஷிகளுக்கு எதிராகப் பிரார்த்தித்தார்கள். அப்போது அங்கு கடும் பஞ்சமும் வறட்சியும் ஏற்பட்டது. அவர்கள் வானத்தை நோக்கித் தங்கள் பார்வையைச் செலுத்தியபோது, அங்கு புகைபோன்ற ஒன்றைக் கண்டார்களே தவிர அல்லாஹ்வின் உதவியைக் காணவில்லை.

இப்புகைதான், அல்குர்ஆன் வசனத்தில் குறிப்பிடப்படுகின்ற புகையாகும் என அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத் ரழியல்லாஹு அன்ஹு அவர்களும் மற்ற தோழர்களும் குறிப்பிடுகின்றனர். இமாம் தபரி ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்களும் இக்கருத்தையே பொருத்தமானது எனக் குறிப்பிடுகின்றார்கள்.

'(நாங்கள்) "கிந்தா" எனும் இடத்தில் பேசிக் கொண்டிருக்கும்போது ஒருவர், 'மறுமை நாளில் புகை ஒன்று வந்து நயவஞ்சகர்களின்

செவிகளையும் பார்வைகளையும் பிடித்துக்கொள்ளும்; இறை நம்பிக்கையாளருக்கு ஜலதோஷம் ஏற்படுவது போன்றிருக்கும்" என்று கூறினார். (இதைக்கேட்ட) நாங்கள் பீதியடைந்தோம். உடனே நான், இப்னு மஸ்ஊத் ரழியல்லாஹு அன்ஹு அவர்களிடம் சென்றேன். அவர்கள் சாய்ந்தபடி அமர்ந்திருந்தார்கள். (அந்த மனிதரின் கூற்றை அவர்களிடம் கூறியதும்) அவர்கள் கோபமுற்று (எழுந்து நேராக) அமர்ந்து கொண்டு (பின்வருமாறு) கூறினார்கள்: "அறிந்தவர் (அறிந்ததை மட்டும்) பேசட்டும்! அறியாதவர், அல்லாஹ்வே நன்கறிந்தவன் என்று சொல்லட்டும்! ஏனெனில், ஒருவர் தாம் அறியாததை, தமக்குத் தெரியாது என்று சொல்வது அறிவின் அடையாளமாகும். ஏனெனில், அல்லாஹ் தன் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைப் பார்த்து 'நான் இதற்காக, உங்களிடம் கூலி எதுவும் கேட்கவும் இல்லை. நான் (இல்லாததைச் சொல்லி) நடிப்பவர்களில் ஒருவனும் இல்லை (என நபியே நீங்கள்) கூறுங்கள்" எனக் கூறியுள்ளான்.

மேலும், குறைஷியர் இஸ்லாமை ஏற்பதில் காலம் தாழ்த்தினர். எனவே, நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் குறைஷியருக்கெதிராகப் பிரார்த்தித்தார்கள். அப்போது அவர்கள், 'இறைவா! யூஸுஃப் அலைஹிஸ் ஸலாம் அவர்களின் (காலத்தில் பஞ்சம் நிறைந்த) ஏழு ஆண்டுகளைப் போல் இவர்களுக்கும் (பஞ்சம் நிறைந்த) ஏழு ஆண்டுகளைக் கொடுத்து, எனக்கு உதவி செய்வாயாக!" என்று வேண்டினார்கள். அவ்வாறே அவர்களைப் பஞ்சம் வாட்டியது. இறுதியில் அதில் அவர்கள் (பலர்) அழிந்து போனார்கள். மேலும் பலர் செத்தவற்றையும் எலும்புகளையும் உண்ண வேண்டியதாயிற்று. (கடுமையான பசியினால் கண் பஞ்சடைத்தது போன்று) வானத்திற்கும் பூமிக்குமிடையே புகை போன்ற ஒன்றையே கண்டார்கள். இந்நிலையில் அபூ சுஃப்யான் வந்து "முஹம்மதே! நீங்கள் எங்களிடம் உறவுகளைப் பேணுமாறு கட்டளையிட்டீர்கள். (ஆனாலும்) உங்கள் சமுதாயத்தவர்கள் (தற்போது) அழிந்து கொண்டிருக்கிறார்கள், எனவே (இந்தப் பஞ்சத்தை நீக்கும்படி) அல்லாஹ்விடம் பிரார்த்தியுங்கள்" என்று கூறினார்.

அப்போது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்,

**“(நபியே) வெளிப்படையானதொரு புகை வானத்திலிருந்து வரும் நாளை நீங்கள் எதிர்பார்த்திருங்கள். அது மனிதர்களை துன்புறுத்தும் வேதனையாகும் என்று தொடங்கி, மெய்யாகவே (நீங்கள் உணர்ச்சிபெறக் கூடுமென்று) அவ்வேதனையை இன்னும் சிறிது காலத்திற்கு நீக்கி வைத்தோம். எனினும் நீங்கள் (பாவம்செய்யவே) திரும்பச் செல்கிறீர்கள்.**

என்பது வரையிலான (திருக்குர்ஆன் வசனங்களை ஓதிக்காட்டினார்கள்.[1]

2. மேலே (அல்குர்ஆன் வசனத்தில்) குறிப்பிடப்பட்டிருக்கும் புகை மூட்டம் இதுவரை ஏற்படவில்லை. அது மறுமை நாள் ஏற்படுவதற்கு மிக நெருக்கமாகவே உண்டாகும்.

அலி, இப்னு அப்பாஸ், அபூஸயீத் அல் குத்ரி ரழியல்லாஹு அன்ஹும் ஆகிய நபித்தோழர்களும் இன்னும் பல அறிஞர்களும் இக்கருத்தை முன்வைக்கின்றனர்.

ஹதீஸ் கலை அறிஞர் இப்னு ஹஜர் ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்களும் மேற்படி கருத்தையே மிகச் சரியானது எனக் குறிப்பிடுகின்றார்.

சில உலமாக்கள் மேற்படி இரு கருத்துக்களையும் இணைத்து, இரண்டு வகையான புகை மூட்டங்கள் உள்ளதாகக் குறிப்பிடுகின்றனர்.

ஒன்று குறைஷிகளுக்கு சோதனைக்காக ஏற்படுத்தப்பட்டு, நடந்து முடிந்து விட்ட புகை மூட்டம்.

அடுத்தது, மறுமை நாள் நிகழ்வதற்கு முன் வெளிப்பட இருக்கின்ற இன்னொரு புகைமூட்டம்.

“இவை இரண்டும் இரு விதமான புகை மூட்டங்களாகும். அவற்றில் ஒன்று நடந்துவிட்டது. இன்னொன்று வானம் பூமி முழுவதையும் சூழ்ந்து கொண்டு, முஃமின்களுக்கு ஜலதோஷத்தை ஏற்படுத்துவதோடு,

---

1. அறிவிப்பாளர் : மஸ்ரூக் இப்னு அஜ்தஃ ரஹ்மதுல்லாஹி அலைஹி, நூல் : ஸஹீஹுல் புகாரி, ஸஹீஹ் முஸ்லிம்

காஃபிர்களின் காதுகளைத் துளைத்துச் செல்லும். என இப்னு மஸ்ஊத் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறினார்கள்.[1]

**“வானம் ஒரு தெளிவான புகை மூட்டத்தைக் கொண்டுவருகின்ற நாளை எதிர்பாருங்கள்.” (அல்குர்ஆன் 44 : 10)**

என்ற குர்ஆன் வசனத்தின்படி, அப்புகை மூட்டம் அனைவரும் பார்க்கத்தக்க வகையில் தெளிவானதாகக் காணப்படும் என்பதைப் புரியலாம். எனவே, அத்தகைய தெளிவான புகைமூட்டம் இதுவரை ஏற்படவில்லை என்பதால், இனிமேல், மறுமை நெருங்கும் போது அது ஏற்படும் என்பதே சரியான கருத்தாகும்.

## புகை மூட்டம் பற்றி வந்துள்ள நபிமொழிகள்

● “(ஒருமுறை) நாங்கள் பேசிக் கொண்டிருந்தோம். அப்போது நபியவர்கள் எங்களை எட்டிப் பார்த்து, “எதைப் பற்றி பேசுகிறீர்கள்?” என்று கேட்டார்கள். மக்கள், “யுகமுடிவு நாளைப் பற்றி (பேசுகிறோம்)” என்று கூறினார்கள். நபியவர்கள், “நீங்கள் (பெரிய) பத்து அடையாளங்களைக் காணாத வரை யுக முடிவு நாள் ஏற்படவே செய்யாது” என்று கூறிவிட்டு அவற்றில் 1. புகை, 2. தஜ்ஜால் ஐ குறிப்பிட்டார்கள்.[2]

● “சூரியன் மேற்கில் உதித்தல், புகை மூட்டம், தஜ்ஜால், அதிசயப்பிராணி, (தனிப்பட்ட) மரணங்கள் (அனைவருக்கும் ஒரே நேரத்தில் மரணத்தை ஏற்படுத்தும் மறுமை) நிகழ்வு எனும் 6 விஷயங்களும் இடம்பெறுவதற்கு முன்னால் நல்லமல்களைச் செய்வதில் முந்திக்கொள்ளுங்கள்.”[3]

● ஒருமுறை இப்னு அப்பாஸ் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் “இரவு முழுவதும் தூங்கவே இல்லை” எனக் கூறினார்கள். ஏன் என்று கேட்டேன். ”வால் கொண்ட நட்சத்திரமொன்று வெளியாகி விட்டதாகக் கூறினார்கள். அதைக் கேட்டதும் புகை மூட்டம் வெளியாகி விட்டதோ எனப் பயந்து விட்டேன். அதனாலேயே இரவு முழுவதும்

1. பார்க்க : அத்தத்கீர் : 655
2. அறிவிப்பாளர் : ஹுதைஃபா இப்னு உஸைத் அல்கிஃபாரி ரழியல்லாஹு அன்ஹு, நூல் : ஸஹீஹ் முஸ்லிம்
3. அறிவிப்பாளர் : அபூஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு, நூல் : ஸஹீஹ் முஸ்லிம்

தூங்க முடியவில்லை” எனக் கூறினார்கள். இச்செய்தி அப்துல்லாஹ் இப்னு அபீ முலைகா ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் மூலமாக அறிவிக்கப்பட்டுள்ளது.[1]

புகை மூட்டம் ஏற்படுதல் மறுமை நாளின் அடையாளம் என்பதால் இப்னு அப்பாஸ் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் புகையை நினைத்து அதிகம் பயந்தார்கள்.

.....................................

1, நூல் : ஹாகிம்

# பேசும் ராட்சத பிராணி

## முன்னுரை

யுக முடிவு நெருங்கும்போது குழப்பங்கள் பரவும். இறை நிராகரிப்புகள் சாதாரணமாகிவிடும். மக்கள் குழப்பங்களுக்குப் பழக்கப்பட்டு விடுவார்கள். யார் கெட்டவன், யார் நல்லவன், யார் உண்மையான நம்பிக்கையாளர், யார் நயவஞ்சகன் என்று அடையாளம் காணமுடியாத நிலை உருவாகும். அந்நேரத்தில் அல்லாஹ்வின் அனுமதி கொண்டு இராட்சத பிராணி ஒன்று வெளியேறும்.

இராட்சதப் பிராணி பற்றி வந்துள்ள குர்ஆன் வசனங்கள்:

**“இறுதிநாள் அவர்களை நெருங்கிய சமயத்தில், அவர்களுக்காகப் பூமியிலிருந்து ஒரு பிராணியை நாம் வெளிப்படுத்துவோம். அது எந்தெந்த மனிதர்கள் நம் வசனங்களை நம்பிக்கை கொள்ளவில்லை என்பதை அவர்களுக்குச் சொல்லிக் காண்பிக்கும்.”**

**(அல்குர்ஆன் 27 : 82)**

“அது அவர்களோடு பேசும்” என்பதன் கருத்து அது அவர்களிடம் நேருக்குநேர் நின்று உரையாடும் என்பதாகும்.

அதுதவிர இந்தப் பிராணியின் அமைப்பு மற்றும் தன்மைகள் பற்றிய விஷயத்தில் ஆதாரபூர்வமான ஹதீஸ்கள் எதுவும் இல்லை.

அதன் தலை காளைமாட்டின் தலையைப் போன்றிருக்கும். அதன் காது யானையின் காதைப் போன்றிருக்கும் என இப்பிராணியைப் பற்றிய பல ஆச்சரியமான தகவல்களை இமாம் அல்மாவர்தி, ஸஅலபி ரஹ்மதுல்லாஹி அலைஹி போன்றோர் குறிப்பிட்டாலும் ஹதீஸ்களில் இவ்வாறு எதுவும் கூறப்படவில்லை.

எனினும், அது ஒரு பிராணிதான்; அது மனிதர்களோடு பேசும்; அது பூமியிலிருந்து வெளிவரும் என்ற விஷயங்கள் உண்மையாகும்.

## அது எங்கிருந்து வெளியாகும்?

- மக்காவிலுள்ள ஸஃபா மலையிலிருந்து வெளியாகும் எனக் கூறப்படுகின்றது.
- கஅபாவின் கீழ் புறத்திலிருந்து வெளிவரும் எனவும் கூறப்படுகின்றது.
- ஒரு பாலைவனத்திலிருந்து வெளிவரும் எனவும் கூறப்படுகின்றது.

இவ்வாறு பல கருத்துகள் அறிஞர்கள் மத்தியில் காணப்பட்டாலும், அதுபற்றி ஆதாரப்பூர்வமான ஹதீஸ்களில் எதையும் காணமுடியவில்லை.

- எனவே, அதுபற்றி அல்லாஹ் எவற்றைக் கூறியிருக்கின்றானோ, அவற்றை மட்டும், அவ்வாறே ஈமான் கொள்வதே சிறந்ததும், அவசியமானதுமாகும்.

## இந்தப் பிராணி வெளியாகி என்ன செய்யும்?

1. மனிதர்களோடு பேசும்

**“இறுதிநாள் அவர்களை நெருங்கிய சமயத்தில், அவர்களுக்காகப் பூமியிலிருந்து ஒரு கால்நடையை நாம் வெளிப்படுத்துவோம். அது எந்தெந்த மனிதர்கள் நம் வசனங்களை நம்பிக்கை கொள்ளவில்லை என்பதை அவர்களுக்குச் சொல்லிக் காண்பிக்கும்.”**

**(அல்குர்ஆன் 27 : 82)**

எனும் வசனத்தை வைத்து நோக்கும்போது அது மனிதர்களிடம் பேசும் என்பதை விளங்கிக் கொள்ளலாம்.

**2. அது மனிதர்களுக்கு அடையாளமிடும்.**

முஃமின்களையும் காஃபிர்களையும் பிரித்துக் காட்டுகின்ற வகையில், அது மனிதர்களின் மூக்குகளின் மீது விலங்குகளுக்கு அடையாளமிடப்படுவது போன்று அடையாளமிடும்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்: “இத்தகைய இராட்சதப் பிராணி வெளியேறி, (விலங்குகளுக்கு

அடையாளமிடுவதைப் போன்று) மனிதர்களுக்கு அவர்களது மூக்கின் மீது அடையாளமிடும். ஒட்டகத்தை வாங்கிய ஒருவரிடம் இதை யாரிடம் வாங்கினீர்கள்? எனக் கேட்கும்போது, இதனை நான் மூக்கில் அடையாளமிடப்பட்ட இன்னாரிடம் இருந்து வாங்கினேன்" என்று கூறுவார்"[1]

ஒருவர் மற்றவரை முஃமின் அல்லது காஃபிர் என்று மட்டும் அழைக்கக் கூடிய காலம் வருகின்றவரை இந்த அடையாளங்கள் தொடரும். பின்னர், எப்போது மறுமை நிகழவேண்டும் என அல்லாஹ் நாடுகிறானோ அதற்கு முன்னர், நம்பிக்கையாளர்களின் உயிர்களைக் கைப்பற்றக்கூடிய ஒரு காற்றை அனுப்புவான். அது அவர்களது உயிரைப் பறித்துக்கொள்ளும். அதன்பின் மறுமை நிகழும்போது தீயவர்கள் மட்டுமே எஞ்சியிருப்பார்கள். "அல் பஸஉல் அக்பர்" எனும் மறுமை நாளின் மிகப்பெரும் அமளிதுமளிகள் முஃமின்களைப் பீடிக்காது.

"... பிறகு (தீமைகளை நோக்கி) விரைந்து செல்வதில் பறவைகளையும், குணத்தில் மிருகங்களையும் போன்ற தீய மனிதர்களே எஞ் சியிருப்பார்கள். அவர்கள் எந்த நன்மையையும் அறியமாட்டார்கள். எந்தத் தீமையையும் மறுக்கமாட்டார்கள். அப்போது அவர்களிடையே ஷைத்தான் காட்சியளித்து, "நீங்கள் (எனக்குப்) பதிலளிக்க மாட்டீர்களா?" என்று கேட்பான். அந்த மக்கள், "நீ என்ன உத்தரவிடுகிறாய்?" என்று கேட்பார்கள். சிலைகளை வழிபடுமாறு ஷைத்தான் உத்தரவிடுவான்.

இவ்வாறு அவர்கள் (சிலைவழிபாட்டில்) இருக்கும்போது அவர்களின் வாழ்வாதாரம் செழிப்பாக இருக்கும். பிறகு ஸூர் ஊதப்படும். அதைக் கேட்கின்ற ஒவ்வொருவரின் கழுத்தும் ஒரு பக்கம் சாய்ந்து, மறுபக்கம் உயர்ந்திருக்கும். (அவர்கள் சுய நினைவிழந்து மூர்ச்சையாகி விடுவார்கள்.) தமது ஒட்டகத்தின் தண்ணீர் தொட்டியைச் செப்பனிட்டுக் கொண்டிருக்கும் மனிதர் ஒருவரே அந்தச் சப்தத்தை முதலில் கேட்பார். உடனே அவர் மூர்ச்சையாகி (விழுந்து) விடுவார்.

1. அறிவிப்பாளர் அபூ உமாமா ரழியல்லாஹு அன்ஹு, நூல் : அஹ்மத்

(இதையடுத்து) மக்கள் அனைவரும் மூர்ச்சையாகிவிடுவர்...” என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் குறிப்பிட்டார்கள்.[1]

“அல்லாஹ் யமன் நாட்டிலிருந்து பட்டைவிடவும் மென்மையான ஒரு காற்றை அனுப்புவான். யாருடைய உள்ளத்தில் ஒரு விதையளவு அல்லது ஓர் அணுவளவு ஈமான் இருக்கிறதோ அவர்கள் அனைவரையும் அக்காற்று கைப்பற்றிவிடும்” என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் குறிப்பிட்டார்கள்.[2]

அக்காற்றின் வருகையின் பின்னர் பூமியில் கெட்டவர்கள் மட்டுமே எஞ்சியிருப்பார்கள். அவர்களின் மீதே மறுமை நாள் நிகழும்.

.....................................

1. அறிவிப்பாளர் : அப்துல்லா இப்னு அம்ர் ரழியல்லாஹு அன்ஹு, நூல் : ஸஹீஹ் முஸ்லிம்
2. அறிவிப்பாளர் : அபூஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு, நூல் : ஸஹீஹ் முஸ்லிம்

# சூரியன் மேற்கில் உதித்தல்



## முன்னுரை

சூரியன் மேற்கில் உதிப்பது மறுமை நாளின் பெரிய அடையாளங்களில் ஒன்றாகும். அல்லாஹ் சூரியனைப் படைத்ததிலிருந்து அதை கிழக்கில் உதிக்கச் செய்கின்றான். வழமைபோன்று காலையில் கிழக்கில் சூரியன் உதிக்கும் என மக்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் போது திடீரென மேற்கில் உதிக்கும். அப்படி சூரியன் மேற்கில் உதித்துவிட்டால் பாவமன்னிப்பின் வாசலும் மூடப்பட்டுவிடும்.

இது மறுமை நாளின் அடையாளங்களில் சிறியவர் பெரியவர் என அனைவரும் பார்க்கக்கூடிய வானியல் மாற்றங்களில் ஒன்றாகும்

## சூரியன் மேற்கில் உதிக்கும் என்பதற்கான குர்ஆன் ஆதாரம்

‘‘அவர்கள் நம்மிடம், வானவர்கள் வருவதையோ அல்லது உம்முடைய இரட்சகன் வருவதையோ, அல்லது உம்முடைய இரட்சகனின் சில அத்தாட்சிகள் வருவதையோ எதிர்பார்க்கின்றனரா? உம்முடைய இரட்சகனின் சில அத்தாட்சிகள் வரும் நாளில், (அந்நாளைக்கு) முன்னர் ஈமான் கொள்ளாதிருந்தவர்களுக்கோ அல்லது தனது ஈமானின் மூலம் நல்லதை தேடிக்கொள்ளாது இருந்தவர்களுக்கோ அந்த ஈமான் பயனளிக்காது. நீங்களும் (அந்நாளை) எதிர்பாருங்கள். நிச்சயமாக நாங்களும் (அந்நாளை) எதிர்பார்த்திருக்கின்றோம்’’ என்று (நபியே) நீர் கூறுவீராக.

(அல்குர்ஆன் 6 : 158)

## சூரியன் மேற்கில் உதிக்கும் என்பதற்கான ஹதீஸ் ஆதாரங்கள்

“மூன்று அடையாளங்கள் தோன்றிவிட்டால், அதற்கு முன்பு நம்பிக்கை கொள்ளாத, அல்லது நம்பிக்கை கொண்டிருந்தாலும் நன்மையேதும் செய்திராத எவருக்கும் அந்த நேரத்தில் நம்பிக்கை கொள்வது பயனளிக்காது. (அவை)

1. மேற்கிலிருந்து சூரியன் உதயமாகுதல்.

2. தஜ்ஜால் (தோன்றுதல்).

3. பூமியிலிருந்து வெளிப்படும் (அதிசய) பிராணி" என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் குறிப்பிட்டார்கள்.[1]

ஈமான் என்பது மறைவானவற்றை நம்புவதாகும். சூரியன் மேற்கில் உதித்த பின்னால் யாராவது (மறுமை நாளைப் பற்றி) ஈமான் கொண்டால், அது மறைவானவற்றை ஈமான் கொண்டதாக அன்றி, கண்ணால் கண்டதை ஈமான் கொண்டதாகவே அமையும்.

ஃபிர்அவ்ன் இப்படித்தான் (மரணத்தைக் கண்ணால் கண்ட பின்னர்) ஈமான் கொண்(டு கடலில் மூழ்கும்போது அல்லாஹ்வை ஏற்றுக்கொண்) டான் எனினும், அந்த ஈமான் அவனுக்கு எந்தப் பயனையும் கொடுக்கவில்லை.

"மேற்கிலிருந்து சூரியன் உதயமாகாத வரை மறுமை நாள் ஏற்படாது. அது மேற்கிலிருந்து உதயமாகும்போது அதைப் பார்த்துவிட்டு மக்கள் அனைவரும் ஒட்டு மொத்தமாக இறைநம்பிக்கை கொள்வார்கள். ஆனால், (அதற்கு) முன்பே நம்பிக்கை கொண்டிராத, அல்லது நம்பிக்கை கொண்டிருந்தாலும் நன்மையேதும் செய்திராத எந்த மனிதருக்கும் அந்த நேரத்தில் நம்பிக்கை கொள்வது பயனளிக்காது.

இருவர் (விற்பனைக்காகத்) துணிகளை விரித்து(ப் பார்த்து)க் கொண்டிருப்பார்கள். அதனை அவர்கள் விற்பனை செய்திருக்க மாட்டார்கள். சுருட்டிக்கூட வைத்திருக்க மாட்டார்கள். அதற்கிடையில் மறுமை சம்பவித்துவிடும்.

ஒருவர் மடிகனத்த தம் ஒட்டகத்தி(ல் பால் கறந்து அப்போதுதா)ன் பாலுடன் (வீடு) திரும்பியிருப்பார். எனினும் அதைப் பருகமாட்டார். அதற்கிடையில் மறுமை சம்பவித்து விடும். ஒருவர் தம் நீர் தொட்டியை (அப்போதுதான்) கல்வைத்துப் பூசியிருப்பார். எனினும் அதில் நீர் இறைத்திருக்க மாட்டார். அதற்குள் மறுமை சம்பவித்து விடும். உங்களில் ஒருவர் தம் உணவை (அப்போதுதான்) வாயருகில் கொண்டு செல்வார். ஆனால் அதை உண்ணமாட்டார். அதற்கிடையில் மறுமை

1, அறிவிப்பாளர் : அபூஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு, நூல் : ஸஹீஹ் முஸ்லிம்

சம்பவித்துவிடும்." என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.[1]

"ஒரு நாள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் (எங்களிடம்), "இந்தச் சூரியன் எங்கு செல்கிறது என்று உங்களுக்குத் தெரியுமா?" என்று கேட்டார்கள். மக்கள், "அல்லாஹ்வும் அவனுடைய தூதருமே நன்கு அறிவார்கள்" என்று கூறினார்கள். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், "அது, அர்ஷுக்குக் கீழே ஸுஜூது செய்வதற்காகத் தனது நிலையை நோக்கிச் செல்கிறது. எழுந்து, நீ வந்த வழியே சென்றுவிடு" என்று கூறப்படும் வரை அது அவ்வாறே இருக்கிறது. அவ்வாறு கூறப்பட்டதும் அது (மீண்டும்) கிழக்கிலிருந்து உதயமாகிறது.

பிறகு (மறுநாள் மீண்டும்) அர்ஷுக்குக் கீழே தனது நிலையை நோக்கிச் சென்று ஸுஜூது செய்கிறது, "நீ எழுந்து, வந்த வழியே திரும்பிச் சென்றுவிடு!" என்று கூறப்படும்வரை அது அவ்வாறே இருக்கிறது. அவ்வாறு கூறப்பட்டதும் அது திரும்பிச் சென்று கிழக்கிலிருந்து உதயமாகிறது.

பிறகு மக்களுக்கு (எந்த வித்தியாசமும்) தெரியாத விதத்தில் அல்லாஹ்வின் அர்ஷுக்குக் கீழே தனது நிலையை நோக்கிச் செல்கிறது. அப்போது அதனிடம், "நீ எழுந்து மேற்கிலிருந்து உதயமாகு!" என்று கூறப்படும். அப்போது அது (வழக்கத்திற்கு மாறாக) மேற்கிலிருந்து உதயமாகும்" என்று கூறினார்கள்.

பின்னர், அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், "அது எந்த நாள் என்று உங்களுக்குத் தெரியுமா? அது, முன்பே இறைநம்பிக்கை கொண்டிராத, அல்லது இறைநம்பிக்கை கொண்டிருந்தாலும் நன்மையேதும் செய்திராத எந்த மனிதருக்கும் அந்த நேரத்தில் ஏற்றுக்கொள்ளும் இறைநம்பிக்கை பயனளிக்காத (இறுதி) நாளாகும்" என்று கூறினார்கள்.[2]

"நான் அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்

1. அறிவிப்பாளர் : அபூஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு, நூல் : ஸஹீஹுல் புகாரி
2. அறிவிப்பாளர் : அபூதர்தா ரழியல்லாஹு அன்ஹு, நூல் : ஸஹீஹ் முஸ்லிம்

அவர்களிடமிருந்து ஒரு ஹதீஸை மனனமிட்டேன். இதுவரை அதை நான் மறக்கவில்லை. அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பின்வருமாறு கூறியதை நான் கேட்டேன்: (மறுமை நாளின் அடையாளங்களில்) முதலாவதாக வெளிப்படும் அடையாளம், சூரியன் மேற்கிலிருந்து உதயமாவதும், (பூமியிலிருந்து) ஒரு (அதிசயப்) பிராணி முற்பகல் நேரத்தில் வெளிப்படுவதும் ஆகும். இவ்விரண்டில் எது முதலில் வெளிப்பட்டாலும் மற்றொன்றும் அதைத் தொடர்ந்து வெகுவிரைவில் வெளிப்பட்டுவிடும்” என நபியவர்கள் குறிப்பிட்டார்கள்.[1]

| ஐயம் | பெரிய அடையாளங்களில் முதலில் வெளிப்படுவது தஜ்ஜால் என்றும், மஹ்தி அவர்கள் வருகை என்றும் பல ஹதீஸ்களில் கூறப்பட்டுள்ளதே! ஆனால் இங்கே சூரியன் மேற்கில் உதிப்பது முதலாவது அடையாளம் எனக் குறிப்பிட்டுள்ளதே! |
|---|---|

## தெளிவு

இமாம் இப்னு ஹஜர் ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் ஃபத்ஹுல் பாரி எனும் தனது நூலில் இதுபற்றி குறிப்பிடுகின்றார்கள் : “மறுமை நாளின் அடையாளங்கள் பற்றிய அனைத்து ஆதாரங்களையும் ஒன்றிணைத்துப் பார்க்கும்போது, தஜ்ஜாலின் வெளிப்பாடே மறுமை நாளுக்குரிய முதலாவதும், பூமியின் பல பாகங்களில் மாற்றங்களை ஏற்படுத்தக்கூடிய அடையாளமாகவும் காணப்படுகிறது. பின்னர், ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்கள் மரணிப்பதோடு அவ்வடையாளங்கள் அனைத்தும் முற்றுப்பெற்றுவிடும்.

சூரியன் மேற்கில் உதிப்பது, விண்ணுலகில் (வானத்தில்) இடம்பெறுகின்ற முதலாவது அடையாளமாகும். கியாமத் நாள் ஏற்படுவதோடு இந்த அடையாளங்கள் அனைத்தும் முற்றுப்பெற்றுவிடும்.

அதேநேரத்தில் “...(மறுமை நாளின் அடையாளங்களில்) முதலாவதாக வெளிப்படும் அடையாளம், சூரியன் மேற்கிலிருந்து உதயமாவதும், (பூமியிலிருந்து) ஒரு (அதிசயப்) பிராணி முற்பகல் நேரத்தில்

1. அறிவிப்பாளர் : அப்துல்லாஹ் இப்னு அம்ர் ரழியல்லாஹு அன்ஹு, நூல் : ஸஹீஹ் முஸ்லிம்

வெளிப்படுவதும் ஆகும்...” எனும் ஹதீஸை வைத்துப் பார்க்கின்றபோது சூரியன் மேற்கில் உதிக்கின்ற அதே நாளிலேயே இராட்சதப் பிராணியும் வெளிப்படும் என்பதை புரியமுடிகிறது.”[1]

## அமல்களில் முந்திக்கொள்வோம்.

“சூரியன் மேற்கிலிருந்து உதித்தல், அல்லது புகை, அல்லது தஜ்ஜால், அல்லது (அதிசயப்) பிராணி, அல்லது தனிப்பட்ட முறையில் உங்களுக்கு ஏற்படும் மரணம், அல்லது ஒட்டுமொத்தமாக ஏற்படும் (யுக) முடிவு எனும் ஆறு அடையாளங்கள் நிகழ்வதவற்கு முன் விரைந்து நற்செயல் செய்து கொள்ளுங்கள்” என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் குறிப்பிட்டார்கள்.[2]

......................................

1. பார்க்க : ஃபத்ஹுல் பாரி - 11/353
2. அறிவிப்பாளர் : அபூஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு, நூல் : ஸஹீஹ் முஸ்லிம்

# மஹ்ஷரின் பக்கம் மக்களை ஒன்று திரட்டுகின்ற நெருப்பு



**முன்னுரை**

மறுமை நாளின் அடையாளங்களில் இறுதியானதாக அடையாளப் படுத்தப்படுவது யமனிலிருந்து வெளியாகி மக்களை மஹ்ஷரின்பால் துரத்திச் செல்கின்ற ஒரு பெரும் நெருப்பாகும்.

## இந்நெருப்புப் பற்றி வந்துள்ள ஹதீஸ்கள்

"நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் எங்களை எட்டிப்பார்த்து, "என்ன பேசுகிறீர்கள்?" என்று கேட்டார்கள். நாங்கள், "யுக முடிவைப் பற்றி (பேசுகின்றோம்)" என்று கூறினோம்.

அப்போது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், "பத்து அடையாளங்கள் நிகழாதவரை யுகமுடிவு நாள் வராது.

1. கிழக்கில் ஒரு நிலநடுக்கம்
2. மேற்கில் ஒரு நிலநடுக்கம்
3. அரபு தீபகற்பத்தில் ஒரு நிலநடுக்கம்
4. புகை
5. தஜ்ஜால்
6. ஈஸா அலைஹிஸ் ஸலாம் அவர்களின் வருகை
7. (அதிசயப்) பிராணி
8. யஃஜூஜ், மஃஜூஜ்
9. சூரியன் மேற்கிலிருந்து உதிப்பது
10. (யமன் நாட்டிலுள்ள) "அதன்" பகுதியின் கடைக்கோடியிலிருந்து கிளம்பி, மக்களை மஹ்ஷரின் பக்கம் விரட்டிச் செல்லும் நெருப்பு எனக் குறிப்பிட்டார்கள்.[1]

---

1. அறிவிப்பாளர் : ஹுதைஃபா இப்னு உஸைத் அல்கிஃபாரி ரழியல்லாஹு அன்ஹு, ஆதாரம் : ஸஹீஹ் முஸ்லிம்

ஸஹீஹ் முஸ்லிம் எனும் ஹதீஸ் நூலில் வருகின்ற மற்றுமோர் அறிவிப்பில். "....(பூமியின் ஆழத்திலிருந்து பெரும் நெருப்பு வெளிப்பட்டு அது மக்களை (அவர்களின் இடங்களிலிருந்து) புறப்படச் செய்யும்." என குறிப்பிடப்பட்டுள்ளது.

"மறுமைநாள் வருவதற்கு முன்னர் எமன் நாட்டிலுள்ள ஹழ்ரமவ்த் கடலிலிருந்து அல்லது ஹழ்ரமவ்த்திலிருந்து ஒரு பெரும் நெருப்பு வெளியாகி, மக்களை மஹ்ஷரின் பக்கம் ஒன்று திரட்டும் என்று கூறினார்கள்." அப்போது "அல்லாஹ்வின் தூதரே! எங்களுக்கு ஏதாவது அறிவுரை சொல்லப் போகின்றீர்களா? என்று கேட்டனர். அதற்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் "நீங்கள் ஷாம் நாட்டை நோக்கிச் சென்று விடுங்கள்" என்றார்கள்.[1]

"அப்துல்லாஹ் பின் ஸலாம் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகிறார்கள்: (நான் இஸ்லாமை ஏற்பதற்கு முன்னர்), நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மதீனாவுக்கு வருகை தந்திருக்கும் செய்தி எனக்கு எட்டியது. உடனே நான் நபியவர்களிடம் வந்து, "தங்களிடம் நான் மூன்று விஷயங்களைப் பற்றிக் கேட்கப்போகிறேன். அவற்றை ஓர் இறைத்தூதர் மட்டுமே அறிவார் என்று கூறிவிட்டு

- இறுதிநாளின் அடையாளங்களில் முதலாவது அடையாளம் எது?
- சொர்க்கவாசி முதலில் உண்ணும் உணவு எது?
- ஒரு குழந்தை தன் தந்தையின் சாயலில் இருப்பதும், தாயின் சகோதரர்களின் சாயலில் இருப்பதும் எப்படி? என்று கேட்டார்கள்.

அதற்கு அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் "சற்று முன்புதான் (வானவர்) ஜிப்ரீல் எனக்கு இவற்றைக் குறித்து (விளக்கம்) தெரிவித்தார்" என்று கூறினார்கள். அதனைக் கேட்ட அப்துல்லாஹ் இப்னு ஸலாம் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் "வானவர்களிலேயே ஜிப்ரீல் என்பவர் யூதர்களுக்குப் பகைவராயிற்றே" எனக் கூறினார்கள்.

பின்னர், அல்லாஹ்வின் தூதர் அவர்கள் பின்வருமாறு தனது

1. அறிவிப்பாளர் : அப்துல்லாஹ் இப்னு உமர் ரழியல்லாஹு அன்ஹு, நூல் : அஹ்மத்

பதில்களை முன்வைத்தார்கள் "இறுதி நாளின் அடையாளங்களில் முதலாவது ஒரு நெருப்பாகும். அது மக்களை கிழக்கிலிருந்து (துரத்திச் சென்று) மேற்குதிசையில் ஒன்று சேர்க்கும்.

சொர்க்கவாசிகள் முதலில் உண்ணும் உணவு (திமிங்கிலம் போன்ற) பெரிய மீனின் ஈரலின் ஓரத்திலிருந்து எடுக்கப்பட்ட சதையாகும்.

குழந்தையிடம் காணப்படும் சாயலுக்குக் காரணம், ஒரு ஆண் தனது மனைவியுடன் இல்லறத்தில் ஈடுபடும் போது கணவனின் நீர் (விந்து) முந்திக்கொண்டால் குழந்தை தந்தையின் சாயலில் பிறக்கிறது. பெண்ணின் நீர் (கருமுட்டை, உயிரணு) முந்திக்கொண்டால் குழந்தை தாயின் சாயலில் பிறக்கிறது என்று பதிலளித்தார்கள்.

(உடனே) அப்துல்லாஹ் இப்னு ஸலாம் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் "தாங்கள் அல்லாஹ்வின் தூதர்தான் என நான் சாட்சி கூறுகிறேன்" எனக் கூறினார்கள்."[1]

**சந்தேகம்**

"(மறுமை நாளின் அடையாளங்களில்) முதலாவதாக வெளிப்படும் அடையாளம், சூரியன் மேற்கிலிருந்து உதயமாவதும், (பூமியிலிருந்து) ஒரு (அதிசயப்) பிராணி முற்பகல் நேரத்தில் வெளிப்படுவதும் ஆகும். இவ்விரண்டில் எது முதலில் தோன்றினாலும் அதைத் தொடர்ந்து அடுத்ததும் தோன்றிவிடும்" என்ற ஹதீஸுக்கும்

"இறுதி நாளின் அடையாளங்களில் முதலாவது ஒரு நெருப்பாகும். அது மக்களை கிழக்கிலிருந்து (துரத்திச் சென்று) மேற்குதிசையில் ஒன்று சேர்க்கும்" என்ற இரு ஹதீஸ்களுக்கும் இடையில் எப்படி ஒற்றுமை காண்பது?

## தெளிவு:

இங்கு இரண்டாவது ஹதீஸில் குறிப்பிடப்பட்டுள்ள "இறுதி நாளின் அடையாளங்களில் முதலாவது ஒரு நெருப்பாகும்" என்பதன் பொருள், மறுமை நாள் நிகழப்போகிறது என்பதற்கான முதல் அடையாளமாகும்,

1. அறிவிப்பாளர் : அனஸ் ரழியல்லாஹு அன்ஹு, நூல் : ஸஹீஹுல் புகாரி

“சூரியன் மேற்கில் உதிப்பது” மறுமை நாள் மிக அருகாமையில் வந்து விட்டது என்பதற்கான அடையாளமாகும்.

ஸஹீஹுல் புகாரி எனும் ஹதீஸ் கிரந்தத்தில் “மறுமை நாளின் முதலாவது அம்சம் என்ன?” எனும் தலைப்பில் மறுமை நாளின் ஆரம்பம் பற்றியே பேசப்படுகிறது. (எனவே இங்கு குறிப்பிடப்படும் நெருப்பு மறுமை நாள் நிகழப்போகிறது என்பதற்கான அடையாளமாகப் பார்க்கப்பட வேண்டும். மறுமைநாள் அருகாமையில் வந்ததற்கான அடையாளம் அல்ல)

**கவனிக்க...**

ஹிஜாஸ் பிரதேசத்தில் ஒரு நெருப்பு தோன்றும். அது (சிரியாவின்) புஸ்ரா நகரத்தில் உள்ள “ஒட்டகங்களின் பிடரிகளைப் பிரகாசிக்கச் செய்யும்” என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களால் முன்னறிவுப்புச் செய்தது, ஏழாம் நூற்றாண்டிலே ஏற்பட்டு விட்டது (எனவும் அது) மறுமை நாளின் சிறிய அடையாளங்களில் ஒன்றெனவும் ஏற்கெனவே பார்த்தோம்.

தற்போது நாம் பேசிக் கொண்டிருக்கும் நெருப்பு, மனிதர்களை ஒன்று திரட்டுகின்ற பெரும் நெருப்பாகும்.

சிறிய அடையாளத்தோடு சம்பந்தப்பட்ட அந்த நெருப்பிற்கும் நாம் இங்கே பேசிக் கொண்டிருக்கின்ற மனிதர்களை மஹ்ஷரின் பக்கம் ஒன்று சேர்க்கின்ற நெருப்பிற்கும் எவ்வித தொடர்புமில்லை.

## மனிதர்கள் (அந்நெருப்பின் மூலமாக) ஒன்று சேர்க்கப்படும் விதம்

“(மறுமை நாள் ஏற்படுவதற்கு சற்று முன் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி) மக்கள் மூன்று பிரிவினராக ஒன்று திரட்டப்படுவார்கள். (அதில் முதல் பிரிவினர்) அச்சத்துடனும் ஆர்வத்துடனும் செல்வார்கள். (இரண்டாவது பிரிவினர்) (வாகனப் பற்றாக் குறையினால் தாமதித்து, பின்னர்) ஒரே ஒட்டகத்தின் மீது இரண்டு பேராக, மூன்று பேராக, நான்கு பேராக, பத்துப் பேராகச் செல்வார்கள். எஞ்சியவர்(களே மூன்றாவது

பிரிவினராவர். அவர்)களை (பூமியில் ஏற்படும் ஒரு பெரும்) நெருப்பு ஒன்றுதிரட்டும். அவர்கள் மதிய நேரத்தில் ஓய்வெடுக்கும்போதும், இரவில் ஓய்வெடுக்கும் போதும், காலை நேரத்தை அடையும்போதும், மாலை நேரத்தை அடையும் போதும் (இப்படி எல்லா நேரங்களிலும்) அந்த நெருப்பு அவர்களுடனேயே இருக்கும்" என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.[1]

அதாவது இந்த பெரும் நெருப்பின் மூலமாக மனிதர்களை எரிக்க வேண்டும் என்பதை விட, ஷாமிலுள்ள மஹ்ஷர் பகுதிக்கு மக்களை துரத்திச் செல்ல வேண்டும் என்பதே எதிர்பார்க்கப்படுகின்ற விஷயமாகும். எனவே, மனிதர்கள் பயணித்தாலோ அல்லது களைப்படைந்து ஓய்வோ, தூக்கமோ ஏற்பட்டு ஓர் இடத்தில் இருந்துவிட்டால் அந்த நெருப்பும் அவர்களுக்கு சிறு அவகாசம் கொடுத்து நின்றுவிடும். அவர்கள் தூக்கத்திலிருந்து எழுந்துவிட்டால் மீண்டும் அவர்களை விரட்டிச்செல்லும். இவ்வாறு ஷாமிற்குச் செல்லும் வரை அவர்களை அது துரத்திச் செல்லும்.

"மறுமை நாளிலே மனிதர்கள் மஹ்ஷரை நோக்கி மூன்று பெரும் கூட்டங்களாக வருவார்கள். ஒரு கூட்டம் உணவருந்தி, ஆடை அணிந்தவர்களாக வாகனங்களில் செல்வார்கள். இன்னொரு கூட்டம் நடந்தும் ஓடியும் செல்வார்கள். அடுத்த கூட்டத்தினரை வானவர்கள் முகம்குப்புற இழுத்து வருவார்கள்" என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். அப்போது அங்கிருந்தவர்களில் ஒருவர் "இரண்டு கூட்டத்தினரை புரிந்து கொண்டோம். நடந்தும் ஓடியும் செல்பவர்களின் நிலை எப்படி இருக்கும்?" எனக் கேட்டார். அதற்கு நபியவர்கள் "நிச்சயமாக மனிதர்களுக்கு வியக்கத்தக்க தோட்டம் இருக்கும், எனினும் அதை கொடுத்துவிட்டு தனது பயணத்தைத் தொடர்வதற்காக ஓர் ஒட்டகத்தைப் பெற்றுக்கொள்வது கடினமாக இருக்கும். (அந்தளவிற்கு ஒட்டகம் போன்ற வாகனங்கள் குறைந்துவிடும்)" எனக் கூறினார்கள்.[2]

.....................................

1. அறிவிப்பாளர் : அபூஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு, நூல் : ஸஹீஹுல் புகாரி
2. அறிவிப்பாளர் : அபூ தர் ரழியல்லாஹு அன்ஹு, நூல் : அஹ்மத், நஸாயீ

# முடிவுரை

இந்நூலை பூர்த்தி செய்து வாசகர்களின் கைகளில் தவழவிட்ட அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும்.

மிக நீண்ட நாள் விருப்பத்தின் விளைவாக, விளைந்திருக்கும் இந்நூலின் மூலம், அல்லாஹ் நமது உள்ளங்களில் இவ்வுலகின் முடிவு பற்றிய தெளிவையும், மறுமை பற்றிய சிந்தனையையும் தந்தருள்வானாக.

மேலும், இவ்வுலகம் அழிந்து போகக்கூடியது என்பதையும், உலக முடிவு நாள் வேகமாக நெருங்கிக் கொண்டிருக்கிறது என்பதையும் இந்நூலின் மூலம் விளங்கிக் கொண்ட நாம், அழிந்து போகும் இவ்வுலக மாயைகளில் இருந்து விடுபட்டு மறுமைக்காக வாழக்கூடியவர்களாக மாறுவதற்கு அகிலங்களின் இறைவனான பேராற்றலுடைய அல்லாஹ் அருள் புரிவானாக! ஆமீன்!